# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 40
பக்கங்கள்: 56

சுடர் 33 கதிர் 252 ஆடி 20ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை 05 ஓகஸ்ட் 2018 வள்ளுவர் ஆண்டு 2049


# யாழ்ப்பாணத்தில் விரைவில் காலூன்றுவார் கோத்தபாய

## வியத்கம அமைப்பின் அலுவலகமும் திறக்கப்படும்

கொழும்பு, ஓகஸ்ட் 5

2020ஆம் ஆண்டு அரச தலைவர் தேர்தலில் மகிந்த அணி சார்பில் போட்டியிடுவார் என்று எதிர்பார்க்கப்படும் கோத்தபாய ராஜபக்ச, வடக்கு மாகாணத்துக்கு அடுத்த மாதம் வரவுள்ளார். அவரது வியத்கம அமைப்பின் அலுவலகத்தையும் யாழ்ப்பாணத்தில் அடுத்த மாத ஆரம்பத்தில் திறந்து வைக்கவுள்ளார்.

முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலரான கோத்தபாய ராஜபக்ச, சிறுபான்மை மக்களின் வாக்குகளைக் குறிவைத்துச் செயற் >> 53

## வாள்வெட்டுக் கும்பலை சேர்ந்த 8பேர் கைது

### அவர்களில் 4பேர் நாளை ஏ.எல். பரீட்சை எழுதவுள்ளவர்களாம்

யாழ்ப்பாணம், ஓக. 5

மானிப்பாய் பொலிஸார் சிவில் உடையில் மறைந்திருந்து எட்டுப் பேரைக் கைது செய்தார்கள். கைது செய்யப்பட்டவர்கள் வாள்வெட்டுக் கும்பலைச் சேர்ந்தவர்கள் >> 49

## டி.ஓ. நியமனத்தில் குழப்பம்

### யாழ்ப்பாணத்தில் பிக்குவின் பெயரும் உள்ளடக்கம்

யாழ்ப்பாணம், ஓக. 5

அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக (டி.ஓ) யாழ்ப்பாணத்திலிருந்து தெரிவு செய்யப்பட்டவர்களில் யாழ்ப்பாணம் நாக விகாரையைச் சேர்ந்த பிக்குவின் பெயரும் உள்வாங்கப்பட் >> 53

## பகல் 12 மணிக்கே நடமாட முடியாத நிலையில் பெண்கள்

### கவலைப்படுகிறார் விஜயகலா எம்.பி.

கிளிநொச்சி, ஓக. 5

முன்னைய காலங்களில் இரவு 12 மணிக்கும் பெண்கள் சுதந்திரமாக நடமாடும் நிலமை காணப்பட்டது. இப்போது பகல் 12 மணிக்கும் நடமாட முடியாத நிலமை காணப்படுகின் >> 53

## ஐ.நாவில் மீண்டும் தீர்மானம் நிறைவேற்ற வேண்டிவரும்

### அமெரிக்கா இல்லாததால் மாற்றுவழி ஆராய்கின்றோம் என்கிறார் சுமந்திரன் எம்.பி.

கொழும்பு, ஓக. 5

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அடுத்த ஆண்டு மார்ச் மாதம் இன்னுமொரு தீர்மானம் நிறைவேற்ற வேண்டும். இலங்கை அரசு இணங்கிக் கொண்ட விடயங்களைச் செயற்படுத்துவற்கான பன்னாட்டு அழுத்தத்தைக் கொடுப்பதற்கு, பன்னாட்டு மேற்பார்வை நீடிக்கப்படவேண்டும். மற்றொரு தீர்மானம் நிறைவேற்றப்படுவதன் ஊடாகவே அதனைச் செய்ய முடியும். அமெரிக்கா இல்லாததால் மாற்றுவழி ஊடாகவே செய்ய வேண்டியுள்ளது. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், அந் >> 53



## யானைத் தந்தங்களை வைத்திருந்தோர் கைது

வவுனியா, ஓக. 5

யானைத் தந்தங்களை வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் வவுனியா, கனகராயன் குளத்தில் இருவர் கைது >> 49

## இலங்கைக்கு கடத்தவிருந்த 200 கிலோ கஞ்சா சிக்கியது!

### இலங்கையர் இருவர் தமிழ்நாட்டில் கைது

சென்னை, ஓக. 5

இலங்கைக்குக் கடத்தப்படவிருந்தது என்று சந்தேகிக்கப்படும் 200 கிலோ கஞ்சா இந்தியக் கரையோரப் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. இது தொடர்பில் இருவர் கைது செய் >> 53

## சட்டவிரோதமாக மீன்பிடித்தோரை உபசரித்து அனுப்பிய பொலிஸார்!

### முல்லைத்தீவு மீனவர்கள் விசனம்

முல்லைத்தீவு, ஓக. 5

முல்லைத்தீவுக் கடலில் நேற்று அதிகாலை பெரும்பான்மையின மீனவர்கள், கடற்தொழில் அமைச்சின் உத்தரவையும் மீறி தடை செய்யப்பட்ட முறையில் மீன்பிடியில் ஈடு >> 52

## நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு குட்டுப்போட்டார் மைத்திரிபால

### சம்பள அதிகரிப்பு 'அவுட்'

கொழும்பு, ஓக. 5

அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களின் சம்பள அதிகரிப்புக்கு ஒரு போதும் இடமளிக்கப்பட மாட்டாது என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் அடிப்படைச் சம்பளம் 215 சதவீத >> 52

## எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தனா? தினேஷா?

### *செவ்வாய்க்கிழமை சபையில் தீர்மானம்*

கொழும்பு, ஓக. 5

மகிந்த அணியின் தலைவராக உள்ள தினேஷ் குணவர்த்தனவுக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வழங்குமாறு, அந்த அணி எழுத்துமூலம் சபாநாயகரிடம் கோரிக்கை முன்வைத்துள்ளது. இதற்கு நாளை மறுதினம் செவ்வாய்க் >> 53

மன்னாரில்
**1,500 பனைகள் தீயால் நாசம்**
(விரிவு - பக்:8)

see more news in
newuthayan
.com

## சிறந்த பொறியியலாளர்களை உருவாக்கியது யாழ்ப்பாணம்

### கிளிநொச்சியில் ரணில் பெருமிதம்

கிளிநொச்சி, ஓக. 5

ஒரு காலத்தில் தலைசிறந்த பொறியியலாளர்கள் யாழ்ப்பாணத்திலிருந்தே வந்தார்கள். அந்தப் பொறியியலாளர்களில் யாழ்ப்பாணம் ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்தவர்களே அதிகம். இவ்வாறு சொல்வதற்கு இங்கு யாரும் >> 53



## பரீட்சை மோசடிகளை கட்டுப்படுத்த கண்காணிப்பு

### தரம் 5 பரீட்சை இன்று உயர்தரப் பரீட்சை நாளை

கொழும்பு, ஓக. 5

தரம் 5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை இன்று இடம்பெறவுள்ளதுடன் கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைகள் நாளை ஆரம்பமாகி அடுத்த மாதம் முதலாம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

இந்த ஆண்டு 3 இலட்சத்து 55 ஆயிரத்து 321 பரீட் >> 53

**வாழ்த்துகிறோம்**

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை எழுதும் மாணவ செல்வங்கள் இலட்சியத்தில் வென்றிட உதயன் உங்களை மனதார வாழ்த்துகின்றான்.

SDB வங்கியிடமிருந்து நிலையான வைப்புக்களுக்கு.
13 மாதங்களுக்கு
13.00%
வ.தே.வ. 12.93%
05 வருடங்கள்
14.00%
வ.தே.வ. 11.20%
06 மாதங்கள்
11.00%
வ.தே.வ. 11.30%
011 5 411 411
அழையுங்கள்: 0115 411 411
கவர்ச்சிகரமான வட்டி
SDB வங்கி

# முதலைக் கண்ணீர் வடிக்கிறார் மகிந்த

## சாடுகின்றார் பிரதி அமைச்சர் அஜித் மாணப்பெரும

கொழும்பு,ஒக.5

**இராணுவத் தலைமையகத்துக்குச் சொந்தமான காணியைச் சீனாவுக்குத் தாரைவார்த்துக் கொடுத்தவர்கள் இன்று இராணுவத்தினரது உரிமை தொடர்பில் முதலைக் கண்ணீர் வடிக்கின்றமை வேடிக்கையாகவே காணப்படுகின்றது. இவ்வாறு பிரதி அமைச்சர் அஜித் .மாணப்பெரும தெரிவித்தார்.**

ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்தாவது;

பன்னாட்டுக்கு இராணுவத்தைக் காட்டிக் கொடுத்த பயனற்ற அரசை வீட்டுக்கு விரட்டுவோம் என்று மகிந்த ராஜபக்ச போராட்டத்தை முன்னெ டுத்துள்ளார். 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8 ஆம் திகதி நாட்டு மக்கள் பயனற்ற அரசை வீட்டுக்கு அனுப்பிவைத்ததை மகிந்த ராஜபக்ச மறந்து விட்டார்.

பல அரசியல் விடயங்களை மூடி மறைப்பதற்காகவே ஆர்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கூட்டரசு இராணுவத்தைக் காட்டிக் கொடுத்துள்ளது. என்று குற்றம் சாட்டுபவர்கள் முன்னாள் இராணுவத் தளபதியை சிறையிலடைத்து சித்திரவதை செய்தமை மாத்திரம் இராணுவக் காட்டிக் கொடுப்பு இல்லையா?

இது வரை காலமும் எந்த தேசிய வளங்களும் பிற நாடுகளுக்கு விற்கப்படவில்லை. ஆனால் பொய்யான குற்றச் சாட்டுக்களை குறிப்பிட்டு தொடர்ந்து அரசியல் ரீதியில் மக்களை திசைதிருப்பி வருகின்றனர்.

இராணுவத் தலைமையகத்துக்குச் சொந்தமான காலிமுகத்திடலில் காணப்படும் காணியைச் சங்ரிலா நிறுவணத்துக்கு வழங்கியது யார்? கூட்டரசா? மறுபுறம் கொழும்பு துறைமுக அபிவிருத்தி பணிகளை சீனவுக்கு முழுமையாக வழங்கியது யார்? என்ற விடயத்தை மறந்து தற்போது இராணுவ உரிமை தொடர்பில் முதலை கண்ணீர் வடிக்கின்றனர்.

சீன நிறுவனம் வழங்கிய தேர்தல் நிதி தொடர்பில் மகிந்த ராஜபக்ச இது வரை காலமும் எந்த வித பதிலும் குறிப்பிடப்படவில்லை . இவரது அமைதியே குற்றத்தை ஏற்றுக் கொண்டுள்ளது வெகுவரைவில் இவர் இதற்கு தகுந்த பதிலை குறிப்பிட வேண்டும்.

இன்று நாட்டில் காணப்படுகின்ற ஜனநாயகம் அன்று காணப்படவில்லை . வெள்ளை வேன் விவகாரம், ஊடகவியலாளர் படுகொலை, மற்றும் காணாமலாக்கப்பட்டமை, நீதித்துறை அவமதிக்கப்பட்டமை, தேர்தல் ஆனைக்குழு தனது சுயாதீனமிழந்து செயற்பட்டமை போன்ற எண்ணற்ற விடயங்கள் அன்று இடம் பெற்றது. இதன் தொடர்ச்சியை மீண்டும் நிலைநாட்ட வே எதிர் தரப்பினர் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கூட்டரசில் காணப்படுகின்ற குறைப்பாடுகளை திருத்திக் கொண்டு எதிர்வரும் தேர்தலை எதிர்கொள்வோம் போராட்டங்களால் ஆட்சியை ஒருபோதும் கவிழ்க்க முடியாது. ஏனெனில் கூட்டரசு ஜனநாயக ரீதியில் உருவாகியது. கடந்த அரசின் ஊழல்கள் வெகுவிரைவில் வெளிச்சத்துக்குக் கொண்டுவரப்படும் அப்போது இவ்வாறான பகிரங்க போராட்டங்கள் எதும் இடம் பெறாது. என்றார். (ரி4)



## விழிப்புணர்வுக் கருத்தரங்கு

கொடிகாமம், ஒக. 5

மீசாலை கிழக்கு ஸ்ரீ முருகன் சனசமூக நிலையத்தில் போசாக்கு தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு நேற்று நடைபெற்றது.

கிராம அலுவலர் என்.கௌரிதரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் போசாக்கு வலுவூட்டல் செயற்பாடுகள் தொடர்பான தரவுகள் சேகரித்தார்.

தொடர்ந்து குடும்ப நல உத்தியோகத்தர் மந்த போசாக்கு தொடர்பான கருத்துக்களை வழங்கினார்.

இதில் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் சி. பத்மாஜினி, குடும்ப நல உத்தியோகத்தர் சு. கலிஸ்ரா, சிக்கன கூட்டுறவுச் சங்க தலைவர் அ. சோதீஸ்வரன், தாய்மார் கழக உறுப்பினர்கள் கர்ப்பிணி பெண்கள் பாலூட்டும் தாய்மார்கள், மற்றும் நிறை குறைந்த பிள்ளைகளின் தாய்மார்கள் கலந்து கொண்டனர். (ரி4,159)





## ஓவியக் கண்காட்சி

சாவகச்சேரி,ஒக.5

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை மாணவர்களால் ஆக்கப்பட்ட ஓவியங்களின் கண்காட்சி சாவகச்சேரி தேவாலய வீதியிலுள்ள அமரர் ஹன்ட் நினைவு ஓவியக் கூடத்தில் நேற்று நடைபெற்றது.

தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மாகாணக் கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன், தென்மராட்சி அபிவிருத்திக் கழக கனடாக் கிளையின் தலைவர் சிசுரேந்திரன், மகரகம தேசிய கல்வி நிறுவக நடன பாட செயற்றிட்ட அலுவலர் திருமதி நிசாந்தராகினி திருக்குமரன், தென்மராட்சி அபிவிருத்திக் கழக தலைவர் பேராசிரியர் க.கந்தசாமி மற்றும் பொதுமக்க்ள், மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ரி4,9,159)

## உள்ளூராட்சி மன்றப் பெண் உறுப்பினருக்குச் செயலமர்வு

திருகோணமலை,ஒக.5

திருகோணமலை மாவட்ட உள்ளூராட்சி மன்ற பெண் உருப்பினர்களுக்கான இயல்திறனை கட்டியெழுப்பும் நிகழ்ச்சி திட்டத்தின் செயலமர்வு நேற்று முன்தினம் இடம் பெற்றது.

நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கத்தின் ஏற்பாட்டில் திருகோணமலை மாவட்ட சர்வோதய கேட்போர் கூடத்தில் நடைபெற்ற செயலமர்வில் வளவாளர்களாக மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் எம்.வை.சலீம் கலந்துகொண்டார்.

இதில் நகர சபை, பிரதேச சபைகளைக் கொண்ட உறுப்பினர்கள் தங்களது ஆளுமைத் திறன்கள், மக்கள் தொடர்பாடல் உள்ளிட்ட விடயங்கள் மற்றும் வளங்களை இணங்கண்டு வருமானத்தை தேடும் வழி முறைகளை மேற்கொண்டு மக்களுடைய விடயங்களில் கவனம் செலுத்துதல் தொடர்பில் விரிவுரைகள் வழங்கப்பட்டன.

திருகோணமலை மாவட்ட 13 உள்ளூராட்சி மன்றத்திலுமுள்ள பெண் உறுப்பினர்கள், கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் எம்.வை. சலீம், முன்னால் உதவி தேர்தல் ஆணையாளர் பண்டார மாப்பா, கபே அமைப்பின் தேசிய அமைப்பாளர் மனாஸ் மக்கீன், கபே அமைப்பின் மாவட்ட அமைப்பாளர் ஆர்.எம்.றாபில் மற்றும் திருமலை மாவட்ட உள்ளூராட்சி மன்ற பெண் உறுப்பினர்கள் எனப் பலர் செயலமர்வில் கலந்துகொண்டனர்.(ரி4,40)

## சாதனையாளர் மதிப்பளிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஒக.5

ஏழாலை தெற்கு அ.மி.த.க பாடசாலையின் கல்வி மற்றும் விளையாட்டு சாதனையாளர்களின் மதிப்பளிப்பு நிகழ்வு பாடசாலை மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.



பாடசாலையில் பழையமாணவர் சங்கச்செயலாளர் ரஞ்சித் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினரும், பாடசாலையின் பழைய மாணவருமான பா.கஜதீபன், அமெரிக்க மிஷன் திருச்சபையின் போதகரான போல் சுரேஷ் மாகாணசபை உறுப்பினர் மற்றும் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர் சங்கத்தினர், பொதுமக்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். (ரி4)



## நாத நர்த்தன வர்ண நிகழ்வு

கொடிகாமம்,ஆக.5

சாவகச்சேரி நகராட்சி மன்ற பொன்விழா மண்டபத்தில் நாத நர்த்தன வர்ண நிகழ்வு நேற்று நடைபெற்றது.

வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். சுந்தரசிவம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் சிவலிங்கம் சத்தியசீலன், தென்மராட்சி அபிவிருத்தி கழகம் கனடா கிளை தலைவர் சிவபாதசுந்தரம் சுரேந்திரன், செயற்திட்ட அதிகாரி நடனம் தேசியக்கல்வி நிறுவனம் திருமதி நிசாந்தராகினி திருக்குமரன், ஓவியக் கலைக்கூடம் சாவகச்சேரி அமெரிக்கா யோக மணி அழகரட்ணம், வலயக்கல்வி அதிகாரிகள் மற்றும் ஆசிரியர்கள் மாணவர்கள் பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ரி4, 9, 159)





## 96 ஆவது பன்னாட்டு கூட்டுறவு தின நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஒக.5

யாழ் மாவட்ட சமூக அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் நடாத்தும் 96 ஆவது பன்னாட்டுக் கூட்டுறவு தின நிகழ்வு நல்லூர் அரசடி வீதியில் அமைந்துள்ள சமூக அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க அரங்கில் நேற்று நடைபெற்றது.

சங்கத் தலைவர் சி.குமாரலிங்கம் தலைமையில் நடை பெற்ற நிகழ்வில் கூட்டுறவு சங்கத்தின் அரங்கம் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் பொ.வாகிசனால் திறக்கப்பட்டது.

கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் பொ.வாகீசன் சிறந்த உதவிகளைச் செய்கின்றார்.

வடமராட்சி போன்றபகுதிகளில் சங்கத்தைச் செயற்படுத்த முடியாத நிலை காணப்படுகின்றது. சங்கத்தில் 2 ஆயிரம் அங்கத்தவர்கள் இருக்கின்ற போதும் கூட ஆளணி பற்றாக்குறை காணப்படுகின்றது. அதனைக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் பொ.வாகீசன் தீர்த்து வைக்க வேண்டும் என்று சங்கத் தலைவர் சி.குமாரலிங்கம் நிகழ்வில் கருத்துத் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து கருத்துத் தெரிவித்த கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் பொ.வாகிசன் ஆளணி பற்றாக்குறை நிவர்த்தி செய்யப்படும் எனத் தெரிவித்தார்.

நிகழ்வில் வடக்கு மாகண கூட்டுறவு சங்கங்களின் பதிவாளரும் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருமான பொ.வாகிசன், அகில இலங்கை யாழ் மாவட்ட இணைப்பு செயலாளர் எஸ்.ஜெயசங்கர் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியொகத்தர் பா.ஸ்ரீகுமார், யாழ்ப்பாணம் சின்மயா மிசன் சுவாமி சிதாகாசானந்தா கூட்டுற வுத்திணைக்களம்கூட்டுறவுஅபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.மோகன் ஆகியோர் கலந்து கொண்டார்.(ரி4,113)

# செல்வபுரத்தில் அமைக்கப்பட்ட வீடுகள் மக்களிடம் கையளிப்பு

## சஜித் பிரேமதாச கையளித்தார்



**முல்லைத்தீவு, ஓக.5**

**முல்லைத்தீவு, செல்வபுரத்தில் வீடமைப்பு அதிகார சபையால் அமைக்கப்பட்ட வீட்டுத் திட்டம் நேற்று மக்களிடம் கையளிக்கப்பட்டது. இந்த நிகழ்வு செல்வபுரம் பிளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.**

தேசிய வீடமைப்பு அதிகார சபையின் மாவட்ட உதவிப் பணிப்பாள கமகே தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாச கலந்து கொண்டு வீட்டுத் திட்டத்தைப் பயனாளிகளிடம் கையளித்தார். மக்களுக்கான உதவிப் பொருள்களும் வழங்கப்பட்டன.

செல்வபுரம் மாதிரிக் கிராமத்தில் 20 புதிய வீடுகளும் பத்து திருத்தப்பட்ட வீடுகளுமாக தேசிய விடமைப்பு அதிகார சபையினால் தலா ஐந்து இலட்சம் ரூபா கொடுக்கப்பட்டு வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன.

175 பேருக்கு மேசன் தொழில் பயிற்சி வழங்கப்பட்டு அதற்கான உபகரணங்களும், 240 பேருக்கு மூக்கு கண்ணாடிகளும், வெலிஓயாவைச் சேர்ந்த 30 பயனிளிகளுக்கு வீடு கட்டுதவதற்கான ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான காசோலைகளும், 145 பேருக்கு தலா ஒரு இலட்சம் ரூபாவும் வழங்கப்பட்டன.

நிகழ்வில் வடமாகாண அபிவிருத்தி மற்றும் மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் காதர் மஸ்தான், வன்னி மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், க.சிவமோகன், சாந்தி சிறீஸ்கந்தராசா மற்றும் வடமாகாண பிரதி அவைத் தலைவர் வ.கமலேஸ்வரன், மாவட்ட செயலர் ரூபவதி கோதீஸ்வரன், கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு பிரதேச சபை தவிசாளர்கள் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் அரச அதிகாரிகள் எனப் பலர கலந்து கொண்டனர்.

நிகழ்வில் பிரதி அமைச்சர் காதர் மஸ்தான் உரையாற்றினார்.

அவர் தெரிவித்தாவது

மக்களுக்காக உழைக்கும் நல்ல மக்கள் பிரதிநிதிகளை மக்கள் தெரிவு செய்ய வேண்டும். போரால் பாதிக்கப்பட்டு பல குடும்பங்கள் இப்போது வாழ்வைக் கொண்டு நகர்த்த முடியாத நிலையில் உள்ளனர். மக்களின் தேவைகளை அறிந்து வீடுகளை வழங்கிய அமைச்சர் சஜித் பிரேமதாசவுக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வீட்டுத் திட்டம் என்றால் வீட்டுக்கான முழுப் பணத் தொகையையும் வழங்கி தமக்கான வீடுகளை அமைத்துக் கொள்ளப் பணிக்கப்படும். அப்படியான செயற்றிட்டங்கள் நிறைவு பெறாது இருப்பதை நாம் காண்கின்றோம். ஆனால் யாவர்க்கும் வீடு செயற்திட்டத்தின் மூலம் வீடு பெரும் குடும்பத்தின் பங்களிப்புடன் வெற்றிகரமாக வீடுகள் கட்டி முடிக்கப்படுகிறது.

கடந்த ஆட்சிக்கும் தற்போதைய ஆட்சிக்கும் இடையிலான வித்தியாசத்தையும் மக்கள் நன்றாகவே உணர்ந்து இருக்கின்றனர். நமது அரசு கட்சி பேதங்களுக்கு அப்பால் உரியவர்களுக்கு உரியதை கொண்டு சேர்ப்பதில் சரியாகச் செயற்படுகின்றோம் - என்றார்.

(ரி3-213-205)

## முல்லைத்தீவில் ஆலங்கட்டி மழை

முல்லைத்தீவு. ஓக.5



கடும் வறட்சியை எதிர்கொண்டுள்ள முல்லைத்தீவில் நேற்று முன்தினம் ஆலங்கட்டிமழைபெய்துள்ளது.

முல்லைத்தீவு நகரை அண்மித்த பகுதிகளில் பனிக்கட்டி மழை என்று கூறப்படும் ஆலங்கட்டி மழைபெய்துள்ளது. திடீரெனப்பெய்த மழை விவசாயிகளிடையே கவலையை ஏற்படுத்தியுள்ளது. ஆலங்கட்டி மழை தொடர்ந்தால் பயிர்களுக்குச் சேதம் ஏற்படும் என்று விவசாயிகள் தெரிவித்தனர். (ற-21)

## வர்த்தகர்கள் ஆறு பேர் மீது வழக்குத் தாக்கல்

சாவகச்சேரி. ஒக.5

சாவகச்சேரி நகரப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களில் சுகாதாரத் திணைக்களத்தினர் நேற்றுத் திடீர் சோதனை நடத்தினார்கள்.

எலி கடித்த உணவுப் பொருள்கள். எறும்புகள் மொய்த்த உணவுப் பொருள்கள். காலாவதியான உணவுப் பொருள்கள் என்பற்றை விற்பனைக்கு வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் 6 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

(ரி4.9)








காரைநகர் பிரதேச சபையால் பத்து லட்சம் ரூபா செலவில் 130 மின் விளக்குகள் பொருத்தும் பணி நேற்று ஆரம்பிக்கப்பட்டது. இதற்கான நிதியை வடமாகாண சபை வழங்கியது. (ரி4)



## யாழ்ப்பாணத்தில் பசுவதைக்கு எதிராகக் கண்டன ஊர்வலம்

யாழ்ப்பாணம் ,ஓக 5
கோசாலா பசுக்கள் காப்பகம் மற்றும் ஹரே கிருஷ்ணா என்னும் ராம நாம அமைப்பு ஆகியன இணைந்து பசுவதைக்கு எதிரான கண்டன கவன வீர்ப்பை நேற்றுக் காலை முன்னெடுத்திருந்தது.
பசுவை இறைச்சிக்காக கொல்பவர்களின் தகவல்களை அறியத்தருபவர்களிற்கு தகுந்த அன்பளிப்பு வழங்கப்படும் என யாழ் கிருஷ்ணா ஆலயம் மற்றும் கோசாலா பசுக்கள் காப்பகம் ஆகியன தகவல் வெளியிட்டுள்ளது.
அதற்கான தொடர்புகளுக்கு 0766667874 எனும் அலைபேசி இலக்கம் வழங்கப்பட்டுள்ளது .
இந்த நிகழ்வில் சுதந்திர கட்சி பிரதேச சபை உறுப்பினர்கள் துவாரகன், அபிராமி, அனுசாவதி மற்றும் வலிகாமம் இணைப்பாளர் ஞானசீலன், சமூக ஆர்வலர் கின்ஸ்லி ஆகியோருடன் வலி. தெற்கு தவிசாளர் ஆகியோரும் இணைந்திருந்தனர்.

# பனம் பான உற்பத்தியை அதிகரிக்க அபிவிருத்திச் சபை முன்வரவேண்டும்

### கொத்தணியின் தலைவர் எஸ்.செல்வராசா கோரிக்கை

பனை தென்னைவள அபவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் பனம் பான உற்பத்தியை மேற்கொள்வதற்கான பயிற்சி மற்றும் தொழில் நுட்ப வசதியை பனை அபிவிருத்திச் சபை ஏற்படுத்தித் தரவேண்டும் என வலிகாமம் பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியின் தல்லவர் எஸ்.செல்வராசா கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
பனம் களியில் இருந்து பெறும் பனம் பானத்தை சோடா உற்பத்தி செய்வதற்கு பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளன.
இதற்கான பயிற்சிகள் தொழில்நுட்ப வசதிகள் மற்றும் ஆலோசனைகளைப் பனை அபிவிருத்திச் சபையின் ஆராய்ச்சி பிரிவினர் வழங்குவதற்கு முன்வர வேண்டும் - என்றார்.
ஏற்கனவே பனம் பழத்தில் இருந்து பனங் கழியை எவ்வாறு பெற்றுக்கொள்வது சம்பந்தமாக பயிற்சிகள் மற்றும் தொழில்நுட்ப வசதிகளைப் பனை அபிவிருத்திச் சபைச் சங்கங்கள் சிலவற்றுக்கு வழங்கியுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (17)

## அச்சுவேலி மாணவிக்கு தங்கம்

யாழ்ப்பாணம், ஓக. 5
தேசிய மட்ட தமிழ்த் தின கவிதைப் போட்டியில் பிரிவு 5இல் அச்சுவேலி மத்திய கல்லூரி மாணவி தவராசா செசோபிதா தங்கப் பதக்கத்தைச் சுவீகரித்துள்ளார்.
இவருக்கான கௌரவிப்பு நிகழ்வு கல்லூரி மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.
கல்லூரி முதல்வர் சி.சிறிதரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் விருந்தினர்களாக



கோப்பாய்க் கோட்டக் கல்விப் பணிப்பாளர் நா.சிவநேசன், யாழ்ப்பாணக் கல்வி வலய தமிழ் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.பூபாலசிங்கம், ஓய்வு நிலை பிரதிக் கல்வி பணிப்பாளர் வே.பாலசுப்பிரமணியம், பழைய மாணவர் சங்கத் தலைவர் திருமதி பு.கணவதிப்பிள்ளை, ஓய்வு நிலை அதிபர் ச.கனகராசா ஆகியோர் கலந்து கொண்டனர். (4.422)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஓக். 5
அருட்கலாநிதி டேவிற் வின்சன் பற்றியதான "சொர்க்கம்" - நூல் வெளியீட்டு நிகழ்வு தொடர்பகத்தில் (யாழ்ப்பாண மருத்துவமனை வீதி) இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும்.

### போதனா மருத்துவமனை
## சத்திரசிகிச்சைக்கூடம் 17 ஆம் திகதி திறப்பு

கொடிகாமம்,ஓக. 5
யாழ்ப்பாண, போதனா மருத்துவமனையில் அமைக்கப்பட்டுள்ள அவசர சத்திரசிகிச்சைக் கூடம் எதிர்வரும் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது என மருத்துவமனையின் பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.
யாழ்ப்பாண போதனா மருத்துவமனையின் அபிவிருத்திப் பணிகள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.
திறக்கப்படவுள்ள அவசர சிகிச்சை பிரிவு கட்டடம் 590 மில்லியன் ரூபா செலவில் கட்டப்பட்டது. இது தவிர 300 மில்லியனுக்கு உபகரணத் தொகுதி வாங்கப்படவுள்ளது. இது தவிர இந்தக் கட்டடத்துக்கு மேலாக 4 மாடிக்கட்டடம் அமைப்பதற்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.
குவைத் றெக்றசன் நிறுவனத்தின் 530 மில்லியன் பெறுமதியான 3 மாடிக்கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வும் 17 ஆம் திகதி இடம் பெறவுள்ளது - என்றார். (159)

## வீதி சீரமைப்பு

யாழ்ப்பாணம், ஓக. 5
யாழ்ப்பாணம் கொழும்புத்துறை ஆனந்தன் வடலி வீதியின் மூன்றாம் ஒழுங்கை தார் வீதியாக மாற்றப்பட்டுள்ளது.
இந்த வீதி கடந்த பல வருடங்களாக சீரமைப்பு இன்றி மக்கி வீதியாகவே இருந்தது.
தற்போது 8 இலட்சம் ரூபா செலவில் தார் வீதியாக மாற்றப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண மாநகர பிரதி முதல்வர் ஈசன் தெரிவித்தார். (17)



## கொக்குவில் இந்து மாணவி முதலிடம்

யாழ்ப்பாணம், ஓக. 5
தேசியமட்ட தமிழ்த் தினப் போட்டியில் (ஆக்கத்திறன் வெளிப்பாட்டு நிகழ்வு) யாழ்ப்பாணம் கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை மாணவி ர.காருண்யா முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார். கொழும்பு கல்வி அமைச்சில் கடந்த 14ஆம் திகதி இது இடம்பெற்றது என்று பாடசாலை அதிபர் பி.தனபாலசிங்கம் தெரிவித்துள்ளார். (4.147)

## கமக்கார அமைப்புக்கு புதிய நிர்வாகம் தெரிவு

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரிவின் கமக்காரர் அமைப்புக்கான புதிய அலுவலர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.
அம்பன் கமநலசேவை நிலையத்தில் பெரும்பாக உத்தியோகத்தர் திருமதி தி.கௌரி தலைமையில் நேற்றுமுன்தினம் இடம் பெற்றது.
முன்னர் தலைவராக இருந்த செ.திரவியநாதன் மீண்டும் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். செயலாளராக க.சபாரத்தினமும், பொருளாளராக க.கமல்ராஜ், உபதலைவர் செ. இராசதுரை, உப செயலாளர் அ.தயாளன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். உறுப்பினர்களாக பொ.மௌலீசன், சி. கலைச்செல்வி, மு.பரமேஸ்வரன், கு.விஷ்ணுமூர்த்தி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (4)

## கருத்தமர்வு

சாவகச்சேரி, ஓக. 5
சூழலை மீட்டெடுப்பதனை நோக்காகக் கொண்ட உள்ளூராட்சி மன்றங்களும் அதன் வலைப்பின்னலும் என்னும் தொனிப் பொருளிலான இரு மணிநேர கருத்தரங்கு சாவகச்சேரி நகரசபை பொது நூலக கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.
தெல்லிப்பளையில் இயங்கும் கிராமிய வலுப்படுத்தலுக்கான அமைப்புகளின் இணையமும் சிறிலங்கா உதவு ஊக்க மையமும் இணைந்து கருத்தரங்கை ஏற்பாடு செய்திருந்தன.
நகரசபையின் தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் சிறிலங்கா உதவு ஊக்க மையத்தின் வெளிக்கள முகாமையாளர் அரிஹரன் நாகேந்திரன், கிராமிய வலுப்படுத்தலுக்கான அமைப்புகளின் இணையப் பிரதிநிதிகளான எஸ்.முருகையா, மு.கஜேந்தினி ஆகியோர் கருத்துரை வழங்கினர். (4-9)



## புங்குடுதீவு கணேச வித்திக்கு கணினி அறை அன்பளிப்பு

யாழ்ப்பாணம். ஓக. 5
யாழ்ப்பாணம் புங்குடுதீவு சிறி கணேச மகா வித்தியாலய கணினி ஆய்வகம் மாணவர்களிடம் கடந்த முதலாம் திகதி கையளிக்கப்பட்டது.
கட்டுமானப் பணிகள் வடக்கு கடற்படைக் கட்டளையின் தளபதி ரியர் அட்மிரல் மெரில் விக்கிரமசிங்க மற்றும் இலங்கை கடற்படை கப்பல் கோடய்ம்பர நிருவனத்தின் கட்டளை அதிகாரிகளுடைய மேற்பார்வையின் கீழ் வடக்குக் கடற்படை கட்டளையின் கடற்படைச் சிப்பாய்கள் செய்துள்ளனர். கொழும்பு றோயல் கல்லூரியின் பழைய மானவர் சங்கம் நிதியளித்தது. பாடசாலையின் அதிபர் எஸ். கமலேந்திரன் உட்பட பாடசாலையின் ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் இலங்கைக் கடற்படைக் கப்பல் கோடய்ம்பர நிறுவனத்தின் கட்டளை அதிகாரி பிரசாத் விதானகே உள்ளிட்ட பலரும் அதில் கலந்துகொண்டனர். (4.8)

## வறட்சியால் பாதித்தவர்களுக்கு தண்ணீர்த் தாங்கிகள் வழங்கல்

யாழ்ப்பாணம், ஓக. 5
வறட்சியால் பாதிப்படைந்த கோப்பாய் பிரதேசத்து மக்களுக்குக் குடிதண்ணீர் வசதிகள் அண்மையில் ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டன.
யாழ்ப்பாண பாதுகாப்புப் படைத் தலைமையகத்துக்குக் கீழ் உள்ள 51, 511 ஆகிய படைத் தலைமையகங்களின் ஏற்பாட்டில் இவை வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.
511 ஆவது படைத் தலைமையகத்தின் ஒத்துழைப்புடன் கோப்பாய் பிரதேசத்தைச் சேர்ந்த 3ஆயிரத்து 620 பிரதேசவாசிகளும், பயன்பெறும் வகையில் தண்ணீர் தாங்கிகள் வழங்கி தண்ணீர் பெற வசதிகளை வழங்கினர்.
51 ஆவது படைப் பிரிவின் படைத் தளபதி மேஜர் ஜெனரல் ரொஷான் செனவிரத்னவின் வழிக்காட்டலின் கீழ் 511 ஆவது படைத் தல்லமையகத்தின் கீழுள்ள 15 ஆவது தேசிய பாதுகாப்பு படையணி இந்தப் பணிகளை மேற்கொண்டன. (4.8)



# வலி.மேற்கு அபிவிருத்திக்கு ரூ.20.7 மில்லியன் தாருங்கள்

## தவிசாளர் கடிதம் மூலமாகக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஒக. 5

வலி.மேற்கு பிரதேசத்தின் வளர்ச்சி- அபிவிருத்திக்காக 5 கருத்திட்டங்களுக்கு 20.7 மில்லியன் ரூபாவை ஒதுக்கி தருமாறு கோரி கொழும்பு வேள்ட் விசன் லங்கா நிறுவன பணிப்பாளர் சேனாதிராசாவுக்கு வலி.மேற்கு பிரதேசசபைத் தவிசாளர் த.நடனேந்திரன் கடிதம் அனுப்பியுள்ளார்.

வலிகாமம்மேற்குக்கானபேண்தகுஅபிவிருத்தி எனும் தலைப்பில் எழுதிய கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த நான்கு ஆண்டுகளில் ரிவோஸ்-III திட்டத்தின் கீழ் பல முன்னோபாயத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இறுதியாக பொன்னாலை-நெல்லியான் குடிதண்ணீர் திட்டத்திற்காக 8.9மில்லியன் ரூபா ஒதுக்கியதன் ஊடாக 240 குடும்பங்கள் நன்மையடைந்து வருகின்றன.

எதிர்காலத்தில் மக்கள் நலன் சார்ந்த ஐந்து. கருத்திட்டங்களை இனம் கண்டுள்ளோம். இதில் பாரவூர்தி பவுசர் கொள்வனவு, மலக்கழிவு இயந்திரவாகனம் கொள்வனவு, மலக்கழிவுசுத்திகரிப்புஆலைக்கானஇயந்திரம்கொள்வனவு, மூடியஉழவுஇயந்திரப் பெட்டி, மாற்றுத்திறனாளிகளுக்கும் ஏனையோருக்குமானமலசலகூடம்140வழங்கல் உள்ளிட்ட5கருத்திட்டங்களுக்கு20.7மில்லியன்ரூபாவுக்குநிதிஒதுக்கிவழங்குமாறு கோரி முன்மொழிவு சமர்ப்பித்துள்ளார்.

இதேவேளை வலி.மேற்கு பிரதேசம் 15 தேர்தல் வட்டாரங்களையும், 49 ஆயிரம் மக்களையும் கொண்டதாக இருப்பதனால் கருத்திட்டங்களுக்கு முன்னுரிமையளித்து உதவுமாறு கேட்டுள்ளார். (50)

## சுற்றுலாத் தளமாக மாறுகிறது மண்டை தீவு கடற்கரை

வேலணைபிரதேசசபைக்குஉட்பட்ட மண்டைதீவு கடற்கரையைச்சிறந்த சுற்றுலா மையமாக அபிவிருத்திசெய்வதற்கு 27 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகப் பிரதேச சபையின் சிறப்பு அமர்வில் சபையின் செயலர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

வேலணை பிரதேச சபைக்கு உற்பட்ட கடற்கரைகளை முழுமையாக அபிவிருத்தி செய்வதற்கு மாவட்டச் செயலகத்தால் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மண்டை தீவு கடற்கரையை அபிவிருத்தி செய்வதற்கு 27 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் 23 மில்லியன் ரூபா வேலைக்கான கேள்வி கோரல் தற்போது நடைபெற்று வருகிறது.. அதே போன்று சாட்டிகரையை அபிவிருத்தி செய்வதற்கு 10 மில்லியன் கிடைப்பதற்கான ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது - என்றார்.

## லிகோரியார் நவநாளின் இறுதிநாள் நிகழ்வு இன்று

சாவகச்சேரிகச்சாய்வீதியிலுள்ளபுனிதலிகோரியார் ஆலய நவநாள் திருவிழாவின் இறுதிநாள் நிகழ்வு இன்றுகாலை 7 மணிக்கு திருநாட்பாடற்பலிபூஜையும் அதனைத் தொடர்ந்து திருச்சொரூப பவனியும் இடம்பெறுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது. (4-9)

## மாவிட்டபுரத்தில் அன்னதானம்

மாவிட்டபுரம்கந்தசுவாமி ஆலயத்தில் திருவிழா இடம்பெற்றுவரும் நிலையில், இன்று ஞாயிற்றுக்கிழமையும் எதிர்வரும்10 ஆம் திகதியும் அன்னதானம் வழங்கப்படும்.

ஆலய வடக்கு வீதியில் உள்ள சிமெந்துக் கூட்டுத்தாபன அன்னதான மடத்தில் காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலை ஊழியர்கள் அன்னதானம் வழங்குகின்றனர் என்று அன்னதான சபைச்செயலாளர் அறிவித்துள்ளார். (4,114)

## கூடைப்பந்தாட்டச் சங்க இறுதிப் போட்டி இன்று

யாழ்ப்பாணம், ஒக.5

யாழ்ப்பாணமாவட்டகூடைப்பந்தாட்டசங்கத்தின்வருடாந்தசுற்றுப்போட்டியாழ்ப்பாணம் பழைய பூங்கா வீதியில் இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெறும்.

பிற்பகல்4.30க்குஇதுஆரம்பமாகும். சங்க உபதலைவர் ர.யுவராஜ் தலைமையில் நடைபெறும்நிகழ்வில்முதன்மைவிருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம்கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் அ.பரஞ்சோதியும் மதிப்புறு விருந்தினராக உடற்கல்வி உதவிப்பணிப்பாளர் பொ.சகிலன், ஏ.எஸ்.ரி.பி. நிறுவன முகாமையாளர் ச.சிவலிங்கம் ஆகியோர் கலந்துகொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது. (4)

## 'மஞ்சம்' வெள்ளோட்டம்

சாவகச்சேரி சிறிதுர்க்காதேவி பெருந்திருவிழாவில், மஞ்சம் வெள்ளோட்டம் நாளை திங்கட்கிழமை முற்பகல் 11மணிக்கு இடம்பெறும். திருவிழா கடந்த 31ஆம்திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. 12 தினங்கள் திருவிழாக்கள் நடைபெறுகின்றன.

சிவசிறி சிவ.குகநாதக்குருக்கள் தலைமையில் திருவிழா நடைபெறுகிறது. புதிய சித்திரத் தேர் வெள்ளோட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

மஞ்சத்திருவிழா நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை இரவு 7மணிக்கும், சப்பறத் திருவிழா எதிர்வரும் வியாழக்கிழமை இரவு 8மணிக்கும் தேர்த்திருவிழா எதிர்வரும் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கும், தீர்த்தத் திருவிழா எதிர்வரும் சனிக்கிழமைமுற்பகல்10மணிக்கும்மறுநாள்மாலை5மணிக்கு பூங்காவனத்திருவிழாவும்இடம் பெறும். ஆடிப்பூர விழா எதிர்வரும் 13ஆம் திகதி காலை 7மணிக்கு 108 சங்காபிஷேகத்துடன் நடைபெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டது. (4,131)

## பெறுபேறுகள் வெளியாகின

யாழ்ப்பாணம்,ஒக. 5

யாழ்ப்பாணமாவட்டகூட்டுறவுச்சபையால்நடத்தப்பட்ட கூட்டுறவு உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன.

இந்தபரீட்சைக்குபதினெட்டுபேர்தோற்றியிருந்தனர். 15பேர்சித்திபெற்றுள்ளனர்என்றுமாவட்டக்கூட்டுறவுச்சபை தெரிவித்தது.

இதில் தரம் ஒன்றில் யாழ்ப்பாண மாநகர பிரதி முதல்வர் து.ஈசன் , இ.சியாம்கரன், ந.நவஜீவன், ச.சதீஸ்குமார் ஆகியோரும் தரம் இரண்டில் செ.தர்சன், இ.கிருஷ்ணதாஸ், செ.செல்வக்குமார், ச.அற்புதமலர், ஜெ.தாரணி, அ.சுகந்தினியும் பெற்றனர்.

பரீட்சையில் இரண்டாம் தடவையில் தோற்றி சி.சிவாஸ்கரன், செ.விஜயலட்சுமி, த.வசந்தி, ச.மங்கலேஸ்வரி, அ.மேரிமகலியோ ஆகியோர் சித்தி பெற்றனர். (17)

## 'போதையை ஒழிப்போம் புதுயுகம் படைப்போம்'

### தெருக்கூத்து இடம்பெற்றது

தென்மராட்சி, ஒக. 5

மிருசுவில்விடத்தற்பளைகமலாசனிவித்தியாலய மாணவர்நாடாளுமன்றஏற்பாட்டில்'போதையை ஒழிப்போம் புதுயுகம் படைப்போம்' என்னும் தெருக்கூத்து நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. விடத்தற்பளை மற்றும் கெற்பேலி ஆகிய இடங்களில் தெருக்கூத்து ஆற்றுகைப்படுத்தப்பட்டது.

அவர்கள் போதை ஒழிப்பு தொடர்பான துண்டுப் பிரசுரங்களையும்பொதுமக்களுக்குவழங்கினர். நிகழ்வுகளில் பெற்றோர், பழைய மாணவர்கள், கிராம மக்கள் போன்றோர் பார்வையிட்டனர். நிகழ்வுகளைஅந்தந்தப்பிரிவுஅரச, அரசசார்பற்ற நிறுவனப்பிரதிநிதிகளும்பார்வையிட்டனர்என்று வித்தியாலய அதிபர் இ.நாகேந்திரன் தெரிவித்தார். (49)



## 3 மாதங்களாக அகற்றப்படாத குப்பையைச் சபை அகற்றியது

கொடிகாமம்,ஒக. 5

மூன்று மாதங்களுக்கு மேலாக அற்றப்படாது இருந்த குப்பைகள் பிரதேச சபைக்கு தெரியப்படுத்தப்பட்டதை அடுத்து பிரதேசசபைபணியாளர்களால் துப்புரவு செய்யப்பட்டுள்ளது.

ஜே/320 இராமாவில் கிராமசேவை அலுவலர் பிரிவில்கிராம மக்களால்கொட்டப்படும்திண்மக்கழிவுகள் கடந்த புதன்கிழமை சாவகச்சேரி பிரதேச சபையின் கொடிகாமம் உப பணிமனைப் பணியாளர்களினால் துப்புரவு செய்யப்பட்டது.

கொயிலாமனைச் சந்தி, அண்ணமார் கோவில் சந்தி, தட்டான்குள பிள்ளையார் கோவில் அருகில் இருந்த திண்மக்கழிவுகள் தெருவாரத்து வைரவர் கோவில் சந்தி , நகுலன் வாசிகசாலைக்கு முன் கொட்டப்பட்ட திண்மக்கழிவுகள் பிரதேச சபை உறுப்பினர் ஞா.திலகராணியால் பிரதேச சபைத் தலைவருக்கு தெரியப்படுத்தியதையடுத்து இந்த திண்மக்கழிவுகள் அகற்றப்பட்டன. (159)

## போதையில் சாரத்தியம்; ஓட்டுநர் உரிமப்பத்திரங்கள் யாழ். நீதிமன்றால் பறிமுதல்

யாழ்ப்பாணம், ஒக. 5

மதுபோதையில்வாகனம்செலுத்தியகுற்றத்துக்காக ஓட்டுநர் மூவருக்கு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்று தலா 7 ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதித்தது.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய போக்குவரத்து பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நீதிவான் சி.சதீஸ்தரன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது போது சந்தேகநபர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டனர். அதன்போதே ஓட்டுநர் உரிமைப் பத்திரங்களையும்சிலமாதங்களுக்குநிறுத்திவைக்குமாறு நீதிவான் தீர்ப்பளித்தார். (114)



யாழ்ப்பாணம் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் தரம் 7 மாணவர்களுக்கான பற்சுகாதாரம் தொடர்பான கருத்தரங்கு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது. இதில் வளவாளர்களாக கோப்பாய் பிரதேசத்தின் சுகாதார உத்தியோகத்தர் ஞா.ஜெகதீசன், செல்வி என். வைஷ்ணவி ஆகியோரும் கலந்து கொண்டனர். (161)

## அரியகுட்டியின் சிலை திறப்பும் நூற்றாண்டு நிகழ்வும் இன்று

சுதுமலை, ஒக. 5

புத்தூர் கிராம சபையின் முன்னாள் உப தலைவரும் சமூகத் தொண்டருமான அமரர் சி.அரியகுட்டியின் உருவச்சிலை திறப்பும் நூற்றாண்டு ஞாபகார்த்த விழாவும் புத்தூரில் இன்று இடம்பெறும்.

வலி.கிழக்கு பிரதேச சபை உறுப்பினர் தி.கமலநாதன் தலைமையில் முற்பகல் 9 மணிக்கு இது இடம்பெறும். முதன்மை விருந்தினராக இலங்கைத் தமிழ்அரசுக்கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சோ.சேனாதிராசா கலந்துகொள்வார். மதிப்புறு விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், யாழ்ப்பாண மாணகர சபை முதல்வர் இ.ஆனோல்ட் கலந்துகொள்வர். சிறப்பு விருந்தினர்களாக வலி.கிழக்கு பிரதேச சபைத் தலைவர் தி.நிரோஸ், சிறிவிஷ்ணு வித்தியாலய முன்னாள் அதிபர் நா.சிவஞானம், நாடக இயக்குநர் நா.செல்வம் ஆகியோர் கலந்துகொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது. (4)

# கட்சி தாவுகிறதா சுயேச்சைக் குழு

## நெடுந்தீவு பிரதேச சபையின் அவலம்

யாழ்ப்பாணம், ஓக. 5
நெடுந்தீவுப் பிரதேச சபையில் இரண்டு உறுப்பினர்களைக் கொண்ட சுயேச்சைக் குழுவினர் கட்சி தாவும் வேலைகளில் ஈடுபட்டுள்ளனர் என அறியமுடிகிறது. சுயேச்சைக்குழுவின் இந்த நிலையால் சபையைக் கைப்பற்றியுள்ளதமிழ்த்தேசியக்கூட்டமைப்புகையறு நிலையில் உள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

உள்ளூராட்சிமன்றத்தேர்தல்களின்போது, நெடுந்தீவுப் பிரதேச சபை தொங்கு சபையாகக் காணப்பட்டது. ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி 6 ஆசனங்களையும், தமிழ்த் தேசியக்கூட்டமைப்புநான்குஆசனங்களையும், சுயேச்சைக்குழுஇருஆசனங்களையும், ஐக்கியதேசியக்கட்சி ஒரு ஆசனத்தையும் கைப்பற்றியிருந்தன. சபையில் போட்டிகாணப்பட்டதால்சுயேச்சைக்குழு, ஐக்கியதேசியக்கட்சிதமிழ்த்தேசியக்கூட்டைப்புக்கு ஆதரவுவழங்கியிருந்தன. சபையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றியிருந்தது. தவிசாளர், உபதவிசாளர் பதவிகளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வசமாகின. எனினும் சபையின் உபதவிசாளர் இயற்கை எய்தியதின் பின்னர் அந்தப் பதவிக்காக சபை கூடுகின்றபோதும் ஒத்திவைக்கப்படுகிறது. இது தொடர்பில் சபையின் தவிசாளர் நேற்று கருத்துத் தெரிவித்தார்.

'கடந்த உள்ளூராட்சித் தேர்தல் நிறைவடைந்திருந்த நிலையில் எமது சபையும் தொங்கு நிலையில் காணப்பட்டது. அப்போது கூட்டமைப்பினராகிய நாம் சபை நிர்வாகத்தை சுயேச்சைக் குழுவுக்கு பகிர்வதாக உறுதியளித்தோம். இதனால் சுயேச்சைக்குழுவினர் எமக்கு ஆதரவுதந்தனர். ஆனால் இப்போது ஈபிடிபியினருடன் கூட்டுச்சேர்ந்து சபையை முடக்கும் வேலையில் இறங்கியுள்ளனர்.

எனவே அவர்களுடன் இணைந்து செயற்படுவதை விலத்தி நாம் தனித்தே செயற்படுவது எனத் தீர்மானித்துள்ளோம்'என்றார். அத்தோடுநேற்றைய (நேற்றுமுன் தினம்) அமர்வின்போதுசுயேச்சைக்குழுவைச்சேர்ந்த உறுப்பினர்ஒருவர்சபைக்குவருகைதரவில்லை, அவர் அனுமதியின்றிவெளிநாடுசென்றுள்ளார்என்றும், அவருக்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்றும் தவிசாளர் அறிவித்தார். (எ-21,8)





# வைக்கோல் கும்பிகள் தீயில் எரிந்து நாசம்

## 80ஆயிரம் ரூபா நட்டம்

கொடிகாமம், ஓக. 5
சாவகச்சேரியில்எதிர்பாராதவிதமாகஒருவைக்கோல் கும்பியில் ஏற்பட்ட தீயால் அங்கிருந்து 7 வைக்கோல் கும்பிகள் எரிந்து நாசமாகின. இதனால் 80ஆயிரம் ரூபாவுக்குமேல் நட்டம் ஏற்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், சாவகச்சேரி நுணாவில் மேற்கில் வீரபத்திரர் வீதியில் உள்ள காணிக்குள் இருந்த வைக்கோல்கும்பிகளேஎரிந்துநாசமாகின. இந்தச்சம்பவம் நேற்றுமுன்தினம்இடம்பெற்றது. குறித்தவைக்கோல் கும்பிகள்இருந்தகாணிக்குஅருகில்உள்ளமற்றொரு காணியில், குப்பைக்குத் தீ வைக்கப்பட்டது. அதன் போது தீ அருகில் நின்ற வடலியில் பற்றியது. அதிலிருந்து பறந்த தீப்பொறி வைக்கோல் கும்பமொன்றில் விழுந்ததாலேயே இந்த இடர் ஏற்பட்டது. இதனால், சுமார்எண்பதாயிரம்ரூபாநட்டம்ஏற்பட்டுள்ளதுஎனத் தெரிவிக்கப்பட்டது. (எ-159)

வவுனியாவில் முன்னெடுக்கப்பட்ட

# எமது நடவடிக்கைகள் அனைத்துமே மக்கள் நலனை கருத்தில் கொண்டவை

## வடக்கு சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

**மன்னார், ஓக. 5**
**வவுனியாவில் சுகாதார திணைக்கள ஊழியர்களுடன் இணைந்து முன்னெடுக்கப்பட்ட அனைத்து நடவடிக்கைகளும்மக்களின்முறைப்பாடுகளுக்குஅமைவாகமக்களின்நலனைக்கருத்தில்கொண்டே முன்னெடுக்கப்பட்டன என்று வடக்கு சுகாதார அமைச்சர் ஜீ.குணசீலன் தெரிவித்தார்.**

மன்னாரில் உள்ள உப அலுவலகத்தில் நேற்று சனிக்கிழமை காலை 10.30 மணியளவில்இடம்பெற்றஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
வவுனியாவில் கடந்த 31ஆம் திகதி வெளிக்கள நடவடிக்கை ஒன்றை சுகாதாரத் திணைக்களத்தின் ஊழியர்களுடன் இணைந்து நான் மேற்கொண்டேன்.

அன்றைய தினம் இரண்டு மருந்தகங்கள் மற்றும் மூன்று மருத்துவ சிகிச்சை நிலையங்கள் மற்றும் பரிசோதனைகளுடன் கூடிய மருத்துவமனைகள் என்று கூறக்கூடிய இரண்டு சிறிய அளவிலானமருத்துவமனைகள்எங்களால் திடீர் சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டன.

இதன்போதுஇரண்டுமருந்தகங்களும் சட்ட பூர்வமான அனுமதிப்பத்திரங்கள் இல்லாமலே பல வருடங்களாகத் தொழிற்பட்டுவந்துள்ளமை தெரிய வந்தது. அதையடுத்து,

குறித்தஇருமருந்தகங்கள்தொடர்பிலும் உடனடியாகத்திணைக்களரீதியிலான நடவடிக்கைகளைமேற்கொள்ள உரிய அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளேன்.

மேலும்மருத்துவர்களால்நடத்தப்படும் மூன்றுதனியார்சிகிச்சைநிலையங்கள் பார்வையிடப்பட்டன. இவை ஆயுள்வேதமற்றும்பாரம்பரியமருத்துவத்துக்குரிய பட்டப்படிப்பை மேற்கொண்டவர்களால் நடத்தப்பட்டுவந்தன.

குறித்த மூன்று சிகிச்சை நிலையங்கள் இரண்டில் அதிகளவிலான மேற்கத்தையமருந்துவகைகள்கைப்பற்றப்பட்டன. ஆயுள்வேத அல்லது பாரம்பரிய மருந்து சிகிச்சைகளை வழங்கக்கூடிய பட்டப்படிப்பை மேற்கொண்டவர்கள் ஆங்கில மருந்து வகைகளை அல்லது மேற்கத்தைய மருந்து வகைகளைக் கொண்டு சிகிச்சை வழங்க சட்டத்தில் இடம் இல்லை. விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட குறித்த சிகிச்சை நிலையங்கள்மீதும்உரியவர்கள்மீதும்சட்டநடவடிக்கை எடுக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேலும்மருத்துவப்பரிசோதனை வசதிகளுடன் கூடிய இரண்டு மருத்துவ நிலையங்கள்எங்களால்பரிசோதனைகளுக்குஉட்படுத்தப்பட்டபோதுஅங்கே இயங்குகின்ற கதிர் படம் (எக்ஸ்றே) பிடிக்கின்றபிரிவு, அடிப்படையான கதிர் படம்எடுக்கின்றஅடிப்படைதகுதிகளைக் கொண்டஅமைவிடத்திலே அமைக்கப்படவில்லை.

மேலும்கதிர்படம்எடுப்பதற்குஅணுசக்தி மீள் சக்தி அமைச்சிடம் இருந்து பெற்றுக்கொள்ளப்படவேண்டிய அனுமதிப்பத்திரமும்அங்கேகாணப்படவில்லை. எனவே குறைபாடுடைய கதிர்ப்படம் எடுக்கின்ற அந்த அறைகளினுள் தொடர்ச்சியக்க் கதிர்ப்படம் எடுக்கின்ற போது அதில் இருந்து கதிர் வீச்சு வெளிப்புறமாகவருவதற்குரியஆபத்துஅங்கே இருக்கின்றது. இதுமக்களுக்குப்பாதிப்பு. அதனைஎங்களுடையஉயிர்மருத்துவ பொறியியலாளர் உறுதிப்படுத்தியுள்ளதோடு, அறிக்கை மூலமும் தந்துள்ளார்.

உடனடியாக அந்தச் செயற்பாடுகளை நிறுத்தி சரியான முறையில் அடிப்படையான விடயங்களை முழுமை செய்து அனுமதிப்பத்திரத்தை பெற்ற பின் தொடர்ந்து நடத்துமாறு அறிவுரை கூறியுள்ளோம். ஆனால், சரியான சட்ட நடவடிக்கைகளைக் கடைபிடிப்பதற்கான ஆர்வம் காட்டுவது போல் தெரியவில்லை.

கடந்த 31ஆம்திகதி பரிசோதனைகளை மேற்கொண்டிருந்தோம். ஆனால் மறுநாள் முதலாம் திகதி ஒரு அனுமதிப்பத்திரம் கொழும்பில் இருந்து உடனடியாக மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத்தெரியவருகின்றது. ஒரு குழுவினர் கொழும்பில் இருந்து வந்து நேரடியாகப் பரிசோதித்து தமது நிபந்தனைகளுக்கு அமைவாக அந்த அறை கட்டப்பட்டுள்ளதா? என்பதனை பார்த்த பின்பு அதற்கான அனுமதி வழங்கப்பட வேண்டும். ஆனால்24மணிநேரத்துக்குள் ஒருஅனுமதிப்பத்திரம்வழங்கப்பட்டுள்ளது.

குறித்த அனுமதிப்பத்திரத்தில் கூட சில தரவுகள்பிழையாககாணப்பட்டன. இது தொடர்பாக உரிய அமைச்சுக்கும் நாங்கள் கடிதம் அனுப்பியுள்ளோம். பொது மக்கள் இந்த விடங்களில் கவனமாக இருக்க வேண்டும்-என்றார். (எ-56)

# சண்டிலிப்பாய் வாள்வெட்டுச் சம்பவம்: மேலும் இருவர் கைதாகி விசாரணையின் பின் விடுதலை

மானிப்பாய், ஓக. 5
சண்டிலிப்பாயில் இடம்பெற்ற வாள்வெட்டுச்சம்பவங்கள்தொடர்பில் மேலும் இருவர் நேற்றுமுன் தினம்கைதுசெய்யப்பட்டுத்தடுத்து வைக்கப்பட்டுவிசாரணைக்குட்படுத்தப்பட்ட நிலையில் நேற்று விடுவிக்கப்பட்டனர்என்றுமானிப்பாய்ப்பொலிஸார்தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் சண்டிலிப்பாயில் அண்மையில் இடம்பெற்ற வாள் வெட்டுச்சம்பவங்களுடன்தொடர்பிருக்கலாம் என்ற சந்தேகத்திலேயே இருவரும் கைது செய்யப்பட்டனர். கைதுசெய்யப்பட்டவர்கள் 20,22 வயதைச் சேர்ந்த அவர்கள் தெல்லிப்பழையைச் சேர்ந்தவர்கள். மானிப்பாய் பகுதியில் பொலிஸார் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போதே அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்பின்னர் அவர்கள் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

யாழ்ப்பாணம், சண்டிலிப்பாய்ப் பகுதியில் கடந்த ஜூலை மாதம் 26ஆம்திகதி இரவுவாள்களுடன் இனந்தெரியாத நபர்கள் பெரும் அட்டகாசத்தில்ஈடுபட்டனர்ளைஞர்களை மடக்கி, மிரட்டினர், முகத்தை மூடி துணிகட்டி வாள்களுடன் அட்டகாசம்செய்த அவர்களைக் கண்டு வாகனங்களை விட்டுவிட்டு இளைஞர்கள் சிதறி ஓடினர். எனினும்இனந்தெரியாத அந்த நபர்கள் வாகனங்களைக் கடுமையாகச்சேதப்படுத்தி, ஒருவருடைய மோட்டார் சைக்கிளையும் பறித்துச் சென்றிருந்தனர்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளைமேற்கொண்ட மானிப்பாய் பொலிஸார்சம்பவம்இடம்பெற்று இரண்டுநாள்களின்பின்னர்நால்வரைக் கைது செய்தனர். அவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட போது விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். அதன்பின்னர் ஒருவர் கைது செய்யப்பட்டார். அவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

இதன்தொடர்ச்சியாகநேற்றுமுன் தினமும் இவர்கள் கைதுசெய்யப்பட்டனர். வாள்களுடனான அட்டகாசத்தைத் தொடர்ந்து மானிப்பாய் பகுதியில் பொலிஸார் சோதனை நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியுள்ளனர். பலரும் சோதனைகளுக்கு உட்படுத்தப்படுகின்றனர். (எ-21,26)



காரைநகரில் அமையவுள்ள

# சுகாதார மருத்துவப் பணிமனைக்கு 6.5 பரப்புடைய காணி அன்பளிப்பு

காரைநகர், ஓக. 5
காரைநகரில் புதிதாக அமைய உள்ள சுகாதார மருத்துவ அதிகாரிப் பணிமனைக்கான கட்டடம் அமைப்பதற்கான காணி கொள்வனவு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

தற்போது வரை ஊர்காவற்றுறை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் இந்தப் பிரிவு இயங்குகிறது.

காரைநகர்வேம்படியில்6.5பரப்புக்காணி அறக்கொடைச் செம்மல் சுப்பிரமணியம் கதிர்காமநாதனால் கொள்வனவுசெய்யப்பட்டுபிராந்தியசுகாதாரசேவைகள் பணிப்பாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. காணி கையளிக்கும்நிகழ்வுகடந்தவியாழக்கிழமையாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இடம்பெற்றபோது பணிப்பாளர் மருத்துவர் க. நந்தகுமாரிடம் காணி உறுதி கையளிக்கப்பட்டது.

நிகழ்வில் காரைநகர் அபிவிருத்திச் சபைத் தலைவரும்ஓய்வுநிலைவடக்குமாகாணக்கல்விஅமைச்சின் பிரதிச்செயலருமான ப. விக்னேஸ்வரன், காரைநகர் பிரதேச சபை உப தவிசாளர் க. பாலச்சந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர். பணிமனைக்கான கட்டடம்அமைக்கும்பணிவிரைவில்ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (4,250)

DATA
Differently Able Tamils Association

Differently Able Tamils Association
தமிழ் மாற்றுத்திறனாளிகள் அமைப்பு
TAMIL PARA SPORTS

தமிழ் மாற்றுத்திறனாளிகள்
விளையாட்டு விழா





சக்கரநாற்காலிகள்..
ஊன்றுகோல்கள்..
வெண்பிரம்புகள்..
வந்து பாருங்கள்.

காலை 9 மணி

துரையப்பா விளையாட்டரங்கு

இன்று

ஒரு மாலை
மாற்றுத்திறனாளிகளோடு.....

இந்திய மற்றும் ஐரோப்பிய முன்னணி
கலைஞர்கள் மாற்றுத்திறனாளி கலைஞர்களோடு
பங்குபெறும் மாபெரும்

இசைநிகழ்ச்சி

யாழ்ப்பாணம் நகரசபை
மைதானம்

மாலை 7 மணி



## விவசாயப்பிரதி அமைச்சர் மட்டக்களப்புக்குப்பயணம்

யாழ்ப்பாணம் ஓக 5
விவசாய பிரதி அமைச்சர் அங்கஜன் இராமநாதன் பதவியேற்றதன்பின் முதன்முறையாக நேற்றுமுன்தினம் மட்டக்களப்புக்குச் சென்றார்.

அங்கு, கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் இடம்பெற்ற பூஜை வழிபாட்டில் கலந்துகொண்டதோடு ஆலய வரலாற்றையும் கேட்டறிந்து பார்வையிட்டார்.

சந்திப்பில், அவரது அமைச்சின் உயர்அதிகாரிகள் மற்றும் மாவட்ட விவசாயிகள் சம்மேளன பிரதிநிதிகள் ஆகியோரும் கலந்து கொண்டனர். வழிபாட்டின்பின் ஊடகவியலாளர்களைச் சந்தித்த பிரதி அமைச்சர், "அரச தலைவரின் வேண்டுகோளுக்கு இணங்கவே கிழக்குக்கு வருகை தந்துள்ளேன். விரைவில் அரசதலைவர் மட்டக்களப்புக்கு, கிராம சக்தி அபிவிருத்தித் திட்டத்தை ஆரம்பிக்க வருகை தரவுள்ளார்.

கிழக்குமாகாணத்தில் அதிகமாகவுள்ள விவசாயபிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக இங்கு வருகை தந்துள்ளேன். போரால் பாதிப்புற்ற விவசாயிகளின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்ப அரசதலைவர் விருப்பம் கொண்டுள்ளார்" என்று தெரிவித்தார். (எ-ரி3)

---

ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சையில்

## வினாக்களைவாசிப்பதற்கு 10 நிமிட மேலதிக நேரம்

*மாகாணத் திணைக்களம் அறிவிப்பு*

யாழ்ப்பாணம் ஓக 5
ஜி.சி.ஈ உயர்தரப்பரீட்சைக்குத்தோற்றுகின்ற மாணவர்களது 3 மணித்தியாலங்களைக்கொண்ட வினாப்பத்திரங்களுக்கு அவற்றைவாசிப்பதற்கும் வினாக்களைத் தெரிவு செய்வதற்குமாக 10 நிமிடங்கள் மேலதிகமாக வழங்கப்படுகின்றது என்று வடக்கு மாகாண கல்வித் திணைக்களப் பிரதிக்கல்விப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார். ஜி.சி.ஈ உயர்தரப் பரீட்சைகள் நாளைக்கு ஆரம்பமாகின்றன. தொடர்ந்து எதிர்வரும் முதலாம் திகதி வரையும் நடைபெறவுள்ளன.

பரீட்சார்த்திக்குப் பதிலாக வேறொருவர் தோற்றுதல், குறிப்புகள் வைத்திருந்து விடையளித்தல், மற்றைய பரீட்சார்த்திகளின் உதவியைப் பெறுதல், உதவியளித்தல், பரீட்சைமண்டபத்திலும் அதற்கு வெளியிலும் முறைகேடாக நடத்தல் என்பன பரீட்சை விதிமுறை களுக்கு அமைய தண்டனைக்குரிய குற்றமாகும்.

கணித்தற் பொறிகள், அழிமை என்பவற்றை உபயோகிப்பதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

தற்போது, ஏதாவது அரச பாடசாலையில் கல்வி கற்கும் ஒருவர் தனிப்பட்ட பரீட்சார்த்தியாகத் தோற்றுதல் தண்டனைக்குரிய குற்றமாகும்.

பரீட்சைமண்டபத்தினுள்கையடக்கத் தொலைபேசி, ஸ்மார்ட் கைக்கடிகாரம், இலத்திரனியல் உபகரணங்கள் எடுத்துச் செல்லல் என்பன முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளனஎன்பதுடன் அவ்வாறு எடுத்துச் சென்றால் 5 வருடங்கள் பரீட்சைகளுக்குத் தடைசெய்யப்படும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளர். (எ)

---

*மன்னாரில்*

# 1500 பனைகள் தீயால் நாசம்

### தீயணைப்பு சேவை இன்மையே அழிவைத் தடுக்க முடியாமைக்குக் காரணம் என்கிறார் சாள்ஸ் எம்.பி

*மன்னார் ஓக 5*
*மன்னார்மாவட்டத்தில்தீ அணைப்புசேவை இன்மைகாரணமாக ஓலைத் தொடுவாய் பகுதியில் ஆயிரத்து 500 பனைகள் தீயினில் எரிந்து நாசமாகியுள்ளன என்று தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ்நிர்மலநாதன் தெரிவித்தார்.*



வடக்கின் அரும்பெரும் சொத்துக்களில் ஒன்றான கற்பகதரு நிறைந்தமாவட்டங்களில்ஒன்றான மன்னார் மாவட்டத்தில் பனை மரம் அதிகமுடைய பிரதேசமானஒலைத்தொடுவாய் பகுதியில் கடந்த வியா ழக்கிழமை முற்பகல் வேளையில் சுமார் 11 மணியளவில் தீ பற்றிக்கொண்டது.

பொதுமக்கள், மாவட்டத்தில் இருந்த படையினர் எனப் பலரும்பலமணிநேரம்தண்ணீர் பவுசர்களின் துணையுடன் போராடியும் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியவில்லை. இரவு12மணிவரையில் கொழுந்து விட்டு எரிந்தது.

இதன்காரணமாகசுமார்ஆயிரத்து 500 பனைகள் தீயினில் எரிந்து நாசமாகியுள்ளன.

இந்தப் பனைகளை நம்பி வாழ்ந்த 60க்கும் மேற்பட்ட சீவல்தொழிலாளர்கள்நிர்க்கதி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். மாவட்டத்தின் பெரும் சொத்து நாசமாகியுள்ளது.

இவ்வாறு ஏற்பட்ட இடரின் போது பனைகள் மூலம் பரவிய தீ இறுதியில் இரு வீடுகள் மீதும் பரவியது. இதன் இறுதியில்பெரும்போராட்டத்தின் மத்தியிலேயே தீ அணைக்கப்பட்டது.



இந்தநிலமையைஆரம்பத்திலேயே கட்டுப்படுத்தியிருக்க முடியும்.

அவ்வாறு கட்டுப்படுத்த மாவட்டத்துக்குத்தீஅணைப்பு சேவையை வழங்குமாறு நாம் நீண்டகாலம் விடுத்த கோரிக்கை இதுவரைஏற்றுக்கொள்ளப்படவில்லை. அவ்வாறு தீ அணைப்பு சேவையைஇந்தமாவட்டத்துக்குவழங்கத்தவறியவர்களே இந்த அழிவுக்குப் பொறுப்பேற்க வேண்டும்.

அதே நேரம் இந்தத் தீயின் காரணமாக அழிவடைந்தவீடுகள், பனை மரங்களின் உரிமையாளர்களுக்கு இழப்பீடும் தொழிலை இழந்து தவிக்கும் தொழிலாளர்களுக்கு நிவாரணமும்வழங்கஆவனசெய்ய வேண்டும்.

இவை அனைத்துக்கும் மேலாக இனியும் காலம் கடத்தாதுமன்னார்மாவட்டத்துக்கு தீ அணைப்பு சேவை இயந்திரம் ஒன்றை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (எ-105)

---

## வடக்கு பால் பண்ணையாளர்களுக்கான கொடுப்பனவுகளை வழங்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம் ஓக 5
வடக்கு மாகாணத்துக்குட்பட்ட பால் பண்ணையாளர்களின், பால் வழங்கலுக்கான கொடுப்பனவுகளைக் குறித்த காலப்பகுதிகளுக்குள் சீராக வழங்கநடவடிக்கைஎடுக்கக் கோரிநாடாளுமன்றஉறுப்பினர் சிவஞானம் சிறீதரன், கொழும்பு கிராமிய பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் விஜித் விஜிதமுனி சொய்சாவுக்குகடிதம்அனுப்பியுள்ளார். குறித்த கடிதத்தில் உள்ளதாவது:

வடக்கு மாகாணத்திலுள்ள யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களில் அமைந்துள்ள சாவகச்சேரி, கிளிநொச்சி, முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான், மல்லாவி, செட்டிகுளம், முருங்கன் ஆகிய பால்குளிரூட்டும்நிலையங்களில் நாளாந்தம் ஏறத்தாழ 5ஆயிரம்லீற்றர்பால்குளிரூட்டப்படுகிறது. சாவகச்சேரியில் 411 பண்ணையாளர்களும், கிளிநொச்சியில் ஆயிரத்து 496பண்ணையாளர்களும், முல்லைத்தீவில் ஆயிரத்து 650பண்ணையாளர்களும், ஒட்டுசுட்டானில்ஆயிரத்து68 பண்ணையாளர்களும், மல்லாவியில்658பண்ணையாளர்களும், செட்டிகுளத்தில்486 பண்ணையாளர்களும், முருங்கனில் ஆயிரத்து 376 பண்ணையாளர்களுமாக வடக்குமாகாணத்தில் 7ஆயிரத்து 145 பண்ணையாளர்கள் பால் குளிரூட்டும் நிலையங்களுக்குபால்வழங்குகின்றனர்.

இவர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்படும் பாலுக்கானகொடுப்பனவுபதினைந்து நாள்களுக்கு ஒருமுறை வழங்கப்பட்டுவந்த நிலையில்தற்போது ஒன்றரைமாதமாகஇந்தக்கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை.

இதனால் பால் விற்பனையையேதமதுமுதன்மைஜீவனோபாயமாகக்கொண்டு வாழும்7ஆயிரத்துக்கும்அதிகமான பண்ணையாளர்கள் பெரும்இடர்களைஎதிர்கொள்கிறார்கள்.

30 மேலாக நீண்டிருந்த போரால் தமது உறவுகளையும், உடமைகளையும், பொருளாதார இயலுமைகளையும் இழந்து மீளக்குடியமர்ந்தபின்னர்வாழ்வாதார உதவித்திட்டங்கள் மூலமும், வங்கிக்கடன்களைப்பெற்றும் பால்மாடுகளைக் கொள்வனவு செய்து அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தில் தமது வாழ்க்கைச் செலவை நிர்வகிக்கும் இந்தப் பண்ணையாளர்களுக்குதொடர்ச்சியாகப் பால் கொள்வனவுக்கானகொடுப்பனவுகள்வழங்கப்படாததால் வங்கிக்கடன்களைச்செலுத்தமுடியாமலும், அன்றாடத் தேவைகளை முழுமை செய்யமுடியாமலும், தமது குழந்தைகளின் கல்விச்செலவுகளுக்கு முகம் கொடுக்கமுடியாமலும்பொருளாதார ரீதியாக அல்லற்படுகிறார்கள்.

மலையகப் பகுதிகளிலும், வேறு சில மாவட்டங்களிலும் இந்தக் கொடுப்பனவுகள் சீராக வழங்கப்படும் அதே வேளைஏற்கனவேபல்வேறுபட்ட பாதிப்புக்களை எதிர்கொண்டு மெல்லமெல்ல அவற்றிலிருந்துமீண்டெழும் எமது மக்களின் வாழ்வியலில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

எனவே தயவுசெய்து இந்த விடயத்தில்தாங்கள்அதிகஅக்கறை காட்டி வடக்கு மாகாணப்பண்ணையாளர்களுக்கான கொடுப்பனவுகளை குறித்த காலப்பகுதிக்குள் வழங்குவதற்கான நடவடிக்கைகளைமேற்கொள்ளஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றேன்-என்றுள்ளது. (எ)

---

## கிராம அபிவிருத்தி திட்டத்துக்கான கலந்துரையாடல்

கொடிகாமம், ஓக 5
கிராமத்துக்கான ஒரு மில்லியன் ரூபா அபிவிருத்தித் திட்டத்துக்கான வேலைத் திட்டங்களை ஆரம்பிப்பதற்கான கலந்துரையாடல் யாழ்ப்பாண மாவட்டத்தின் கொடிகாமம், இராமாவில் கிராம அலுவலர் அலுவலகத்தில் கடந்த சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு இடம்பெற்றது.

கிராம அலுவலர் க. கஸ்தூரி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சாவகச்சேரிப் பிரதேச செயலக அபிவிருத்திஅலுவலர்ஜெயந்தன், சமுர்த்தி அலுவலர்கிருஷ்ணராஜா, பொருளாதாரஅபிவிருத்திஅலுவலர்அனுசாமலர்பிரதேசசபைஉறுப்பினர்ஞா.திலகராணி மற்றும் சமூக மட்ட அமைப்புக்களான கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், மாதர்சங்கஉறுப்பினர்கள் கிராம மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

'இராமாவில்கிராமஅலுவலர்பிரிவில் பொதுமக்களின்தேவைகளைநிறைவேற்றுவதற்கு ஒரு பொது நோக்கு மண்டபம்இல்லை. கிராமஅலுவலர், சமுர்த்தி அலுவலர் பொருளாதார, அபிவிருத்தி அலுவலர் ஆகியோர் மக்களைச்சந்தித்துஅவர்கள்தேவைகளை நிறைவேற்ற ஒரு பொது மண்டபம் தேவை" என மக்களால் தெரிவிக்கப்பட்டதையடுத்து, கூட்டத்தில், முன்னுரிமை அடிப்படையில் பொது நோக்குமண்டபம்விஸ்தரிப்புச்செய்வதென கிராம மக்களால் தீர்மானிக்கபட்டது. (எ-159)


Discover the Locations that Embraces the Ultimate Luxurious Living
from
Sri Lanka's Largest Property Developer
Luxurious Living • Investment Property • Holiday Home
Blue Ocean™
GROUP OF COMPANIES
S.Thumilan (Group Chairman)
ACA, ACMA (UK), ACCA, CGMA
MCSI (UK), CPA (AUS), FMAAT (SL), ACS
Our On-Going Projects
No.06, 19th Lane, Colombo 03
No 45, Alfred House Gardens, Colombo 03
No.121, Inner Flower Road, Colombo 03
No.15A, Layard's Road, Colombo 04
No. 35, Ramakrishna Road, Colombo 06
No.73, Gergory's Road, Colombo 07
No.34/2, De Serem Rd, Mount Lavinia
No.06, Alwis Avenue Mount Lavinia
No.30, Hotel Road, Mount Lavinia
No.19, Barnes Avenue, Mount Lavinia
No.15, Lillian Avenue, Mount Lavinia
No.02, Glenfall Road, Nuwara Eliya
Newly Launched Projects
Luxury Condominium Skyscraper @ No.20, Vajira Road, Colombo 04
Just Opposite Vajira Pillayar Kovil
Luxury Condominium Skyscraper @ No.35, Ramakrishna Road, Colombo 06
Just Opposite Ramakrishna Mission
PropertyGuru ASIA PROPERTY AWARDS
BEST DEVELOPER (SRI LANKA) 2017
& WINNERS OF THE MOST NUMBER OF AWARDS - 2018
Best Sustainable Development Company (Sri Lanka) 2017
Asia Property Awards Singapore
Top 100 Asia's Greatest Brand & Leader (Sri Lanka) 2017
Asia's Greatest Leader & Brand Awards
Best CSR, Condo Architecture & Interior Design (Sri Lanka) - 2018
Asia Property Awards Sri Lanka
Our Up-coming Projects
Boswell Place, Colombo 06
(Just 5mins Walk Away from Delmon Hospital)
Maya Avenue, Colombo 06
(Just 2min Walk Away from Laughs)
Havelock Place, Colombo 05
(Just Opposite to BRC Grounds)
Layards Road, Colombo 04
(Just 2mins Walk from Hindu College)
Wedderburn Road, Nuwara Eliya
(Just 5min Walk Away from Victoria Park)
HOW TO PAY ?
30 - 35% Down Payment,
Balance by INTEREST FREE
MONTHLY PAYMENTS
up to 24 Months
or Bank Loan can be obtained
(*Conditions Apply)
10+ Locations
35+ Projects
1250+ Condo Units
Nations TrustBank
SampathBank
NDB bank
COMMERCIAL BANK
*Conditions Apply
Easy Interest Free Installment Schemeor BANK LOAN can be obtained through Tripartite Agreement.
Bank Loans Available
+94 777 546 546
+94 777 755 323
+94 777 402 070
+94 777 121 924
www.blueocean.lk
Head Office
Sri Lanka
#32, 1st & 2nd Floors, Galle Road, Dehiwala, Sri Lanka
Platinum Branch
Sri Lanka
#9A,De Fonseka Place, Bambalapitiya, Colombo - 04
Int. Branch
United Kingdom
Base Point, Dartfort Business Park, Victoria Rd, Dartford, Kent, DA1 5FS
Int. Branch
Austraila
#32, Brolin Terrace, Cranbourne North, Vic. 3977
Int. Branch
United Arab Emirates
Office 1403, Al Manara Tower, Burj Khalifa District, Business Bay, UAE
Int. Branch
Canada
No.01 Helicon Gate, Toronto, Ontario, M1G3R7

# நல்லூர்ப் பிரதேச சபையின் புலமைப் பரிசில் கருத்தமர்வு

யாழ்ப்பாணம், ஒக. 5

நல்லூர் பிரதேச சபையின் ஏற்பாட்டில் பிரதேசத்தைச்சேர்ந்தபுலமைப்பரிசில்பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு இடம்பெற்றது.

இந்தக் கருத்தரங்கு நல்லூர் பிரதேச சபைச் செயலாளரின் கோரிக்கைக்கு அமைவாக சபையின் உறுப்பினர் கு. மதுசூதன் ஒழுங்கமைத்திருந்தார். நல்லூர் பிரதேச சபையின் மண்டபத்தில் சில நாள்களுக்கு முன்னர் இது நடைபெற்றது. இதில் பிரதேச மாணவர்கள் பயனடைந்தனர். (21)












அனைத்து அமைச்சர்கள், எம்.பிக்களின்

# சம்பள அதிகரிப்பை வழங்க கட்சித் தலைவர்கள் இணக்கம்

கொழும்பு, ஓக. 5
அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரின் சம்பள உயர்வுக்குக்கட்சித்தலைவர்கள்இணக்கம்வெளியிட்டுள்ளனர்என்றுஅவைத்தலைவர்லக்ஸ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.

அண்மையில் சிங்கள பத்திரிகையொன்று எழுப்பியகேள்விக்குப்பதிலளித்தபோதுஅவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்தஜூலைமாதம்17ஆம்திகதிநடைபெற்ற கட்சித்தலைவர்கள்கூட்டத்தின்போதுசம்பள உயர்வுகுறித்தயோசனைக்குக்கட்சித்தலைவர்கள்ஏகமனதாகச்சம்மதம்வெளியிட்டனர். கூட்டுஎதிர்க்கட்சியின்நாடாளுமன்றக்குழுத் தலைவர் தினேஸ் குணவர்த்தன, ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க ஆகியோரும் இந்தத் தீர்மானத்துக்கு ஆதரவளித்திருந்தனர் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (4)

நீதிபதி சரத் அம்பேபிட்டியவை கொன்ற

# பாதாளக் குழுத் தலைவன் வேறு சிறைக்கு மாற்றம்

கொழும்பு, ஓக. 5
தூக்குத்தண்டனைவிதிக்கப்பட்டுள்ளபாதாள உலகக்குழுத் தலைவரை வேறு சிறைச்சாலைக்கு மாற்ற நடவடிக்கை எடுத்துள்ளதாக நீதியமைச்சர் தலதா அத்துகோரள தெரிவித்துள்ளார்.

பொட்டநௌபர்எனஅழைக்கப்படும்மொஹமட் நியாஸ் நௌபர் என்ற குற்றவாளியே இவ்வாறு மாற்றப்பட்டார் என்று சிங்கள ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது. அவர் நீதிபதியைக் கொன்ற குற்றத் துக்காகத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டவர்.

மொஹமட் நியாஸ் நௌபர் கொழும்பு மேல் நீதிமன்ற முன்னாள் நீதிபதி சரத் அம்பேபிட்டியவைத் துப்பாக்கிச் சூடுநடத்திக் கொன்ற குற்றத்துக்காகத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளார். அவருடன்பதுளைசிறைச்சாலையின்அதிகாரிகள்நெருங்கியதொடர்புகளைக் கொண்டிருந்துள்ளனர்என்றதகவலின்அடிப்படையில், குற்றவாளியைவேறு ஒருசிறைச்சாலைக்குமாற்றநடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாதாள உலகக்குழு தலைவருடன் நெருங்கியதொடர்புகளைக்கொண்டுள்ளனர்என்று கூறப்படும் சில சிறைச்சாலை அதிகாரிகள் குறித்துத் தகவல்கள் கிடைத்துள்ளன. அவர்களுக்குஎதிராகவிசாரணைகள்ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தெரியவருகிறது.

பொட்டநௌபருக்குசிலஅதிகாரிகள்உதவிகளைச் செய்து, குற்றச்செயல்களில் ஈடுபட வழியைஏற்படுத்திக்கொடுத்துள்ளனர்என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஹெரோய்ன் போதைப்பொருள் கடத்தல்கள் தொடர்பான வழக்குகளை விசாரித்து வந்த நீதிபதிசரத்அம்பேபிட்டிய, 2004ஆம்ஆண்டு நவம்பர் மாதம் 20ஆம் திகதி, கொழும்பில் உள்ள அவரது வீட்டில் கொல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (4)

## பொலித்தீன் விற்பனையாளர்கள், பாவனையாளர்களும் சிக்குவர்

*இனிப் பொலிஸாரும் கைது செய்வர்*

கொழும்பு, ஓக. 5
தடைசெய்யப்பட்ட பொலித்தீன் பாவனையாளர்கள் மற்றும் விற்பனையாளர்களைச் சுற்றிவளைக்கும் செயற்பாட்டை பொலிஸாரிடம் ஒப்படைக்க, மைய சுற்றாடல் அதிகார சபை தீர்மானித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

நாட்டில் பொலித்தீன் பாவனைக்குத் தடை விதிக்கப்பட்டுள்ள போதிலும், தொடர்ந்தும் அதனைப் பாவனைக்கு உட்படுத்தி வருவதன் காரணமாக இந்தச் செயற்பாட்டை முன்னெடுக்க வேண்டியுள்ளதாகச் சபை தெரிவித்தது.

மைய சுற்றாடல் அதிகார சபையின் விசாரணைப் பிரிவு மற்றும் நுகர்வோர் பாவனையாளர் அதிகார சபை ஆகியன இணைந்து இதுவரை சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தன.

இந்தநிலையில் எதிர்வரும் நாள்களில் சுற்றாடல் பொலிஸார் மூலமாக சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பில், கலந்துரையாடியுள்ளதாக அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளது. (4)

## கதிரேசனுக்கு இன்று தேர்

ஊர்காவற்றுறை பருத்தியடைப்பு கதிரேசன் கோவில் வருடாந்தப் பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா இன்று இடம்பெறும்.
நாளைதிங்கட்கிழமைதீர்த்தத்திருவிழாஇடம் பெறும் என்று கோவில் பரிபாலன சபை அறிவித்துள்ளது. (4)

## வாகன நிறுத்தத்தில் திருடப்படுவது அதன் காவலாளியின் உதவியுடனா?

காலியில் நீதிமன்றுக்கு அருகில் அமைந்துள்ள வாகனங்கள் நிறுத்தும் களஞ்சியசாலைக்குள் நேற்றுஅதிகாலையில்திருடர்கள் குழுவொன்று நுழைந்துள்ளது. திருட்டுக் குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டார். குறித்த களஞ்சியசாலையின் காவலாளியின் உதவியுடன் திருடர்கள் பூட்டைத் திறந்து உள் நுழைய முற்பட்ட போது, பொலிஸார் அந்த இடத்துக்குத்திடீரென்றுநுழைந்தனர். அதனை எதிர்பாராத திருடர்கள்தப்பியோடி விட்டனர். ஆனால் திருடர்களுக்குஉதவியாகஇருந்தார்என்று கூறப்படும்காவலாளியைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்என்றுதெரிவிக்கப்பட்டது.

களஞ்சியசாலையில்நிறுத்தப்பட்டுள்ளவாகனங்களின்பாகங்கள் நீண்டகாலமாகத்திருடப்படுகின்றன என்று பொலிஸில் முறையிடப்பட்டிருந்தது. (4)

மேலும் மேம்படுத்தப்பட்ட
கொஸ்கந்தவல
ஜீவக வாத தைலம் ®
• முதுகு வலி
• முழங்கால் வலி
• ஆர்த்தரைட்டிஸ்
• மூட்டு வலி
• தசைப்பிடிப்பு
• நரம்புசார் வலிகள்
Jeewaka Herbal Products (Pvt) Ltd
0777 322 574



55,000/-
• இந்து Western, Reception
• முக ஒப்பனை
• சிகை அலங்காரம்
• Pleating & Pressing
• Bridal Dressing
Anusha Herbal Beauty Care (Pvt) Ltd
30, Darmarama Road, Colombo - 06
yibegroup@gmail.com +94 77 748 3311

Coca-Cola ®

Coca-Cola விற்கு
நாடு தழுவிய விநியோகஸ்தர்கள் தேவை
(கண்டி, நுவரெலியா, கேகாலை, வவுனியா, முல்லைத்தீவு, இரத்தினபுரி பிரதேசங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும்.)



உலகம் முழுவதிலும் அதிகூடுதலாக விற்பனையாகும் புத்துணர்வூற்றும் மென்பான உற்பத்தியாளர்களான Coca Cola நிறுவனம் இப்பொழுது இலங்கையில் அதன் நாடளாவிய விநியோக வலையமைப்பை விஸ்தரிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. நாம் தேடும் ஆற்றல் வளமுள்ள விநியோகஸ்தர்கள் அவர்கள் பணியாற்ற விரும்பும் பிரதேசத்தில் நன்கு பரிச்சயமுள்ளவர்களாக இருத்தல் வேண்டும்.

Coca Cola குடையமைப்பின் கீழ் வரவிருக்கும் இந்த பணியாளர்கள் இலங்கை எங்கிலும் நுகர்வோரால் விரும்பப்படும் உற்சாகமூட்டும் மென்பான வகைகளை கையாள இருக்கிறார்கள். உயர்வான உலக தராதரங்களை பேணி வரும் விநியோக திட்டத்தில் பங்காளராக இணைந்து உங்கள் பெறுமதி மிக்க முதலீட்டுக்கு உகந்த சன்மானம் பெற உங்களுக்கு ஆர்வம் இருப்பின் இவ் விளம்பரம் வெளியாகி இரண்டு வாரங்களுக்குள் பின்வரும் விபரங்களுடன் உங்கள் விண்ணப்பத்தை அனுப்பி வைக்குமாறு கோருகிறோம். அதிகம் விற்பனையாகும் நுகர்வுப் பொருட்களை விநியோகிப்பகதில் அனுபவமிருப்பது விரும்பத்தக்கது.

உங்கள் விண்ணப்பத்தில் பின்வரும் விபரங்களைக் குறிப்பிடவும்:
- முதலீடு செய்யக்கூடிய தொகை
- கைவசமுள்ள பண்டகசாலை, களஞ்சியசாலை வசதி
- கைவசமுள்ள விநியோக வாகனங்கள், ஆட்பலம்
- தற்போதைய/கடந்தகால வணிக முயற்சிகள

சுய வேலைவாய்ப்பு முயற்சியை ஆரம்பிப்பதில் ஆர்வமுள்ள சிறு தொழில் முயற்சியாளர்களை விண்ணப்பிக்குமாறு நாம் ஊக்குவிக்கிறோம்.

பதிவுத் தபாலில் விண்ணப்பிக்கவும் -
அரோஷ வண்ணியாராச்சி
RTM Manager
Coca-Cola பெவரேஜஸ் ஸ்ரீ லங்கா லிமிட்டட்
தேக்கவத்த, பியகம.
மின்னஞ்சல் - alakshan@coca-cola.lk
தொடர்புக்கு - 0777 561069 (அரோஷ)
- 077 333 9999 (ஸ்டென்லி - தமிழ்)
diodemsw

SINGER



இலகு தங்கக்கடன்
அதி விசேட நம்பிக்கையுடன்



ஒரு பவுணுக்கு
ரூபா. 51,000/- வரை
"சிங்கர் இலகு தங்கக்கடன்"
SINGER FINANCE
Rated BBB by Fitch Ratings
தொடர்புகளுக்கு கிரிதாஸ் 077 4 878 766
கஜிர்தன் 077 4 878 675
இல: 86இ கே.கே.எஸ் வீதிஇ யாழ்ப்பாணம்.
(பிரதான தபால் நிலையம் மற்றும் ரிக்கோ ஹோட்டல் அருகாமை)

## வீடு வாடகைக்கு

றெயில் றோட், கொக்குவில் கிழக்கில் அமைந்துள்ள வீடு ஒன்று வாடகைக்குண்டு.

**077 885 0563**

## வீடு வாடகைக்கு தேவை

ஆசிரியர் குடும்பம் ஒன்றிற்கு (2பேர்) யாழ்நகர் பகுதியில் வீடு வாடகைக்கு தேவை.

**076 238 3626**

## தளபாட விற்பனை

பாவித்த தளபாடங்கள் பாதி விலையில் விற்பனைக்கு உண்டு.

**077 725 6481**

(CS/18698)(11.17)

## வீடு விற்பனைக்கு

குளமங்கால், மல்லாகத்தில் அழகிய வீடு ஒன்று விற்பனைக்கு உண்டு.

**076 244 2892, 416 269 5221 (ஆவணிக்குப் பின்)**

(CS/18680)(11.17)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் மணிக்கூட்டு வீதியில் 25/10 ஆம் இலக்கம் கொண்டதும், 2 குளி 7.20 விஸ்தீரணம் கொண்ட காணி உடனடியாக விற்பனைக்குண்டு.

**075 667 7654, 0033 7511 39540**

(CS/18503)(11)

## தேவை

தொழிற்சாலை ஒன்றுக்கு 25 பேருக்கு சமைப்பதற்கு ஆண் சமையலாளர்கள் தேவை. உணவு, தங்குமிடம் வழங்கப்படும். சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.
(அழைப்பு நேரம் - 1.00pm - 6.00pm)

**077 075 7602**

(CS/18667)(11.17)

## கார் விற்பனைக்கு

**Model:- SUZUKI STINGRAY**

**ஆண்டு : 2014**

**மேலதிகமாக :-**

**KENWOODS ORIGINAL & NEVIGATOR DOOR LAMINATION**

குறிப்பிட்ட கார் உடனடியாக விற்பனைக்கு உண்டு.

**077 773 0324**

(CS/18669)(11.17)

## மாபெரும் இசைநிகழ்ச்சி



அர்ச்சனா | ரமணி அம்மா | வர்ஷா | ஜஸ்கரன் சிங்

ஆகஸ்ட் 11 மாலை 4.00 மணிக்கு குஞ்சர்கடை கொலின்ஸ் விளையாட்டுக்கழக மைதானம், நெல்லியடி.

ஆகஸ்ட் 12 மாலை 4.00 மணிக்கு வெலிங்டன் தியேட்டர் சதுக்கம் [லிங்கம் கூல்பார் முன்பாக] யாழ்ப்பாணம்.

Rs 300/= Rs. 500/= Rs. 1000/= மற்றும் VIP டிக்கெட்ஸ்

K.T.Prassath - 078 612 5929, 071 381 5114

Event Management - Ceylon Art Creation ( K.T.பிரசாத் )

## யாழ். நகரில் முற்றிலும் நவீனமயப்படுத்தப்பட்ட

# ASR HOTEL and WEDDING HALL



### ASR HOTEL / WHITEPALM RESTAURANT

- ✓ Srilankan Cuisine
- ✓ Indian Cuisine
- ✓ Arabian Cuisine
- ✓ Western Cuisine
- ✓ Snacks
- ✓ Hot Drinks
- ✓ Soft Drinks
- ✓ Fresh Fruit Juice

### HOTEL ROOMS AC / NON AC

- Family Rooms (2 Adult+2 children)
- ✓ Double Room (2 Adult)
- ✓ Twin Room (2 Adult)
- ✓ Single Room (1 Adult)

### WEDDING HALL



எமது திருமண மண்டபத்தில் திருமணம் செய்யும் திருமண தம்பதியருக்கு நவீன வசதிகள் கொண்ட அலங்கரிக்கப்பட்ட அறை அன்றைய தினம் இலவசமாக வழங்கப்படும்..

**ASR HOTEL and WEDDING HALL**

**542, K.K.S. Road, Jaffna.**

(IN 7437)(10)

# YICSD COLLEGE

YARL INTERNATIONAL COLLEGE OF SKILLS DEVELOPMENT



**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

**4500/= – 30,000/= வரையிலான கட்டணக்கழிவு**



### அழகுக்கலை

- # *Diploma in Beauty Culture & Hairdressing*
- # *Higher Diploma in Beauty Culture & Hairdressing*

சனி, ஞாயிறு 18/08/2018 அன்று 11.30 am
கிழமை நாள் 20/08/2018 அன்று 11.30 am & 02.00 pm



### கேக் ஐசிங்

- # *Certificate in Cake Making & Decorating*
- # *Diploma in Cake Making & Decorating*
- # *Higher Diploma in Cake Making & Decorating*

கிழமை நாள் 16/08/2018 அன்று 09.30 am & 02.00 pm
சனி, ஞாயிறு 18/08/2018 அன்று 09.00 am & 02.00 pm



### தையல்

- # *Certificate in Saree Blouse*
- # *Diploma in Dress Making (Tailoring)*
- # *Higher Diploma in Dress Making (Tailoring)*

சனி, ஞாயிறு 18/08/2018 அன்று 11.30 am & 02.00 pm
கிழமை நாள் 20/08/2018 அன்று 09.00 am

மேலதிக விபரங்களுக்கும் பதிவுகளுக்கும் நேரில் வருகைதரவும்

**இல.307 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
(கண்ணாதிட்டி சந்தி Rolex வெதுப்பகத்திற்கும் இடையில்)

# விசேட ஆடித் தள்ளுபடி !!!



மாதாந்த தவணை கட்டணம்
(நிபந்தனைகளுக்கு உட்பட்டது)

**Discount 5,000/= to 50,000/=**
Until 30th Aug 2018

We Accepted MasterCard VISA

நீர் சுத்திகரிப்புத்துறையில் முன்னோடியான வரையறுக்கப்பட்ட மத்திய சுற்றாடல் அதிகாரசபை (CEA) யால் அங்கீகரிக்கப்பட்டு யாழ் மண்ணை தளமாக கொண்டு இயங்கி வரும் ஒரே நிறுவனமாகும்.

SATISFACTION 100% GUARANTEE

**எல்லா அளவிலுமான RO நீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள்**



உங்கள் கிணற்று நீரில் அடங்கியுள்ள கல்சியம் , மக்னீசியம் , மாசுக்கள் , கிருமிகளை முற்றாக அழித்து பருகுவதற்கேற்ப 100% சுத்தமான நீரை வீட்டிலேயே பெற்றுக் கொள்ளலாம்.



**Water Softener System**

Tiles , Bathroom Fittings , Washing Machine களில் படியும் கல்சியம் , மக்னீசியப் படிவுகளிலிருந்து நிரந்தர விடுதலை!

**கழிவுநீர் சுத்திகரிப்பு**



வீடு , தொழிற்சாலை , உல்லாச விடுதிகளின் கழிவுநீர் சுத்திகரிப்பு முறைமையை நிறுவியும் பராமரித்தும் தரப்படும்.



**நீச்சல் தடாக வடிவமைப்பு**

உங்கள் தேவைக்கேற்ற வகையில் வடிவமைத்து , நிறுவி , பராமரித்துத் தரப்படும்.



# Everpure Hi-Tec (Pvt) Ltd.

No.341, K.K.S Road, Jaffna. | 021 222 6888, 021 567 7567 | 077 362 6230

## பெரியவர்களுக்கான ( Adults Class) யோகா வகுப்புக்கள் ஆரம்பம்

Yarl Vision

கொக்குவில் இல.19, கோணாவளை வீதியில் அமைந்திருக்கும் யாழ்விஷன் **"கதிர்காம கந்தன்"** மண்டபத்தில் பெண்களுக்கான யோகா வகுப்புக்கள் 18.08.2018 முதல் ஆரம்பமாகவுள்ளது. இப் பயிற்சியினை இந்தியாவில் முறையாக யோகா பயின்ற நீண்ட கால பயிற்சி அனுபவமுள்ள ஆசிரியர்களால் பிரத்தியேகமாகப் பயிற்றுவிக்கப்படும். அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் யோகா பயில விரும்புபவர்கள் முன்கூட்டியே பதிவினை மேற்கொள்ளவும்.

யாழ்விஷன்
இல.19, கோணாவளை வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

தொடர்புகளுக்கு
076 243 0394, 021 221 2255,
021 720 0719 (CS/18655)(11,17)

## வேலையாள்கள் தேவை

எமது ஸ்தாபனத்திற்கு பொதியிடுபவர், பகுதிநேர வேலையாள்கள் (ஆண் / பெண்) கணக்காளர் (கணினி அனுபவம் அவசியம், ஆண் / பெண்) மற்றும் களஞ்சியப்பொறுப்பாளர் (ஆண், அனுபவம் உள்ளவர்கள்) தேவை.
நேரில் சமுகம் தரவும்.

**Northway Family Mart**
No. 184, Palaly Road, Thirunelvely.
T.P.: 021 222 6002, 021 222 6001 (CS 18747/15/18)

## கட்டட நிர்மாணத்துறை பணியாளருக்கான வெற்றிடம்

**வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், யாழ்ப்பாணம்**
ஆகிய நகரங்களில் நடைபெற்றுக்கொண்டிருக்கும்
**புதியகட்டட வேலை ஸ்தலங்களில்** கீழ்குறிப்பிடப்படும்
வெற்றிடங்கள் உள்ளன. தங்குமிடவசதியுண்டு.

1. Technical officer:
   NDT (Civil) with minimum 04 years Experience
   or
   NCT (Civil) with minimum 08 years Experience
2. Building Supervisor:
   NCT(Civil)with minimum 04 years Experience or Equivalent.

(cs.18712) (13,17)

**வீ.வீ.இராமநாதன்**
அன் கொம்பனி பிறைவேற் லிமிட்
பொது வைத்தியசாலை சுற்றுவட்ட வீதி, வவுனியா.
E.mail:vvrcopvt@sltnet.lk / vvrcopvt@gmailcom

## உடனடி வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் Leading Pest Control & Marketing கம்பனிக்கு பின்வரும் பணியாளர்கள் உடனடித்தேவை.

- **Sales Executives**
  - Minimum 01 year Experience in FMCG (with English Fluency)
  - Salary + Commissions + Company maintained bike
- **Accounts Clerk (Females only)**
  - Fluency in English with AAT Stage (II)
- **Pest Management Technicians**
  - 30 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்
  - ஆக குறைந்த கல்வி தகைமை O/L

தங்களது சுயவிவரக்கோவையை (CV) termite.com@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு அல்லது Termite.Com (Pvt) Ltd. **இல 06, புகையிரத லேன், சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும்

தொடர்புகளுக்க: 076 315 6802, 021 493 0011 (cs.18691) (13,17)

## தொழில்சார் கற்கைகள் நிறுவனம் திருநெல்வேலி, யாழ்ப்பாணம்

**"கல்விப்பணி கடவுள் பணி"**
**Fast Track Degree Programme - 18 / 19**
**Top up - English / Tamil Medium**

**1 Year** — UGC APPROVED
- BA in English
- B.Sc in Psychology
- B.BA in Management
- BSc in Computer Science
- BA in Teaching / Education

**2 Years**
- BSC IN Civil Engineering
- BSc in QS
- BSc in Nursing

**புதிய பிரிவுகள் ஆரம்பம் 11, 12.08.2018, 10.00 am**

- பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு, **IAU, Foreign Ministry,** கல்வி அமைச்சின் அங்கீகாரம்
- விண்ணப்பிப்பதற்கு க.பொ.த.சா.த, உ.தர பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் **NVQ, HND, Jobs** தகுதியுடையவர்களாகின்றனர்.
- விருப்பத்துக்கு ஏற்ப ஏனைய பட்ட கற்கைகளினை அலுவலகத்தில் பார்வையிட்டுத் தெரிவு செய்ய முடியும்.
- ஆன் லைனில் கற்கும் வசதி
- கற்கைகள் இணைப்பாளர்கள் ஊடாக விவரங்கள் பெறமுடியும்.

மேலதிக விவரங்களுடன் தொடர்புகளுக்கு:-
முகாமைத்துவ நிர்வாக சபை
021 450 8489 / 076 918 4821 / 077 602 1794
Email: degreeinfo08@gmail.com (CS/18743)(11,17)

## ANNEX /அறைகள் வாடகைக்குண்டு

யாழ்.பல்கலைக்கழகம் அருகில் சிறிய குடும்பத்துக்கு/ பல்கலை மாணவிகள் / உத்தியோகம் பார்க்கும் பெண்கள் / கல்லூரி மாணவிகளுக்கு உடன் **Annex** /அறைகள் வாடகைக்குண்டு.
077 930 0148, 077 880 8480, 021 222 7069

## காணி விற்பனைக்கு

ஆலடிச் சந்தி மானிப்பாய் வீதியில் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
072 271 5809

## பணியாளர் தேவை

இரும்பு ஒட்டுவேலை **(Welding)** தெரிந்த 20 பணியாளர்கள் உடன் தேவை.
076 671 7774 (CS/18757)(11,17)

## வேலைக்கு ஆள்கள் தேவை

இணுவிலில் உள்ள
தச்சு தொழிற்சாலைக்கு அனுபவமுள்ள வேலையாள்கள் தேவை.
077 713 0872

## Abirami Tex & Tailoring Parameswara Junction

பெண்களுக்கென அனைத்து ஆடைகளும் தைக்கத் கூடிய பெண்கள் வேலைக்குத் தேவை.
077 148 4528, 075 750 8410

## விற்பனைக்கு

கற்பூரம் அடிக்கும் மெசின் விற்பனைக்குண்டு.
076 751 5347

## கற்பித்துக் கொடுக்கப்படும்

பாடசாலை மாணவர்களுக்கான வகுப்புக்கள் (சிங்களம் உட்பட) திறமையான பெண் ஆசிரியரினால் தனியாகவும் குழுவாகவும் கற்பித்துக் கொடுக்கப்படும்.
076 469 7959, 077 969 1666 (CS/18742)(11,17)

## விற்பனைக்கு

6 அடி உயரமுள்ள **Double Door LG Fridge** நல்ல நிலையிலுள்ளது விற்பனைக்குண்டு. **விலை 35,000/-**
**Finches** குருவி விற்பனைக்குண்டு.
078 301 4280, 021 205 1514
சேர்ஜ் ஒழுங்கை, அராலி வடக்கு. (CS/18732)(11,17)

## மேல்மாடி வாடகைக்குண்டு

யாழ்.பல்கலைக்கழகத்துக்கு அண்மையில்
1300 Sq.ft அளவுள்ள முதலாவது மாடி வாடகைக்குண்டு.
வசந்தன் - 076 918 4821

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி மற்றும் நாவலர் வீதிக்கு அருகில் காணப்படும் மேல்மாடி வீடு சகல வசதிகளுடனும் வாடகைக்கு உண்டு.
**(நிறுவனத்தினர் விரும்பத்தக்கது)**
076 315 0022 (CS/18726)(11,17)

## வீடு வாடகைக்கு

சித்தங்கேணியிலிருந்து பண்டத்தரிப்புக்குச் செல்லும் பிரதான வீதிக்கு அருகில் அமைந்துள்ள சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு கொடுக்கப்படும்.
076 237 3166, 077 287 3312 (CS/18710)(11,17)

## நாஹா மருத்துவ நிலையம்

- கை, கால் செயலிழக்கும் வாதம், பாரிச வாதம், அல்சர், தீராத புண்கள் - சிறப்பு சிகிச்சை
- குழந்தையின்மைக்கான - விசேட சிகிச்சை

வங்கி முன்லேன்
சாத்தாவத்தை வயிரவர் கோயிலடி (ஜெகபதிவீடு), மானிப்பாய்.
077 321 2740 (CS/18754)(11,17)

## மலிவு விற்பனை

**Gift Iteams, Kitchen Iteams, Makeup Set Iteams, Jwellery Iteams,** கிறீம் வகை, றாக்கைகள், கண்ணாடி அலுமாரி, கணினிகள் போன்றவற்றை மலிவு விற்பனையில் பெற்றுக்கொள்ள முடியும்.
077 228 0496 (IN/7432)(11,17)

## வேலையாள்கள் தேவை

சாவகச்சேரியில் உள்ள
ஸ்ரீ விக்கினேஸ்வரா ஸ்ரோருக்கு வாகனத்தில் பொருள்களை விநியோகம் செய்வதற்கு
**( Van Delevery)**
வேலையாள்கள் தேவை.
076 968 4961 (ACH/437)(11,17)

## உடனடி வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் **Best Lankan** கம்பனிக்கு பணியாளர்கள் உடனடியாக தேவை.
ஆரம்ப பயிற்சிக் காலத்தில் ரூ.15000 - 35000 இக்கு குறையாத கொடுப்பனவை பெற்றுக் கொள்ள முடியும்.
தொழில் தகைமைகள் :- 1. O/L வரை
2. வயது 18-35 வயதிற்குட்பட்டவராக இருத்தல்
மற்றும் **அலுவலக உதவியாளர்கள் (பெண்கள்)**
1. O/L சித்தி. 2. MS office பற்றிய அறிவு 3. வயது 18 - 35
நேர்முகத் தேர்வுகள் இம்மாதம் 07.08 ஆகிய தினங்களில் காலை 9.00 மணி தொடங்கி 5 மணிவரை நடைபெறும்.
**Best Lankan** கிளைக்கு நேரில் வருகை தரவும்.

No.6A, உரும்பிராய் சந்தி,
யாழ்ப்பாணம்.
T.P:- 077 030 6345, 021 5615 150 (CS/18749)(10)

## கட்டட நிர்மாணத்துறை பணியாளருக்கான வெற்றிடம்

**வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், யாழ்ப்பாணம்**
ஆகிய நகரங்களில் நடைபெற்றுக்கொண்டிருக்கும்
**புதிய கட்டட வேலை ஸ்தலங்களில் கீழ்குறிப்பிடப்படும் பணிகளுக்கான வெற்றிடங்கள்** உள்ளன. நீண்டகால தொழில் வாய்ப்புடன் தங்குமிடவசதியும் வார நடுப்பகுதியில் முற்பணமும் வார இறுதியில் ஊதியமும் வருட இறுதியில் சேவைக் காலத்திற்கான போனஸ் பணமும் வழங்கப்படும்
**நேரில் சமூகமளிக்கவும்**

1. **மேசன் உதவியாட்கள்** (Labours)
2. **மேசன் தொழிலாளர்கள்** (Mason)
3. **தச்சுத் தொழிலாளர்கள்** (Carpenters Shuttering & Roof work )
4. **கம்பி (வலுவூட்டி) வளைப்பவர்கள்** (Barbenders)
5. **ஒட்டுனர்கள்** (Welders)

(cs.18712) (13,17)

**வீ.வீ.இராமநாதன்**
அன் கொம்பனி பிறைவேற் லிமிட்
பொது வைத்தியசாலை சுற்றுவட்ட வீதி, வவுனியா.
E.mail:vvrcopvt@sltnet.lk / vvrcopvt@gmailcom

## YARL CITE — CENTRE FOR IT EDUCATION

**Job Skills Development & Training**
Powered by RATNAM FOUNDATION

**மாணவர்களே! உங்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு**

**இளஞ்சிறார்களே!** 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை முடிந்ததும் தவணை மூன்றைப் பயனுள்ளதாக்குங்கள்.

**English Language & IT Skills Development & Training for Kids**

தகவல் தொழில்நுட்பம் செயன்முறை உட்பட அடிப்படையில் இருந்து மற்றும் ஆங்கிலத்தில் சரளமாக பேச, எழுத, வாசிக்க, மற்றும் கேட்கவும் இலகு வழியில் Grammar, Vocabulary& Pronunciation கற்பிக்கப்படும்.

**Use interactive learning methodology to learn IT**
- Introduction to computer systems
- Introduction to windows operating systems & its applications.
- Word processing & Spread sheets
- Digital drawing & painting.
- Introduction to presentation & publication.
- Introduction to use internet & email.



**Use interactive learning methodology to learn English**
- Listening, Speaking, Reading & Writing Skills
- Vocabulary, Pronunciation & Grammar.
- Soft skills development.

விண்ணப்ப முடிவுத் திகதி : 10.08.2018
வகுப்புக்கள் ஆரம்பம் : 12.08.2018 காலை 10 மணி

தரம் 6 மற்றும் 7இல் ஆங்கில மொழி மூலம் கற்கும் மாணவர்களுக்கு விசேடமாக அவர்கள் தமது ஆங்கில அறிவை மேம்படுத்தவும், ஏனைய பாடங்களை ஆங்கிலத்தில் பிழையின்றி கற்றிடவும், அத்துடன் ஆரம்பத்தில் இருந்தே தகவல் தொழில்நுட்பத் துறையில் அறிவினை விருத்தி செய்வதற்கான ஓர் அரிய வாய்ப்பு

மேலதிக விபரங்களுக்கு எம்முடன் தொடர்பு கொள்ளவும்.
**PHONE: 0212214099 MOBILE: 0772928853, 0702583250.**
#125 Main Street, Jaffna. (IOFM Buildings 2nd Floor, near to Courts Complex)

## VISA SERVICES

நீங்கள் விரும்பும் நாட்டினை நேர்மையாக குறுகிய காலத்தில் சென்றடைய இன்றே **WIN STAR** உடன் இணையுங்கள்

**CANADA | UK | AUSTRALIA | GERMANY | SWISS | FRANCE | ITALY | NORWAY**

- 100% வீசா உத்தரவாதம்
- குடும்பமாகவும் செல்ல ஏற்பாடுகள்
- செலுத்தும் பணம் மற்றும் காலப்பகுதிக்கு எழுத்து மூலமான ஒப்பந்தம்
- வங்கி நிலுவை ஏற்பாடுகள்
- அங்கீகாரம் பெற்ற விரிவுரையாளர்களினால் சிறந்த ஆங்கில வகுப்புகள்



**STUDENT VISA | BUSINESS VISA | VISIT VISA | SKILL MIGRATION | SPOUSE VISA**

மேலதிக விவரங்களுக்கு
முன்னனுமதி பெற்று நேரில் வரவும்
**021 300 4641**
அலுவலக நேரம் **11 am - 4 pm**

5 வருடகால தமிழ் மக்களின் நம்பிக்கை

**WINSTAR CONSULTANTS (PVT)LTD**
45, Vembadi Street, Jaffna.
www.winstarjaffna.com (IN/7400)(10)

## ஜப்பான் மோட்டார் சைக்கிள் மிகக் குறைந்த விலையில்

புதிதாய் இறக்குமதி செய்யப்பட்ட
ஜப்பான் Re-Conditional மோட்டார் சைக்கிள்கள்
MD 90, MD 50, SUPERCUP
மிகக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.



லீசிங் வசதிகள் உண்டு

**CHRISTOES ENTERPRISES**
Vavuniya
Mobile: 077 3055 106 / 077 273 7622
(00398)(10)

## காணிகள் வீடுகள் மலிவு விலையில்

JAFFNA REAL ESTATE

நூற்றுக்கு மேற்பட்ட காணிகள், வீடுகள், வியாபார நிலையங்கள், தோட்டங்கள், பண்ணைகள் மலிவு விலையில் விற்பனைக்கு.

விவரங்கள் அனைத்தையும்
www.jaffnarealestate.com
என்ற இணையத்தளத்தில் பார்வையிடலாம்.

விற்பனைக்குள்ள அல்லது புதிதாகத் தரவேற்றப்படும் ஆதனவிவரங்களின் பட்டியலை உங்கள் கையடக்கத் தொலைபேசிகளின் ஊடாக Facebook இல் உடனுக்குடன் அறிந்து கொள்ள..
jaffnarealestate என்னும் விருப்புப்பக்கத்தை Like செய்யுங்கள்

காணிகள் வீடுகள் வாங்க விற்க உடன் அழையுங்கள்
T.P: 0094 076 121 4255 (Viber, Whatsapp தொடர்புகொள்ளவும்)
**JAFFNA REAL ESTATE (PVT) LTD.**
34/2, Sir Pon Ramanathan Road, Thirunelveli, Jaffna.
(CS/18761)(10)

## கண்ணீர் அஞ்சலி



கைதடி கிழக்கு விவசாய சம்மேளன தலைவர் செல்லத்துரை அவர்களின் பாசமிகு மனைவி
**செல்லத்துரை சிதம்பரம்**
அவர்களின் மறைவையொட்டி துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
பிரிவுத்துயரில்
**விவசாய சம்மேளன சமூகம்**
(cs.16471)(13,17)

## மரண அறிவித்தல்

### கார்த்திகேசு வாமதேவன்



122/10, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தியைப்பிறப்பிடமாகவும்வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு வாமதேவன் நேற்று (04.08.2018) சனிக்கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - செல்வராணி தம்பதிகளின் புத்திரனும், சற்குணத்தின் அன்புக் கணவரும், சிந்துஜாவின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் விமலாதேவி, காலஞ்சென்றவர்களான கமலாதேவி, சுசீலாதேவி, கெங்காதேவி, உஜாதேவி, பரமதேவன் மற்றும் தேவகி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்றவர்களான வெற்றிவேல், சுப்பிரமணியம் மகோற்கட மூர்த்தி, திருவிளங்கம், சிறிகாந்தா ஆகியோரின் அன்புமைத்துனரும், கிருஷ்ணகுமார், நந்தகுமார், பாலகுமார், ஞானசூரியர், சடகோபன், வாசுகி, வசுமதி, காலஞ்சென்ற வாசுதேவன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.08.2018) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

122/10, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி.
தகவல்
குடும்பத்தினர்.
(CS18752/11/17)
0770760870

## வீடு வளவு விற்பனைக்கு

ஊரெழு கரந்தன் வீதியில் அம்மன் கோவிலுக்கு தெற்குப் பக்கமாக 2 1/2 பரப்புக் காணியுடன் வீடு வளவும் உடன் விற்பனைக்கு உண்டு
தொடர்பு:
077 978 9483 / 076 120 4823
(CS/18750)(10)

## யாழ் அம்மா பெண்கள் விடுதி

கல்வி கற்கும் மாணவிகளுக்கும், வேலை செய்யும் பெண்களுக்கும், பாதுகாப்பானதும், உணவு வசதியுடனும் கூடிய பெண்கள் விடுதி.

- சாரதி அனுமதிப்பத்திரத்துடன் கூடிய அலுவலக உதவியாளர் தேவை.
- யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து பாரம்பரிய உணவுவகைகளை சமைப்பதற்கு ஆண், பெண் இருபாலாரும் தேவை.

தொடர்பு - 076 992 2339, 076 992 2319

## பணியாளர் தேவை

யாழ்.நகரில் இயங்கும் பிரபல அச்சகத்துக்கு **Binding** வேலை தெரிந்தவர்களும் (புத்தகம் கட்டுபவர்) பழக விரும்புபவர்கள் உடன் தேவை.

**எவகிறீன் அச்சகம்**
693, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
077 714 1444
(CS/31998)(11,17)

## மணமக்கள் தேவை

யாழ்.இந்து உயர் கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1982 இல் பிறந்த திருவோணம் 2 ஆம் பாதம், கிரகபாவம் 35, 4இல் செவ்வாய் உள்ள பிரபல்ய தொழிலதிபர் மணமகனுக்கு மணமகள் தேவை. 1986இல் பிறந்த ஆஸ்திரேலியா PR உடைய சதயம் 2ஆம் பாதம், கிரகபாவம் 43, சிவில் எஞ்சினியர் மணமகளுக்கு ஆஸ்திரேலியாவில் PR உள்ள படித்த நற்குணமுள்ள மணமகன் தேவை. 1990 இல் பிறந்த அவிட்டம் 2 ஆம் பாதம் 8 இல் செவ்வாய் கிரகபாவம் 43 BSc பட்டதாரி மணமகளுக்கு ஓரளவு படித்த நற்குணமுள்ள மணமகன் தேவை.

சகல இன சமூக மக்களும் தொடர்பு கொள்ளவும்.
**Vani International Marriage Buream**
VIMB 077 522 1132
வாணி - 077 285 4626
Govt Regd (international) VE/IND 33&WIA83347
(00397)(11,17)

## சைக்கிள் ஓட்டப் போட்டி - 2018

காந்தி சன சமூக நிலையத்தின் 65 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு காந்தி சன சமூக நிலையத்தினதும் பிக்பூட் விளையாட்டுக்கழகத்தினதும் பூரண அனுசரணையோடும், வ.தியாகராசா குடும்பத்தினரது இணை அனுசரணையோடும் யாழ்.மாவட்ட ரீதியில் நடத்தப்படும் மாபெரும் சைக்கிள் ஓட்டப்போட்டி எதிர்வரும் 18.08.2018 சனிக்கிழமை காலை 8 மணியளவில் நடைபெற இருப்பதால் பங்கு கொள்ள விரும்பும் போட்டியாளர்கள் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அம்மன் கோயில் வீதி,
நாவற்குழி கிழக்கு,
தச்சன்தோப்பு,
கைதடி.
(CS/18758)(11,17)

காந்தி ச.ச.நிலையம்
Sri - 077 369 3507
Ranjith - 076 387 9598
தலைவர் - 077 332 5945

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**கதிரிப்பிள்ளை சிவக்கொழுந்து**
(ஓய்வுபெற்ற பிரதம தபால் அதிபர் )



மண்ணுலகு
30.06.1930
விண்ணுலகு
30.07.2013
திதி: ஆடி மாத அபரபக்க நவமி
05.08.2018

"அப்பா! என்ற இனிய மந்திரம்
நினைக்கும்போதே, எங்களது இரத்தத்தில் ஊறிய
இனிய நினைவுகள், திரும்பி வராத என்ற ஏக்கம்
உங்களுடன் நாங்கள் வாழ்ந்த காலங்கள்
அது ஒரு இனிய வசந்தகாலம்
ஐந்து ஆண்டுகள் ஆகிவிட்டன சிவக்கொழுந்தாய்
- சிவபதமடைந்து
நெஞ்சம் பொறுக்குதில்லை அப்பா"

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

"சிவதேவி இல்லம்"
உடுப்பிட்டி
குடும்பத்தினர்.
021 226 4734
(in 7429) (13,17)

## பிரத்தியேக வகுப்புகள்

G.C.E. A/L 2019, 2020 இணைந்த கணிதம் மற்றும் Grade 11 கணிதம் கற்பிக்கப்படும்.
(18785)(15/17)
-077 832 4002

## மருந்தாளர் தேவை

கல்வியங்காட்டில் இயங்கும் மருந்தகம் ஒன்றுக்கு மருந்தாளர் தேவை.
தொடர்பு:- 077 941 2982
(CS/18772)(10)

## கட்டடம் வாடகைக்கு

யாழ்.நகரில் இருந்து 3 km தூரத்தில் பலாலி வீதியில் கட்டடத்தின் மேற்பகுதி வாடகைக்குண்டு.
தொடர்பு - 076 546 0811

## விற்பனைக்கு

3 கதவு அலுமாரி, 2 கதவு அலுமாரி, டிரெஸ்சிங் ரேபிள், சாப்பாட்டு மேசை செட், கண்ணாடிமேசை விற்பனைக்கு.
தொடர்பு - 076 216 0099

## நாகபூஷணி திருமணசேவை

மிகப் பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் உடன் தெரிவு செய்து தரப்படும்.
257, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
021 222 9306, 077 138 7596
(CS 18781)(15/17)

## பணியாளர்கள் தேவை

யாழ். நகரில் உள்ள கையடக்க தொலைபேசி நிலையத்திற்கு பணியாளர்கள் தேவை.
சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கலாம்.
யாழ். போன் சொப்
No.9, ஆஸ்பத்திரி வீதி, நவீன சந்தை, யாழ்ப்பாணம். தொடர்பு - 077 3611 282

## வீடு வாடகைக்கு உண்டு

இல. 99, கொழும்புத்துறை வீதியில் ஐந்து அறைகள் கொண்ட வாகன தரிப்பிடத்துடன் நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு - 021 221 7222

## காணி விற்பனைக்கு

யாழ்.நகர் மையத்தில் இருந்து 500M தூரத்திற்குள்ளும், ஆஸ்பத்திரி வீதிக்கு அருகிலும் உள்ள விசாலமான $1^{1}/_{2}$ பரப்பு சதுரக்காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு - 076 230 2984

## மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்கு

TVS Scooty, Honda Pleasure ஆகிய இரு மோட்டார் சைக்கிள்கள் பாவித்த நிலையில் விற்பனைக்குண்டு.
விலை பேசி தீர்மானிக்கலாம்
தொடர்பு - 077 3611 282

## காணி தேவை

நல்லூர், கல்வியங்காடு, திருநெல்வேலி, கந்தர்மடம், கட்டைப்பிராய், இருபாலை, பிறவுண் வீதி ஆகிய இடங்களில் வெறுங்காணி தேவை.தரகர் தேவையில்லை
076 405 7158

## வாடகைக்கு தேவை

பிரபல கல்வி நிறுவனம் ஒன்றுக்கு கிளிநொச்சியில் A9 பிரதான வீதியில் அல்லது அதற்கு அருகாமையில் விசாலமான வீடு அல்லது கட்டடம் வாடகைக்குத் தேவை.
தொடர்பு:- 0777 596 148
(CS/18770)(10)

## JCB வாடகைக்கு



077 871 5430,
076 857 3798
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
(CS/13266)(11,17)

## 9 ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
18 . 07 . 1936



மறைவு
13 . 08 . 2009

### அமரர்சுப்பையா வைத்திலிங்கம்

ஆண்டுகள் ஒன்பதாகியும் – அப்பா ஆறவில்லை எம் துயரம்
ஏங்கி ஏங்கி தவிக்கின்றோம் எங்கு சென்றீர் எம்மை விட்டு?
ஒன்பது ஆண்டுகள் வந்தாலென்ன
தொளாயிரம் ஆண்டுகளானாலும் அழியாது உங்கள் நினைவுகள்

கோபுரம் அரிசி ஆலை,
நெளுக்குளம், வவுனியா.

குடும்பத்தினர்.
கோயில் வாசல்,
இணுவில் மேற்கு

## மரண அறிவித்தல்



### தம்பிப்பிள்ளை இராமசாமி

வேலணையைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை இராமசாமி நேற்று (04.08.2018) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தாளையடி ஒழுங்கை,
திருநெல்வேலி.

(CS 187699/15/17)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

## கண்ணீர் அஞ்சலி

யாழ். போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராக கடமைபுரியும் **திருமதி திலீப்குமரன் புவனா** அவர்களின் அன்புத்தந்தையார்

### வடிவேல் இளங்கோவன்

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**தாதிய உத்தியோகத்தர் நலன்புரிக்கூட்டுறவுச்சங்கம், யாழ்ப்பாணம்.**

## மரண அறிவித்தலும் நன்றி நவிலலும்



### கந்தையா நடராசா

சரசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா நடராசா 02.08.2018 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தவமணியின் அன்புக் கணவரும், அருந்தவ மலர், அருந்தவநாதன் (இ.போ.சாரதி பருத்தித்துறை சாலை), பிரபாகரன், நவினாகரன், கருணாகரன், பிரபாநிதி ஆகியோரின் தந்தையும், காலஞ்சென்ற சிவானந்தம் மற்றும் கலாபதி, பிரகலாதினி, யாழினி, துளசி, தனபாலசிங்கம் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற பரமசாமி, செல்லத்துரை மற்றும் மகாலிங்கம், தவயோகேஸ்வரி, இராஜேஸ்வரி, குமாரவேலு ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 03.08.2018 வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொம்பிக்குளம் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

அன்னாரின் இறுதிச்சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும் தொலை பேசி மூலமாக அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்களை அச்சிட்டு வழங்கியோருக்கும், கிரியைகளை மேற்கொண்ட குருக்களுக்கும், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சரசாலை வடக்கு,
சாவகச்சேரி.

(ACH/438)(11.17)

குடும்பத்தினர்.

12 ஆம் பக்க விளம்பரத்துடன் இணைத்து வாசிக்கவும்

ASR Hotel and Wedding Hall

T.P : 021 222 1356, 021 221 1357
Mobile : 076 326 3188
Email :asrhotelJaffna@gmail.com
Facebook - ASR Hotel Jaffna.

**பிரத்தியேக வகுப்புகள்**

**பொருளியல் A/L** *(க.பொ.த. உயர்தரம்)*
**குடியியற் கல்வி O/L**
ஆகிய பாடங்களுக்கு தனியாகவும் குழுவாகவும் வீட்டிற்கு வந்து கற்பிக்கப்படும்.
தொடர்பு - 076 2112830, 077 900 7597

**வேலைவாய்ப்பு**

இலங்கையில் விற்பனையில் முதலிடம் வசிக்கும் மோட்டார் சைக்கிள் கம்பனியின் யாழ். காட்சியறையில்,
**01. தொழில்நுட்பவியலாளர் - 01 ஆண்**
**02. ஆவணப்படுத்தும் அலுவலர் - 01 பெண்** -
தொடர்பாடல்திறன், ஆங்கில அறிவு, விற்பனைத் துறையில் முன்னனுபவம் விரும்பத்தக்கது.
C/O, உதயன் - விளம்பர இலக்கம் -1009,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(CS 18787/15/18)

**வேலையாள்கள் உடன் தேவை**

உடுவிலில் அமையவிருக்கும் (அச்சுக்கூட தொழிற்சாலைக்கு) முன் அனுபமுள்ள, அனுபவமற்ற வேலையாள்கள் தேவை. உடுவில், சண்டிலிப்பாய், மானிப்பாய், சுன்னாகம், கோண்டாவில், உரும்பிராய் மற்றும் மருதனார்மடம் ஆகிய இடங்களில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
கவர்ச்சிகரமான சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.
தொடர்பு - 076 768 7664,
021 222 4484

E,S Printers
357, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 492 7471, 021 492 7472
esprintersjaffna@gmail.com

# மரண அறிவித்தல்

## தம்பையா பரஞ்சோதி

(ஆதீன கர்த்தா, சீரணி நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம்)

சீரணி சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும், வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா பரஞ்சோதி (சிறி) கடந்த (02.08.2018) வியாழக்கிழமை சமாதி நிலை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா அன்னபூரணி (சாமியம்மா) தம்பதியரின் செல்லமகனும் தனபாலசிங்கம், யோகேஸ்வரன், யோகநாதன், வசந்தகுமார், சிவகுமாரி, காலஞ்சென்ற அன்னலட்சுமி ஆகியோரின் அன்புச்சகோதரரும் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரன் வள்ளிநாயகி தம்பதியரின் அன்பு மருமகனும் கமலாதேவியின் அன்புக்கணவரும் சிறிகாந், வனயா (யாழ். பல்கலைக்கழகம்), லோகஞானம், குகதாஸ் (குகன்), சிவதர்சினி (யாழ். பல்கலைக்கழகம்), ஶ்ரீராஜேஸ்வரி ஆகியோரின் அன்புத்தந்தையும் கோபிநாதன் (கோபி), சேந்தன், கஜபாலன், துவாரபாலகன், பரிமளா, விவியா, ஜெனித், தர்சி, தாரணி ஆகியோரின் அன்புமாமனும் விஷி, ரிஷி, வைஷா ஆகியோரின் அன்புப்பெரியப்பாவும் சத்தியலட்சுமி, புவனேஸ்வரி, புஸ்பராணி, மகேஸ்வரி, தனபாலன் (பாலன் மில்), கோபாலன் ஆகியோரின் அன்புமச்சானும் டஷ்வினின் செல்லப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் இன்று (05.08.2018) ஞாயிற்றுக் கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.



தோற்றம்
17.10.1950

மறைவு
02.08.2018

**தகவல்: குடும்பத்தினர்**

**077 9446 391**

## வீடு வாடகைக்கு

பிறவுண் றோட்டில் 6 அறைகள் மற்றும் பார்க்கிங் வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.
(நிறுவனங்கள் விரும்பத்தக்கது).
**T.P: 070 308 1575 / 076 396 5493**

## வீடு விற்பனைக்கு

வேலணை மேற்கில்
20 பரப்புத் தோட்டக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
**076 396 3692**

## காணி விற்பனைக்குண்டு

சாவகச்சேரி, நுணாவிலில் வீட்டுடன் கூடிய 3 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.
**தொடர்பு - 077 620 7141**

## வேலைவாய்ப்பு

வடமராட்சியில் முன்னணி
**சிறுவர் பாடசாலையின்**
நெல்லியடி, பருத்தித்துறை கிளைகளுக்கு
1. முன்பள்ளி ஆசிரியர்கள்
2. ஆங்கில ஆசிரியர்கள்
3. வரவேற்பாளர்கள் தேவை.

**077 736 1862**
campus_global@yahoo.com

## TONERS விற்பனைக்கு

HP/Epson/Canon/Lexmark மற்றும் சகல விதமான Comportable & Original Toners, Cartridge & Ribbons என்பனவற்றை மலிவான விலையில் பெற்றுக்கொள்ள.
*Replacement warranty தரப்படும்.

85A-1200/= 35A-1200/=
12A-1200/= 78A-1200/=
36A-1200/=

**Ultra Stationers**
No. 20/4, Bankshall Street, Colombo 11.
077 308 4336, 011 232 7187

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1939 . 09 . 28 | 2016 . 07 . 29 |

## அமரர் தியாகர் சின்னத்துரை சிவப்பிரகாசம்

திதி: 06.08.2018

முன்னாள் பிரதம லிகிதர் - நீர்ப்பாசனத் திணைக்களம் (அனுராதபுரம்). ஓய்வுபெற்ற பிரதம லிகிதர் - மோட்டார் வாகனப் போக்குவரத்து அதிகார சபை (யாழ்ப்பாணம்). முன்னாள் பகுதி நேர ஆங்கில ஆசிரியர் - கொக்குவில் நாமகள் வித்தியாலயம்.

அன்பு உருவே மறைந்தாலும் அழியாது
உங்கள் நினைவலைகள் ஆறாத்துயர்
எம் நெஞ்சை அனலாய் சுடுகிறதே!
காணும் இடமெல்லாம் உங்கள் புன்னகை பூத்தமுகம்
தோன்ற கண்கள் நிறைகிறது கண்ணீர் சொரிகிறது
கண்முன்னே வாழ்ந்த காலம் கனவாகி போனாலும்
எம்முள்ளே நீங்கள் எந்நாளும் உயிர்வாழ்கிறீர்கள்
இனிய நினைவுகளும் இழந்தவலியும் வேதனையும்
இறுதிமூச்சுவரை எம்முள் சுமப்போம்!!!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை நாம் பிராத்திக்கின்றோம்.
சாந்தி! சாந்தி! சாந்தி!

குடும்பத்தினர்.

AP ads 077 2359535

# மரண அறிவித்தல்

## திருமதி சுகிர்தா பாலசுப்பிரமணியம்



கந்தர்மடம், மணல்தறைலேனை பிறப்பிடமாகவும், காரைநகர் களபூமி சத்திரந்தையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சுகிர்தா பாலசுப்பிரமணியம் 03.08.2018 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிஐயா - பூமணி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நல்லதம்பி - சுந்தரம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், பாலசுப்பிரமணியத்தின் பாசமிகு மனைவியும், நிர்மலா (கனடா), காலஞ்சென்ற தனலக்சுமி மற்றும் நவலோஜனா (சுலோ), சத்தியசீலன், பத்மலோஜனி (ஜேர்மனி), வரதலக்சுமி (முறிப்பு), ஜெயசீலன் (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், விவேகானந்தா (கனடா), சிங்கராசா, இராசதுரை, சத்தியா, ஸ்ரீகுகநிமலன் (ஜேர்மனி), சத்தியசீலன், சிவாஜினி (கனடா), பரமேஸ்வரி காலஞ்சென்ற வரதராசா ஆகியோரின் மைத்துனியும், நிர்ஜிதா, வினர்ஜிதா, தேவஜிதா, பாலஜிதா (கவிதா), நிஷானி, ஜெனார்த்தினி, காலஞ்சென்ற ஜெயபிரகாஷ் மற்றும் லதாஜினி, துஷ்யந்தி, ரிஷாந்தா, டினேஸ்குமார், சதீஸ்குமார், கோகுலன், சிவனேசன், சிவனேஸ்வரி ஆகியோரின் சிறியதாயும், சஞ்சுதன், மகிசுதன், திவேதிகா, ஹரிசாகித்தியா ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.08.2018) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது தற்காலிக இல்லமான 44/17, மணல்தறைலேன், கந்தர்மடத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**44/17, மணல்தறை ஒழுங்கை,**
**கந்தர் மடம்,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**ந.பாலசுப்பிரமணியம் (கணவர்)**
**077 026 0414**

(CS/18745) (11,17)

# மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 20.03.1931 | 03.08.2018 |

**மாரியம்மன் கோயில் வீதி,**
**2 ஆம் வட்டாரம், புங்குடுதீவு, யாழ்ப்பாணம்.**

## தம்பையா சுப்பையா

(கார்கார சுப்பையா - CL - 66, காமதேனு பஸ் உரிமையாளர்)

யாழ். புங்குடுதீவு 3 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், 2 ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா சுப்பையா 03.08.2018 வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான தம்பையா - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான குமாரசுவாமி - கமலாட்சி மற்றும் மாணிக்கம் தம்பதியரின் அன்பு மருமகனும், பரிமளம் அவர்களின் பாசமிகு கணவரும், காந்திமதி, சஸ்பாநிதி, சந்திரமதி, காலஞ்சென்ற சிவநாதன், ஜெயகுமார், நவராசா, கிஸ்ணமூர்த்தி, சிவமதி, ஜெயமதி, கலைமதி, பாஸ்கரன், சுமதி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான கனகம்மா, தங்கம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரரும், சரவணபவானந்தன், ஜெயகுமாரி, சீவரெத்தினம், மாலினி, அனுஜா, கிஸ்ணலதா, அருள்ராஜா, மகேஸ்வரன். ஜீவராசா, சுகந்தினி, கைலைநாதன் ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்றவர்களான குழந்தைவேலு, சின்னத்துரை, துரைராசா மற்றும் அருளையா, இராசரெத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், திருவருட்செல்வி, மோகனவதனி, கஜரூபன், வினோதினி, ஜெயரூபன், கௌசிகா, மேகலா, பாபுஜி, கலைப்பிரியா, திபாகரன், ஆதித்யா, புவித்ரன், தட்சாஜினி, தர்சிகா, ஜனகன், ராகவி, காவியா, செருந்தி, சாகித்யன், சாரூபன், விஜிதா, யதுஷா, சுஜீபன், துகாரகா, காயத்ரி, சிந்துஜன், நிரோஷன், டயானா, இந்துஜா, மதுசா, ஈழவன், ஜனுஷன், ஜொனத்தன், சஞ்சய், மிதுலா, சிந்துயா ஆகியோரின் அன்புப் பேரனும், சாருளி, லஷ்வின், மேனகன், லயனி, எல்லாளன், செந்தமிழ், சரன், சன்றியா, டியாஷ், அதர்வா ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.08.2018) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் புங்குடுதீவு மணல்காடு மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பரிமளம் | - மனைவி - இலங்கை | - +947 7986 3906 | கிஸ்ணமூர்த்தி | - பிரான்ஸ் | - +336 2301 1788 |
| காந்திமதி | - கனடா | - +141 6833 8331 | சிவமதி | - இலங்கை | - +947 7813 2283 |
| சஸ்பாநிதி | - பிரான்ஸ் | - +336 8415 2396 | ஜெயமதி | - ஜேர்மனி | - +491 5758 729606 |
| சந்திரமதி | - சுவிட்சர்லாந்து | - +414 4461 5625 | கலைமதி | - கனடா | - +164 7537 3200 |
| ஜெயகுமார் | - பிரான்ஸ் | - +336 2107 2163 | பாஸ்கரன் | - பிரான்ஸ் | - +336 5151 3535 |
| நவராசா | - பிரான்ஸ் | - +336 2448 0923 | சுமதி | - கனடா | - +164 7710 7527 |

# ‘புலமைப்பரிசில் பரீட்சை’

யோகதயாளன்

**அறிவின் அறிநிலை**

பரீட்சைகள் எப்போதுமே அறிவின் பரிசோதனைக் களங்களாகவே அமைய வேண்டும்.அங்கு வெற்றி என்ற எதிர்வு கூறலை முன்னிலைப்படுத்தி மாணவர்களின் உள விருத்தியையும், உடல் ஆரோக்கியத்தையும் பாதிக்கும் படியான எடுகோள்களை இறுதி முடிவாகவும் விளைவாகவும் தந்து விடக்கூடாது. மாறாக அறிவின் பாற்பட்டு மாணவர்களை பகுத்தறிவுக்கு உட்படுத்துவதாகவும், அதீதமான தேடல்களை தெரிவுநிலைக்குட்படுத்தி விதந்துரைப்பதாகவும், சமூக வெளியில் பொதுமைப்பாடுடைய ஆளுமைத் தனிமங்களாக வளர்த்துவிடவும் அவை முயற்சிக்க வேண்டும்.உண்மையில் இந்தச் செயல்நேர்த்தி பின்பற்றப்படுவதாக தெரியவில்லை.

பரீட்சைகள் என்பவை கனதி கொண்டுள்ளன.முயல் வேகத்தை மாணவர்களிடம் திணித்து அதீத சுமைகளை பாரப்படுத்தியுள்ளன. பாட விதானங்களை மூளைக் கலங்களுள் பொருத்தமின்றி செறிவூட்டுகின்றன. தூண்டல்கள் துலங்கலின்றி பின்னூட்டங்களை இடர்நிலைக்கு உட்படுத்துகின்றன. ஓய்வின்றி மாணவர்களையும் பெற்றோர்களையும் இயங்குநிலைபெறச் செய்துள்ளன. வாழ்க்கைமுறையில் அமைதியீனங்களையும், பெற்றோர் பிள்ளைகளிடத்தேயான இடைவெளிகளையும் அதிகப்படுத்தியுள்ளன. அகங்காரமும், அடங்காப்பிடாரித் தனமும் பிள்ளைகளை அசைவியக்கமின்றி உறைநிலைக்குட்படுத்தியுள்ளன. பாசப் பிணைப்புகள் உடைந்து சமூக அந்தஸ்து, கௌரவம் என்பன தான்தோன்றித்தனமாக தலைக்கனம் கொண்டு எங்கும் நிலை பெற்றுள்ளன.இந்த நிலை மாற்றம் பெற வேண்டும்.

**பரீட்சை எனும் மதிப்பீடு**

ஆம், மாணவர்களுக்குரிய தேசிய மதிப்பீட்டு பரீட்சைகளுள் மிக முக்கிய பரீட்சையாக தோற்றம் கற்பிக்கப்படுகின்ற 'புலமைப் பரிசில்' பரீட்சை கால ஓட்டத்தில் சமூக அந்தஸ்தை மதிப்பிடுகின்ற பரீட்சையாக மாற்றங்கண்டுள்ளது. மாணவர்களுக்குரிய பரீட்சையாக அன்றி, சமூக இயைபில் பெற்றோர்களுக்கான பலப் பரீட்சையாகவும் பரிணாமம் அடைந்துள்ளது. குறிப்பாக குடும்ப நிலையில் தாய்மைகள் சுமக்கின்ற 'கௌரவம்' என்ற கருவின் பிரசவமாகவும் இதனைக் கருத வேண்டியுள்ளது.

இயந்திரமயமான கால ஓட்டத்தில் வாழ்க்கையின் தடங்களை சரிவர கட்டமைத்து பயணிப்பதற்கு 'தேவை' என்ற வேண்டுகையை தன்னிறைவோடு நிறைவேற்ற வேண்டியுள்ளது.அதற்கு குடும்ப நிலையில் இருவரோ அல்லது அதற்கு மேற்பட்டவர்களே வாழ்வாதரத்தை உழைப்பால் உயர்நிலைப்படுத்த தனியார் துறையிலே,அரச துறையிலே கடமை தவறாத அங்கத்தவர்களாக பணியாற்ற வேண்டியுள்ளது.

**உறவு நிலையின் பரிணாமம்**

இவ்விதம் சமூகம் அசைவியக்கம் பெறுகின்ற போதும் பல ஒவ்வாமைகளும்.விகாரங்களும் வேறு பல கடமைகளையும் அச்சறுக்கையாக தந்துள்ளன. பிரபல பாடசாலைகளிலும் சரி, தனியார் கல்வி நிறுவனங்களிலும் சரி பிள்ளைகளை பாட விதானங்களுள் அந்தரிக்கவிட்டு தாய்மார்கள் இலவுகாத்த கிளிகளாக காத்துக் கிடக்கின்றனர். பெண்கள் வீட்டில் முடங்கியிருந்த காலம் மாற்றம் கண்டுள்ளது. வீதிகளின் ஓரத்தில் நின்று அளவளாவுகின்றனர். ஒருவருக்கு ஒருவர் பரஸ்பரம் மனக்குறைகளையும் சுமைகளையும் எடுத்துக்கூறி ஒருவரை ஒருவர் தேற்றிக்கொள்கின்றனர். பாடசாலை முகப்புகளும், தனியார் கல்வி நிலைய வளாகங்களும் இதற்குரிய களமாக வெளிப்பட்டுள்ளன. இதனை யாரும் மறுப்பதற்கில்லை.

பெண்கள் போக்குவரத்து பரிமாற்ற ஊடகமாகவும், அவர்கள் பயணிக்கின்ற வாகனங்கள் கல்விக் கூடமாகவும் மாற்றம் கண்டுள்ளன.ஆம், தமது பிள்ளைகளை தனியார் கல்வி நிலையத்துக்கு அனுப்பிய பின்னர் அங்கிருந்து பிறிதோர் கல்வி நிலையத்துக்கு அழைத்துச் செல்லுதல் என தமது வசதிக்கேற்ப ஒன்றுக்கு மேற்பட்ட கல்வி நிலையங்களில் பிள்ளைகளை ஏற்றி இறக்கும் பணியாளுமையாக தம்மை வரித்துக் கெண்டு போக்குவரத்து துறை சார்ந்தோராக தேய்மானமடைந்துள்ளனர்.

தமது பிள்ளைகளை உந்துருளிகளில் ஏற்றிக் கொண்டு வீதியில் பயணிக்கும் போது நடமாடும் கல்விக்கூடமாக பிள்ளைகளுக்கு கற்பிக்கின்றனர். பாடங்களை மீட்டல் செய்கின்றனர். ஆசிரிய ஆலோசகர்களாக கடமை புரிகின்றனர்.இவ்வாறு மாணவர்கள் புலமைப் பரிசில் பரீட்சையை தோற்றும் வரை மிகப்பெரிய தியாகத்தை பெற்றோர் செய்கின்றனர். ஏன் இந்த அவலநிலை..? கேள்விக்கான பதில்கள் ஒருபோதும் இறுதிநிலைப்படுவதில்லை. காரண காரியங்களாக பொருள்நிலை கொள்ளப்படுகின்றன. இத்தகு செயற்போக்குகள் மாற்றம் பெற வேண்டும்.

**பெற்றோர்களின் செயற்பாடுகளில் மாற்றம் வேண்டும்**

பிள்ளைகள் தமது உளவயது எது என்பதை மறந்துபோய் விட வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். தன்னுடைய வாழ்நாளில் அதிக இன்பக் களிப்போடு நகர்ந்திருக்க வேண்டிய இளமைப் பருவத்தை தொலைத்துவிட்டுள்ளனர். அனுபவித்து ஆட்கொள்ள வேண்டிய சுட்டித்தனங்களை முழுமையாகவே பறிகொடுத்துள்ளனர். பரீட்சைக்கான கல்வி என்ற பாறை இடுக்குகளுள் அகப்பட்டு மீள முடியாது தவிக்கின்றனர்.

பிள்ளைகள் உணவு அருந்துவதற்கு கூட நேரமின்றி அங்கலாய்கின்றனர். பெற்றோருக்கு உணவை தயார் செய்ய நேரமீதமில்லை. வேகத்தின் மீடிறன்களுள் அகப்பட்டு ‘ஃபாஸ்ட் பூட்’ என்ற வேகாத உடனடி உணவுப் பழக்க வழக்கத்துள் பிள்ளைகள் வளர் சிதை மாற்றம் பெறுகின்றனர். இவை தவிரவும் அதிகளவான இனிப்புப் பானங்களையும், எண்ணெய் உணவுகளையும் அதிகமாகச் சுவைத்து அவதியுறுகின்றனர். 'அதிகரித்த நிறை, நீரிழிவு, கொழுப்புப் படிந்த தேகம்' என உடல் ஆரோக்கியமற்றவர்களாக வளர்கின்றனர்.

பிள்ளைகள் புறொயிலர் கோழிகள் போன்று வளர்க்கப்படுகின்றனர். ஏறத்தாழ பத்து வருடங்களுக்கு முன்னர் மாணவர்கள் கொண்டிருந்த உடல், உள ஆரோக்கிய அளவிடைப் பெறுமானத்தோடு ஒப்பிட்டு நோக்கின், தற்போதைய பிள்ளைகளின் உடல், உள ஆரோக்கிய மேம்பாட்டின் அளவீடுகள் கீழ்நிலையிலேயே காணப்படுகிறது. நோய் எதிர்ப்புச் சக்தி குறைவடைந்துள்ளது. இலகுவில் நோய்த்தொற்றுக்கு இலக்காகும் உடலியல் அமைவை கொண்டுள்ளனர். பெற்றோர்கள் இத்தகு மாற்றங்களின் நிலை பெறுதியை கண்டுகொள்ளாதிருப்பது கவலைதரும் விடயம்.

**பொருத்தமான கல்விச் செயற்றிட்டம் வேண்டும்**

இலவசக் கல்வியின் தந்தை சி.டபிள்யூ.டபிள்யூ.கன்னாங்கரா கொண்டு வந்த திட்டம் வெற்றியளிக்கவில்லை. இலவசக் கல்வியின் நோக்க வெளிப்பாடும் முழுமை பெறவில்லை. உண்மையில் பின்தங்கிய கிராமத்து மாணவர்கள் கற்பதற்கான சூழலை ஏற்படுத்தவும், அவர்களுக்கான பண உதவியை வழங்கி அவர்களுடைய கற்றல் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கும் தேவைப்பாடுடைய திட்டமாகவே இலவசக் கல்வி கொண்டு வரப்பட்டது. ஆனால் வறிய மாணவர்களின் கல்வி அறிவு மட்டம் சமனிலை பெறவில்லை என்றே எண்ணத் தோன்றுகிறது.

இன்று புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைவோரில் 80வீதத்துக்கும் அதிகமான மாணவர்கள் அரச பணி மேற்கொள்கின்ற பெற்றோர்களின் பிள்ளைகளாகவே இருக்கின்றனர். மீதமுள்ள 20சதவீதமான மாணவர்களே வறிய மாணவர்களாக இருக்கின்றனர்.

எனவே வறிய மாணவர்களுக்கான வளப் பங்கீடுகளையும், அவர்களுக்கான வசதி வாய்ப்புகளையும் வலுப்படுத்த வேண்டும். கல்வியில் உயர் அடைவுகளை பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பங்களை வழங்க அரசு பொருத்தமான மாற்றுத்திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும். சித்தியடைந்த மாணவர்களை பாடசாலைகளில் உள்வாங்கும் போது பொதுநிலைப்படுத்தப்படுகின்ற 'வெட்டுப் புள்ளி' என்ற தேர்வுப் படிமுறையை சீர் செய்ய வேண்டும். வசதி படைத்த மாணவர்கள், வறிய மாணவர்கள் என்ற வேறுபாடு இன்றி அனைவரையும் சமத்துவமாக மதிக்கின்ற், முதற்தர பாடசாலைகளில் உள்வாங்குகின்ற நடைமுறையை முன்னிலைப்படுத்த அரசும், மாகாண மற்றும் நடுவண் அரசு சார்பான கல்வி அதிகாரிகளும், தமிழ் அரசியல் பிரதிநிதித்துவங்களும் ஆவண செய்ய வேண்டும்.



தவிரவும் பிரபல பாடசாலைக்குரிய வெட்டுப்புள்ளியை நெருங்க முடியாவிட்டாலும் புலமைப்பரிசில் பரீட்சை வெட்டுப்புள்ளியை வெற்றி கொண்ட மாணவர்கள் அரசால் வழங்கப்படுகின்ற புலமைப் பரிசில் திட்ட நடைமுறைக்குள் உள்வாங்கப்பட வேண்டும். அவர்கள் பயனடைவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்.

**மாணவர்களை பொருத்தமுற வழிநடத்துதல் அவசியம்**

அதேபோன்று பெற்றோர்கள் பரீட்சை தொடர்பில் பிள்ளைகள் மீது வைத்திருக்கின்ற நம்பிக்கை வலுப்பெற வேண்டும். ஆனால் நம்பிக்கை என்ற பிடிமானத்தை உயர் அடைவுக்கான அழுத்தமாக பிரயோகிப்பதை தவிர்த்திருக்க வேண்டும். மனதளவில் மாற்றங்களை கொண்டு வரவேண்டிய காலம் இது. எதிர்பார்ப்புகள் பிள்ளைகளை மிகுந்த மன உளைச்சலுக்கு உட்படுத்தி விடக்கூடாது.

## செவ்விய பொருளுணர்ந்து மெய்யுணர்வோடு செயலாற்றுவோம்

குறிப்பாக, 'பரீட்சையில் சித்தி, சித்தியின்மை தொடர்பில் வேற்றுமைகளை ஒருபோதும் திணிக்காதீர்கள். உளவியல் ரீதியான வைதலும், உடல் ரீதியான தண்டனையும், பரீட்சையில் சித்தியடைந்தவனுக்குத் தேவைகளை நிறைவேற்றுவதும், சித்தியடையத் தவறிய பிள்ளைகளது விருப்பங்கள் நிராகரிக்கப்படுவதும்' மாணவர் நடத்தையில் சிதைவுகளை ஏற்படுத்தி விடும் என்பதை பெற்றோரும் சமூகமும் புரிந்து கொள்ளத் தலைப்பட வேண்டும்.

பரீட்சையில் சித்தியடையத்தவறிய மாணவர்களை ஆற்றுப்படுத்த வேண்டும்.அவர்களை ஊக்கப்படுத்துவதன் மூலமும், தட்டிக் கொடுப்பதன் மூலமும் இடை நிலைக் கல்வியில் சரியான அடைவுகளைப் பெற வழிப்படுத்தலாம். புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர்களைவிடவும் சித்தியடையத் தவறியவர்களே பின்னாளில் திறமைசாலிகளாக மாற்றங் கொள்வதை அவதானிக்க முடிகிறது.

> பெற்றோர் பிள்ளைகளிடத்தேயான உறவும், மாணவர் ஆசிரியர் இடையேயான உறவும், குடும்பம் சமூக அங்கத்தவர்கள் இடையேயான இடைத்தொடர்பும் வலுப்பெற வேண்டும். பரீட்சை, வெற்றி , தோல்வி என்பவற்றுக்கு இடையேயான மதிப்பீடு சமத்துவம் பெற வேண்டும். அனைவரிடத்தேயும் புரிந்துணர்வு வலுப்பெற வேண்டும்.சிந்தித்து செயலாற்றுவோம்.

**சிந்தித்துச் செயலாற்றுவோம்**

ஆகவே, பெற்றோர் பிள்ளைகளிடத்தேயான உறவும், மாணவர் ஆசிரியர் இடையேயான உறவும், குடும்பம் சமூக அங்கத்தவர்கள் இடையேயான இடைத்தொடர்பும் வலுப்பெற வேண்டும். பரீட்சை, வெற்றி , தோல்வி என்பவற்றுக்கு இடையேயான மதிப்பீடு சமத்துவம் பெற வேண்டும். அனைவரிடத்தேயும் புரிந்துணர்வு வலுப்பெற வேண்டும்.சிந்தித்து செயலாற்றுவோம்.

**“தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க
தூங்காது செய்யும் வினை.”**

*கட்டுரையாளர்: அதிபர், யா/பரமேஸ்வரா வித்தியாலயம்.*

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## பன்னாட்டுச் சமூகத்தின் தலையீடு மீதான எதிர்பார்ப்பு

புதிய அரசமைப்பு உருவாக்கப்பட்டால் மாத்திரமே நாட்டின் எதிர்காலம் சிறப்பாக இருக்கும், கடும்போக்காளர்களின் கருத்துக்கு அஞ்சி புதிய அரசமைப்பு உருவாக்கப்பணிகளை அரசு தாமதப்படுத்தக்கூடாது என்று வலியுறுத்தியிருக்கிறார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன். இலங்கைக்கு வந்துள்ள பொதுநலவாய நாடுகள் அமைப்பின் செயலாளர்பட்ரிஸியாஸ்காட்லாண்ட் தன்னைச்சந்தித்தபோது இந்தக்கருத்துக்களைச்சம்பந்தன் தெரிவித்திருக்கிறார். ஆயுதப் போராட்டம் முற்றுப் பெற்றதன் பின்னரும் அமைதி மக்களிடையே ஏற்படவில்லை என்பதையும் அவர் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

அண்மைக் காலமாகவே தன்னைச் சந்திக்கும் வெளிநாட்டுப் பிரதிநிதிகள், அரசியல்வாதிகள் எல்லோரிடமும் இந்தக்கருத்தை வலியுறுத்தி வருகின்றார் சம்பந்தன். இந்த விடயத்தில் உலக நாடுகளும் பன்னாட்டு அமைப்புகளும் கொழும்புக்கு கடுமையான அழுத்தங்களைக் கொடுக்கவேண்டும் என்பதே சம்பந்தன் இந்தக் கருத்துக்களை வெளிநாட்டவர்களிடம் அழுத்திக்கூறுவதற்குக் காரணம்.

''பிராந்தியங்களுக்கு அதிக அதிகாரங்களை வழங்கும் வகையில் அரச கட்டமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்தும் ஒரு புதிய அரசமைப்பு, உண்மை மற்றும் நீதியை நிலைநாட்டுதல், இழப்பீடு, காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பிலான விசாரணைகள், படையினர் வசமுள்ள பொதுமக்களின் காணிகளின் விடுவிப்பு, மிகக் கடுமையான பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளோரின் விடுதலை போன்றன அவ்வாறான வாக்குறுதிகளில் சிலவாகும். எனினும் இவை தொடர்பில் அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் திருப்திகரமாக இல்லை'' என்பதன் அடிப்படையிலேயே சம்பந்தன் பன்னாட்டுச் சமூகத்தின் தலையீட்டைக் கோரி நிற்கிறார்.

கொழும்பு அரசுக்குத் தர்மசங்கடத்தைத் தரக்கூடிய போர்க்குற்ற விசாரணைவிடயத்தைஉண்மை மற்றும்நீதியைநிலைநாட்டுதல் என்கிற பொதுப்பதத்தின்கீழ் புதைத்துவிட அவர் முயன்றாலும், இது விடயத்தில் பன்னாட்டுச் சமூகத்தின் தலையீடு அவசியத்தை வலியுறுத்தி அதனைப் பெற்றுக்கொள்வதே அவரது எதிர்பார்ப்பாக இருக்கின்றது.

தமிழர்கள் விடயத்தில் கொழும்பு அரசுகளின் நடத்தை நம்பத் தகுந்தது இல்லை என்கிற வரலாற்றுப் பாடம் இருந்தபோதும், பன்னாட்டுச்சமூகத்தை நம்பியே சம்பந்தன் தற்போதைய கூட்டு அரசோடு இயைந்து சென்றார். தற்கொலைக்கு ஒப்பானது என்று தெரிந்தும் எதிர்ப்பு அரசியலை ஒருபுறம் வைத்துவிட்டு அரசோடு ஒத்தோடும் அரசியலை அவர் கையிலெடுத்தது இந்தப் பன்னாட்டுச் சமூகத்தின் நம்பிக்கையை வென்றெடுப்பதற்காகவும், கொழும்பு ஏமாற்ற முற்படும் தருணத்தில் பன்னாட்டுச் சமூகத்தின் தலையீட்டின் மூலம் தமிழர்களுக்கு ஒரு தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியும் என்கிற அடிப்படையிலும்தான்.

கொழும்பின் தற்போதைய ஆட்சி தனது கடைசிக் காலத்தை நெருங்கிக் கொண்டிருக்கும் நிலையில் அந்த ஆட்சியால் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேறுமா இல்லையா என்கிற அச்சமும் சந்தேகமும் ஏற்பட்டிருக்கும் நிலையில் பன்னாட்டுச் சமூகத்தின் தலையீடு சம்பந்தனுக்கு மிக மிக அவசியமானதாக இருக்கின்றது. இதையே அவர் தன்னைச் சந்திக்கும் வெளிநாட்டவர்கள் ஒவ்வொருவரிடமும் தெரிவிக்கும் கருத்துக்கள் வெளிப்படுத்துகின்றன.

ஆனால், இப்படிப் பன்னாட்டுச்சமூகத்தை நம்பி மோசம் போன வரலாறும் தமிழ் மக்களுக்கு ஏற்கனவே உண்டு. இலங்கையின் இறுதிப் போரின்போது மனிதப் பேரவலம் ஏற்படும் என்கிற நிலை வந்தபோது பன்னாட்டுச் சமூகம் தலையிட்டு அத்தகைய பேரழிவைத் தடுத்து நிறுத்தும் என்கிற பெரும் எதிர்பார்ப்பு இருந்தது. பன்னாட்டுச் சமூகத்தின் தலையீட்டைக் கோரி மக்கள் ஆயிரக் கணக்கில் பல ஊர்வலங்களையும் ஆர்ப்பாட்டங்களையும் நடத்தியதும் வரலாறு. எனினும் பன்னாட்டுச் சமூகம் அந்த மக்களைக் கைவிட்டது. மனிதப் பேரழிவை வேடிக்கை பார்த்து நின்றது. மக்களின் அழிவு குறித்துக் கவலை கொள்ளாமல் ஐக்கிய நாடுகள் சபையேகூட அங்கிருந்து வெளியேறியது தான் நடந்தது.

இப்போது மீண்டும் அத்தகையதொரு சூழ்நிலைக்குள்ளேயே தமிழர்கள் வந்துள்ளார்கள். தீர்வு ஒன்றைக் காண்பதற்குப் பன்னாட்டுச்சமூகம் உதவும் என்று எதிர்பார்க்கிறார்கள். சம்பந்தனின் கருத்துக்கள் அந்த எதிர்பார்ப்பையே பிரதிபலிக்கின்றன. ஆனால், பிராந்திய மற்றும் வல்லாதிக்க நலன்களின்பால் கணக்கிடப்படும் உலக அரசியலில் இந்த எதிர்பார்ப்பு நிறைவேறுவதற்கான சாத்தியங்கள் எவ்வளவு என்பது கேள்விக்குரியது. பன்னாட்டுச் சமூகத்தின் தலையீட்டால் தீர்வு வரும் என்கிற எதிர்பார்ப்புடன் மட்டுமே இருந்துவிட்டால் தீர்வு வருமா?

அழுதும் பிள்ளை அவளே பெறவேண்டும் என்பது பழந்தமிழர் மொழி.

# வடக்குத் தொடர்பாக பிறந்த திடீர் ஞானம்

இந்துமதி




வடக்கின் அபிவிருத்தி தொடர்பாக அரசியல் தலைவர்களுக்குப் பிறந்த திடீர் ஞானம் தமிழ் மக்களை வியக்க வைத்துள்ளது. இந்திய அரசின் நிதியுதவியுடன் இடம்பெற்ற நோயாளர் காவு வண்டியின் இலவச சேவைக்கான ஆரம்ப நிகழ்வின்போது இதை அவதானிக்க முடிந்தது. இலங்கையின் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஏனைய பிரதேசங்களுடன் ஒப்பிடும்போது வட பகுதியில் அபிவிருத்தி திட்டங்கள் இடம்பெற்றதாகத் தெரியவில்லையெனக் கூறியுள்ளார். இந்த நிகழ்வில் காணொலி மூலமாக உரையாற்றிய இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி, வட பகுதி மக்களின் கண்ணீரைத் துடைத்து அவர்களை வளமான எதிர்காலத்துக்கு இந்தியா இட்டுச் செல்லுமெனத் தெரிவித்துள்ளார். இரண்டு தலைமை அமைச்சர்களும் கூறியதைக் கேட்கும் போது மகிழ்ச்சியாகத்தான் இருக்கின்றது. ஆனால் தமிழர்கள் தாம் கடந்து வந்த பாதையையும் ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். தமிழர்கள் இந்த நாட்டில் மகிழ்ச்சியாக இருந்ததாகச் சரித்திரமே கிடையாது. மகிழ்ச்சியாக இருப்பதற்கு அவர்கள் அனுமதிக்கப்படவில்லை என்பதுதான் உண்மை.

### வேடிக்கையான வெளிப்பாடுகள்

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க வடக்கின் அபிவிருத்தி தொடர்பாகக் கருத்து வெளியிட்டமை வேடிக்கையானது. போர் ஓய்ந்து 10ஆண்டுகள் ஆகிவிட்ட நிலையில் வடக்கு அபிவிருத்தியைக் காணவில்லையென அவர் கூறியிருப்பதை எந்த வகையில் எடுத்துக்கொள்வது என்பது புரியவில்லை. நாட்டின் பிறபகுதிகள் அபிவிருத்தி கண்ட நிலையில் காணப்படும்போது வடபகுதி அபிவிருத்தியைக் காணாது மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றது. இங்குள்ள இளைஞர் யுவதிகள் தொழில் வாய்ப்பின்றி வேதனையுடன் தமது காலத்தைக் கடத்தி வருகின்றனர். இவர்களுக்குத் தொழில் வாய்ப்பினை வழங்க வேண்டியது அரசின் கடமை. அரசு அதற்கான எந்த முயற்சியையும் மேற்கொள்வதாகத் தெரியவில்லை. தெற்கில் அரசு கொண்டுள்ள அக்கறையில் ஒரு சதவீதத்தைத்தானும் வடக்கில் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. இந்த மாற்றாந்தாய் மனோபாவம் இன்று நேற்றல்ல பல ஆண்டுகளாகத் தொடர்ந்த வண்ணம் காணப்படுகின்றது. தெற்கின் இந்த மனநிலைதான் தமிழர்களின் ஆயுதப் போராட்டத்துக்கு வழிவகுத்தது. ஆனாலும் தெற்கு அரசியல்வாதிகள் இன்னமும் திருந்தியதாகத் தெரியவில்லை.

ஒரு நாட்டின் தலைமை அமைச்சர் என்ற வகையில் சகல பிரதேசங்களின் நிலவரங்கள் தொடர்பான பூரண அறிவு அந்தப் பதவியை வகிப்பவரிடம் இருத்தல் வேண்டும். சகல பிரதேசங்களும் சமனாக அபிவிருத்தி செய்யப்படுவதை அவர் உறுதிசெய்ய வேண்டும். ஆனால் இலங்கையின் தலைமை அமைச்சர் அந்தப் பொறுப்பிலிருந்து தாம் விலகியதை சொல்லாமல் சொல்கின்றார். வடபகுதியின் அபிவிருத்தி தொடர்பாகத் தாம் இப்போது தான் புரிந்து கொண்டதாக அவர் காட்டிக் கொள்வதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

### காவு வண்டிகளை தந்தால் போதுமா?

இந்தியாவின் நிதியுதவியுடன் வடபகுதியில் ஆரம்பிக்கப்படவுள்ள இலவச நோயாளர் காவு வண்டிச் சேவை தொடர்ந்து இடம்பெறுமானால் இப்பகுதி மக்களுக்கு பெரிதும் பயனுள்ளதாக இருக்குமென்பதைக் கூறத் தேவையில்லை. ஆனால் இந்தியாவின் கடமை இத்துடன் நிறைவுபெற்றுவிட்டதாக எவரும் கூறிவிட முடியாது. ஏனென்றால் வடபகுதி மக்கள் அனுபவித்த துயரங்களுக்கு இந்தியாவும் ஒரு காரணமாக இருந்துள்ளது. புலிகளை அழிப்பதாகக் கூறிக்கொண்டு அப்பாவித் தமிழர்கள் கொன்று குவிக்கப்பட்டதில் இந்தியாவின் பங்கு அளப்பரியது.

போரில் இலங்கை அரசுக்குத் தேவையான சகல உதவிகளையும் வழங்கிய இந்தியா மறைமுகமாகவும் நேரடியாகவே போரில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டது. ஆனால் போர் முடிவடைந்த பின்னர் தனது கடமை முடிந்துவிட்டதாக இந்தியா ஒதுங்கிக் கொண்டது. இதுவடபகுதித் தமிழர்களுக்குச் செய்த மிகப்பெரிய துரோகமாகும். போரினால் சின்னாபிக்கமாக்கப்பட்ட வடபகுதியின் அபிவிருத்திக்கு உடனடியாகவே இந்தியா உதவி செய்திருக்க வேண்டும். இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் இலங்கைக்குக் கடுமையான அழுத்தத்தை வழங்கியிருக்க வேண்டும். இந்தியத் தலைமை அமைச்சரான நரேந்திரமோடி தனது இலங்கைப் பயணத்தின் போது குடாநாட்டுக்கும் வருகை தந்திருந்தார். அப்போது சில வாக்குறுதிகளையும் கூறிச் சென்றார். ஆனால் ஒன்றுமே நடக்கவில்லை. தற்போதும் வடபகுதி மக்களின் அபிவிருத்தி தொடர்பாகப் பேசியிருக்கிறார். இதுவும் பத்தோடு பதினொன்றாக மறக்கப்பட்டுவிடுமாவென வடபகுதி மக்கள் வினா எழுப்புகின்றனர். இரு நாட்டுத் தலைமை அமைச்சர்களும் தமிழர்களை இனியும் ஏமாற்றத்தில் ஆழ்த்துவது அவர்களுக்கு அழகாக இருக்காது. அவர்கள் எந்த வகையிலாவது அவர்களின் அபிவிருத்திக்கு உதவிட வேண்டும். இதன் மூலமாகவே கடந்த காலத் தவறுகளும் மறக்கப்பட்டுவிடும்.

> போரில் இலங்கை அரசுக்குத் தேவையான சகல உதவிகளையும் வழங்கிய இந்தியா மறைமுகமாகவும் நேரடியாகவும் போரில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டது. ஆனால் போர் முடிவடைந்த பின்னர் தனது கடமை முடிந்துவிட்டதாக இந்தியா ஒதுங்கிக் கொண்டது. இது வடபகுதித் தமிழர்களுக்குச் செய்த மிகப் பெரிய துரோகமாகும். போரினால் சின்னாபிக்கமாக்கப்பட்ட வடபகுதியின் அபிவிருத்திக்கு உடனடியாகவே இந்தியா உதவி செய்திருக்க வேண்டும்.





# தலைகீழாக தமிழர் அரசியல்

சேரலாதன்

வடக்கிலும் கிழக்கிலும் வாழ்கின்ற தமிழர்கள் அரசியல் ரீதியாக சில அதிரடி முடிவுகளை எடுக்க வேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். தமது பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்குமென்ற நம்பிக்கையை அவர்கள் அறவே இழந்துவிட்டதால் இவ்வாறானதொரு நிலை தோன்றியுள்ளது.

**எஞ்சியது ஏமாற்றம்**

அரச தலைவரான மைத்திரிபால சிறிசேன தமது பதவிக் காலத்தின் இறுதிக் கட்டத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறார். சிறீலங்கா சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து அமைத்துக் கொண்ட 'நல்லாட்சி' அரசின் ஆயுட்காலமும் கூட இன்னமும் சில மாதங்களில் நிறைவடையவுள்ளது. ஆனால் தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு எதுவும் கிடைக்கவில்லை. தமிழர்களைத் தொடர்ந்தும் ஏமாற்றுகின்ற செயற்பாடுகள்தான் தொடர்ந்து இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. தமிழர் தரப்பின் முக்கிய பிரதிநிதிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்னமும் அரசுமீது நம்பிக்கை கொண்டிருக்கின்றதா என்று எண்ண வேண்டியுள்ளது, அரசுக்கு அவ்வப்போது ஆதரவையும் தெரிவித்துக் கொண்டிருக்கின்றது. கூட்டமைப்பு இதிலிருந்து விடுபட்டு புதிய அரசியல் வியூகத்தை வகுத்துச் செயற்பட வேண்டுமென்பதே பெரும்பாலான தமிழ் மக்களின் விருப்பமாகத் தற்போது உள்ளது.



> வடக்கு மாகாணசபையின் முதலமைச்சரும், எதிர்கட்சித் தலைவரும் கூரை மீதேறி கோழியைப் பிடிப்பதில் யார் வல்லவர் என்ற விவாதத்தை நடத்திக் கொண்டிருக்கின்றனர். வடக்கு மாகாணசபையின் இலட்சணம் இதன் மூலமாகத் தெளிவாகத் தெரிகின்றது. இவர்களைத் தெரிவு செய்து மாகாணசபைக்கு அனுப்பிய மக்களைப் பற்றியும் ஒருகணம் இவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

**தெற்கும் இனவாதமும் இரண்டறக் கலந்தவை**

தெற்கில் வழக்கம் போன்று இனவாதிகளின் கரங்கள் உயர்ந்து காணப்படுகின்றன. அரசு இவர்களுக்குப் பணிந்து செயற்படுவதையும் காணமுடிகின்றது. இந்த நிலையில் தமிழர் தரப்பு அரசை நம்பிக் கொண்டிருப்பதில் அர்த்தம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் தமிழ் அரசியல்வாதிகள் தமிழர்களின் அவல நிலையைக் கருத்தில் கொள்ளாது தமக்குள் குரோதத்தை வளர்த்துச் சண்டையிடுவதிலேயே காலத்தைக் கடத்தி வருகின்றனர். தேர்தல்களை மட்டுமே கருத்தில் கொண்டு இவர்கள் தமது செயற்பாடுகளை அமைத்துக் கொண்டுள்ளனர். பதவிகளுக்காக எதைச் செய்வதற்கும் இவர்கள் தயாராகவே உள்ளனர். வடக்கு மாகாணசபையின் முதலமைச்சரும், எதிர்கட்சித் தலைவரும் கூரை மீதேறி கோழியைப் பிடிப்பதில் யார் வல்லவர் என்ற விவாதத்தை நடத்திக் கொண்டிருக்கின்றனர். வடக்கு மாகாணசபையின் இலட்சணம் இதன் மூலமாகத் தெளிவாகத் தெரிகின்றது. இவர்களைத் தெரிவு செய்து மாகாணசபைக்கு அனுப்பிய மக்களைப் பற்றியும் ஒருகணம் இவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

**வடக்கு - கிழக்கு தமிழர் தாயகமா?**

தற்போதுள்ள நிலையில் வடக்கும் கிழக்கும் தமிழர்களின் தாயகம் என்பது வெறும் கதையாகவே மாறிவிட்டது. கிழக்கு தமிழர்களின் கரங்களைவிட்டு எப்போதோ நழுவிச் சென்றுவிட்டது. வடக்கும் மெல்ல மெல்ல நழுவிச் சென்று கொண்டிருக்கின்றது. அரசின் ஆதரவுடனான திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களால் தமிழர்களின் இனப் பரம்பல் கீழ்நோக்கிச் செல்வதுடன் அவர்களுக்குச் சொந்தமான நிலங்களும் அபகரிக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலை தொடருமானால் இன்னும் சில ஆண்டுகளில் தமிழர்கள் இங்கு வாழ்ந்ததற்கான தடயங்களைத் தேடித்தான் பார்க்க வேண்டியிருக்கும். ஒற்றுமைக்கும் தமிழர்களுக்கும் வெகு தூரம் என்று கூறுவார்கள். சேர, சோழ, பாண்டியன் காலத்திலிருந்து இன்றுவரை இந்த நிலைதான் தொடர்கின்றது. குறிப்பாகத் தமிழ் அரசியல்வாதிகளிடத்தில் ஐக்கியம் என்பதையே காணமுடியவில்லை. இவர்கள் அனைவரும் ஒற்றுமையாகச் செயற்பட்டிருந்தால் பிரச்சினைகளுக்கு ஓரளவாவது தீர்வைக் கண்டிருக்க முடியும்.

**முதல்வரும் தெற்கும்**

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அரசியலில் முதிர்ச்சி பெற்ற ஒருவரல்ல. கூட்டமைப்பின் தலைவரான சம்பந்தனின் உதவி கிடைத்திருக்கா விட்டால் அவரால் முதலமைச்சர் பதவியில் அமர்ந்திருக்க முடியாது. ஆனால் அவர் சகலத்தையும் மறந்து தமது இஷ்டம்போன்று செயற்படுவது ஏற்கத்தக்கதல்ல.

தெற்கைப் பொறுத்தவரையில் ஓர் இனவாதியாகவே அவர் பார்க்கப்படுகின்றார். அவரது உரைகளும், செயல்களும் அவ்வாறானதொரு தோற்றத்தை ஏற்படுத்தி வருகின்றன. அவரால் தெற்கில் அமையவுள்ள அரசுகளுடன் சுமுகமாகச் செயற்பட முடியுமெனக் கூறு முடியாது. இதனால் இவரது காலத்தில் தமிழர்களுக்குத் தீர்வு கிடைக்குமென ஒருபோதுமே நம்பியிருக்க முடியாது.

கூட்டமைப்பின் தலைமை தொடர்ந்தும் தற்போதைய நிலையைப் பேணிவர முடியாது. ஏனென்றால் மக்களைத் தொடர்ந்தும் அமைதியாக இருக்கச் செய்வது இலகுவான காரியமல்ல. இப்போதே மக்கள் மத்தியில் இருந்து பல்வேறு எதிர்ப்புக்கள் கிளம்பியுள்ளன. கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் கூட்டமைப்பு இதை உணர்ந்திருக்குமென நம்பலாம். இதே நிலை நீடிக்குமானால் அடுத்து வருகின்ற தேர்தல்கள் கூட்டமைப்புக்குச் சார்பாக அமையமாட்டாது என்பதை உறுதியாகக் கூறமுடியும்.

## ஆசிரியருக்கான கடிதம்

# வெயிலில் இருந்து பழங்களைப் பாதுகாருங்கள்

யாழ்ப்பாணத்தில் பரவலாகக் காணக்கூடிய ஒரு விடயம் ஆங்காங்கே அமைக்கப்பட்டிருக்கும் பழக் கடைகள். கடும் வெயில் தலைவிரித்தாடும் இந்தக் காலங்களில் அவ்வாறான பழக்கடைகள் நல்ல பயனைத் தரக்கூடியவை. அவை அவசியமும்கூட. போகின்ற, வருகின்ற வழிகளில் மக்கள் இலகுவாகத் தமக்குத் தேவைப்படும் பழங்களைக் கொள்வனவு செய்துகொள்வதை அவதானிக்க முடிகிறது.
ஆனால் பல இடங்களில் அமைக்கப்பட்டிருக்கும் 'தற்காலிக' பழ விற்பனை நிலையங்கள் வீதியோரங்களில் எவ்வித நிழலும் இல்லாமல் வெட்டவெளியில் அமைக்கப்பட்டுள்ளமை அவதானிப்பு. இதனால் இரண்டு அசௌகரியங்கள் உண்டாகின்றன.
ஒன்று, வாட்டும் வெயிலில் வாடிவதங்கிப் போயிருக்கும் பழங்களைத்தான் எம்மவர்கள் கொள்வனவு செய்துகொண்டு செல்கிறார்கள். அதனால் எந்தப் பயனும் இல்லை என்பது மருத்துவர்களின் கருத்து.
எனவே விற்பனை முகவர்கள் தற்காலிக மேற்கூரைகளை அமைத்தாவது தமது விற்பனையைத் தொடர வேண்டும். தாம் விற்பனை செய்யும் பழங்கள் புத்துணர்ச்சியுடன் உள்ளன என்பதை அவர்கள் உறுதிப்படுத்த வேண்டும்.
இத்தகைய பழவிற்பனை நிலையங்கள் வீதியோரங்களில் அமைக்கப்படுவதால் வாகனங்களின் புகைகளை தேவைக்கு அதிகமாகவே வாங்கிக் குவித்து விடுகின்றன. அதிலும் சில வாகனங்கள் வெளியிடும் கரியமில வாயுவைப் பற்றிக் கேட்கவே தேவையில்லை. அவ்வளவு மோசமான வகையில் அந்த வாகனங்களின் பராமரிப்பும் கண்காணிப்பும் அமைந்துள்ளது என்பது கவலையே.
ஆக, விற்பனை முகவர்கள் வெயில், கரியமில வாயு என்ற இரண்டையும் கவனத்தில் கொண்டு சுகாதாரம் மிக்கதான பழங்களை விற்பனை செய்ய வேண்டும். கொள்வனவாளர்களும் இது விடயங்களை உறுதிப்படுத்தி தமது கொள்வனவை மேற்கொள்ள வேண்டும்.
பணத்தைக் கொடுத்து நோயை வாங்கிச் செல்லும் பேரவலத்தில் இருந்து எச்சரிக்கையுடன் இருத்தல் வேண்டும்.
உரிய அதிகாரிகளும் இவ்வாறான விடயங்களில் மிகுந்த அக்கறையுடன் செயற்பட வேண்டும்.

*லயனல்*



# நித்திய சுகம்

376

உடலே கோயில்

## சீனி மற்றும் மாச்சத்து உணவுப் பயன்பாடு

## நீரிழிவு குறித்த ஆற்றுப்படுத்தலும் ஆலோசனை வழிகாட்டலும்

எம். அரவிந்தன்

உலகளாவிய ரீதியில் நீரிழிவு போன்ற தொற்றா நோய்கள் பல்கிப் பெருகி வருவதைக் காணக்கூடியதாக வுள்ளது. இலங்கை போன்ற வளர்முக நாடுகளிலும் சிறிது சிறிதாக இவற்றின் தாக்கம் அதிகரித்துச் செல்கின்றது. மிக அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்மூலம், கொழும்பு நகரப்பகுதியில் அண்ணளவாக 23 சதவீதமானோர் நீரிழிவு அல்லது நீரிழிவுக்கு முன்னைய நிலையால் (Pre Diabetes) பாதிப்படைந்துள்ளனர். இனக் குழுமங்களின் அடிப்படையான ஒப்பிடுகையை நோக்கின், இலங்கைத் தமிழரிடையே நீரிழிவு ஏற்படும் சதவீதம் அதிகரித்துச் செல்வதைக் காணக்கூடியதாக வுள்ளது.



**சீனி மற்றும் மாச்சத்துப் பொருள்களின் பாவனை**

தமிழ் மக்களிடையே சீனி மற்றும் மாச்சத்துப் பொருள்களின் பாவனை, அதிகமாக இருப்பதும் இதற்கான காரணமாக அமைந்துள்ளது. இதேபோல அதிகரித்துவரும் மேற்குலக துரித (Fast Food) உணவு வகைகளின் பயன்பாடும் இதற்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளது. உடற்பயிற்சியற்ற (Sedentary) வாழ்க்கை முறை கூட இதற்கு ஏதுவாக அமைகிறது.

தவறான உணவுப் பழக்க வழக்கங்களால் நீரிழிவு ஏற்படும் போது, பல வகை மாதிரியான நீண்ட காலப் பிரச்சினைகள் (Comlica tions) ஏற்படுகின்றன. கண் குருடாதல், சிறுநீரகச் செயலிழப்பு, நரம்புகளில் ஏற்படும் தாக்கம், மாரடைப்பு மற்றும் பாரிசவாதம் போன்றவை இதற்கான உதாரணங்களாகும்.

**மென்பானங்கள் என்றும் உடல்நலக் கேடு**

தாகம் ஏற்படும் போது அருந்தும் பானமாக "சோடா" எனப்படுகின்ற மென்பானங்கள் அமைந்திருப்பது மிகவும் துர்ப்பாக்கியமான சூழ்நிலையே. தேநீர் மற்றும் பழச்சாறு என்பவற்றுக்கு நேரடியான முறையிலும், அதே போன்று பல்வேறுபட்ட மறைமுகமான வழிகளிலும் சீனியைப் பயன்படுத்தி வருகின்றோம்.

மென்பானங்கள், ஐஸ்கிறீம், கேக் மற்றும் இனிப்பூட்டிய பிஸ்கற், சொக்லேட் என்பவற்றில் அதிகரித்த அளவில் சீனிச்சத்து இருக்கிறது.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு முடிவுகளின் பிரகாரம், ஒரு வருடத்தில் இலங்கையர் ஒருவர் உள்ளெடுக்கும் சீனியின் அளவு அண்ணளவாக 30 கிலோகிராமாக காணப்படுகிறது. எமது விழாக்கள் மற்றும் சடங்குகளில் கூட சீனி மற்றும் மாச்சத்துள்ள உணவுப் பண்டங்களின் அளவு மிக அதிகமாக இருத்தலைக் காணக்கூடியதாக உள்ளது.

எமது மண்ணிலே மூலைக்கு மூலை புதிது புதிதாக முளைக்கின்ற ஐஸ்கிறீம் மற்றும் குளிர்பான நிலையங்களும் சீனிப் பாவனை அதிகரித்துச் செல்வதற்குரிய மூல காரணமாக அமைந்துள்ளன.

**நிறக் குறியீடு**

சுகாதார அமைச்சு மிக அண்மையில் குளிர்பானங்களுக்கு வர்ணக் குறியீட்டை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன்படி பச்சை மிகக் குறைந்த சீனியளவையும், மஞ்சள் இடைப்பட்ட சீனி அளவையும், சிவப்பு மிக அதிகளவான சீனி உள்ளீட்டையும் வெளிப்படுத்துகிறது. இந்த நிறக்குறியீடுகளை மென்பானங்களில் நாம் பார்க்க முடியும்.

**தீர்வு**

1. சிறுவர்களுக்கு ஆரம்பகாலத்திலிருந்தே அதிகரித்த சீனி மற்றும் மாச்சத்துப் பாவனையால் ஏற்படும் தீமைகள் குறித்து எடுத்துரைக்க வேண்டும். அதிகரித்த சீனிப் பாவனையால் நீண்ட கால அடிப்படையில் ஏற்படும் நீரிழிவு போன்ற தொற்றா நோய்களின் தாக்கம் குறித்து எடுத்தரைத்தல் அவசியம்.
2. பொது மக்கள் மத்தியில் அதிகரித்த சீனி மற்றும் மாச்சத்துப் பாவனையால் ஏற்படும் பிரச்சினைகளை விரிவாக எடுத்துக்கூற வேண்டும். இதற்குப் பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி மற்றும் இணைய ஊடகங்கள் உதவமுடியும்.
3. பாடசாலை உணவகங்களில் அதிகரித்த சீனி மற்றும் மாச்சத்துள்ள உணவுகளையும், துரித உணவுகளையும் தடை செய்து ஆரோக்கியமான உணவுகளை அறிமுகம் செய்ய வேண்டும்.
4. தாகம் ஏற்படும்போது 'சோடா' போன்ற மென்பானங்கள் அருந்துவதை தவிர்த்து, சீனி சேர்க்கப்படாத இயற்கையான பழச்சாறு, செவ்விளநீர் அல்லது தூயநீரை அருந்தப்பழகிக் கொள்ள வேண்டும்.
5. பொதுச் சுகாதாரப் பிரிவினர் சுகாதார அமைச்சின் ஆலோசனைப்படி குளிர்பான மற்றும் ஐஸ்கிறீம் தயாரிப்பு நிலையங்களில் சீனிப் பாவனையின் அளவைக் கண்காணித்து தேவையான நடைமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.
6. நாம் உறவினர் மற்றும் நண்பர்களின் வீட்டுக்குச் செல்லும் போது சொக்லேட், பிஸ்கற் மற்றும் ஐஸ்கிறீம் போன்ற ஆரோக்கியமற்ற உணவுகளைக் கொண்டு செல்வதைத் தவிர்க்க வேண்டும். பழங்கள் போன்ற ஆரோக்கிய உணவு ஊட்டங்களைக் கொண்டு செல்லப் பழகிக் கொள்ள வேண்டும். எமது உறவினர்களுக்கோ, நண்பர்களுக்கோ சீனி மற்றும் மாச்சத்து அதிகமான தீன்பண்டங்களை வழங்கி அவர்களை நாமே ஆரோக்கியமற்ற நோயாளராக மாற்றிவிடக்கூடாது.
7. எந்தவொரு காரியாலயக் கூட்டமாக இருந்தாலும், விழாக்களாக இருந்தாலும் சீனியை வேறாக வைத்திருத்தல் அவசியமாகும். தேவை ஏற்படின் தனக்கேற்ற விதமாக, தேவையான அளவில் சீனியை சேர்த்துக் கொள்ள முடியும்.
8. இறுதியாக நாம் அனைவரும் அதிகரித்த சீனி மற்றும் மாச்சத்துப்பாவனையால் நீண்ட கால அடிப்படையில் ஏற்படுகின்ற பாரதூரமான பின் விளைவுகளையும், தொற்றா நோய்களையும் கருத்தில் கொண்டு, நன் முறையில் திட்டமிட்டு செயற்படுவது காலத்தின் கட்டளையாகும்.

**"நாளைய மாற்றத்துக்காக இன்றே சிந்தித்து செயலாற்றுவோம்"**

*கட்டுரையாளர்: நீரிழிவு அகஞ்சுரக்கும் தொகுதியியல் விசேட மருத்துவ நிபுணர், யாழ்.போதனா மருத்துவமனை.*

## நீரிழிவும் பார்வைக் கோளாறும்

எஸ்.ரி.எஸ்.சந்திரகுமார்

1. நீரிழிவு நோய் கண், மூளை, இதயம் மற்றும் சிறுநீரகங்களைப் பாதிக்கும்.
2. இந்த நோய் உள்ளோர்க்கு ஏனையவர்களை விடவும் பார்வைக் கோளாறு ஏற்படும் வாய்ப்புகள் அதிகம்.
3. கண்களில் பாதிப்பை ஏற்படுத்தும் முக்கியமாக விழித்திரையின் குருதி நாளங்களைப் பாதிக்கும்.
4. விழித்திரையில் ஏற்படும் மாறுதல்களை கண் மருத்துவர்களினால் மட்டுமே பரிசோதித்து கண்டறிய முடியும். மூளை, இதயம் மற்றும் சிறுநீரகங்களி லும், இதே மாறுதல்கள் ஏற்படுவதால் இந்தப் பரிசோதனை மூலம் இவற்றின் தன்மைகளையும் அறிந்துகொள்ள முடியும்.
5. நீரிழிவு நோயால் ஏற்படும் விழித்திரைப் பாதிப்பு, நோயின் தீவிரம் மற்றும் எவ்வளவு காலம் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளார் என்ற விடயங்கள் சார்ந்து அமைந்திருக்கும்.
6. பல வருடங்கள் நோய் உள்ளவர்களில் 70 தொடக்கம் 80 சதவீதமானவர்களுக்கு விழித்திரைப் பாதிப்பு ஏற்படும்.
7. நீரிழிவு நோயாளர்கள் பார்வையிழக்கும் வாய்ப்பு அதிகம். குறிப்பாக 25 மடங்கு அதிமாகக் காணப்படும்.
8. குறைந்த பார்வை அல்லது பார்வையிழப்பு ஏற்படும் வரை எந்தவித அறிகுறிகளும் தெரியாது.
9. விழித்திரைப் பாதிப்பை ஆரம்ப நிலையிலேயே கண்டுபிடித்து லேசர் சிகிச்சையளிப்பதன் மூலம் கணிசமான அளவில் பார்வையிழப்பைத் தடுக்க முடியும்.
10. லேசர் சிகிச்சை மூலம், இருக்கும் பார்வையைப் பாதுகாக்க முடியும். மாறாக இழந்த பார்வையைத் திரும்பப் பெற முடியாது.
11. விழித்திரைப் பாதிப்பினால் ஏற்படும் பார்வையிழப்பைத் தடுக்க நீரிழிவு நோயாளிகள் அனைவருமே 12 மாதங்களுக்கு ஒருமுறையேனும் தங்கள் கண்களை கண் மருத்துவரிடம் அவசியம் பரிசோதித்துக் கொள்ள வேண்டும். விழித்திரை பாதிக்கப்பட்டிருந்தால் அடிக்கடி பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். இவ்வாறு செய்து வந்தால் கண் பார்வையை முற்றிலும் இழந்துபோகாமல் பாதுகாத்துக் கொள்ளலாம்.




*கட்டுரையாளர்: கண் மருத்துவ நிபுணர், யாழ். போதனா மருத்துவமனை.*

சூரியகாந்தி
உதயன்



மாட்டிறைச்சியும் பசுவதையும்



29




31

இருக்கு ஆனா இல்லை...!



25



'ஓலைச் சுவடியும் ஒன்லைன் சேட்டிபிக்கரும்' 28

# வாள்வெட்டு

## வழி தவறியோர் சிறுதொகை இளைஞர்களே...!

கட்டுரை

சி.சந்திரகலா

அண்மைக்காலத்தில் உச்சமடைந்திருக்கிற வாள்வெட்டு அட்டகாசங்கள் அருவருப்பைத் தருகின்றன. சீரான ஒரு சமூகத்தில் நிகழும்போது இவைபோன்றவை முக்கிய பேசு பொருளாகுவது இயல்பே. ஒழுக்கமற்ற சமூகங்களில் நிகழும்போது, இவை இவ்வளவுக்குக் கவனம்பெறாது போகலாம். ஆனால், தமிழ்ச் சமூகம் அத்தகையதல்ல. ஒழுக்கத்திலும் பண்பாட்டு விழுமியங்களிலும் உயர்நிலையைக் கடைப்பிடிப்பது. அதன் சீரழிவுகள் பாரதூரமானவையாகக் கருதப்படுவது ஆச்சரியத்துக்குரியதல்ல.

பத்திரிகைச் செய்திகள், மற்றும் இணையத் தளங்கள் அவரவர் சந்திக்கும் இடங்கள் என எல்லாத் தளங்களையும் இன்றைய வாள்வெட்டுக்களே நிரப்பிக் கிடக்கின்றன. யாழ்ப்பாணத்துத் தமிழரின் சீரழிவு என்பதாகவே அவை நோக்கப்படுகின்றன. அதனால்தான் இத்தகைய வழி தவறலுக்கு உட்பட்டிருப்பது ஒட்டுமொத்தத் தமிழ்ச் சமூகமும் அல்ல எனும் தெளிவு இவ்விடத்தில் தேவையாக இருக்கிறது. தமிழ்ச் சமூகத்தில் புரையோடிப் போயிருக்கின்ற இந்த வழி தவறியோர் சிறுதொகையினரே. ஆனால், கறை, முழுத் தமிழர்கள் மீதும் படிந்திருக்கிறது.



2005ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் தென்னிலங்கையில் இருந்து ஒரு வாகனத்தில் (வான்) யாழ்ப்பாணத்துக்குப் பயணித்துக் கொண்டிருந்த சிங்கள இளைஞர்கள் சிலர், மதுபானம் அருந்தியபடி தமது பயணத்தைத் தொடர்ந்தார்கள். சிறிய மேளங்களை அடித்து ஆடிய வண்ணம் பயணம் செய்துகொண்டிருந்த அவர்கள், கையில்லாத மேல் சட்டைகளை அணிந்தவாறும், சிலர் மேல் சட்டைகள் அணியாமலும் பயணம் செய்து கொண்டிருந்தனர். தமிழீழக் காவல் துறையினர் கிளிநொச்சியில் வைத்து இதை அவதானித்தனர். அந்த வான் உடனடியாக நிறுத்தப்பட்டது. "இது புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி உந்தக் கோலத்தில் இவ்வழியாகப் பயணம் செய்ய முடியாது. மேற்சட்டை போட்டு ஒழுங்காகச் செல்ல வேண்டும்" அவர்களை மறித்த காவல் துறை அதிகாரி இவ்வாறு கூறி அவர்களை மேற் சட்டைகள் அணியச் செய்து பயணத்தைத் தொடர அனுமதித்தார். பொரும்பான்மை இனத்தைச் சேர்ந்த இளைஞர்களைச் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த, அதுவும் ஒரு போராட்ட அமைப்பின் காவல்துறையினர், தமது சட்ட திட்டங்களுக்கு ஏற்ப வழிநடத்தினார்கள். (நீல நிறச் சீருடையணிந்த புலிகளின் காவல்துறையினர் பற்றித் தலைவர் பிரபாகரன் குறிப்பிடுகையில், காக்கிச் சட்டை என்பது தமிழ் மக்களுக்கு அடக்கு முறையை நினைவுபடுத்துவதால் இளம் நீல நிறத்தை எமது காவல்துறையின் சீருடையாக அறிமுகப்படுத்தினேன் என்றார்) அன்று புலிகளின் காவல்துறையினர் மறித்த சிங்கள இளைஞர்கைளவிட மிக மோசமான நிலையில் சில தமிழ் இளைஞர்களின் நாளாந்த வாழ்க்கை மாற்றப்பட்டுவிட்டது. ஆனால், வழி தவறியுள்ள இளைஞர்கள் முழுவதுமான தமிழ் இளைஞர்களில் 10வீதமளவுகூட இல்லை. இவர்களை ஒவ்வொரு ஊர்களிலும் விரல் விட்டு எண்ணிவிட முடியும். அந்த அந்த ஊர்க்காரர்களின் உதவியுடன் இவர்களைக் கண்டறிந்து இவர்கள்மீது உரிய சட்ட நடவடிக்கைகள் எடுத்தால், ஒரு வாரத்தில் இதைக் கட்டுப்படுத்த முடியும்.

முப்பது வருடகால ஆயுதப்போராட்டத்தை நடத்திய ஒரு மக்கள் கூட்டம் குடிகாரர்களாகவும் போதைப் பொருளுக்கு அடிமையானவர்களாகவும் நினைத்தபோது வெட்டிச் சரிக்கும் வெறியர்களாகவும், மற்றவர்களைக் குத்திக் கொல்லும் குரூரம் படைத்தவர்களாகவும் காட்டப்படுவதற்குச் சிறுதொகையில் இருக்கிற இந்த இளைஞர்கள் சிங்கள ஆட்சியாளர்களுக்கு உதவியாக உள்ளனர்

**அரச காவல்துறையின் ஒழுக்கநிலை!**

யாழ்ப்பாணத்து நிலைமைகளை அவதானித்து, அண்மையில் கருத்துரைத்த பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர, அடாவடித்தனங்களில் ஈடுபடுகிற இளைஞர்கள் விடுதலைப்புலிகளுடன் சம்பந்தப்பட்டவர்கள் அல்ல என்று மட்டும் கூறிச் சென்றார். இவர்கள் தமிழ்ச் சமூகத்தை அழிக்க உதவுபவர்கள், இவர்களைக் கண்டுகொள்ளத் தேவையில்லை என்ற மறைமுகவிளக்கமும் இதில் உண்டு. அதாவது புலிகளுடன் தொடர்புபட்டு இல்லாமையால் இவர்கள் ஒருபோதும் சிங்கள மக்களுக்கு அச்சுறுத்தலாக இருக்கப் போவதில்லை, அதனால், இவர்களைக் கட்டுப்படுத்தவேண்டியது குறித்துச் சிங்கள மக்கள் அவசரப்படத் தேவையில்லை. இவர்களால், பிரச்சினை தமிழ் மக்களுக்குள்தான் ஏற்படும், ஆறுதலாகப் பார்த்துக்கொள்ளலாம் என்பதே அவரது விளக்கமாகும். முதலில் குறிப்பிட்ட தமிழீழ காவல் துறையினரின் செயலுக்கும், குறித்த பொலிஸ்மா அதிபரின் உட்கருத்துக்கும் இடையிலான வேறுபாடு நேர்எதிரானது.

**பெற்றோர்களே உடந்தையானவர்கள்**

தமிழ் இளைஞர்களில் ஒரு குறிப்பிட்ட தொகையினரே தொடர்ந்தும் இந்த வேலைகளில் ஈடுபடுகின்றனர். இதற்கு முக்கிய காரணம், அவர்களுடைய பெற்றோர்களே. ஏழ்மைப்பட்ட கிராமப்புறத்தினர் மாத்திரமன்றி நகர்ப்புற வசதி படைத்த பெற்றோர்களும் இதற்குள் அடங்குகின்றனர். இவர்கள் தமது பிள்ளைகளின் நடவடிக்கைகள் குறித்தோ, அன்றாடச் செயற்பாடுகள் குறித்தோ அக்கறையற்றவர்களாக இருப்பதைக் கவனிக்கலாம். கோவில்களின் ஒதுக்குப் புறங்கள், வாசிகசாலைகள், மதகுகள், மரத்தடிகள் எனப் பல இடங்களில் ஒன்றுகூடுகிற இளைஞர்கள், பெற்றோர், உற்றார், பாதுகாவலர்கள் அற்றவர்களாக இருப்பதில்லை. இவர்கள் ஒன்றுகூடுகிற குறிப்பிட்டதுபோலான இடங்கள் முதலில் குடி, போதைப் பொருள்கள் பயன்படுத்தும் பின்னர் மையங்களாக மாறுகின்றன. பின்னர் அதிலிருந்து காதல், கொடுக்கல் வாங்கல், வம்பிழுப்புக்கள், முரண்பாடுகள் தோற்றமாகி வளர்ந்து கொள்கின்றன. அரசியல் கலப்பின்றிய (வாள்வெட்டுக்களின் பின்னிணியில் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர், மற்றும் பொலிஸார் இருக்கிறார்கள் என்று மக்கள் எண்ணுகிற வாள் வெட்டுக் குழுக்கள் தவிர்ந்த) அனைத்து வாள்வெட்டு அட்டகாசங்களும் இவ்வகையில்தான் வளர்ந்திருக்கின்றன. இந்த அடாவடிக் கும்பலை (ஆரம்பப் பருவத்திலேயே) தோன்றவிடாது தடுத்திருக்க வேண்டும்.

**ஒதுக்கப்பட்டிருக்கிற உதவாக்கரைகள்!**

வளர்ந்துவிட்ட வாள்வெட்டுக்கள் மாத்திரமன்றி, இதுபோன்ற சீரழிவுக்கு உட்பட்ட இளைஞர்களைத் தமிழ்ச் சமூகம் பெருமளவுக்கு ஒதுக்கி விட்டது. இவர்களில் எவராவது, வாள்வெட்டு, அல்லது விபத்து என ஏதேனும் ஒன்றால், இறந்துவிட்டால், "சனியன்கள் செத்துத் தொலையட்டும்" என மிகச் சாதரணமாகக் கூறும் நிலை இருக்கிறது.

அநேகமாகவே எல்லா ஊர்களிலும், "இன்னாற்றை பொடியன் தான் உந்தக் கூட்டத்துடன் திரியிறான். அதைச் சொன்னாலும் தாய், தேப்பனுக்குப் பிடிக்காது. ஏதோ அழிந்து போகட்டும்" என்று மிகச் சாதரணமாகவே தத்தமக்குள் ஆதங்கப்படுகிற நிலையும் தமிழ்ச் சமூகத்தில் நீடித்து வருகிறது. அந்த வகையில் பல குடும்பங்கள் ஏற்கனவே சமூகத்தால் கைவிடப்பட்டு விட்டன. அது அந்தக் குறிப்பிட்ட குடும்பங்களுக்குத் தெரிந்திருப்பதில்லை.

தற்போதுள்ள யாழ்ப்பாணச் சூழலில் ஓர் இளைஞனுக்குத் திருமணப் பேச்சை ஆரம்பிக்கும்போது 'தம்பி யார், யாருடன் எல்லாம் தொடர்பு வைத்திருக்கிறார்?' என்பதை மிக இலகுவாக அறிந்து விடுகின்றனர். இதற்கு முகநூல், நண்பர்கள், சேர்க்கைகள் எனப் பலவற்றையும் கவனித்து வைத்திருக்கிற ஊர்க்காரர்கள் உதவி புரிகின்றனர். இதனால் அந்த இளைஞர்களுக்கோ அவர்களின் குடும்பத்துப் பெண்பிள்ளைகளுக்கோ கௌரவமான நல்ல குடும்பங்களில் திருமணம் செய்யும் வாய்ப்பு இல்லாது போய் விடுகிறது. (இவ்வாறாகத் திருமணப் பேச்சுக்கள் குழம்பும் போது, ஊரில் குறிப்பிட்ட நபர்கள்தான் தன்னைப் பற்றி உண்மையைக் கூறியதற்குக் காரணம் என அறிந்து, இந்த அடாவடிப் பிரிவினர் சண்டை, அடிதடி அல்லது வாள்வெட்டு எனச் செல்கின்ற நிலைமையும் உண்டு). கிராமத்தினர், ஊர்க்காரர்கள், சுற்று வட்டத்தினர் என தகாத நடத்தையுள்ள இளைஞனை அனைவரும் இனங்கண்டே வைத்திருக்கின்றனர். ஆனால், சட்டத்தின்கையில்சிக்கும்வரையில்அவன் மூலமான சீரழிவுகளை அவர்கள் பார்த்துச்செல்லவேண்டிய நிலையே நீடிக்கிறது.

**சீரழிந்த இளைஞர்களால் ஊருக்கே பழி!**

இந்த அடாவடியில் ஈடுபடுகிற இளைஞர்கள் சீரழிந்த சமகாலச் சூழலுக்குள் தலையைக் கொடுத்து விட்டார்கள் என்றே கூற முடிகிறது. பாடசாலை இடை விலகல், தொழில் ஒன்றைத் தேட முடியாமை, வெளிநாட்டில் இருந்து வருபவர்களுடன் இலங்கை முழுவதும் சுற்றித் திரிந்து எவர் கூப்பிட்டாலும் சாரயத்துக்கும் சாப்பாட்டுக்கும் எடுபடுகின்ற 'அங்கிடு தத்த' நிலை, குடும்பத்தின் இறுக்கமற்ற தன்மை மற்றும் தாய், தந்தை எவராகிலும் குடும்பப் பிணைப்பில்லாது தனியனாகிப்போயிருத்தல் எனப் பல காரணிகளாலேயே இந்த இளைஞர்களும் வழிதவறிப்போகிறார்கள். அத்துடன் அரசோ, தமிழ்த் தலைமைகளோகூடச் சட்ட ரீதியாக இவர்களைக் கையாளத் தவறுகின்றன. விடுதலைப் புலிகள்போன்ற அமைப்புக்கள் இல்லாமையும் இதற்கு முக்கிய காரணமே. ஒவ்வொரு ஊர்களிலும் ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் வாழ்கின்றனர். அவர்களில் மூன்று பேர் அடாவடித்தனத்தில் இறங்கினால் அவர்கள் சார்ந்த ஊரே பழி கேட்க வேண்டியுள்ளது.



**மோட்டார் சைக்கிள் வியாதி!**

வல்லை வெளியில் இரவு நேரம் பல மோட்டார் சைக்கிள்களில் பல இளைஞர்கள் பயணம் செய்திருக்கிறார்கள். அதில் சிலர் மோட்டார் சைக்கிள்களிலும் 'சென்ரர் ஸ்ராண்டை' காப்பெற் வீதியில் பதித்த போது பொறி பறந்திருக்கிறது. இதை எல்லா மோட்டார் சைக்கிளில் சென்றவர்களும் மாறி மாறிச் செய்திருக்கிறார்கள். அப்படிச் செய்ததில் ஒரு மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து மின்சாரக் கம்பத்துடன் அடிபட்டிருக்கிறது. ஓடியவர் உடல் சிதறி உயிரிழந்திருக்கிறார். பைத்தியங்கள் பல இங்குள்ள அதிக இளைஞர்கள் மத்தியில் இன்னமும் இருக்கின்றன.

**இளைஞர்கள், தமிழர்களின் பலவீனம்!**

ஆயிரம் மதுக்கடைகளும், போதைப் பொருள் மையங்களும், விபச்சார விடுதிகளும் திறக்கப்பட்டாலும் தமிழ் இளைஞர்கள் கட்டுப்பாட்டுடன் இருந்தால் உழைக்க வந்தவர்கள் அதில் நஷ்டப்பட்டு மூடிவிட்டுப்போகும் நிலை ஏற்படும். பணத்தைப் பிழையான வழிகளில் செலவிடுவது எமது இளைஞர்களே. மிக நீண்ட காலமாகவே எல்லாப் பிழைகளுக்கும் சிங்களவர்களையும், முஸ்லிம்களையும், இராணுவத்தையும் குற்றஞ் சாட்டித் தப்பித்துக் கொண்ட தமிழ்ச் சமூகம் தனித்து விடப்படுகிறபோதுதான் கையும் கள்வுமாகப் பிடிபடும் நிலை ஏற்பட்டுள்ளது. உறவினர்களால் மேற்கொள்ளப்பட்ட வித்தியாவின் கொலை, அதைத் தொடர்ந்து இற்றைவரை நடைபெறுகிற பாலியல் வன்புணர்வு, கொள்ளை மற்றும் அடாவடித்தனங்களைத் தமிழரே தமிழருக்குச் செய்கின்றனர்.

முப்பது வருடகால ஆயுதப்போராட்டத்தை நடத்திய ஒரு மக்கள் கூட்டத்தை, குடிகாரர்களாகவும் போதைப் பொருளுக்கு அடிமையானவர்களாகவும் நினைத்தபோது வெட்டிச் சரிக்கும் வெறியர்களாகவும், மற்றவர்களைக் குத்திக் கொல்லும் குரூரம் படைத்தவர்களாகவும் காட்டப்படுவதற்குச் சிறுதொகையில் இருக்கிற இந்த இளைஞர்கள் சிங்கள ஆட்சியாளர்களுக்கு உதவியாக உள்ளனர்.

**ஒழுக்கத்துடன் அதிக தமிழர்கள்!**

அடாவடி இளைஞர்களிடத்தே ஏற்படுகிற நோயை ஆரம்பப் பருவத்திலேயே கண்டறிந்து சீர்செய்யவேண்டியவர்கள் பெற்றோர்களே. தமது பிள்ளைகள் எங்கு நிற்கிறார்கள்? எதைச் செய்கிறார்கள்? எப்படி உழைக்கிறார்கள்? யாருடன் திரிகிறார்கள்? என்பதில் தெளிவற்று இருப்பதால், தற்போது அடாவடிகளில் ஈடுபட்டுவருகிற பத்து வீதத்துக்கும் குறைந்த நிலையில் உள்ள இந்த இளைஞர்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரிக்க வாய்ப்புண்டு. இது கைமீறிப்போகிற சந்தர்ப்பங்களில் காவல்துறையினர் அந்த நோய்க்கு முற்றுமுழுதாகச் சிகிச்சையளிக்க முன்வர வேண்டும். இங்கு இவ்விரண்டுமே தலைகீழ் என்பதால், தற்போது இருக்கிற பத்துவீதம் இனிவரும் காலங்களில் அதிகரிக்கவே வாய்ப்புண்டு.

இலங்கையில் வடமாகாண வங்கிகளிலேயே அதிக சேமிப்புப் பணம் இருப்பதாகத் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க புள்ளிவிவர அடிப்படையில் கூறியிருந்தார். இது பெரும்பாலான தமிழ் மக்கள் ஒழுங்கு முறையுடன் வாழ்கின்றனர் என்பதையே காட்டுகிறது. இவ்வகையில் தமிழ்ச் சமூகத்தில் வழிதவறியவர்கள் என்போர் எண்ணிக்கையில் குறைவானவர்களே. ஒரு சைக்கிளுக்கு வழியில்லாமல் நடந்து திரிகிற, ஒரு நேரம்கூட வயிறார உண்ண முடியாத நிலையில் பல இளைஞர்கள் இந்தச் சமூகத்தில் இருக்கத்தான் செய்கிறார்கள். பிழையானவர்களை இனங்கண்டு ஒதுக்கும் திறன் தமிழ்ச் சமூகத்துக்கு இருக்கின்றது. இதன் அர்த்தம் பொரும்பான்மை மக்கள் ஒழுக்கமாக உள்ளனர் என்பதே.

facebook Search Home Profile Inbox Friends Account

அரட்டை
மேரிகிரேஸ் வரதராஜன்

# சிந்தா ஓர் அரட்டை







## வரலாற்றில் பேசப்பட வேண்டுமாம்!

"வரலாறு தனக்குக் கையளித்திருக்கின்ற கடமைகளை யார் உணர்கிறார்களோ, அதை யார் செம்மையாகச் செய்கிறார்களோ அவர்களே வரலாற்றின் பக்கங்களை அலங்கரிக்கிறார்கள்"

இது சீமானுக்குக் கொடி பிடிக்கின்ற ஒரு முகநூல் அரட்டையரின் பதிவு. கம்பீரமான காளையாக மேடையில் சீமான் முழங்கித் தள்ளும் படத்தையும் பதிவேற்றியிருக்கிறார். இவ்வரைப்போன்ற பல புலம்பெயர்ந்த இளைய தலைமுறையினருக்கு, குருதிக் கொதிப்பை ஏற்படுத்துகிற சீமானின் மேடைப் பேச்சுக்களையும், போராட்டங்களையும் தலையில் தூக்கிக் கொண்டாடுவதே முழுநேரப் பணியாக இருக்கிறது. வைகோ, கருணாநிதி மற்றும் தமிழக அரசியல் தலைவர்கள், ஈழத்து அரசியல் தலைவர்களைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடும் கோஷ்டிகள் சமூகத்திலிருப்பதைப்போலவே முகப் புத்தகத்திலும் இருக்கின்றன. இவற்றைத் திருத்த வேண்டிய வேலை மிகப் பெரியது.

அரசியல் புலத்தினர் மாத்திரமல்ல இங்கு சினிமா எடுப்பவர்களும் வராற்றில் பேசப்பட வேண்டும் என்கிற துடிப்புடன்தான் இருக்கிறார்கள். தென்னிந்திய சினிமாவே கேலிக்கூத்தாக இருக்கின்றபோது அதைப் பின்பற்றுகின்ற அற்பத்தையும் உணராமல் வரலாற்றில் பேசப்படுவதற்காக உழைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்றால் பாருங்களேன். பேசப்படவேண்டும், பெயர் நிலைக்கவேண்டும் என்றிருக்கிற மூடங்களை இவர்களிடமிருந்து எப்போது களைவது? படாத பாடுபகிற உள்ளூர்ச் சினிமாக் காரர்களுக்குப் பயிற்சிநெறிகள் மாத்திரமல்ல, படிப்பினைகளும் பல தெளிவுபடுத்தல்களும்தேவை.

## விஜய்க்கு ஏதோ விருதாமே!

ஏதோ ஒரு விருதைத் (சிறந்த நடிகராம்?) தென்னிந்தியத் திரைப்பட நடிகர் விஜய்க்கு வழங்கவிருக்கிறார்கள் என்றும், எங்கோ ஒரு பன்னாட்டுத் திரைப்பட விழாவில் குறித்த விருதுக்கான படம் ஒன்றையும் திரையிடுகிறார்கள் என்றும் முகப் புத்தகத்தில் விஜய் இரசிகர்களின் அரட்டைகள் குரைத்தபடியிருக்கின்றன. அதில் சீமானுக்கும் பெருமை என்று (வசனகர்த்தாவாம்) சீமான் கோஷ்டிகளும் சேர்ந்தே குரைக்கின்றன. பன்னாட்டளவில் விருது வழங்குகின்ற இதில் பல நடிகர்களின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளனவாம். அதில் நடிகர் விஜய்யின் பெயரும் பரிந்துரைக்கப்பட்டுள்ளதாம். பரிந்துரை மாத்திரம்தான். இன்னமும் விருது வழங்கப்படவில்லை. இரசிகர்கள் அளிக்கின்ற வாக்குகளை வைத்துத்தான் குறித்த விருது வழங்கப்படவிருக்கிறதாம். உண்மைத் தன்மை தெரியவில்லை. ஆனால் பாலூற்றி, விசிலடித்துக் கொண்டாடும் இரசிகர்களின் தெரிவு எப்படியிருக்கும் என்று சொல்லவும் வேண்டுமா?

இதுபோன்ற விருதுகளை வழங்குகின்றவர்களாலும், தரங்குறைந்த, மதிப்பீடுகளைச் செய்வதற்குத் தகுதியற்ற, விருதுநர்களாலும்தான் இன்றைக்கு விருதுகளின் நிலை மோசமாகிக் கிடக்கிறது. இந்தியக் கேலிக்கூத்துக்களை நகலெடுக்கின்ற இங்குள்ள கூத்தாளர்கள் பற்றிப் பிறிதொரு வாரத்தில் பேசலாம்!

## சிறுவனின் சாவு

கிளிநொச்சியில் 13வயதுச் சிறுவன் ஒருவனின் துரதிஷ்டமான சாவு குறித்த பத்திரிகைச் செய்திகள் வாசகர்களைக் கவலைக்குள் தள்ளிவிட்டன. மரத்தில் தொங்கிக் கொண்டிருந்த கயிறு கழுத்தை இறுகியதால் அந்தச் சிறுவன் சாவடைந்திருந்தான்.

முகப் புத்தகத்திலும் அது குறித்த இரங்கல்களும், அனுதாபங்களும் கொட்டித்தான் கிடக்கின்றன. அத்துடன் அந்தச் சிறுவனின் உடலத்தை அடக்கம் செய்வதற்குரிய சவப் பெட்டியை வாங்கக்கூட முடியாத நிலையில் அவனின் குடும்பம் இருக்கிறது. ஊர்மக்கள் சேர்ந்து பலகைகளைச் சேர்த்துப் பிணைத்துச் சவப்பெட்டியைத் தயாரித்திருக்கிறார்கள் என்றும் அதுசார்ந்த ஒளிப்படங்களும் பதிவேற்றப்பட்டிருக்கின்றன.

வறுமையிலும், போராட்டங்களிலும் ஒரு சந்ததியே மறைந்துவிட்ட பின்னர், எங்கள் பிரதி நிதிகள் என்னத்தை எங்களுக்குக் கொடுக்கப்போகிறார்கள்? என்றும் கேள்விகள் தொடுக்கப்பட்டிருக்கின்றன.

எத்தனையோ பிரச்சினைகள் இங்கிருக்கின்றன. தலையெடுக்கின்ற பிரச்சினைகளைப் பதிவேற்றிக் கடந்துவிடுவதே முகப்புத்த அரட்டையர்களின் பொழுதுபோக்கு. முற்றுமுழுதாகப் பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வழிவகைஅவர்களுக்குத்தெரியவில்லை. ஆனால், எதையும் அரசியலாக்கிவிடும் கைங்காரியத்தை மட்டும் தயக்கமின்றிச் செய்துவிடுகிறார்கள்.

## வயிற்றிலடிக்கும் பிழைப்பு



பிளாஸ்ரிக் அரிசி, பிளாஸ்ரிக் முட்டை என்று கலக்கிய பிளாஸ்ரிக்பூதம்போய் இப்போது போலிப் பருப்பு வந்திறங்கியிருக்கிறதாம்! நெல் அரிசிச் சோற்றைப் போன்றே எம்மவர்கள் மத்தியில் முக்கிய இடத்தை வகிப்பது பருப்புக் கறி. அச்சு அசலாகப் பருப்பைப்போன்ற தோற்றத்தில் நிறமூட்டப்பட்டதாக இந்தப்போலிப் பருப்பும் இருக்கிறதாம். மஞ்சள் பருப்பா? சிவப்புப் பருப்பா? 'எனத் தெரியவில்லை. எதுவாகிலும் அவதானமாக இருங்கள். புழுக்கள் இருப்பதாகரின் மீனும் வற்றிப்போய்விட்டது. அங்கே ஓரிடத்தில் சீனியில் யூரியாவைக் கலந்திருக்கிறார்கள் என்றும் செய்திகள்... என்னதான் நடக்கிறதோ இந்த நாட்டில்...





### நண்பர்களே! முடிந்தவரை உதவிக்கரங்கள் கொடுங்கள்!

" 'ஹெய்ட்டி' என்ற நாட்டில் பஞ்சத்தால் ஏற்பட்ட பட்டினியால் உண்பதற்கு உணவு இல்லாமல் மக்கள் தவிக்கிறார்கள். ஆகவே மண்ணைப் பதப்படுத்தி எடுத்து ரொட்டிகள் தயாரித்துச் சாப்பிடுகிறார்கள். அவர்களுக்கு ஒரு பருக்கை சோறு என்றாலும் அமிர்தம் தான். முடிந்தவரை பகிருங்கள்" என்று குறிப்பிட்டு காணொலிப் பதிவுகள் பலரது முகப் புத்தகப் பக்கங்களிலும் ஜொலிக்கின்றன.

# மாற்றம் நல்லாதாயிருக்கும்....

அறிக்கை

கதிரேசன் காத்தவராயன்

கறுப்பு ஜுலையின் நினைவுகளைப் பல தரப்புக்களும் தூசுதட்டித் தங்கடை தங்கடை தரப்பின்ரை வெப்பியாரங்களைப் பொழிஞ்சு தள்ளி ஆறியிருக்க முன்னம் சனவரியிலை மாகாணசபையளுக்கான தேர்தல் எண்டிற கதை வந்திருக்கல்லே? கூட்டுகள், உடைவுகள், பிளவுகள், சேர்க்கையள், அது இது எண்டு கூத்துகளுக்குக் குறையில்லாமல் நம்மடை அரசியல்வாதிகள் ஏதாவது ஒண்டைச் செய்துகொண்டிருக்கிறது எல்லாமே பேப்பர்காரர், பேஸ்புக்காறர் எல்லாருக்கும் கொண்டாட்டம் தானே என்ன?

அரசியலுக்கை போறதில்லை எண்டு எவ்வளவுதான் உறுதியா நிண்டாலும் ஏலாமல் கிடக்குது..! அரசியல் குழப்பங்கள் நன்மையிலை முடியிறது வலு அருமை. அதிலை ஒண்டுதான் வடக்கு அமைச்சர்கள் மாற்றம் எண்டு எங்கட சின்னத்தம்பியப்பான்ர மோன், வாத்திப் பெடி சந்தோசப் பட்டுச் சொல்லிச்சுது. அதிலையும் கல்வியமைச்சரின்ரை நடமாடும் சேவையைப் பற்றி ஒரு நல்ல கவனிப்பு வாத்திமாருக்குள்ள ஏற்பட்டிருக்குதாம் எண்டும் சொல்லிப் புழுகமாயிருந்தான் பெடியன். ஏன்ன ஏதெண்டு கேப்பமெண்டு போனன். ஆள் ரியூட்டறிக்குப் போட்டுது. தேப்பன்காறன் தான் நிண்டார். ஆனால், அந்தாள் கனவிசயத்தைச் சொல்லிச்சுது. வாத்திமாரின்ர பைலுகள் அப்பிடி அப்பிடியே வருசக்கணக்காக் கிடந்ததாம்! ஒண்டும் செய்யிறதில்லையாம்! செய்யுங்கோ எண்டு ஆராலும் கேட்டால் மாட்டமெண்டு ஒருநாளும் சொல்லுறதில்லையாம். செய்யிறதும் இல்லையாம். அங்கை இருக்கிற கிளாக்மார் அதிகாரியளுக்குப் பயப்படுகிறதோ, மதிக்கிறதோ இல்லையாம். ஏனெண்டால் அவையின்ர சமாளிபிக்கேசன் வேலையள்.. ஓட்டுமாட்டு வேலையள் எல்லாத்தையும் செய்யிறதுக்குக் கிளாக்மாரைத்தானமே பாவிக்கிறவை.

• • • •

குஞ்சாச்சி சொல்லுற பழமொழி, 'நக்கினார் நாவிழந்தார்' எண்டது அதுதான்போலை. அதனால்தான் பாருங்கோ? அமைச்சர் தன்னட்ட முறைப்பாடு செய்யுங்கோ எண்டு வாத்திமாருக்கு அறிவிச்சதை வழக்கம் மாதிரி அன்றைய



நாள்பலனாகப் பாத்த ஆக்களிலை கல்வியதிகாரியளும் கிளாக்மாரும்தான் கூடவாம். ஆனால் நடவடிக்கை தொடங்கி ஆக்களுக்கு முன்னாலை கிளாக்மாரையும் அதிகாரியளையும் அமைச்சர் கேள்வி கேட்க வெளிக்கிட முதல்ல அம்பிட்ட திணைக்களங்கள்போக மற்றவை உசாராகி, இராப்பகலா ஏதேதோ பண்ணி, அமைச்சர் வந்தநேரம் தப்புறதுக்காக வேலை செய்திருக்கினை!

தபால்காறர் ஒவ்வொரு பள்ளிக்கூடத்துக்கும் வண்டில் கட்டித்தானாம் லெற்றருகளைக் கொண்டு போனவை எண்டு மருதலிங்கம் மாஸ்ரர் கோயிலடியிலை நிண்டு சொல்லிக்கொண்டு நிண்டவர். "உங்கட பதவி உயர்வுக்குச் சிபாரிசு செய்திருக்கிறம், உங்கட சம்பள மீதியைச் சரிப்படுத்தியாச்சு" எண்டு கடிதங்களைக் கண்டதும், அமைச்சர் இப்பிடியொரு நடமாடும் சேவையைச் செய்யிறார் எண்டு அறிஞ்சிராத கனபேருக்குச் சொக்காப் போச்சுதாம்.

• • • •



வாத்திமாரை உறுட்டிப் பழகின பழக்கத்திலை உறுட்ட வெளிக்கிட்டு வாங்கிக்கட்டின கிளாக்மாரும் இருக்கினமெண்டு பியோன் ராஜன் இரகசியமாக் கதைச்சவன். அவன் மூக்கை இழுத்து, உறுஞ்சிக்கொண்டு நிண்டான், நாள்ப்பட்ட பைலுகளைத் தட்டித் துடைச்சதிலை தூசு மூக்குக்கை ஏறிவிட்டுது எண்டு சொல்லிப் புறுபுறுத்தான்.

இதிலை இருக்கிற இன்னொரு பகிடி என்னண்டா, கன அதிகாரிமார் தங்கட பணியாளருகளைப் பற்றி இப்பதான் அறிஞ்சிருக்கினை, பிறகு அவைக்கு விசேசமான பயிற்சியள் குடுக்கவேண்டியிருக்கு எண்டும் சொல்லியிருக்கினமாம். அதாலை அவையைப் பற்றின சூடான செய்தியள் அடுத்தடுத்த கிழமையளில வருமெண்டு எதிர்பாக்கிறதாய் கருணை அதிபர் சொன்னதிலை உட்புதைஞ்சு நிறையக் கதையள் இருக்கும்போலை.

எல்லாரும் வாத்திமாரை இளக்காரமாப் பாக்கிற நிலையிலை அதுகளையும் உயிருள்ள சீவனுகளாய் மதிச்சுக் கல்வி அமைச்சர் எடுத்த நடவடிக்கை மாதிரி மற்றமற்ற அமைச்சர்மாரும் எடுக்கலாமல்லே? இதை முதலமைச்சரும் ஊக்கப்படுத்தலாமல்லே? அடுத்த தேர்தல் அந்தா இந்தாவெண்டல்லே காலுக்கை வந்துட்டுது. ஒண்டும் செய்யேல்லை எண்டு மாகாணசபை மீது இருக்கிற அப்பட்டமான குற்றச்சாட்டை ஓரளவுக்காவது நீத்துப்போகச் செய்யக்கூடிய வகையில செய்யக்கூடிய வேலையல்லே இது? என்ன இருந்தாலும், இடைக்கிடை நன்மையளும் நடக்குது எண்டது ஆறுதலாயிருக்கல்லே?

“ கன அதிகாரிமார் தங்கட பணியாளருகளைப் பற்றி இப்பதான் அறிஞ்சிருக்கினை, பிறகு அவைக்கு விசேசமான பயிற்சியள் குடுக்கவேண்டியிருக்கு எண்டும் சொல்லியிருக்கினமாம். அதாலை அவையைப் பற்றின சூடான செய்தியள் அடுத்தடுத்த கிழமையளில வருமெண்டு எதிர்பாக்கிறதாய் கருணை அதிபர் சொன்னதிலை உட்புதைஞ்சு நிறையக் கதையள் இருக்கும்போலை. ”

கவிதைகள்

பாலாஜினி



## காலமாற்றம்

கொலையுதிர் காலம்போலும்
கோபத் தீ நாக்குகளால்
பூமி கொதித்தபடியே
இருக்கின்றது

ஆதி வாழ்க்கை
முடிக்கப்பட்டே விட்டது
பெரும் ஆரவாரங்கள்
வான் நாணும் கட்டடங்கள்
வாசலற்ற வீடுகள்
அமில மழைத் தூறல்கள்
இவை
இன்றைக்கு முகவரிகள்

பூமி போதாமலே போய்விட்டது
என் தோள்களும்
எண்ணி வைக்கப்பட்டிருக்கின்றன
எரிக்கப்படுவதற்கு
போர் அது காலவடு
அசுத்த நீர் அது
இன்றைய வாடிக்கை

பட்டங்களும் படிப்புகளும்
பிரம்மஸ்தானம் வழங்கிடுமா?
இல்லை பிறப்புக் கொள்கையை
மாற்றிப் போட்டிடுமா?

புத்தி இல்லாதவர்கள்தான்
இன்றைய மனிதர்கள்
கொலைகள் இவர்கட்டு
பிறப்பென்ற நினைப்புகள் ■

## பதிலில்லாக் கேள்வி

நீலவானம் கீழே
நீண்டதொரு தூரம்
எனக்கான பாதையில்
ஏராளம் வரவேற்புகள்
விட்டு விட்டுத்
தொட்டுத் தொட்டே
விளையாடிப் பார்க்கின்றன

புன்னகைகள் இன்னமும்
புரிந்திடாத புரிதல்கள்
பிரிந்திடும் பொழுதினிலே
நெருடிடும் நினைவுகள்
எட்டி வந்து எனையிழுத்து
கட்டி நின்று சிரிக்கின்றன
முடியவேயில்லை
என் மூச்சு வரை உறவுகள்
முத்தமிட்டுச் சிரிக்கின்றன

புரிந்து கொள்ள முடியவில்லை
இறந்த பின்னும் இவை
தொடர்ந்திடுமா என்னை...? ■



கவிதைகள்

விவேகானந்தனூர் சதீஸ்

## சோற்றுக்குப் போனவன்

மரத்தில் சாத்தப்பட்ட
சைக்கிள்
ஒற்றைப் பட்டி அறுந்த
ஒரு கால் செருப்பு

உதிர்ந்து கிடக்கிறது
பொறுக்கி எடுக்க
முடியாதபடி
பையிலிருந்த சோற்றுப்பொதி

அலரி மரத்தடியில் கிடக்கிறது
ஓர் இளைஞனின்
அடையாள அட்டை

பசி வந்துவிட்ட பின்பும்
சோற்றுக்குப் போனவன்
வரவேயில்லை

தூரத்தில்
வெள்ளை வான் ஒன்று
வேகமாய் மறைகிறது...!

## 2009க்குப் பின்....



2010ஆம் ஆண்டிலிருந்து
பாசத்துக்குப் பழக்கப்படுகின்ற
பண்பற்ற எண்ணத்தை
படுகுழியில் தள்ளிவிட்டேன்...

அவர்களுக்கு எப்படி
அறிய வைப்பதென்று தெரியவில்லை
அடிமைச் சிறையிலிருக்கும் எனக்கு...

பாசத்துக்குப் பழக்கப்படுகின்ற
பண்பற்ற எண்ணத்தை
அவர்களும் அழித்துவிட வேண்டும் என்று...!

## எதைத் திருப்பித் தருவாய்...

சிறையிலிருக்கும் எனக்கு
சிதையாத எதைத் திருப்பித் தருவாய்?

கதையளந்து திரிந்த
கிளுவைவேலி ஒழுங்கைகளையா?
கிரவல் பாதைகளையா?



காதல் மொழி வரைந்த
கடதாசித் தாள்களையா?
காகித ஓடங்களையா?

போராளிப் பொடியளுக்கு
பால் தேநீர் கொடுத்த
பசுமை நினைவுகளையா?

ஊர்த் தெருவில்
ஒய்யாரப் பயணித்த
மண்ணெண்ணை
உந்துருளியை
மறுபடி தருவாயா?

ஒன்றும் வேண்டாம்
அயர்ந்து தூங்கும் அவர்களின்
அமைதிப் பூங்காவையேனும்
அப்படியே தருவாயா?

# இருக்கு ஆனா இல்லை...!



சிரிப்பு

செ.செல்வராஜா

பரமசிவத்தின்கதைகள் பற்றிப் பல விமர்சனங்கள் உள்ளன.

"உமக்குப் 'பம்பலான' கதைகள் இலாவகமாகவரும்" என்று சொல்லிவைத்தார் நண்பர் டேவிட்.

"இவரது கதைகளில் யதார்த்தம் இல்லை" என்று சொல்லி வைத்தார் மகேந்திரன்.

"ஒண்டுமில்லாததை வைத்தே கதைபண்ணிவிடுவார் பரமசிவம்" என்று தாசன் அடிக்கடி கூறுவார்.

சுப்பர் ஸ்ரார் ரஜினிகாந்தின் 'காலா' அரசியல் படமல்ல. ஆனால், காலாவில் அரசியல் இருக்கு... என ரஜினி ஸ்ரைலில் "எனது கதையில் ஒண்டுமில்லை. ஆனால் பல விடயங்கள் இருக்கு" என ஒரு 'பஞ்ச்' வசனம் பேசிவிடுவார் பரமசிவம். இதில் ஒன்றும் குறைச்சல் இல்லை. அண்மையில் அவர் கூறிய கதையில் என்ன இருக்கிறது என நானும் தேடு தேடென்று தேடித்தான் பார்த்தேன். அதில் ஒன்றுமில்லை. ஆனால் ஏதோ இருக்கிற மாதிரியும் இருக்குது. அது அவரரவர் அனுபவத்தைப் பொறுத்தது போல.

◢ ◢ ◢

அல்வாயில் செல்லக் குட்டியப்பாவின் மகன் பொன்னுத்துரை இறந்தவிட்டதாகப் பெறாமகள் 'போன்' பண்ணியிருந்தார். அதற்குக் குடும்பமாகப் போக வேண்டும் எனப் பரமசிவம் மனைவியிடம் கூறினார்.

"எனக்கு அவையைத் தெரியாது" என்றார் அவர் மனைவி.

"ஐயோ! அப்பா! அவர் செல்லக் குட்டியப்பாதான் சின்னனிலை என்னை மார்பிலும் தோளிலும் சுமந்து உந்த வடமராட்சியைச் சுத்திக்காட்டின ஆள். கிணத்தடியிலை கொண்டுபோய்க் குளிக்க வார்ப்பார். அது இது வாங்கித் தருவார். எங்கடை அம்மாவின்ரை தாய் மாமன் அவர்" என்று கூறி முடித்தார் பரமசிவம்.



"முந்தி அந்தக் குணத்தார் சாகேக்கை அவரும் அவற்றை மனிசியும்தான் உங்களைத் தாலாட்டிச் சீராட்டி வளர்த்ததாகச் சொன்னீங்கள்? பிறகு ஆனந்தர் சாகேக்கையும் அவரும் அவற்றை பெண்சாதி சின்னப் பவுணும்தூக்கிவளர்த்ததெண்டு சொன்னீங்கள்? இப்ப செல்லக்குட்டியப்பா தூக்கி வளர்த்ததெண்டு சொல்லுறியள்? எனக்கு ஒண்டுமா விளங்கேல்லை" என அங்கலாய்த்தார் மிஸ்ஸிஸ் பரமசிவம்.

"அது அப்பா. அப்ப சபாபதியற்றை பிள்ளைகள், சகோதரங்கள் ஒரே வளவுக்கை வீடுகள் கட்டி, கூட்டுக் குடும்பமாக வாழந்தவை. பிறகு தனி வீடுகட்டிக் கொஞ்சம் தள்ளியிருந்தவை எண்டாலும், ஒரு நாளைக்கு ஒருதரமெண்டாலும் இந்த மெயின் வீட்டுக்கு வந்துதான் போவினம் அது அப்பத்தைய வாழ்க்கை முறை. ஒரு வீட்டிலை சமையல் லேற்றாகும் எண்டால், மற்ற வீட்டிலை போய்ச் சாப்பிட்டுட்டு ஓடலாம். எல்லாற்றை கண்காணிப்பிலையும் ஒவ்வொருவரும் ஆரோக்கியமான வாழ்வு வாழந்தவை.. இப்பவல்லோ கூடப் பிறந்ததுகளும் நான் யாரோ, அவர் யாரோ என்று வாழுதுகள்' என விளக்கினார் பரமசிவம்.

அந்த வகையில் குணம் குடும்பம் எங்களை வளர்த்ததும் உண்மைதான். ஆனந்தி குடும்பம் வளர்த்ததும் உண்மைதான் என உண்மை விளம்பி விட்டார் பரமசிவம். உண்மை விளம்பியான பணங்கள் அவரின் உடலுள் சென்று இடம் பிடித்துக்கொண்டமை அவரது நாக்குளறலில் தென்பட்டது.

◢ ◢ ◢

அங்கு சாவு வீட்டுக்குச் சென்று பார்த்தால், ஒரு நாளும் காணாத பலரும் (உரித்து உறவுகள்தான்) வந்திருந்தனர். அவலம் என்னவென்றால் அவர்களில் ஒருவரை ஒருவுர் அன்றுதான் சந்தித்தமையால், அதற்கு ஓர் அறிமுகவாளர், ஆளையாள் அறிமுகப்படுத்துவதற்கு இடைத்தரகராகச் செயற்படவேண்டியிருந்தது.

"இவர்தான் சாம்பசிவம். இறந்தவரின் ஒன்றுவிட்ட சகோர்தரர்" எனப் பரமசிவத்துக்கு ஒருவரை அறிமுகப்படுத்தினர். செல்லக் குட்டியப்பா சுமந்து சென்றவேளை பரமசிவம் அவரைக் கண்டிருக்கிறார். அவரில் பெரிய மாற்றமில்லை. ஆனால் பரமசிவம் சிறு குஞ்சாகவிருந்து பெரிய ஆளாக மாறியபின் அவரை அடையாளம் காண்பவர்கள் குறைவு. அதை வைத்தே பல தாமாஷ்கள் செய்துவிடுவார். அவருக்கு அதிலோர் இன்பம்.

இப்படித்தான் ஒரு முறை 'ஏ.சி பஸ்ஸில்' யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு சென்றவேளை பக்கத்துச் சீற்றிலிருந்த ஒருவர் மீது பரசிவம் நித்திரையில் அடிக்கடி சரிந்து விழுந்தார். அருகிலிருந்தவர், அசூசைப்பட்டு, ஒதுங்கியிருப்பதும், இவரைத் தள்ளி விடுவதுமாக நித்திரையின்றி அந்த இரவுப் பயணத்தைத் தொடர்ந்தார். நடு வழியில "என்ன ஐசே! சேட் எல்லாம் எண்ணை பிரட்டுகிறீர்? விடிய வெள்ளண நான் ஒவ்பீஸ் போக வேணும்" என்று எச்சரிக்கைத் தொனியில் குறிப்பிட்டார் பக்கத்துச் சீற்காரர். ஆனாலும் பரமசிவம் விக்கிரமாதித்தன் கணக்காக மீண்டும், மீண்டும் தூக்கத்தில் சரிந்து அவர் உடுப்புக்களை வண்ணமயமாக்கி, மன்னிக்கவும் எண்ணைமயமாக்கிக் கொண்டிருந்தார்.

◢ ◢ ◢

பஸ் கொழும்பை நெருங்கிக்கொண்டிருந்தது. மழைவேறு பெய்துகொண்டிருந்தது. கொட்டாஞ்சேனையில் இறங்க ஆயத்தப்படுத்திய பரமசிவம், அந்தப் பக்கத்துச் சீற்றிலிருந்தவரைப் ப்ார்த்து, "நான் இதிலை இறங்கப்போறேன் குஞ்சிஐயா" என்றார்.

பக்கத்துச் சீற்காரர் "என்ன குஞ்சி ஐயாவோ? யார் நீர்?" என்று சிறிது கோபமாகவும் சந்தேகமாகவும் கேட்டார்.

"நான் மடத்தடிச் செல்லத்தின்ரை மகன்" என்றார் பரமசிவம்.

"எட எங்கடை செல்லத்தி மச்சாளின்ர மகனே? யார் சின்னக்கிளியோ?" என்று கேட்டார் அந்த பக்கத்து சீற்காரர்.

"இல்லை, நான் அவற்றை தம்பியார் மூன்றாவது..."

"அப்ப ஏன் இவ்வளவு நேரமும் சொல்லேல்லை?" என்று அவர் கேட்கவும், கொட்டாஞ்சேனையில் பரமசிவம் இறங்க வேண்டிய இடம்வரவும் சரியாக இருக்கவே, அந்தரப்பட்டு இறங்கிச் சென்றார் பரமசிவம். அந்தப் பக்கத்துச் சீற்காரர்தான் இன்று இறந்தவரின் ஒன்றுவிட்ட சகோதரர் சாம்பசிவம்.

அறிமுகப்படுத்தப்படும்போது பரமசிவத்துக்கு அந்தப் பஸ் பயணம் மீண்டும் ஞாபகத்தில் வந்தது.

# மறையாத நன்மை

சிறுகதை

தாவடியூர் சுபப்பிரியன்

> "வீட்டுவாசலில் நின்ற சங்கரதாஸின் அண்ணன், "இவ்வளவு நேரமும் எங்க போனனீ?" என்றான் கோபத்தோடு. சங்கரதாஸ் அதைக் கண்டு கொள்ளாது வீட்டுக்குள் செல்ல எத்தனிக்க, "நில்லு எங்க போனீ? என்று கேட்டால் நீ உன்பாட்டுக்கு வீட்டுக்கை போறாய்" என்று கறுமினான். தன்னைத் திடப்படுத்திக்கொண்ட சங்கரதாஸ் "மாரியப்பனின் செத்த வீட்டுக்குப் போன்னான்" எனப் பதிலுரைத்தான். "சரி இந்த நேரத்தில தோயக்கூடாது எண்டு சொல்றவையள். இண்டைக்கு மட்டும் திண்ணையில படு" என்றான் முடிவாக."

அது மாறிக்கொண்டு வரும் ஒருபாடம். அந்தப் பாடத்தைச் சங்கரதாஸ் கடமைக்காக அன்று மட்டும், அவ்வாறு கற்பித்துக் கொண்டிருந்தான். அவன் அன்று பாடத்தில் லயிக்கவில்லை என மாணவர்களுக்குப் புலனாயிற்று. ஏனெனில் வழமையாக அவன் ஓர் அரசனைப் பற்றிய கதை சொன்னாலேயே அந்த விடயப்பரப்புக்குள் ஆழமாக ஊடுருவித் தெளிவுபடுத்திக் கொண்டிருப்பான். அத்துடன் அவன் நகைச் சுவையுணர்வு சொட்டச் சொட்ட விளங்கப்படுத்துகிறபோது மாணவர்கள் விழுந்து விழுந்து சிரிப்பார்கள். அவன் ஒரு வரலாற்றுப் பாட ஆசிரியர் மட்டுமல்ல சிறந்த நகைச்சுவையாளனும்கூட.

சங்கரதாஸைப் பற்றிச் சொல்வதானால், இவன் வாழ்வது ஒரு பின் தங்கிய கிராமம். அங்கு அவ்வளவாக வசதிகள் இல்லை. தண்ணீருக்குத் தட்டுப்பாடு, போக்குவரத்தும் அப்படி இப்படி, வீதிகள் அல்லோல கல்லோலம், மின் வசதிகளும் இல்லை என அடுக்கிக் கொண்டே போகலாம். அத்தகைய கிராமத்திலிருந்து கற்று ஆசிரியரானவன்தான் சங்கரதாஸ்.

⊙⊙⊙⊙⊙



இன்று அவனைச் சோர்வடைய வைத்த சம்பவம் யாதெனில், இவனுக்கு வேலை பெற்றுக்கொடுத்த முதியவர் மாரியப்பன் இறந்துவிட்டமைதான். அடக் கடவுளே! பிறப்பும், இறப்பும் தவிர்க்க முடியாதவை தான். இறப்பு என்பது இன்று நடந்தால் என்ன? நாளை நடந்தால் என்ன? என்ற கேள்விகளுக்கு விடை காண முடியாவண்ணம் அமைந்திருந்தது முதியவர் மாரியப்பனின் வாழ்க்கை.

அன்றொரு நாள் மாரியப்பனின் நண்பன் முத்து, தாகத்தின் காரணமாக உலகிலிருந்து விடைபெற்றான். தண்ணீரில்லாத அந்த் ஊரில் அன்று மாரியப்பன் எடுத்த முடிவுகளின் விளைவுதான் அவனுடைய வீட்டுக் கிணறும் அதன் மூலம் வாழும் ஊர்மக்களும், விலங்குகளும். இவ்வாறாகச் சங்கரதாஸின் மனதினுள் மாரியப்பனின் இன்னும் இதர சேவைகள் குறும்படமாக ஓடிக்கொண்டிருந்தன. அதேவேளை மாணவன் ஒருவன் பாடப்புத்தகத்தை உரத்து வாசித்துக் கொண்டிருந்தான். சங்கரதாஸின் துயரச் சிந்தனைகள் சிதறின. அதிபரின் கண்டிப்பான உத்தரவு காரணமாகச் சங்கரதாஸால் மாரியப்பனின் சாவு வீட்டுக்குச் செல்ல முடியவில்லை. இருந்தாலும் பாடசாலைநேரம் முடிவடைந்தவுடன் சாவு வீட்டுக்குச் செல்லத் தீர்மானித்து இருந்தான். அதுவரையில் அவனுடைய மனம் ஒரு நிலைப் பட்டிருக்கவில்லை. பாடசாலை முடிந்தவுடன் வீடு திரும்பியவன், அவசர அவசரமாகச் சாவு வீட்டுக்குச் சென்றான்.

குறிப்பிட்டளவான தொகையினரால் சாவு வீடு வெறிச்சோடிப்போய்க் கிடந்தது. மாரியப்பனின் உடலத்துக்கு முன்பாகத் தலைகுனிந்து வணக்கம் செலுத்தினான். மாரியப்பனின் மனைவி கதறிக் கதறி அழுது நிலைகுலைந்து ஓய்ந்தாள். ஒரு கதிரையில் போய் மிகுந்த கவலையுடன் அமர்ந்தான் சங்கரதாஸ். அவ்விடம் வந்த மாரியப்பனின் மனைவி, "மோனே! நாளைக்குத்தான் எடுக்கிறது. நீ கொஞ்சம் உதவியாய் நில் தம்பி" எனக் கரகரத்த குரலில் கூறிச் சென்றாள். அந்தச் சாவு வீட்டில் ஆள்கள் குறைந்திருந்த நிலையைச் சங்கரதாஸால் உணர முடிந்தது. ஆனால், அவனால் பதில் கூறமுடியவில்லை. ஏனெனில் மறுநாள் அவனுடைய பாடசாலைக்குக் கல்வியதிகாரிகள் வந்து பாடசாலையின் கல்வி நடவடிக்கைகளைச் சோதனை செய்ய உள்ளனர். அதனால் விடுமுறை கோர முடியாது. இந்த நிலையில் அவன் என்ன செய்வது?

சிந்தித்தவாறே வீட்டை நோக்கி நடந்தான்.

⊙⊙⊙⊙⊙

சற்று நேரத்தில் வீட்டையடைந்தான்.

வீட்டுவாசலில் நின்ற சங்கரதாஸின் அண்ணன், "இவ்வளவு நேரமும் எங்க போனனீ?" என்றான் கோபத்தோடு. சங்கரதாஸ் அதைக் கண்டு கொள்ளாது வீட்டுக்குள் செல்ல எத்தனிக்க, "நில்லு எங்க போனீ? என்று கேட்டால் நீ உன்பாட்டுக்கு வீட்டுக்கை போறாய்" என்று கறுமினான். தன்னைத் திடப்படுத்திக்கொண்ட சங்கரதாஸ் "மாரியப்பனின் செத்த வீட்டுக்குப் போன்னான்" எனப் பதிலுரைத்தான். "சரி இந்த நேரத்தில தோயக்கூடாது எண்டு சொல்லுறவையள். இண்டைக்கு மட்டும் திண்ணையில படு" என்றான் முடிவாக.

திண்ணையில் படுத்துக்கொண்ட அவனைச் "சாப்பிட்டியா" என உள்ளே சென்ற அண்ணன் சத்தமாகக் கேட்க, "ஓ.... சாப்பிட்டன் கொஞ்சத் தண்ணி தாங்கோ அண்ணா" என்றான் சங்கரதாஸ். அண்ணன் ஒரு செம்பு நிறைய நீரைக் கொண்டு வந்து கொடுக்கும்போது சங்கரதாஸ் சிரித்துவிட்டு "அண்ணா! தோயாமல் வீட்டுக்க போகக்கூடாது எண்டெல்லாம் சொல்லுறியள் ஆனால், மாரியப்பன் வீட்டுக் கிணத்துத் தண்ணியைக் கொண்டு வந்து தாறியள்! சரி எப்படியிருந்தாலும் மாரியப்பனின்ர முப்பத்தியொண்டு முடியும் மட்டும் துடக்குத்தான்" என்றான். அண்ணனுக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. ஏனெனில் அவர்களுடைய கிராமத்தில் மாரியப்பன் வீட்டில் மட்டும்தான் கிணறு இருந்தது. அதனால் மாரியப்பனின் இறப்பு அந்த ஊருக்கே துடக்கை உருவாக்கிற்று. அண்ணன் மௌனமாகப் படுக்கைக்குச் சென்றான். சிறிது நேரத்தின்பின் "தம்பி! உள்ளே வந்து படு" என்றான். அதன் பின்பு அவனும் தூங்கிவிட்டான்.

⊙⊙⊙⊙⊙⊙

மறுநாள் பொழுது புலர்ந்தது. சங்கரதாஸ் அறக்கப் பறக்கப் பாடசாலைக்குத் தயாரானான். அண்ணனின் சைக்கிளின் துணையோடு பாடசாலை சென்றடைந்தான். அங்கு அவனுக்கு ஓர் இன்ப அதிர்ச்சி காத்திருந்தது. ஆம்! பாடசாலைக் கொடி அரைக் கம்பத்தில் பறந்து கொண்டிருந்தது. அறிவைப் போதிக்கின்ற அந்தக் கலைக்கோவிலின் வாசலிலே "பாடசாலை நிறுவுநர் உயர் திரு செ. மாரியப்பன் இறைபாதமடைந்ததால் இன்று பாடசாலைக்குத் துக்க தினமாக விடுமுறையளிக்கப்படுகிறது" என்ற தகவலைத் தன்மேல் தாங்கிய பலகை ஒன்று தொங்கிக் கொண்டிருந்தது.

தூண்டிலில் சிக்கிய மீன் மீண்டு குளத்தினுள் பாய்ந்ததுபோல சங்கரதாஸ் மாரியப்பனின் வீடு நோக்கி விரைந்தான். அங்கே மாரியப்பன் வழமையாக அன்றாடம் விலங்குகளுக்கு நீர் இறைக்கின்ற தொட்டியைப் பார்த்தபடி நான்கு மாடுகள் கத்திக் கொண்டு நின்றன.

உள்ளே சென்ற சங்கரதாஸ் மாரியப்பனின் வீட்டிலிருந்து நீரைக் கொண்டுவந்து தொட்டிக்குள் ஊற்றிவிட்டுச் சடங்கு விடயங்களைக் கவனிப்பதற்கு வீட்டுக்குள் விரைந்தான். அங்கு அவன் கண்ட காட்சி அவனைக் கவலை கொள்ளச் செய்தது. ஊருக்கே நீருற்றிய வருணனின் (மாரியப்பனின்) இறுதிச் சடங்குக்குச் சிலரே நின்றிருந்தனர். அவ்வேளை அங்கு வந்த மாரியப்பனின் மனைவி "தம்பி தூக்குறதுக்கு நீ என்ர பிள்ளையளோட நில்லப்பு" என்றாள்.

அவனின் விழியோரம் நீர் கசிய நிமிர்ந்து கடிகாரத்தைப் பார்த்தான். நேரம் உச்சமாகிக் கொண்டிருந்தது. இப்போது ஓரளவு சனம் கூடியிருந்தது. "ஐயர் ஒரு மணிக்குத்தானாம் வருவார்" எனச் சனம் பரவலாகப் பேசிக்கொண்டிருந்தது. மணி முள் இலக்கம் ஒன்றைத்தட்டுகையில் ஐயர் வந்தார். சடங்குகளெல்லாம் முடிந்தன. அவ்வேளை சங்கரதாஸ் மாரியப்பனின் உடலத்தைத் தூக்க ஓடிவந்தான்.

ஆனால், அவ்விடத்தில் சவப்பெட்டி உயர்ந்து தெரிந்தது. சனக்கூட்டத்தை விலக்கிவிட்டுத் தானும் ஒரு கையில் தாங்கலாம் எனப் பெரியளவு முயற்சியில் ஈடுபடுகிறான். முடிவில் அவனது முயற்சிகள் தோற்கின்றன. தோல்வியை நினைத்து அவன் ஆனந்தக் கண்ணீர் வடிக்கிறான். மாரியப்பன் அவன் மனதுள் நிமிர்ந்து நிற்கிறார்.

■

கட்டுரை

ந.லோகதயாளன்

# எல்லை மீறுகின்ற இந்திய மீனவர் பிரச்சினை

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி ஊடுருவி மீன்பிடியில் ஈடுபடுகின்ற இந்திய மீனவர்களுக்கான தண்டனைச் சட்டம் இறுக்கப்பட்டுள்ளதா? அல்லது அவர்களுக்கான தண்டனை குறைக்கப்பட்டுள்ளதா? எல்லை மீறி மீன் படியில் ஈடுபடுகின்ற இந்திய மீனவர்களுக்கான தண்டனைகள், சட்டங்களின் தற்போதைய நிலை என்ன? என உள்ளூர் மீனவர்கள் எழுப்பும் கேள்விகளுக்கு விடை தேடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களைக் கடற்படையினர் கைது செய்தால், எந்த மாவட்ட எல்லைக்குட்பட்ட கடற்பரப்புக்குள் கைது செய்யப்படுகின்றார்களோ, அந்த மாவட்டத்துக்குப் பொறுப்பான நீரியல் வளத்திணைக்களத்தினரிடம் அவர்களைக் கையளிப்பர். கையளிக்கப்பட்டவர்களைக் குறித்த நீரியல் வளத் திணைக்களத்தினர், அந்த மாவட்டத்தின் பிரதேச நீதிமன்ற எல்லைப் பரப்பைக் கணக்கில் எடுத்து அதற்குரிய 'பீ' அறிக்கை மூலம் அந்தப் பகுதிக்குப் பொறுப்பான நீதிவான் நீதிமன்றில் முற்படுத்துவர். முற்படுத்தியதன் பிறகு சட்டமா அதிபர் திணைக்களத்தினர் குற்றப் பத்திரத்தைத் தாக்கல் செய்யவேண்டும். அதுவரை கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்று விளக்கமறியலில் வைத்திருக்கும். 2011ஆம் ஆண்டிலிருந்து 2018ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் வரையில், இத்தகைய நடவடிக்கையே செயல் வடிவம் பெற்றிருந்தது.



இந்திய மீனவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கும் அளவுக்கு மில்லியன் கணக்கிலோ அல்லது இலட்சக் கணக்கிலோ தண்டப்பணம் அறவிட வேண்டும் என்பதாக எமது கோரிக்கை அமையாது. குறைந்தது 50ஆயிரம் ரூபா முதல் தடவையாகக் குற்றப் பணம் விதிக்கும்போது அத்துமீறிய அவர்களின் ஊடுருவலும் தடுக்கப்படும்.

**கைதின் பின்னரான நீதிமன்ற நிலவரம்**

மேலே குறிப்பிட்டதுபோல கைதாகியவர்களை நீதிமன்றில் முற்படுத்திய சந்தர்ப்பங்களில் 1979ஆம் ஆண்டின் 59ஆம் இலக்கச் சட்டத்தின் கீழேயே 'பீ' அறிக்கை நீதிமன்றில் முன்வைக்கப்படுகிறது. ஆனால், அவர்களுக்கான குற்றப்பத்திரத்தைச் சட்டமா அதிபர் திணைக்களம் தாக்கல் செய்வது கிடையாது. இந்தச் சட்டத்தின் பிரகாரம் 2018ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் வரையில் சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஊடாக உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்வதற்கான சட்ட ஏற்பாடுகளே காணப்பட்டன. மாவட்ட நீரியல் வளத் திணைக்களம் தாக்கல் செய்யும் 'பீ' அறிக்கைக்கு மேலதிகமாக சட்டமா அதிபர் திணைக்களம் உயர் நீதிமன்றில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யவேண்டும். சட்டமா அதிபர் திணைக்களம் குற்றப் பத்திரத்தைத் தாக்கல் செய்யும் வரை வழக்கை நடத்துவதற்காக மாவட்ட நீரியல் வளத்திணைக்களம் காத்திருக்கும். அந்தக் காத்திருப்புக் காலத்தில் ஒவ்வொரு 14நாள்களுக்கும் இந்திய மீனவர்களுக்கான விளக்க மறியல் மேலும் குறிப்பிட்ட காலத்துக்கு நீடிக்கப்படும்.

**பத்திரமாகத் திருப்பி அனுப்பப்பட்டனர்**

எந்த எந்த நீதிவான் நீதிமன்றங்களில் நீரியல் வளத் திணைக்களத்தால் 'பீ' அறிக்கை முன்வைக்கப்பட்டு இந்திய மீனவர்கள் நீதிமன்ற விளக்க மறியலில் உள்ளனரோ, அந்தந்த நீதிமன்றங்களுக்குத் தமது முடிவைச் சட்டமா அதிபர் திணைக்களம் கீழ்வருமாறு அனுப்பி வைப்பதே வழமை. அதாவது குறித்த மீனவர்கள் மீது வழக்குத் தொடுக்கப்படவில்லை என்பதை வெளிப்படுத்தும்.

இதன் அடிப்படையில் சட்டமா அதிபர் திணைக்களத்தின் அறிவித்தலின்படி கைதாகியவர்கள் மீது குற்றப் பத்திரம் முன்வைக்கப்படவில்லை என்ற அடிப்படையில் நீதிமன்று மீனவர்களை விடுவிக்கும். அவ்வாறு விடுவிக்கப்படும் மீனவர்களை இதுவரை காலமும் இந்தியத் தூதரகம் பொறுப்பேற்றது.

இலங்கை - இந்தியக் கடற்படையினரின் ஏற்பாட்டில் கடல் வழியாக அவர்கள் இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டார்கள். கடந்த 2013ஆம் ஆண்டுக்குப் பிற்பாடு இவ்வாறாக 450வரையான படகுகளில் ஊடுருவிய 3ஆயிரம்பேர் வரையிலான இந்திய மீனவர்கள் திரும்ப அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றனர். இதனால் இலங்கை அரசுக்கும் உள்ளூர் மீனவர்க ளுக்கும் செலவு ஏற்படுகின்றதே அன்றி இந்திய மீனவர்க ளுக்கு எந்தப் பாதிப்பும் கிடையாது.

**சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட்டது**

தொடர்ந்தும் அவர்கள் எல்லை தாண்டுவதற்கு மேற்குறித்த சட்ட நடவடிக்கையிலிருக்கின்ற தளர்வே காரணம், எனவே இறுக்கமான நடவடிக்கை வேண்டும் எனக் காலத்துக்குக் காலம் கோரிக்கைகள் எழுந்தன. எந்தப் பயனும் கிட்டவில்லை. இத்தகைய பின்னணியில் 2018ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் இது சார்ந்து 2ஆம் இலக்கத் திருத்தச் சட்டம் ஒன்று நாடாளுமன்றில் கொண்டுவரப்பட்டது. அதாவது இதுவரை, 1979ஆம் ஆண்டு வெளிநாட்டுக் கடற்கலங்கள் தடைச் சட்டத்தின் பிரகாரம் ஒரு வழக்கைச் சட்டமா அதிபர் திணைக்களம் மட்டுமே உச்ச நீதிமன்றில் வழக்குத் தொடுக்க முடியும் என்றிருந்த சட்டவாக்கம் நீரியல் வளத் திணைக்களம் நீதிவான் நீதிமன்றம் ஒன்றில் சட்டமா அதிபர் திணைக்களத்தை நாடாமல் நேரடியாக வழக்கைத் தாக்கல் செய்து தீர்ப்பைப் பெற்றுக்கொள்ளும் ஏற்பாடாகத் திருத்தப்பட்டது. இங்கு திணைக்கள அதிகாரம் மாற்றப்பட்டதே அன்றி சட்டமும் தண்டனைகளும் பழையன தான்.

**சட்டத் திருத்தத்தின் பின்னர் ஒரு தீர்ப்பு**

இந்தச் சட்ட மாற்றத்தின் பின்பு கடந்த மாதம் 5ஆம், 6ஆம் திகதிகளில் நெடுந்தீவுக் கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 16 பேருக்கும் எதிராக ஊர்காவற்றுறை நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ய முற்பட்டது யாழ்ப்பாணம் நீரியல் வளத் திணைக்களம். வழமைபோன்று 'பீ' அறிக்கையை முன்வைப்பதற்குத் தயாரானது. அப்போது கொழும்பில் இருந்து கிடைத்த அறிவுறுத்தல், தற்போது மாவட்ட நீரியல் வளத் திணைக்களம் நேரடியாக நீதிவான் நீதிமன்றம் ஒன்றில் 'பீ' அறிக்கை இன்றிக் குற்றப்பத்திரத்தைத் தாக்கல் செய்ய முடியும் எனத் தெரிவித்தது. அதன் பிரகாரம் குற்றப் பத்திரத்தை தாக்கல் செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டது. இதனால் மாவட்ட நீரியல் வளத் திணைக்களம் முதல் நாள் உடனடியாகப் 'பீ' அறிக்கையைச் சமர்ப்பித்ததோடு தற்போதைய திருத்தத்தின்படி தாமே குற்றப்பத்திரத்தையும் தாக்கல் செய்தது.

இந்தக் காலத்தில்தான் குறித்த சட்டத்தின் பிரகாரம் கைதாகிய இந்திய மீனவர்களுக்கு என்ன தண்டனை எனப் பலரும் ஆராய்ந்தார்கள். "ஒரு மீனவனுக்கு 5மில்லியன்வரை தண்டப்பணம், 2ஆண்டுகள் சிறைத் தண்டனை, படகுகளின் உரிமையாளர்களுக்கும் 10மில்லியன் தண்டப் பணமாம்! ஆகவே இந்திய மீனவர்கள் இனி இலங்கைக் கடற்பரப்பை எட்டியும் பார்க்க மாட்டார்கள்" என உள்ளூர் மீனவர்கள் சிலர் ஆர்ப்பரித்தனர். இதை இந்திய ஊடகங்களும் பூதாகாரமாகவே காண்பித்தன. இந்த நிலையில்தான் ஊர்காவற்றுறை நீதிமன்றில் இதுகுறித்த வழக்கும் இடம்பெற்றது. தண்டனை அறிவிக்கப்பட்டது. சிறைத் தண்டனைகளை 5ஆண்டுகளுக்கு ஒத்தி வைத்ததோடு, உரிய மீனவர்களை நாட்டின் குடிவரவு - குடியகல்வுத் திணைக்களத்தின் ஊடாக விமானம் வழியாக நாடு கடத்துமாறும் உத்தரவிடப்பட்டது.

**உள்ளூர் மீனவர்களின் ஆதங்கம்**

இதன் பின்பே சாதாரண மீனவர்களுக்கு இந்தப் புதிய சட்டத்திருத்தத்தின் தன்மை புரிந்தது. இது தொடர்பில் மாதகல் மேற்கு கிராமியக் கடற்றொழிலாளர் சங்கத் தலைவர் விநாயமூர்த்தி சுப்பிரமணியம் தெரிவிக்கையில்,

"2018ஆம் ஆண்டின் 2ஆம் இலக்கத் திருத்தச் சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்பு குறைந்தது 3அல்லது 4மாதங்கள் வரை இந்திய மீனவர்கள் சிறை வைக்கப்பட்டிருந்தனர். அது இந்திய மீனவர்களுக்கு அச்சமளிப்பதாக இருந்தது. ஆனால் தற்போது ஒரு மாத காலத்துக்குள் தீர்ப்பளிக்கப்பட்டு உடனடியாகவே விமானம் மூலம் திருப்பி அனுப்பப்படுகின்றனர், எந்தவொரு குற்றப்பண அறவீடும் கிடையாது. ஒத்தி வைக்கப்பட்ட காலத்துக்குள் மீண்டும் சட்டவிரோதமாகக் கடற்பரப்புக்குள் வந்தால் மட்டுமே சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண்டியிருக்கும். இது இந்திய மீனவர்களுக்கு மேலும் ஊக்கத்தை அதிகப்படுத்தும் என்ற அச்சமே எம்மிடத்தில் உள்ளது.

அதாவது வானூர்தியில் இலவசமாகப் பயணிக்க விரும்பும் மீனவர்கள், படகில் எல்லை தாண்டினால் சில நாள்களில் இங்கிருந்து வானூர்தியில் தமது நாட்டுக்குப் போகலாம் எனச் சிந்திக்க முயல்வார்கள். அத்துடன் அத்துமீறிப் பிடிபட்ட படகுகள் அதிகமாக அவர்களுக்குச் சொந்தமானவை அல்ல.

அவற்றின் உரிமையாளர்கள் பெரும் முதலாளிகளாகவே இருப்பர். எனவே கைது செய்யப்படும் இந்திய மீனவர்களுக்குக் கண்டிப்பாகத் தண்டப்பணம் விதிக்க வேண்டும் என அமைச்சைக் கோரவுள்ளோம்" என்றார்.

"அதற்காக இந்திய மீனவர்க ளின் வாழ்வாதாரத்தை பாதிக்கும் அளவுக்கு மில்லியன் கணக்கிலோ அல்லது இலட்சக்கணக்கிலோ தண்டப்பணம் அறவிட வேண்டும் என்பதாக எமது கோரிக்கை அமையாது. குறைந்தது 50ஆயிரம் ரூபா முதல் தடவையாக குற்றப் பணம் விதிக்கும்போது அத்துமீறிய அவர்களின் ஊடுருவலும் தடுக்கப்படும்" என்றும் அவர் தெரிவித்தார்.



கருத்து

ந.சதாசிவ ஐயர்

# 'ஒலைச் சுவடியும் ஒன்லைன் சேட்டிபிக்கரும்'




'ஒலைச்சுவடியும் ஒன்லைன் சேட்டிபிக்கரும்' எனும் தலைப்பில் 2018.7.15 அன்றைய உதயன் சூரிய காந்திப் பகுதியில் பதிப்பாகியிருந்த சி.சந்திரகலாவின் கட்டுரை கவனம் ஈர்த்தது.

எந்த ஒரு விடயமும் நூற்றுக்கு நூறு வீதம் சரியாக, திருப்தியாக அமைந்துவிடுவதில்லை. அது போன்றதுதான் இந்த 'ஒன்லைன்' பிறப்புச்சான்றிதழ்க் குறைபாடும். 2006ஆம் ஆண்டு பரீட்சார்த்தமாகக் கொழும்பில் ஆரம்பிக்கப்பட்டு, நிதியின்மையாலும், சரியான திட்டமிடல் இன்மையாலும், பல சிரமங்களுக்கு மத்தியிலும், படிப்படியாக ஆமை வேகத்தில் முன்னெடுக்கப்பட்டதே பிறப்புச் சான்றிதழ்களைக் கணினி மயப்படுத்தும் இந்தத் திட்டம்.

போர் ஏற்படுத்திய இடப் பெயர்வால் குறித்த வகை ஆவணங்களை இழந்த வடபகுதி மக்களுக்கு உதவும் பொருட்டும், அரச சார்பற்ற நிறுவனங்கள் வழங்கிய நிதி உதவி வேறெங்கும் திரும்பிவிடாமல் வடக்கு மக்களுக்குச் சேரவேண்டும் எனும் நல்ல நோக்கிலும், குறுகிய காலத்துக்குள், அவசர அவசரமாக, இரவு பகல் பாராமல் செய்யப்பட்டதே இந்தவேலை. தவிர ஆற அமர இருந்து செய்யப்பட்டதல்ல.

**வடக்கிலேயே முதல் முறையாக...**

எல்லாத்திட்டங்களும் வடக்குக்குக் கடைசியில்தான் வரும். ஆனால், பல இன்னல்களுக்கு முகம்கொடுத்து இந்தத் திட்டம் தெற்கைவிடுத்து வடக்குக்கே விரைவில் கொண்டுவரப்பட்டது. தொடர்ந்தே கிழக்கிலும் மலையகத்திலும்கூட இது முன்னெடுக்கப்பட்டது. இதற்குப் பொறுப்பாக இருந்தவர் என்ற காரணத்தால் இதுபற்றி நான் பேசிய, எழுதிய இடங்களில் எல்லாம், "இந்தத் திட்டம் 70அல்லது 80வீதமே வெற்றியளித்துள்ளது. சிறு சிறு குறைபாடுகள் தவிர்க்க முடியாமல் ஏற்பட்டுள்ளன" என அறுதியிட்டுக் கூறி வந்திருக்கிறேன். உதயன் பத்திரிகையிலும்கூட எழுதியிருந்தேன். அலுவலர்களுக்குப் பயிற்சி வழங்கும் நடவடிக்கைகளின்போது இதைப்பற்றிக் எடுத்துக்கூறி இதன்மூலம் எப்படி மக்களுக்குச் சிறந்த சேவையை வழங்கமுடியும் எனவும் வழிகாட்டல்கள் வழங்கப்பட்டன. இந்தத் திட்டம் இப்போது இலங்கை முழுவதும் செயற்படுத்தப்பட்டிருந்தாலும் வடக்கு அரச அதிபர்கள், பிரதேச செயலர்களின் அயராத ஒத்துழைப்பாலும் உதவி பதிவாளர் நாயகத்தின் தொடரான முயற்சியாலும், அரச சார்பற்ற நிறுனங்களில் கடமையாற்றும் அதிகாரிகளால் காட்டப்படும் அதீத அக்கறையாலும் வடக்கில் மட்டுமே இந்தச் செற்பாடு சிறப்பாக முன்னெடுக்கப்படுகிறது.

**மட்டுப்படுத்தப்பட்ட சேவை**

1960ஆம் ஆண்டுக்குப் பிறகு பிறந்தோர், இலங்கையில் எங்கு பிறந்திருந்தாலும் அவர்களுடைய பிறப்புச் சான்றிதழை எந்தப் பிரதேச செயலகத்தின் மூலமும் பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பிக்க முடியும். அதுபோல் வெளிநாடுகளில் பிறந்தவர்களின் சான்றிதழ்களையும் பெறமுடியும் எனத் தெரிவிக்கப்பட்டாலும், தற்போது மட்டுப்படுத்தப்பட்ட அலுவகங்களில் மட்டுமே இந்தச் சேவை வழங்கப்படுகிறது. விரைவில் உரிய ஏற்பாடுகள் செய்யப்பட உள்ளன.

**இணையத்தளத் தடை**

இந்தச் சேவைக்கான மத்திய 'சேவர்' கொழும்பில் இருப்பதாலும், ஒரே நேரத்தில் பலர் தொடர்பு கொள்வதாலும், அரச இணையத் தளத்தின் வேகம் குறைபடும் நேரங்களிலும், தாமதங்களும் தடங்கல்களும் ஏற்படுவது தவிர்க்கமுடியாதது. (மிகவும் வேகமான இணையத்தளச் செற்பாட்டைக் கொண்ட முகநூல், தொலைபேசி மற்றும் வங்கிச் செயற்பாடுகளில் கூட சில நேரங்களில் 'நெற்வேர்க்' தடை ஏற்படுவது இயல்பே) இலங்கையின் இணையத்தளச் சேவை சிறப்புறும் பொழுது காலகதியில் இவை சீராகும். உண்மையில் இது எலக்ரோணிக் பதிவு முறைக்கான ஓர் ஆரம்ப நடவடிக்கையே.

**ஆங்கில மொழிபெயர்ப்பு**

எலக்ரோணிக் பதிவு முறையும் இப்போதைய பதிவுமுறைக்குச் சமாந்தரமாகப் பரீட்சார்த்த நிலையில் நாடுமுழுவதும் ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. தற்போது தமது பிள்ளைகளின் பிறப்பைப் பதிவு செய்வதற்கு, தகவல் வழங்குபவர் வழமையான தகவல்களுடன் புதிய படிவம் ஒன்றையும் நிரப்பிப் பதிவாளருக்குக் கொடுப்பதுடன், ஆங்கிலத்திலும்கூட எழுதிக்கொடுத்தல் வேண்டும். (எதிர்காலத்தில் ஆங்கில மொழிபெயர்ப்பையும் ஒன்லைனில் பெற முடியும்) இதன்மூலம் எதிர்காலத்தில் வழங்கப்படும் பிறப்புப் பதிவு எண் ஒன்றே அவர் பற்றிய தகவல்களை வழங்குவதற்கு உதவுகின்ற சான்றாக அமையும். இதற்கு இன்னும் சிலவருடங்கள் செல்லலாம்.

**ஒரு சில அக்கறையற்ற அதிகாரிகள்**

எது எப்படியிருப்பினும் கடந்த கட்டுரையில் சந்திரகலா குறிப்பிட்ட கேள்வி நியாயமானதே. மக்களுக்குச் சீரான சேவையை எளிதாக வழங்குவதற்குச் சட்டத்தில் ஏற்பாடுகள், வசதிகள் செய்யப்பட்டுள்ளபோதும் அலுவலர்களில் ஒரு பகுதியினரின் சேவை மனப்பான்மையற்ற போக்கும், மக்களின் அக்கறையீனமும் பிரச்சினைகளுக்கு ஏதுவாகின்றன. தற்போதைய முறையின்படி ஒரு பிரதேச செயலகத்தின் நிர்வாக அலுவலர், உதவிப் பிரதேச செயலர், பிரதேச செயலர் ஆகியோருக்குப் பதவிவழி மேலதிக மாவட்டப் பதிவாளர், மாவட்டப்பதிவாளர் பதவிகள் உரித்தாவதுடன் அவர்களுக்கான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் கடமைப் பட்டியல்கள்கூட வழங்கப்பட்டுள்ளன. அதற்கு மேலதிகமாகப் பதிவாளர் தரம் III அலுவலர்கள், தரவுப் பதிவு அலுவலர்கள்கூடப் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளனர். பிரதேச செயலக ஆளணியுள் இந்தக் கடமைகளுக்கான ஆளணியும் உள்ளடங்கும்.

வழிகாட்டல்கள் யாவும் தமிழில் வழங்கப்பட்டுள்ளதுடன் சகல விண்ணப்பப் படிவங்களும் வழங்கப்பட்டுள்ளன. அவ்வப்போது பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருகின்றன. பிரதேச செயலகச் செயற்பாடுகள் சிறப்பாக இருக்கின்ற போதும், பொறுப்பற்ற ஒரு சிலரால் இப்படியான சங்கடங்கள் ஏற்பட்டுவிடுகின்றன.

**மக்களுக்கு உதவும் தகவல்கள்**

தற்போது யாழ்ப்பாண மாட்டத்தில் 15பிரதேச செயலகங்களிலும் தினமும் கிட்டத்தட்ட 800விண்ணப்பங்கள் கிடைக்கப் பெறுகின்றன. நெருக்கடி கூடிய யாழ்ப்பாணப் பிரதேச செயலகம் தவிர்ந்த ஏனைய அலுலகங்களில் அன்றன்றே சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. இதில் அநேகமாக 700சான்றிதழ்களின் பிரதிகள் பிரச்சினை இன்றி வழங்கப்படுகின்றன. மீதி சிறிது தாமதத்துடன், மூலப் பிரதிகளைத் தேடிப்பார்த்து வழங்கப்படுகின்றன. ஒரு சிலவே, உரிய பிரதேச செயலகத்துக்கு அனுப்ப வேண்டிய தேவையுள்ளனவாய் அமைகின்றன. ஒப்பமிடுவதற்கு ஆள் இல்லை என்ற பிரச்சினை இங்கு இல்லை. ஏனெனில் மேலதிக மாவட்டப் பதிவாளர், நிர்வாக அலுவலர், உதவிப் பிரதேச செயலர், பிரதேச செயலர் ஆகிய பதவி நிலையிலுள்ள நால்வரில் எவரும் சான்றிதழில் ஒப்பமிடலாம்:



தங்கள் சான்றிதழ் ஒன்லைனில் இல்லை என்றால் தாங்கள் பிறந்த இடத்துக்குரிய பிரதேச செயலகத்துடன் நேரடியாகவோ, தபால் மூலமாகவோ தொடர்பு கொண்டு விண்ணப்பித்துச் சான்றிதழைப் பெறலாம். பணத்தை அருகில் உள்ள எந்தவொரு வங்கியிலும் செலுத்தலாம். விண்ணப்பப் படிவத்தில் விவரமுள்ளது. மேலதிக தகவல்களை அருகிலுள்ள பிரதேச செயலகத்தில் அல்லது கிராம அலுவலரிடம் பெறலாம். அல்லது 1919 தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அல்லது பதிவாளர் நாயகத்தின் இணையத்தளத்தில் பெறலாம்.

**சான்றிதழ்களின் பயன்பாட்டு நிலை**

நிழற்பிரதி மூலம் பெறப்படும் சான்றிதழில் முக்கியமான தகவல்கள் சரியாக இருந்தால் உள்ளூர்த் தேவைகளுக்குப் போதுமானதாக இருக்கும். ஓரிரு இடங்களில் வெட்டித் திருத்தப்பட்டிருந்தாலும் உரிய முறையில், வலப்புறத்தில் ஒப்பமிட்டிருந்தால் போதுமானதே. ஏனெனில் உள்ளூர் அலுவலகங்கள் பிறப்புச் சான்றிதழ் பற்றித் தெளிவுள்ளவை. அதை உறுதிப்படுத்திக் கொள்ளும் தொடர்பாடல் முறை உள்ளவை. எனினும் வெளிநாட்டுத் தூதரகங்களைப் பொறுத்தவரை தூய்மையான சான்றிதழின் தேவை தவிர்க்கமுடியாதது. ஆதலால் நிழற்பிரதி போதுமான தெளிவாக இல்லாதபோது தாமகவே அதை உரிய அலுவலர் உணர்ந்தால் அல்லது அதற்கான கோரிக்கை விண்ணப்பதாரியால் விடப்படும்போது அதைப் பரிசீலித்துத் தூய சான்றிதழை வழங்குவதற்குப் பிரதேச செயலகத்தால் நிச்சயமாக முடியும். பிரதேச செயலரால் முடிவெடுக்க முடியாத சந்தர்ப்பங்களில் உதவிப்பதிவாளர் நாயகத்தின் ஆலோசனையைப் பெறமுடியும். இவை யாவும் தற்போதைய தொடர்பாடல் அணுகுமுறையில் சாதிக்கக்கூடியவையே. (இலங்கை அலுவலகங்களில் நிலவுகிற கடிதமூலமான தொடர்பாடல் தாமதங்களுக்குரியது. அது தவிர்க்கப்பட வேண்டும் என்பது எனது அவாவும்கூட).

**பிரதேச செயலகத்தால் முடியும்**

சந்திரகலா வெளிப்படுத்திய பிரச்சினைக்குரிய சான்றிதழுக்குப் பதிலாக பிரதேச செயலகமே பிரதேச செயலரின் அனுமதி பெற்றுத் தெளிவன சான்றிதழை வழங்கியிருக்கமுடியும். அதற்கான ஏற்பாடுகள் உள்ளன. அதேபோன்று பிறப்புச் சான்றிதழ் தொடர்பான ஒவ்வொரு விடயத்துக்கும் சரியானதைச் செய்ய சட்ட ஏற்பாடுகள் உண்டு. எனினும் உடனடியாகச் செய்ய முடியாது. மோசடிகளைத் தவிர்ப்பதற்காகக் கால நிர்ணயங்கள் உண்டு என்பதையும் மக்கள் அறிந்து கொள்ளவேண்டும். ஆனால், இருக்கும் நாள் மட்டும் இருந்துவிட்டு இரவு வந்த வெளிநாட்டுத் தொலைபேசித் தேவையை நிறைவு செய்வதற்காக, அடுத்தநாள் காலையில் அலுவலக வாசலில் நிற்பதான எமது மக்களின் பழக்கதோஷம் ஆரோக்கியமானதல்ல.

நான் கடமையிலிருந்த காலங்களில் பல முறை பத்திரிகைகளில் எழுதியுள்ளேன். கிராம அலுவலர்களுக்கு, பாடசாலைகளுக்குச் சென்று பிள்ளைகளுக்குக் கூடச் சொல்லிக் கொடுத்துள்ளேன். தற்போதும் சொல்கிறேன், உங்கள் ஒவ்வொருவரதும் சான்றிதழைச் சரிபார்த்துக் கொள்ளுங்கள். பிழையிருந்தால் திருத்திக் கொள்ளுங்கள். குறைந்தது ஒரு பிரதியை ஆவது கைவசம் வைத்திருங்கள். பிள்ளை பிறந்ததும் தவறாமல் சரியான தகவல்களைக் கொடுத்துப் பதிவு செய்யுங்கள். பதிவு செய்தவுடன் சான்றிதழை ஒரு முறை சரிபார்த்துக்கொள்ளுங்கள். தேவையானபோது மட்டும் அலுவலகங்களை நோக்கி ஓடுவதைத் தவிருங்கள். பிறப்புச்சான்றிதழ் மட்டுமல்ல அடையாள அட்டை, வாக்காளர் பதிவு, கடவுச்சீட்டு, வாகனப்பதிவு, காணி ஆவணங்கள் என்பவற்றைச் சரியாக வைத்திருங்கள். நிழற்பிரதிகள் ஒன்றையாவது வீட்டில் பேணுங்கள். சந்திரகலா போன்ற ஆர்வமுள்ளோர் இப்படியான தவறுகளை உரிய அரச அதிபருக்கு அல்லது உதவிப் பதிவாளர் நாயகத்துக்கு எழுத்துமூலம் சுட்டிக்காட்டுங்கள். அது பயனுள்ளதாக வாய்ப்புண்டு. தகவலறியும் சட்டத்தை இங்கேயும் நீங்கள் பயன் படுத்தலாமே. ஒவ்வொரு குறைபாட்டையும் எழுத்து மூலம் உரியவர்களின் கவனத்துக்குக் கொண்டுவரத் தவறாதீர்கள்.

***கட்டுரையாளர் ஓய்வுபெற்ற மேலதிக பதிவாளர் நாயகம்***



கருத்து

சு.தர்மலிங்கம்

# மாட்டிறைச்சியும் பசுவதையும்

3.6.2018 அன்றைய ஞாயிற்றுக் கிழமை உதயன் 'சூரியகாந்தி' இதழில் மேற்படி விடயமாக முருகேசு சச்சிதானந்தத்தால் பல தரவுகள் அடங்கிய கட்டுரை பதிப்பாகியிருந்தது. அந்தக் கட்டுரை ஆக்கியோனால் பல விடயங்கள் துல்லியமாக வெளிச்சம் இடப்பட்டிருந்தன. ஆனால், அதிலே கூறப்பட்ட விடயங்கள் பலவற்றை எம்மால் முற்று முழுதாக ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

அந்தக் கட்டுரை முழுவதும் மாட்டி றைச்சி என்ற பொதுப் பதமே பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்தியாவில் மாட்டிறைச்சி ஏற்றுமதி என்று வழங்கப்பட்ட தரவுகள் பசு மாட்டிறைச்சி, காளை மாட்டிறைச்சி என்று பகுப்பாய்வு செய்யப்பட்டுப் பதிப்பாகவில்லை. சிவசேனாவின் முக்கிய போராட்டம் பசு வதைக்கு எதிரானதே. இந்தியாவில் சிவசேனா இயக்கம் மிகவும் சக்தி வாய்ந்தது. ஆகவே அங்கு வகை தொகையாகப் பசு மாடுகள் கொலை செய்யப்பட்டு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கும் என்பது சாத்தியமற்ற ஒரு விடயமாகும்.

எமது முன்னையோர் பசு மாட்டின் புனிதத் தன்மையையும் அதன் சிறப்பையும் உணர்ந்து அவற்றைக் காளை - நாம்பன் மாட்டிலிருந்து வேறுபடும் வகையில் பசு மாட்டுக்கே உரித்தான சொற்பதங்கள் கோ, கோகத்தி(பசுக்கொலை), கோசலம், கோசாலை, கோதானம், கோமயம் என்பவற்றைப் பயன்படுத்தினார்கள் என்பது ஈண்டு நோக்கற்பாலது.

வளர்ந்த நர்டுகளிலும் வளர்முக நாடுகளிலும் இறைச்சிக்கென்றே குறித்து ஒதுக்கப்பட்ட காளை மாடுகள் செயற்கை உணவூட்டலின் மூலமும் இயற்கைத்தீவனியாலும் வளர்க்கப்பட்டு இறைச்சிக்காக வெட்டப்படுகின்றன. வளர்ந்த நாடுகளில் ஜீவகாருணிய முறையிலே கொல்லப்புடுகின்றன. எமது நாட்டில் அப்படியான ஒரு நிலை இன்னும் ஏற்படவில்லை.

**சிவசேன மீதான குற்றச்சாட்டு**

சிவசேனா அமைப்பு இந்து சமயத்தையும் அதைச் சார்ந்தவர்களையும் நல்வழிப்படுத்திக் கண்காணிக்கும் அமைப்பாகும். அது ஏனைய சமூகங்களையோ, சமயங்களையோ சீண்டுவது கிடையாது. அதனால் சமூகங்களுக்கு இடையிலான எவ்வித முரண்பாடுகளும் ஏற்பட வாய்ப்பில்லை. சிவசேனா அமைப்பு ஒரு தனி மனிதனுடைய உணவுச் சுதந்திரத்தைப் பொருட்படுத்தவில்லை என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது. ஆனால் ஒரு தனி மனிதன் தனது உணவுத் தேவைகளுக்கோ, கொண்டாட்டத்துக்கோ உள்ளூராட்சி கட்டளைச் சட்டங்களுக்கு அமைவாக முன்னேற்பாடான நடைமுறைகளைப் பின்பற்றி, குறிப்பிட்ட பகுதி உள்ளூராட்சிச் சபையின் முன் அனுமதி பெற்று மாடு வெட்டி இறைச்சியைப் பயன்படுத்தலாம் என்று விதந்துரைக்கப்பட்டுள்ளது. ஆனால் பொது இடங்களில் பசு மாடு கொலை செய்யப்பட்டு விற்பனை செய்வதற்கு எதிரானதே சிவசேனாவின் போராட்டமாகும்.

ஒவ்வொரு பௌர்ணமி தினத்திலும் பொது இடங்களில் விலங்குகள் வெட்டப்பட்டு விற்பனை செய்யப்படுவது தடை செய்யப்பட்டுள்ளது. அதே ஒத்த வகையில் வன விலங்குகள் தாவரங்கள் கட்டளைச் சட்டத்தின் படி வனவிலங்குகள் கொல்லப்படவோ, கொண்டு செல்வதோ, விற்பதோ முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. காலவோட்டத்தில் பௌத்தர்கள், இந்துக்கள் நிறைந்த இந்த நாட்டில் பொது இடங்களில் மாடுகளைக் கொன்று இறைச்சிக்காக விற்பனை செய்வதோ பயன்படுத்துவதோ சட்ட வரம்புக்கு உட்பட்டதாகத் தடை செய்யப்படும் நாள் வெகு தூரத்தில் இல்லை.

**சிவசேனா அபிவிருத்தி அமைப்பல்ல**

சிவசேனா அமைப்பு ஒரு சமய அமைப்பாகும். அதற்குச் சமூக மேம்பாட்டுக்கு அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ள வேண்டிய கட்டுப்பாடு கிடையாது. இது கோயில் காணியில் அந்தக் கோயிலின் பூசகரைத் தோட்டம் செய்யும்படி பணிக்கப்படுவதற்கு ஒப்பானதாகும். மேலும் கூடிய விலைக்குக் குத்தகை பெற்று மாட்டிறைச்சி விற்பனையை மேற்கொள்ளாமல் விடுதலுக்கு அது ஒரு நிதி நிறுவனமல்ல. மேற்கு நாடுகளின் ஆக்கிரமிப்பில் எமது நாடு இருந்த காலப்பகுதியில் மேலைத்தேய ஆக்கிரமிப்பாளர்களால் மாட்டிறைச்சி உண்ணும் பழக்கத்தைச் சமய மாற்ற நோக்கில் எடுகோலாகப் பயன்படுத்தினர். அதற்கு முந்தைய காலப் பகுதியிலே மாட்டிறைச்சி உண்ணும் பழக்கம் இருந்ததாக ஆதாரங்கள் இல்லை. டாக்டர் மு.சௌரிராஜன் என்கிற சித்த மருத்துவ ஆராய்ச்சியாளரின் 'பதார்த்த குணங்கள்' என்ற நூலில் மாட்டிறைச்சி உண்பதால் பல நோய்களுக்கு, குறிப்பாக தோல் வியாதிகளுக்கு ஆளாக நேரிடும் எனக் குறிப்பிட்டுள்ளார். சம காலத்தில் இந்து சமயத்தவர் மத்தியில் மாட்டிறைச்சி உண்ணும் பழக்கம் பரவலாகக் காணப்படுகிறது என்பது உண்மை. இதற்குக் காரணம் ஏனைய மாமிச வர்க்கங்கள் ஆடு, ஊர்க் கோழி, கடல் உணவுகள் என்பவற்றைவிட விலையில் மிக மலிவாக மாட்டிறைச்சி காணப்படுகிறது. குறைந்த செலவில் கூடிய பொருள்கள் கிடைத்தால் அதை நாடுவது மனித இயல்பே. மாட்டிறைச்சியின் விலையை விடக் குறைவாக ஏனைய மாமிச வகைகளைப் பெறக்கூடியதாகக் கடல் வளங்களைப் பெருக்கியும் ஆடு, கோழி என்பவற்றின் உற்பத்தித் திறனை ஊக்கவித்தால் மாட்டிறைச்சி அதன் தனித் தன்மையை இழந்துவிடும்.



குறைந்த செலவில் கூடிய பொருள்கள் கிடைத்தால் அதை நாடுவது மனித இயல்பே. மாட்டிறைச்சியின் விலையை விடக் குறைவாக ஏனைய மாமிச வகைகள் பெறக்கூடியதாகக் கடல் வளங்களைப் பெருக்கியும் ஆடு, கோழி என்பவற்றின் உற்பத்தித் திறனை ஊக்கவித்தால் மாட்டிறைச்சி அதன் தனித் தன்மையை இழந்துவிடும்.

**சைவ நாய்கள் செயல்திறனில் குறைந்தவையல்ல**

நாய் வளர்ப்புக்கு மாட்டிறைச்சி மிகவும் வேண்டியதாகக் கட்டுரையாளர் நிலைநாட்ட முற்படுகிறார். ஆனால், உண்மையில் சைவ உணவுகளையே நாளாந்த உணவுகளாகக் கொண்ட வீடுகளில் வளர்க்கப்படுகின்ற, அவற்றை உண்கிற நாய்களின் செயல் திறன்கள் மாமிச உண்ணிகளான நாய்களின் செயல் திறனுக்கு எந்த விதத்திலும் குறைவுடையதாகக் காணப்படவில்லை. மாட்டிறைச்சிக்குப் பதிலாக ஏனைய மாமிச வர்க்கங்கள் மூலம் ஈடு செய்யலாம். ஆகவே வீதிகளில் இறங்கிப் போராட வேண்டிய நிலை ஏற்படாதென நம்புகின்றேன். காளை மாட்டின் திமிலிலிருந்து 'கோரோசனை' பெறப்படுவதாகக் கூறப்பட்டுள்ளது. ஆனால், உண்மையில் மாட்டின் பித்தப்பையிலே கோரோசனையை உற்பத்தியாகும் நொதிப் பொருள்கள் கிடைக்கப் பெறுகின்றன. முன்னைய காலத்தில் கோரோசனையைப் பெறுவதற்கு மாடுகள் கொல்லப்படுவதில்லை. இறந்த மாட்டிலிருந்தே பெறப்பட்டது. ஆயுள்வேத வைத்தியத்தில் அபின், கஞ்சா பயன்படுத்தினால் அவற்றை உண்ணும் நோயாளர் போதைக்கு அடிமையாகி விட்டார்கள் என்று கூறுவதுபோல் கட்டுரையாளரின் வாதம் அமைந்துள்ளது. அருளியன் எழுதிய "மாட்டிறைச்சி அரசியல்" என்ற நூலில் கூறப்பட்ட விடயங்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டியவை. மேலும் மாட்டிறைச்சி என்ற சொல்லே பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் எவ்வளவு தூரம் பசுவதை செய்யப்பட்டுள்ளது என்பதை அனுமானிக்க முடியவில்லை.

**பலி கொடுத்தலுக்குத் தடை**

பல கோயில்களில் பலி கொடுப்பது சட்ட பூர்வமாகத் தடை செய்யப்பட்டுள்ளது. சம காலத்தில் யாகங்களில் பசு வேள்வி செய்யப்பட்டதாகவோ, செய்யப்படுகிறதோ என்பது உண்மைக்குப் புறம்பானது. சாவகச்சேரியில் நடைபெற்ற போராட்டம் மாடுகள் வகை தொகையாகக் கொல்லப்பட்டு பசு மாடுகளும் கலந்து, பயிந்து வெட்டப்பட்டிருக்கலாம் என்ற நோக்கிலே முற்று முழுதான மாட்டிறைச்சிக்கு எதிரான போராட்டமாகவே கிளர்ந்தெழுந்தது. ஓர் உள்ளூராட்சிச் சபை மாட்டிறைச்சிக் கடைக்கு கேள்வி கோரும் பொழுது காளை மாட்டுக்கோ அல்லாது பசு மாடு வெட்டப்படுவதற்கோ விற்பனை செய்வதற்கோ அனுமதி வழங்கப்பட மாட்டாது என்ற நிபந்தனையிடப்பட்டு கோரப்படல் வேண்டும். கேள்வி கிடைக்கப்பெறும். கேள்விக்காரருடன் பொருத்தனை செய்யும் பொழுது பசுமாடு வெட்டி விற்பனை செய்யக்கூடாது என்ற நிபந்தனையை உள்ளடக்கியதாக அமைய வேண்டும். வெட்டுவதற்காக மாட்டைக் கொல்களத்துக்குக் கொண்டு போவதற்கு முன் ஏற்பாடாக மாட்டுத் தொழுவத்திலே கட்டப்பட்டு, பரிசீலிக்கப்பட்ட பின்னரே கொல்களத்துக்கு அனுப்பப்படல் வேண்டும். அவ்வேளை பசு மாடோ அல்லாது நாம்பன் மாடோ வெட்டப்படப் போகிறதென்பதை உறுதி செய்தல் வேண்டும்.



**பொது**

பசு எமக்குப் பால் தரும் காமதேனு. மாட்டிறைச்சி இல்லாமல் வாழ முடியும் ஆனால் பாலும் அதிலிருந்து பெறப்படும் புட்டிப் பாலும் இல்லாமல் குழந்தைகளோ, நோயாளர்களோ, வயோதிபர்களோ சுகதேகிகளாக வாழ முடியாது. இதனாலேயே பாலை முழுமையான உணவு என்கிறோம். பால், தயிர், நெய், வெண்ணெய், மோர் அத்துடன் கோசலம் (பயிர்களின் பீடைக்கு உகந்தது. எருவிட்டி விறகுக்குப் பயன்படுத்துவதற்கு) கோமயம், கிருமி நாசினி, வீடு மெழுக, வீபூதி தயாரிக்க, மங்கல நிகழ்வுகளுக்கு இப்படியாக பசு மாட்டினால் மனித வளர்ச்சிக்கு ஏற்படும் பயன்கள், நன்மைகளை அடுக்கிக்கொண்டே போகலாம். ஆகவே இந்துக்களாகிய நாம் வாதங்கள், பிரதி வாதங்கள், சட்டங்கள் என்பவற்றைப் புறந்தள்ளி மனப் பூர்வமாகக் கோ மாதா பூசிப்பதற்கே, புசிப்பதற்கு அல்ல என்று திடசங்கற்பம் பூண்போமாக.

*கருத்தாளர் ஓய்வுநிலை தலைமை எழுதுநர்*
*நகரசபை சாவகச்சேரி.*

# அதிபராக எமர்சன்

சிம்பாப்வேயில் கடந்த திங்கட்கிழமை அதிபருக்கான தேர்தல் நடைபெற்றது. எமர்சன் வெற்றி பெற்றார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

1980ஆம் ஆண்டில் இருந்து சிம்பாப்வேயின் அதிபராகப் பதவி வகித்து வந்தார் முகாபே. இவர் குடும்ப ஆட்சியை நடத்தத் திட்டமிடுகிறார் என்று குற்றஞ்சாட்டி கடந்த சில மாதங்களுக்கு முன்னர் அங்கு இராணுவப் புரட்சி நடத்தப்பட்டது. தலைநகர் ஹராரேயை இரவுடன் இரவாக தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த இராணுவம் ஆட்சியை முகாபேயிடம் இருந்து எடுத்தது. இதையடுத்து சானு கட்சியின் சார்பில் எமர்சன் சிம்பாப்வே இராணுவத்தால் ஆட்சியில் ஏற்றப்பட்டார். இத்தகையதொரு பின்னணியில் நடைபெற்ற இந்தத் தேர்தல் வரலாற்று முக்கியத்துவம் மிக்கதாக அமைந்தது. அதில் அதிபர் எமர்சன் ஆட்சியைக் கைப்பற்றி அதிபராகத் தொடர்கிறார்.

எது எப்படி அமைந்தாலும் முகாபேயின் மூன்று தசாப்த கால ஆட்சி சிம்பாப்வே தேர்தல் மீது மிகப்பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்தது என்பது மட்டும் நிதர்சனம். ஆபிரிக்க நாடுகளில் எந்தவொரு நாட்டிலும் இல்லாத அளவுக்கு எதிர்பார்ப்பு சிம்பாப்வேத் தேர்தலுக்கு இருந்தது.

**'சிம்பாப்பேயில் தேர்தலா...?'**






# கருணாநிதியும் காவேரியும்

ரவுண்ட் த வேல்ட்

தொகுப்பு
பிரகாஸ்

தி.மு. கழகத்தின் தலைவர் கருணாநிதியின் உடல்நிலை தொடர்பிலான தகவல்கள், வருத்தங்கள், மீம்ஸ்கள்தான் சமூக வலைத்தளங்களில் தற்போது நிறைந்துள்ளன.

தி.மு. கழகத்தின் தலைவர் கருணாநிதிக்கு தற்போது வயது 95. அண்மைக் காலமாக அவரின் உடல்நிலை சொல்லிக்கொள்ளும் படியாக இல்லை. கடந்த ஒரு வருடகாலமாக செயற்கைக் குழாயின்மூலம் சுவாசித்து வந்த கருணாநிதிக்கு கடந்த 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை சுவாசக் குழாய் மாற்றப்பட்டது. அதன் பின்னர் அவரின் உடல்நிலை மேலும் மோசமடைந்தது. இதனால் அவர் சென்னை காவேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகிறார். அவரின் உடல் நிலையில் அவ்வப்போது பல ஏற்ற இறக்கங்கள் இருந்தாலும் அவர் தற்போது ஓரளவு உடல்நலம் தேறியுள்ளார் என்று காவேரி மருத்துவமனை வட்டாரங்கள் தகவல் தெரிவித்துள்ளன. படுக்கையில் இருந்து கதிரைக்கு கருணாநிதி தற்போது மாற்றப்பட்டுள்ளார் என்ற தகவல்களும் வந்துள்ளன. கடந்த ஒரு வாரத்துக்கும் மேலாக காவேரி மருத்துவமனைக்கு முன்னால் திரண்டு நின்று "வா தலைவா வா..." என்று கூக்குரல் போட்டுக் கொண்டிருந்த தி.மு. கழகத்தின் தொண்டர்களுக்கு ஓரளவு ஆறுதலான செய்தி கிடைத்துள்ளது. எனினும் எப்போது வேண்டுமானாலும் எதுவும் நடக்கலாம் என்ற நிலை யில் தான் அவரின் உடல்நிலை உள்ளது.

**'மூப்புக்குத் தடையென்று எதுவும் இல்லையே...'**



# தலைமை அமைச்சர் இம்ரான் கான்

பாகிஸ்தான் நாடாளுமன்றத் தேர்தல் அண்மையில் நடைபெற்றது. பி.டி.ஐ. கட்சியின் சார்பில் போட்டியிட்ட இம்ரான்கான் அதிக இடங்களில் வெற்றிபெற்று பாகிஸ்தானின் தலைமை அமைச்சராகப் பொறுப்பேற்கவுள்ளார். இம்ரான் கானின் ஆட்சியில் பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் இடையில் பகைமை வளருமா அல்லது குறையுமா என்பதுதான் தற்போதுள்ள பெரிய எதிர்பார்ப்பு. இம்ரான் கான் பாகிஸ்தான் இராணுவத்தின் செல்லப்பிள்ளை என்கிற விமர்சனம் காலாகாலமாக உள்ளது. அவருக்கு பாகிஸ்தான் இராணுவம் வழங்கிய ஆதரவின் பயனாகவே அவர் தேர்தலில் வெற்றிபெற்றார் என்கின்றன பொதுவான கருத்துக்கள். இதனால் பாகிஸ்தான் இராணுவத்தைச் சார்ந்து இம்ரான் கான் செயற்படுவார். இதன் விளைவாக இந்திய இராணுவத்தினதும் இந்தியாவினதும் எதிர்ப்பை காஸ்மீர், ஊரி உள்ளிட்ட விவகாரங்களில் சந்திப்பார் என்கிறது ஒரு தரப்பு. அதே நேரம் பாகிஸ்தான் இராணுவத்தை இம்ரான் கான் கட்டுப்படுத்துவார். இதன் விளைவாக இந்தியாவுடன் நட்புறவை அவர் ஏற்படுத்துவார் என்கிறது இன்னொரு தரப்பு.

**'எதிர்பார்ப்பில் இம்ரானின் இரண்டாவது இன்னிங்ஸ்...'**

# நாய்கள் ஜாக்கிரதை

செல்லப் பிராணியாக நாய்களை வளர்ப்பவர்களுக்கு அவசியமான தகவல்தான் இது. ஆம், அமெரிக்காவில் நாயொன்று தனது உரிமையாளரின் கால்களை நக்கியதை அடுத்து அவர் தனது உடல் உறுப்புக்களை இழக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்.

செல்லப்பிராணிகள் என்றதும் பலரதும் முதலாவது தெரிவே நாய்கள்தான். மனிதர்களுடன் நெருங்கிப் பழகக்கூடியவையாகவும் உள்ளவை நாய்கள்தான். ஆனால் நாய்களுடன் பழகும்போது மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் என்கிற எச்சரிக்கையை பலரும் செவிமெடுப்பதில்லை. நாய்களின் எச்சிலைக்கூட இலகுவாக எடுத்துவிட முடியாது என்கிறது அமெரிக்காவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம். நாய் நக்கியதை அடுத்து அதைத் தீவிரமாகப் பொருள்படுத்தாது இருந்துள்ளார் குறித்த உரிமையாளர். காலப்போக்கில் அவரின் உடலில் பல இடங்களிலும் புண்கள் ஏற்பட்டுள்ளன. இதையடுத்து மருத்துவமனையை நாடியபோது நாயின் எச்சில் மூலம் பரவிய ஒரு கிருமி அவரின் உடலில் காயங்கள் ஏற்படக் காரணமாக இருந்துள்ளது. காலில் தாக்கம் அதிகம் இருந்ததை அடுத்து அவர் தனது கால்களை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

**'அவதானம் பாருங்கோ...'**



# மாற்றம்



எந்தச் சூழலிலும் சாவுத் தண்டனை வழங்குவது தவறு என்று, கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் தலைமைப் பீடமான வத்திக்கானில் உள்ள உரோமன் கத்தோலிக்க திருச்சபை கூறியுள்ளது. இதன் மூலம் சாவுத் தண்டனை குறித்த தனது முந்தைய நிலைப்பாட்டை வத்திக்கான் மாற்றியுள்ளது. சாவுத் தண்டனை என்பது ஒரு தனி மனிதரின் வரம்பு மீறக்கூடாத விவகாரங்கள் மற்றும் கண்ணியம் ஆகியவற்றின் மீதான தாக்குதல் என்று வத்திக்கான் கூறியுள்ளது. உலகம் முழுவதும் சாவுத் தண்டனையை ஒழிக்க பாடுபடுவோம் என்றும் கத்தோலிக்க திருச்சபை தெரிவித்துள்ளது. இதற்கு முன்னர் மிகவும் தீவிரமான சூழ்நிலைகளில் மட்டுமே சவுத் தண்டனையை ஏற்றுக்கொள்ள முடியும் என்று கத்தோலிக்க திருச்சபை கூறியிருந்தது. "சிறையில் அடைக்கப்பட்டுள்ள ஒருவரை கொலை செய்வது, அவர் குற்றத்தை நினைத்து வருந்துவதையும், அவர் திருந்துவதற்கான சாத்தியம் நிறைந்த வாய்ப்புகளையும் தடுக்கும்," என்று வத்திக்கான் திருச்சபையின் செய்தி அலுவலகம் தெரிவிக்கிறது.

**'இலங்கைக்குத் தேவையான மாற்றம்...'**

3



# சீசெல்ஸ்

வாரம் ஒரு நாடு

உலகிலேயே அதிக எடை கொண்ட ஆமை எங்கே இருக்கிறது? 670இறாத்தல்கள் எடைகொண்ட ஆமை இருக்கும் பறவைத் தீவுக்கு இந்த வாரம் உங்களை அழைத்துச் செல்கிறோம். 115வரையான தீவுகளைக் கொண்ட நாடான சீசெல்ஸின் ஒரு தீவுதான் இந்தப் பறவைத் தீவு. இந்த ஆமையை 'எமெரெல்டா' என்று அழைக்கிறார்கள்.

**சீசெல்ஸ் தீவுக்கூட்டம் எங்கே இருக்கின்றது?**

ஆபிரிக்காக் கண்டத்துக்குக் கிழக்காக, கென்யா மற்றும் தான்சானியா நாடுகளின் கரையோர எல்லைக்கோட்டுக்கு நேர் எதிராக, மடகஸ்காரிலிருந்து வடகிழக்குத் திசையில், மத்தியகோட்டை அண்மித்ததாக இந்து சமுத்திரத்தில் அமைந்திருக்கிற தீவுக்கூட்டமே சீசெல்ஸ்!

இங்கு பயணமாவதற்கு முன்பே நுழைவிசைவுக்கு விண்ணப்பிக்க முடியும். அங்கு சென்று இறங்கியதும் நுழைவிசைவு வழங்கப்படும். வந்தாரை வரவேற்கும் நட்பு நாடு என்று 13நாடுகளைக் குறிப்பிடுகிறார்கள். அதில் ஒன்று இந்த சீசெல்ஸ்! முன்னொரு காலத்தில் கடற்கொள்ளையர்களின் பதுங்கு தேசமாக இருந்த இந்த நாட்டில், பிரபல்யமாக இருந்த கடற்கொள்ளைக்காரர்களில் ஒருவனான 'ஒலிவர் லெவொசூர்' என்பவன் பதுக்கி வைத்த 1இலட்சத்து 60ஆயிரம் டொலர்கள் பெறுமதியான புதையல் இன்னும் எவர் கையிலும் கிடைக்கவில்லை என்று சொல்லப்படுகின்றது.

சீசெல்ஸ் குடியரசு என்று அழைக்கப்படும் இந்த நாடு, 1976ஆம் ஆண்டில், பிரிட்டனிலிருந்து சுதந்திரம் பெற்றிருக்கிறது. இங்கு செல்வம் நிறைந்து கிடப்பதால், கொழுத்த பணக்காரர்களாகவே அதிகர் இங்கிருக்கிறார்கள். விவசாயமே இவர்களுக்கு வருமானம் தேடிக் கொடுப்பதாக இருந்தது. இப்போது காலம் மாறிவருகின்றது. உல்லாசப் பயணிகளை அதிகளவில் கவர்ந்திழுக்கும் நாடாக இது மாறி வருகின்றது.

**ஏன் சீசெல்ஸ் என்ற பெயர்?**

இந்த நாட்டைப் பற்றிய பதிவுகளின் பெரும் பகுதியில், இங்கு யாருமே குடியிருக்கவில்லை என்றே குறிப்பி டப்பட்டுள்ளது. இங்கே சமாதிகள் பல காணப்பட்டமையால் தான், மக்கள் இங்கு வாழப் பின்வாங்குகிறார்கள். பதிவுகளின்படி முதற் தடவையாக இந்தத் தீவைக் கண்டு பிடித்தது, ஐரோப்பியாவைச் சேர்ந்த கடலோடிகளான போர்த்துக்கேயர்கள்தான்! 1609ஆம் ஆண்டில்தான் ஆங்கிலேயர்கள் இந்தத் தீவில் காலடி எடுத்து வைத்திருக்கிறார்கள்.

ஆபிரிக்காவுக்கும் ஆசியாவுக்கும் இடையிலான வர்த்தக மையமாக, கடற் கொள்ளையர்களால் இந்தத் தீவுகள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆனால் 1756ஆம் ஆண்டில் பிரெஞ் நாட்டவர், தமது கட்டுப்பாட்டுக்குள் இதைக் கொண்டுவந்ததோடு அந்தக் காலகட்டத்தில் பிரான்ஸின் மன்னர் 15ஆவது லூயிஸின் நிதி அமைச்சராக இருந்த ஜீன் சீசெல்ஸ் என்பவரின் பெயரையும் இந்தத் தீவுக் கூட்டத்துக்குச் சூட்டினர். 1794ஆம் ஆண்டுக்கும் 1810ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் இந்தத் தீவுக் கூட்டத்தைப் பிரித்தானியர்கள் தமது ஆட்சியின் கீழ் வைத்திருந்திருக்கிறார்கள்.

**சுதந்திரப் பறவையானது...**

1810ஆம் ஆண்டில் பிரிட்டனின் முழுக் கட்டுப்பாட்டுக்குள் வந்த இந்தத் தீவு, அதன்பின்பு 1903ஆம் ஆண்டில் முடிக்குரிய காலனித்துவ நாடாக மாறியது. 1966 மற்றும் 1970ஆம் ஆண்டுகளில் அரசுக்கான தேர்தல்கள் நடந்திருக்கின்றன. கொமென்வெல்த் நாடுகளுள் ஒன்றாக, 1976ஆம் ஆண்டில் இந்தத் தீவும் உள்ளடங்கியது!



1990களில் தொடர்ச்சியாக இங்கு புரட்சிகள் வெடித்தன. றக்பி விளையாட்டு வீரர்கள்போல வந்த தென் ஆபிரிக்க கூலிப்படையினர், நாட்டைப்பிடிக்க முயன்றிருக்கின்றனர். இந்தக் கூலிப் படைக்குத் தலைமை வகித்தவன் ஜேர்மன் நாட்டுக் குடிமகன் ஒருவன். அவன் இந்தியா விமானம் ஒன்றைக் கடத்தி அதன் மூலம் தப்பிச் சென்றிருக்கிறான். 1986ஆம் ஆண்டில் சீசெல்ஸின் பாதுகாப்பு அமைச்சராக இருந்தவர் அப்போது அரசதலைவராக இருந்தவரைத் தூக்கியெறிய எடுத்த முயற்சி, அங்கு தரை தட்டிய இந்தியக் கடற்படைக் கப்பலால் முறியடிக்கப்பபட்டிருக்கிறது.

**தீவுகளுக்குத் தனித்துவம்**

இந்தத் தீவுக் கூட்டங்களில் அதிகமானவை மனித வாழ்வுக்கு உகந்தவையல்ல! மனிதர்கள் சாதி, மதம் என்று பிரிந்து கிடப்பதுபோல, இந்தத் தீவுக் கூட்டங்களும் பிரிந்து கிடக்கின்றன. கிரனைட் தரையைக் கொண்டவையாக இங்குள்ள 45தீவுகள் உள்ளன! அளவுகளில் வேறுபட்டவை. 29வரையான பவளப் பாறைத் தீவுகள் இருக்கின்றன. 42 தீவுகளை உள்ளடக்கிய ஒரு பகுதியை 'உள்ளூர்த் தீவுகள்' என்று அழைக்கின்றார்கள்.

இதன் பரப்பளவு 244சதுர கிலோமீற்றர்கள். சீசெல்ஸின் 54வீதமான நிலப் பரப்பை இந்தத் தீவுகள் கொண்டுள்ளன. அது மாத்திரமல்ல இங்கு வாழும் மக்களில் 98வீதமானவர்கள் இந்தப் பகுதியில்தான் வாழ்கிறார்கள்.




**கவர்ந்திழுக்கும் காட்டு வாழ்க்கை**

இருக்கிற காட்டுப் பிரதேசத்தை அழியாமல் பாதுகாக்க வேண்டும் என்ற முனைப்போடு செயற்படும் நாடுகளில் ஒன்றாகச் சீசெல்ஸ் திகழ்கின்றது. இங்குள்ள காடுகளில் 42வீதமான பகுதி அழியாமல் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. இங்கு உலகப் புகழ்பெற்ற இராட்சத ஆமைகள் வாழ்கின்றன. கிரனைட் தீவுகள்தான் இந்த ஆமைகளின் வாசஸ்தலம்! ஏற்கனவே அழிக்கப்பட்டு விட்ட காடுகளால், பல அரிய காட்டு வாழ் உயிரினங்கள் அழிந்து விட்டதாகக் கூறப்படுகின்றது. என்றாலும் மொரீஸஸ், ஹவாய்த் தீவுகள் சந்தித்த அளவுக்கு மோசமான அழிவுகளை இந்தத் தீவுகள் சந்திக்கவில்லை என்பது ஓர் ஆறுதலான விடயம். இங்கு மிக அரிய வகைப் பறவையாக இனங்காணப்படுகிற கறுப்புக் கிளி, இந்த நாட்டின் தேசியப் பறவையாக இருக்கிறது. 75 வரையான வேறுபட்ட தாவர இனங்கள் இங்கு இருப்பதாகச் சொல்கிறார்கள்.

**ஆச்சரியப்படுத்தும் கடல் தென்னை**

'லொடோயிசியா' என்று உள்ளூரில் அழைக்கப்படும் கடல் தென்னை அல்லது இரட்டைத் தென்னை இந்த நாட்டுக்கே உரியது. (யாழ்ப்பாணத்து கறுத்தக் கொழும்பான்போல). தென்னைக் குடும்பத்தைச் சேர்ந்த இந்த மரத்துக்குப் பிரான்ஸ் நாட்டின் முன்னாள் மன்னர் 15ஆவது லூயிஸின் பெயரை அடிப்படையாக வைத்தே இந்தப் பெயர் வழங்கப்பட்டுள்ளது.

இதன் அண்ணளவான உயரம் 186அடி(56.7மீற்றர்கள்) வரை இருக்கும். இலையானது மின் விசிறிகள் போலவிருக்கும். 10 வருட காலத்துக்குத் தொடர்ந்து பலன் கொடுக்கும்.

கட்டுரை
ஏ.ஜே.ஞானேந்திரன்

நல்ல பழுத்த தேங்காய் ஒன்று 15தொடக்கம் 30 கிலோ வரை இருக்கும் என்கிறார்கள். தாவர இனங்களில் மிகப் பெரிய விதையைக் கொண்டது இதுதான்!

**மிகச் சிறிய தலைநகரம்**

உலகின் மிகச் சிறிய தலைநகரம் எது? என்றொரு கேள்வியைக் கேட்டால், உங்கள் பதில் என்னவாக இருக்கும்? சிசெல்ஸ் நாட்டின் தலைநகரமான விக்டோறியா தான் அதற்கான பதில்! ஒரே நாளில் பொடி நடையில் இந்தக் குட்டித் தலைநகரை நீங்கள் சுற்றிப் பார்த்து விடலாம். 455 சதுர கிலோமீற்றர்கள் பரப்பளவு கொண்ட இந்த நாட்டின் சனத்தொகை 92ஆயிரம்(2015ஆம் ஆண்டில்). தலைநகரில் 26ஆயிரம் பேர் காணப்படுகிறார்கள். இவர்களின் அலுவலக மொழி ஆங்கிலம், பிரெஞ், கிரியோல். ஆபிரிக்கக் கண்டத்தின் ஒரு பகுதியான இந்தத் தீவுக்கூட்டத்திலிருந்து வனிலா, தேங்காய், தேங்காய் எண்ணெய். மீன் ஆகியன ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

**நண்டுகளில் குண்டன்**

இந்தத் தீவுக்கூட்டத்தில் 32வகையான நண்டுகள் வாழ்கின்றன. ஆவி நண்டு, சந்நியாசி நண்டு என்று நீளும் பட்டியலில் பிரத்தியேகமாக இருப்பவர்தான் இந்தத் தென்னை நண்டு! இங்குள்ள பிரத்தியேக தேங்காய் போல, இங்கு மட்டுமே காணப்படும் தேங்காய் நண்டு இந்த மண்ணுக்குத் தனித்துவமானது. உலக நாடுகளில் மிகப் பெரிய தரைவாழ் நண்டுகள் இங்கேதான் காணப்படுகின்றன. கொள்ளைக்கார நண்டு என்றொரு பெயரும் இதற்குண்டு. 4.1கிலோக் கிராம் வரையில் காணப்படும் இந்த நண்டுதான் உலக நாட்டு நண்டுகளின் குண்டன். 10 கால்களும் பெரிய வயிறும் கொண்டது இது! ஒரு மீற்றர் நீளம் வரை இது வளரும். 30 தொடக்கம் 60 ஆண்டுகள் வரை இது உயிர் வாழக்கூடியது.

**பறவைகளின் சாம்ராஜ்யம்**

190வரையான இனப் பறவைகள் இங்கு வாழ்கின்றன. இந்தத் தொகை காலத்துக்குக் காலம் அதிகரித்து வருகின்றது. இவற்றில் பெரும்பான்மையானவை இங்கே வந்து போகும் பறவைகள்! இந்தத் தீவுகளிலேயே நிரந்தரமாக வாழ்பவை 19வரையான இனப் பறவைகள் மாத்திரமே! ஆபிரிக்கா, ஆசியாக் கண்ட நாடுகளிலிருந்து பறந்து வரும் பறவைகள் இங்கே காலத்துக்குக் காலம் கூடுகின்றன. தரை வாழ் பறவைகள் இங்கு வருவது குன்றவு என்றாலும், கடல் மார்க்கமாகப் பெருந் தொகையான பறவைகள் இங்கு பறந்து வந்து தங்கிப் போகின்றன.

**ஈரப்பலா சுவைஞர்கள்**

இங்குள்ளவர்கள் (சிங்களவர்கள்போல) ஈரப்பலாக்காயைப் பல விதங்களில் உணவாக்கிச் சுவைத்து மகிழ்கிறார்கள். பொரித்து, அவித்து என்று பல முறைகளில் சமைத்து, ருசித்துச் சாப்பிடுவது இங்குள்ளவர்கள் வழமை! மேலை நாடுகளில் கிழங்கு சிப்ஸ் பிரபல்யமாக இருப்பதுபோல், இங்கு ஈரப்பலாக்காய் சிப்ஸ் மிகப் பிரபல்யம். இதேபோல ஈரப்பலாக்காய் கொண்டு தயாரிக்கப்படும் வேறு பல சுவையான உணவுகளும் இங்கு இருக்கின்றன. இங்கு வந்துவிட்டு ஆமைக் கறிக்கு ஆசைப்பட்டு விடாதீர்கள். இலங்கையைப் போலவே இங்கும். இதைக் கொல்வது தடைசெய்யப்பட்டிருக்கின்றது.



தொடர்கதை

கே.எஸ்.ஆனந்தன்

# நின்னைச் சரணடைந்தேன்

அத்தியாயம் 25

"மேடம் நான் விஸ்வா பேசுறன்"
"என்ன நடந்தது? ஏன் உங்களை வழிமறித்துத் தாக்கினார்கள்? இப்ப எப்படியிருக்கிறீர்கள் விஸ்வா?"
"மேடம் என்னை எவரும் தாக்கவில்லை. நாய் குறுக் காலை ஓடினதாலை நாயோடை இடிபட்டு விழுந்து விட்டன். பெரிதாக ஒண்டும் இல்லை" என்றார்.
"ஆண்டவன் காப்பாற்றி விட்டார். நாளைக்கு நான் வீட் டுக்கு வாறன். நீங்கள் றெஸ்ட் எடுங்கள். சரி வைக்கி றன்" என்று கூறிவிட்டு ரவிசங்கரைத் திரும்பிப் பார்த் தாள். அவன் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான்.
படுக்கையில் கிடந்தபடியே விஸ்வலிங்கம் கூறியதை மீளவும் நினைவுக்குக் கொண்டு வந்தாள்.
உண்மையில் அவரை யாரும் வழிமறித்துத் தாக்கவில் லையா? நாய் குறுக்கே போனதால்தான் அடிபட்டு விழுந்தாரா? விடை புரியாத கேள்விகளுடன் சில மணி நேரங்கள்வரை போராடிவிட்டு,
"ரவி ரவி" என்று அவனை இழுத்துத் திருப்பினாள். அவன் அசைந்து கொடுக்காமல் அப்படியே படுத்தி ருந்தான். மீண்டும் அவள் அவனை எழுப்பியபோது,
''பேசாமல் படு சுவேதா. எதுக்காக என்ரை நித்திரையைக் கெடுக்கிறாய்" என்றான்.
"பிரயோசனமற்ற ஒன்றுக்காக ஏன் கோபிக்கிறீங்கள்"
"சுவேதா! பிளீஸ் டோன்ற் டீஸ்ரப் மீ" என்று கூறி விட் டுப் புரண்டு படுத்து விட்டான்.
அவளால் எதுவும் பேசமுடியவில்லை. பேசாமல் படுத்து விட்டாள். நீண்ட நேரத்தின் பின்பு நித்திராதேவியின் அணைப்பில் தூங்கிவிட்டாள்.
காலையில் அவள் எழுவதற்கு முன்பு ரவிசங்கர் எழுந் துவிட்டான். அவளை எழுப்பவில்லை. மற்றைய வேளைகளில் அவளே முதலில் எழுந்து அவனை எழுந்திருக்கச் செய்வாள். காலைக் கடன்களை முடித் துக் கொண்டு பூசை அறையில் தியா னத்திலிருந்தான் ரவி. சுந்தரமூர்த்தி வந்து படுக்கை அறை வாசலில் நின்று அவளை அழைத்தபோது தான் எழுந்து வெளியே வந்தாள்.
"அவர் எங்கயப்பா?" "அங்க பூசை அறையில்"
அவள் குளித்து விட்டு வெளியே வரும்போது ரவிசங் கரின் வண்டி புறப்பட்டுச் சென்று கொண்டிருந்தது. அவளால் எதுவும் செய்யமுடியவில்லை. அறைக்குள் சென்று போனை எடுத்து அவனுக்கு அழைப்பை ஏற்படுத்தினாள். அவன் போனை எடுக்கவில்லை. அவசர அவசரமாகப் புறப்பட்டாள்.
"எங்கே அப்பா அவர் போறார்? ஏதும் சொன்னாரா?" என்று கேட்டாள்.
"சிலவேளை ஹொஸ்பிட்டலுக்குப் போயிருப்பாரோ தெரியாது"
"ஒன்றும் பேசாமல் போய்விட்டார். வண்டி வந்திட்டுது நான் ஒவ்பீசுக்குப் போறன் வந்தால் சொல்லுங்கள்'' என்று கூறி விட்டுப் புறப்பட்டுச் சென் றாள்.

●●●

வண்டியை விட்டிறங்கிக் காரியாலயத்துக்குச் செல்லும் போது விசாலி ஓடிவந்து, "குட்மோனிங் மேடம்" என் றாள்.
"குட்மோனிங் விசாலி! என்ன எல்லாரும் என்னைக் கண்டதும் மௌனமாகிவிட்டார்கள். ஏதும் புதினமா?" என்றாள்.
"மேடம்! மிஸ்ரர் விஸ்வாவை இரவு யாரோ வழிமறிச்சு அடிச்சதாகக் கதைக்கிறார்கள்"
"வேறு ஒன்றுமில்லையே?"
"இல்லை. விஸ்வா சேருக்கு அடிச்சதைப் பற்றித்தான் எல்லாரும் கதைக்கிறார்கள்"
"ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு கதை கதைக்கிறார்கள். எதை நம்புறதெண்டு தெரியாமலிருக்கு"
"சரி ஆறுதலா விசாரிப்பம். அவரை யாரும் அடிக்கவில் லையாம். நாய் குறுக்கே ஓடியதால் அடிபட்டு விழுந்து காயப் பட்டதாக அவரே போன் செய்து கூறினார்" என்று கூறிவிட்டுத் தன்னுடைய அறைக்குள் சென்றாள்.
"குட்மோனிங் மேடம்" என்றான் குருசாமி.
"குட்மோனிங். மிஸ்ரர் சுரேஷ் வந்திட்டாரா?"
"இல்லை மேடம். மிஸ்ரர் சுரேஷ் போன் செய்தார். ஆஸ்பத்திரிக்குப்போய் விஸ்வ சேரைப் பார்த்து விட்டு வருவதாகவும் உங்களிடம் சொல்லும்படியும் கூறினார்".
"சரி வரட்டுக்கும் வந்ததும் என்னைப் பார்க்கும்படி சொல்"
"சரி மேடம்" என்று கூறி விட்டு வெளியே சென்றான் குருசாமி.

●●●



மாலை நான்கு மணி.
வீட்டுக்கு போன் செய்து சுந்தரமூர்த்தியிடம் ரவியைப் பற்றி விசாரித்தாள். அங்கே வரவில்லை என்று அறிந்து செல்லம் மாவுக்குப் போன் செய்து விசாரித்தாள்.
"இன்று மதியம் சாப்பாட்டுக்கு வரவில்லையம்மா. உங்கள் வீட்டிலை சாப்பிட்டானா?"
"அவர் கடைக்குப் போயிருக்கலாம். அங்க சாப்பிட்டிருப்பார். அத்தை இரவுக்கு வருகிறோம் சாப்பாடு செய்து வையுங்கோ" என்றாள். "சரி சுவேதா. இன்று சைவக் கறிதான்"
"பரவாயில்லை அத்தை" என்று கூறித் தொடர்பைத் துண்டித் தாள். அத்துடன் அமுதசுரபிக்குப் போன் செய்தாள்.
"ஹலோ யார் பேசுறது? இது அமுதசுரபி உடுப்புக் கடை"
"நான் சுவேதா பேசுறன். ரவிசங்கர் நிற்கிறாரா?"
"ஓம் மேடம் காலையில் இருந்து இங்கே தானிருக்கிறார் மேலே படுத்திருக்கின்றார் கூப்பிடட்டுமா?"
"வேண்டாம். நான் அங்க வாறன். அவர் அங்கு இருக்கிறாரா என அறியத்தான் போன் செய்தேன்'' என்று கூறி விட்டுப்புறப்பட்டாள்.

●●●

வண்டியில் ஏறியதும் "டிரைவர் வண்டியை அமுதசுரபிக்கு விடுங்கள். அங்கே என்னை விட்டு விட்டு நீங்கள் திரும்புங்கள். அங்கே எங்கள் கார் நிற்கிறது. அதில் போய்க்கொள்வேன்" என்றாள்.
"சரி மேடம். நீங்கள் ஹொஸ்பிட்டலுக்குப் போவீர்கள் என்று எதிர்பார்த்தேன்" என்றான்.
"நானும் மிஸ்ரரும் எங்கள் வண்டியில் போகிறோம். ஒவ் பீஸ் வண்டியை எங்கள் சொந்தத் தேவைக்குப் பாவிக்க கூடாது" "இல்லை மேடம் எங்கள் நிறுவன ஊழியரைப் போய்ப் பார்ப்பதற்கு ஒவ்பீஸ் வண்டியில் போகலாம் தானே?"
"அவரும் வாறன் என்றார். அதனால் தான் எங்கள் வண் டியில் போவதாக முடிவுசெய்தோம்"
"சரி மேடம்" என்று கூறி வண்டியைச் செலுத்தத் தொடங் கினான். சில நிமிட நேரத்தில் அமுதசுரபிக்கு முன்பாக வண்டியை நிறுத்தினான். சுவேதா இறங்கி உள்ளே சென்றாள்.
வண்டியை விட்டிறங்கி உள்ளே சென்றதும் நேரே மாடிப்படிகளில் ஏறினாள். அங்கிருந்த ஒரு சாய்வு நாற்காலியில் படுத்துக்கிடந்தபடி புத்தகம் ஒன்றைப் படித்துக் கொண்டிருந்தான் ரவி. சுவேதா வருவதைக் கண்டதும் புத்தகத்தை மூடி விட்டு எழுந்தான்.
"என்ன நடந்தது? எதுவும் பேசாமல் வந்து விட் டீர்கள்? என்ன சொல்லி விட்டேன்?" என்று கண் ணீர் விட்டாள்.
"சுவேதா! இங்கே எதுவும் கதைத்து எங்கள் பிரச் சினைகளை மற்றவர்கள் அறியச் செய்யாது பேசமாலிரும்"
"அத்தை, வீட்டுக்கு வரும்படி சொன்னவா. நீங் கள் மதியமும் சாப்பிடவில்லை" என்றாள். எங்க சாப்பிட்டனிங்கள்?"
"சாப்பாடு தானே? எங்க வேண்டுமானாலும் சாப் பிடலாம்" என்று கதிரையை விட்டெழுந்த சமயம், அங்கே வேலை செய்கிற ஒரு பெண் தட்டில் பிஸ் கட்டும் தேனீரும் கொண்டுவந்தாள்.
"உட்காருங்கள் மேடம்" என்று கூறிக் கொண்டு வந்து இருவருக்கும் நடுவில் அவற்றை வைத்து விட்டுச் சென்றாள். தேனீர்க் கோப்பையை எடுத்து அவனைநோக்கி நீட்டினாள். அவன் தட் டில் வைத்திருந்த மற்றைய தேநீர்க் கோப் பையை எடுத்துப்பருகினான். அவள் மனதில் விழுந்த முதல் அடியாக அதை நினைத்தாள்.
"வாயைத் திறந்து தான் சொல்லுங் களேன். நான் என்ன சொல்லி விட்டேன் என்று இப்படியிருக்கி றீர்கள்?"
"சொன்னதும் உனக்குத்தான் தெரியும். செய் ததும் உனக்குத்தான் தெரியும். அதை எனது வாயால் கேட்க ஆசைப்படுகிறாய். இல் லையா?"
உனது ஒவ்பீசில் வேலை செய்பவர் உனக்கு அண்ணனாக இருக்கலாம். விடிந்ததும் அவரைப் பார்க்கப் போகலாம் என்றால், இரவே அந்தாள் வீட்டுக்குப் போன் போட்டுப் பேசினாய்.... அவர் தனக்கு ஒருவரும் அடிக்க வில்லை. நாய் குறுக்கே ஓடியதில் அடிபட்டு விழுந்தன் என்கிறார்... அப் படித்தானே? நான் சொன்னதை நீ கேட் டியா? கேட்கமால் என்னை உதாசீனம் செய்தது மட்டுமன் றிப் பிரயோசனமற்ற ஒன்றுக்கு ஏன் கோபிக்கிறியள் என்று கேட்டாய். அதன் கருத்து என்ன? நான் உன்னை ஏமாற்றிப் பிரயோசனமற்ற ஒன்றைச் செய்து கொண்டிருக்கிறன். இல் லையா?" கூறியவன், "இங்கே கதைப்பது சரியில்லை. வா வீட்டுக்கு" என்று கூறிப் படிகளில் இறங்கி நடந்தான்.
விக்கித்து நின்றாள் சுவேதா. (தொடரும்)

## சமூகமே! உன்னைத்தான்

கவிதை
வேலணையூர் தஜு

ஒழுக்கக் கட்டுகளை அவிழ்த்து
ஓரமாய் வைத்துவிட்டு
நாகரீக கவரிங் நகையுடன்
நடைபயிலும்... சமூகமே
உங்களைத் தான்.
சற்று நேரம் என்னுடன்
தேநீர் குடித்தால் என்ன?

சிகரெட் புகையும்
சேர்ந்தே போதைப் பாக்கும்
மதுவும்.... மாதுவும்
மக்கிப்போன பண்பாடும்
இணைய போதையும்
இறுக்கமிழந்து கிடக்கும்
சுயகட்டுப்பாடும்....
சுயநலங்களும்
வீட்டுச்சண்டை தொடங்கி
வீதிவரை வேடிக்கை
வாள் வெட்டும்....
வன்புணர்வும்....
வாடிக்கையான வாழ்க்கை முறை
யும்.

வீரத்தமிழன் விதைத்த விதைகள்
வேலி தாண்டிப் போவது ஏனோ???
நாளைய வரலாற்று
பக்கங்கள் இன்றே...,
நசுங்கி கசங்கி கருகியதேனோ?
நாகரீகம்.....,
நாட்டுக்கு மறுமலர்ச்சி
நாகரீகம் போர்த்திய மாயை.....
வெறும் வீழ்ச்சிக்கே!
உணர்ந்துகொள்
உனை திருத்திக்கொள்



தொடர்

தாஸ் மாஸ்ரர்

# சிறைக் கதவில் எத்தனை கம்பிகள்?




ஜெயிலர் தரத்தில் உள்ளவர்கள் சம்பந்தப்படாவிட்டாலும், பொறுப்பதிகாரிகள், ஏனைய ஊழியர்கள், கைதிகள், உறவினர்களிடம் பணம் வாங்குவார்கள். அவ்வாறான ஊழியர்களுக்கு இதைவிட அதிக பணம் உழைக்கும் சந்தர்ப்பங்கள் இருந்தபோதிலும் மேலதிக உழைப்பைப் பெற்றுக் கொள்ளக்கூடிய மற்றொரு வழியாக இது இருக்கிறது. அதி உச்ச பேரம் பேசுகின்ற தளமும் இதுதான். கைதியும் உறவினரும் கதைப்பதற்கு அனுமதி வழங்கும்போது எவ்வளவு நேரம் கதைக்கவிட வேண்டும் என்று நீதிபதி குறிப்பிடுவதில்லை. இதனால் கதைக்கும் நேரத்தைச் சிறைச்சாலை ஊழியர்களே தீர்மானிக்கின்றனர். அந்த நேரத்தைக் குறைக்கும்போது பொருளாதாரக் கோட்பாட்டைப்போல 'பணக் கேள்வி' கூடுகிறது. இதனால் சிறைச்சாலை ஊழியர்களுக்குக் கைதியோ, கைதி சார்ந்தவர்களோ கூடிய பணம் செலுத்த வேண்டியுள்ளது.

சிறைக்குள் இருந்து விடுதலையான ஒரு நபர் தனது நண்பர்களைப் பார்க்க நீதிமன்றம் வந்தபோது, அவருக்குப் பழக்கமான சிறைச்சாலை ஊழியர்கள் அவரிடம் சிகரெட், பணம் எனத் தொல்லை கொடுத்திருக்கிறார்கள். அவர் அவற்றை வாங்கியும் கொடுத்திருக்கிறார். பின்னர் அவர் நீதிமன்றக் கட்டடத்தின் வெளிப்புற வீதியில் நிற்பதைக் கண்டேன். "ஏன் இதில் நிற்கிறீர்கள்?" என்க் கேட்டபோது "வீட்டுக்கு மரக்கறி வாங்கிக் கொண்டுபோகவேணும் என்று சிறைச்சாலைப் பொறுப்பதிகாரி ஒருவர் என்னிடம் காசு கேட்டார், அவருக்கு ஒழிச்சுத்தான் இதிலை நிற்கிறன்" என்றார்.

கைதியைப் பார்க்க வருகிற, உறவுக்காரரின் தவிப்பையும் கைதி படுகின்ற வேதனையும் மூலதனமாக வைத்தே சிறைச்சாலை ஊழியர்கள் பணத்தை வசூலிக்கிறார்கள். குறிப்பாகத் தமிழ் அரசியல் கைதிகளின் உறவினர்கள் சற்றே வசதி படைத்தவர்கள் எனத் தெரிந்துவிட்டால் பல வழிகளிலும் சுரண்டுவார்கள். வெளிநாடுகளில் இருந்து திருப்பி அனுப்பப்பட்டுக் கைதாகுபவர்கள் தடுத்து வைக்கப்படுகின்ற நீர்கொழும்புச் சிறையில் இதன் உச்சக்கட்டத்தை அவதானிக்கலாம். கைதியைச் சந்திக்க வருகிற உறவுக்காரரிடமிருந்து குறைந்தது ஐந்நூறு ரூபாவையாவது வாங்காமல் கதைக்க விடமாட்டார்களாம்.

கைதிக்குத் தாங்கள் கொடுப்பதாகச் சொல்லிச் சில ஜெயிலர், பொறுப்பதிகாரிகள் கைதிகளின் உறவுக்காரரிடம் பணத்தை வாங்குவார்கள். ஆயிரம் ரூபா வாங்கினால் 100அல்லது 200ரூபாவையே கைதிக்கு வழங்குவார்கள். இத்தகைய சம்பவங்கள் நிறையவே உண்டு. அவ்வாறான ஊழியர்களைக் கொண்டுதான் கடிதம், வேறு தகவல்களை வெளியே அனுப்புகிற நிலை இருக்கிறது. உறவினர்களிடமிருந்து அவர்கள் பெற்ற நிஜத் தொகைப் பணத் கேட்க முடியாத சூழல் இருக்கிறது. அத்துடன் அதனால் பாதிப்பில்லை என்றுவிட்டுப் பணத்தைக் கேட்டாலும், அடுத்த முறை நீதிமன்றம் போகும் போது உறவினர்களிடம் கதைக்கவிடாது தடுத்து விடுவர் என்ற தயக்கமும் கைதிகளிடம் இருக்கும்.

ஒரு கைதி சிறைச்சாலைக்குள் ஏதாவது குற்றம் செய்து விட்டால் அதுபற்றி விசாரிக்கும் அதிகாரம் சிறைச்சாலை நிர்வாகத்துக்கு உண்டு. அவ்வாறான விசாரணைகளின் பின் அந்தக் கைதிக்குத் தண்டனை வழங்குகின்ற அதிகாரமும் சிறைச்சாலை அத்தியட்சகருக்கு உண்டு. தனியான, வசதிகளற்ற இருட்டறைகளில் (டாக் றூம், பனிச்மென் றூம்) நீண்ட நேரம் அடைத்து வைத்திருப்பது, உப்புத் தண்ணியும், சோறும் மட்டுமே உண்ணக்கொடுப்பது அல்லது இறுக்கமான நடைமுறைகள் உள்ள வேறு சிறைகளுக்கு மாற்றுவது. இவற்றைவிட அந்தக் கைதிக்கான ஆவணக் கோவையில் சிவப்பு மையால் சிறைச்சாலைக்குள் குற்றம் செய்தமை பற்றியும் எழுதப்படும். அதுவே தீர்ப்பு வழங்கப்படாத கைதியாக இருந்தால் அவர் மீது சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கு அது வலுச்சேர்ப்பதாக அமையும். அதாவது சிறைக்குள்ளேயே இவ்வாறான ஒரு குற்றத்தைச் செய்துள்ள ஒருவர் அவர் மீது சுமத்தப்படுவதான குற்றச்செயலை இலகுவாகச் செய்திருப்பார் என்பதே அந்த வலுவாகும்.

சிறைச்சாலையில் ஒரு கைதியைப் பற்றிய தகவல்கள் அவனது பெயர், ஊர், வயது, விலாசம், அங்க அடையாளங்கள் என்பவற்றுடன் அவன் எத்தனை வழக்குகளில் சம்மந்தப்பட்டுள்ளான், எந்தெந்த இடங்களில் வழக்குகள் உண்டு என்ற சகல விவரமும் அடங்கியுள்ள கோவையைக் 'கொமிற்றல்' என்று குறிப்பிடுவர்.

ஒரு கைதி சம்பந்தமான தேடலைச் செய்வதற்கு இது மிகவும் அவசியமாகிறது. அதேபோல ஒரு கைதியை ஒரு சிறையிலிருந்து மற்றைய சிறைக்கு மாற்றும் போது 'கொமிற்றலை'யும் சேர்த்து அனுப்புவார்கள். புதிய சிறைச்சாலை அதிகாரிகள் அதைப் பார்த்துக் கைதிக்குரிய சிறை ஏற்பாடுகளை மேற்கொள்வர்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்ற கைதிகளைப் பொறுத்தவரை காலவரையரையற்ற தடுப்புக்காவல் உத்தரவுக்கான கடிதம் கொமிற்றலில் இருக்கும் வழக்கு முடிந்தாலும் வெளியில் விடாது தடுத்து வைத்திருக்கும் சட்ட ரீதியான அதிகாரம் சிறைச்சாலை நிர்வாகத்துக்கு உண்டு. (அதாவது ஒருவருக்கு 3வரையான வழக்குகள் இருந்தால், அந்த மூன்றிலிருந்தும் அவர் விடுதலை என்ற உத்தரவை நீதிவானிடமிருந்து எழுத்து மூலம் பெற்றுக்கொண்ட பின்பு வேறு ஏதாவது நீதவானின் பணிப்புகள் உண்டா? என்பதைக் கொமிற்றலில் பார்த்த பின்பு விடுவிப்பதுதான் சிறைச்சாலை நடைமுறையாகும்)

பொதுவாகச் சிறைச்சாலை நடைமுறைகளின்படி காலவரையரையற்ற தடுப்புக்காவல் உத்தரவை ஒரு வழக்காகவே கருதுகின்றனர். ஒருவருக்கு மேல் நீதிமன்றில் இரண்டு வழக்குகள் இருந்தால் தடுப்புக்காவல் உத்தரவையும் சேர்த்து மூன்று வழக்குகள் என்றே சிறைச்சாலையில் சொல்வார்கள். மேற்படித் தடுப்புக்காவல் உத்தரவு ஒருவர் கைது செய்யப்பட்ட பின்னர் மாவட்ட நீதிமன்றில் போடப்படுவதாகும். மேல் நீதிமன்ற வழக்குகளில் விடுதலை செய்யப்பட்ட ஆவணங்களைக் காண்பித்துத் தடுப்புக் காவலுக்கான உத்தரவைப் பிறப்பித்த மாவட்ட நீதிமன்றில் அதை இல்லாது செய்ததன் பின்னரே சிறைச்சாலையில் இருந்து விடுதலையாக முடியும்.

நீதிமன்றில் நீதிபதி வந்து அமர்ந்ததிலிருந்து அவர் மீண்டும் இறங்கிச் செல்லும் வரை சிறைச்சாலை ஊழியர்கள் நீதிமன்றில் காத்திருப்பார்கள். நீதிபதிகளின் கட்டளைகளை உடனுக்குடன் விளங்கிச் செயற்பட வேண்டிய பொறுப்பு சிறைச்சாலை ஊழியர்களுக்கு உண்டு.

சிறைச்சாலையிலிருக்கிற கைதிகள் கடிதம் எழுதுவதற்காக மாதத்தில் இரண்டு தடவைக்ள் கடிதத் தாள்கள் தரப்படும். அதில் கைதிகள் எழுதிக் கொடுக்கும் கடிதங்களை நிர்வாகத்தினர் வாசித்துச் சிறைச்சாலைக்கு வெளியில் போகக்கூடாத செய்திகளை அழித்த பின்புதான் உத்தியோகபூர்வமாக அனுப்புவார்கள். அதேபோல வெளியில் இருந்து உறவினர்கள் கைதிகளுக்கு அனுப்பும் கடிதங்களையும் வாசித்துப் பரிசீலித்த பின்னரே உரியவர்களுக்கு வழங்குவார்கள். சிறைச்சாலை ஊழியர்கள் அறைகளில் தேடுதல் நடாத்தும்போது பரீட்சிக்கப்பட்ட அடையாளம் இல்லாத கடிதங்களை எடுத்துச் செல்வார்கள்.

ஒரு சிறைச்சாலையிலிருந்து இன்னொரு சிறைச்சாலைக்குக் கைதிகளை மாற்றும்போது இடைவெளியில் பயணத்தில் இன்னோர் சிறைச்சாலைக்கு அல்லது 'லொக்கப்' ஒன்றுக்குக் கொண்டு சென்று அங்கு தான் உணவருந்தவும், மலசலம் கழிக்கவும் அனுமதிக்க வேண்டும் என்பது சட்டம். சில வேளை மட்டக்களப்புச் சிறைச்சாலைக்கு மாற்றும்போது காலையில் தருகின்ற பாணையே மதியச் சாப்பாட்டுக்கும் தந்துவிடுவார்கள்.

களுத்துறை, பூஸாவில் இருந்து கொழும்புக்கு வழக்குக்காகக் கொண்டு வரப்படும் கைதிகளுக்குப் பகல் உணவு வெலிக்கடைச் சிறைச்சாலையிலிருந்தே பெறப்படும். கைதிகளைப் பார்வையிட வருபவர்கள் கொடுக்கின்ற உணவுகளைக் கைதிகள் சாப்பிடுவதற்கு அனுமதிப்பதில்லை. அதற்குக் காரணம் உணவில் நஞ்சு இருந்தாலும் என்ற பயம் தான். கைதியின் உயிருக்குச் சிறைச்சாலை நிர்வாகமே பொறுப்புடையது. தமிழ்க் கைதிகள், அரசியல் கைதிகள் என்ற வரையறையில் உள்ளவர்களுக்குப் பத்திரிகை, வானொலி என்பன பயன்படுத்துவதற்கு அனுமதியுண்டு. சிறைச்சாலை நிர்வாகம் சில தமிழ்ப் பத்திரிகைகளைத் தருவார்கள். (தனியாக அரசியல் கைதிகளைத் தடுத்து வைத்திருந்த களுத்துறை, பூஸாச் சிறைகளில் மட்டும் இந்தச் சலுகை இருந்தது)

பன்னாட்டுச் செஞ்சிலுவைச் சங்கம் சிறிய வானொலிப் பெட்டிகளைப் பொதுவாக வழங்குவதுண்டு. எனினும் களுத்துறை, பூஸா சிறைகளில் கைதிகள் பணம் சேர்த்து, காசுக்கட்டளையாக (மணியோடர்) வீடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தைச் சேர்த்து வானொலிப் பெட்டி ஒன்றை வாங்குவதற்கும் அனுமதிக்கப்பட்டது. அதேபோல களுத்துறையில் எல்லா 'வாட்'களிலும் தொலைக்காட்சிப் பெட்டி உள்ளது. இதில் கைதிகள் பணம் சேர்த்து வாங்கியவையும், சில பொது நிறுவனங்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களால் வழங்கப்பட்டவையும் உண்டு. இவையிருப்பதால் ஓரளவுக்காவது கைதிகளுக்கிடையில் அவ்வப்போது ஏற்படுகின்ற முரண்பாடுகள் குறைவடைகின்றன.

ஒரு கைதியின் நெருக்கமான உறவுக்காரர்கள் வேறு சிறைகளில் இருப்பின் (கணவன், மனைவி, பிள்ளைகள், தாய், தந்தை, உடன் பிறந்தவர்கள்) அவர்களை மாதத்தில் ஒரு தடவை சென்று பார்ப்பதற்குச் சிறைச்சாலைச் சட்டத்தில் அனுமதியுண்டு. அநேகமாகப் பலர் கணவன்-மனைவி என்றும், சகோதரர்கள் என்றும் கைதாகியிருப்பதால் வெலிக்கடைப் பெண்கள் பிரிவிலுள்ள பெண் கைதிகளைப் பார்ப்பதற்கு மாதத்தில்ஒருதடவைகளுத்துறைஅல்லதுபூஸாவிலிருக்கிற கைதிகளைக் கூட்டிச் செல்வார்கள். ஆனால், பெண் கைதிகளை ஏனைய சிறைகளுக்குக் கூட்டிச் செல்வதாக அறியவில்லை.

18 வயதுக்குக் குறைந்த கைதிகளை ஏனைய கைதிகளுடன் கலந்திருக்க அனுமதிப்பதில்லை. இதற்கான முதன்மைக் காரணம் தன்னினச் சேர்க்கையில் மற்றக் கைதிகளால் பயன்படுத்தப்பட்டு விடுவர் என்ற சிறைச்சாலைச் சட்ட விதிகளின் எதிர்ப்பார்ப்பாகும்.

இதில் மறுவளமான ஒரு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. பல வயது குறைந்த கைதிகள் சமூகத்தில் முதிர்ச்சியடைந்த (வெம்பிப் பழுத்த) நிலையில் இருப்பவர்கள். அவர்கள் ஒன்றாக இணைந்திருப்பது பாலியல் முறைகேடுகளுக்கும், புகைத்தல், போதைப் பொருள் பாவனைக்கும் வாய்ப்புக்களை உருவாக்கும். இவ்வாறான ஏற்பாடுகளைச் சிறைச்சாலை நிர்வாகமே ஏற்படுத்திக் கொடுப்பதாகவே அமையும். அரசியல் கைதிகளாக 18வயதுக்குக் குறைந்தவர்கள் வந்தால் கூட அவர்களை அரசியல் கைதிகளுடனேயே தடுத்து வைக்கின்றனர்.

(தொடரும்)

சிரிப்பு

மிருசுவில் தமிழ்தாசன்

# மாம்பழமும் மலையேற்றமும்...

அந்த அரச அலுவலகத்தில் நானும் ஒரு பணியாளன். 'பணி'யாளன் என்று சொல்வதைவிட ஒரு 'பனி'யாளன் என்றே சொல்லலாம். பின்னே என்ன! என்னுடைய சக பணியாளர்கள் அனைவருக்கும் அவ்வப்போது சம்பள உயர்வுகள், பதவி உயர்வுகள் எனப் பல அனுகூலங்கள் கிடைத்துக்கொண்டி ருக்கின்றன. என்னை மட்டும் நிர்வாகம் கணக்கிலெடுப்பதாகத் தெரியவில்லை.

"இஞ்சையப்பா! என்ரை கதையைக் கொஞ்சம் கேளுங்கோ! நீங்கள் ஒருக்கால் உங்கடை பெரியவர் மதிவண்ணன் ஐயா வீட்டைபோய் உங்கடை பிரச்சினையளைப் பற்றிக் கதைச்சுப் பாருங்கோ! ஏதேன் காசைக் களஞ்சைக் குடுத்துப் பாக்கலாம் அவர் என்ன சொல்லுவாரோ தெரியாது. உது ஒண்டும் வேண்டாம். வேறை ஏதேன் அவருக்குப் பிடிக்கக் கூடிய சாமானுகள் என்னவெண்டாலும் கொண்டுபோய் மெல்லக் கதையைக் குடுத்து வளைச்சுப் பாருங்கோ! உங்கை அப்பிடித்தான் எல்லாரும் அலுவல் பாத்து அவரை வசியம் பண்ணி வ்வைச்சிருக்கிறாங்கள் போலை...! உங்களுக்குத்தான் ஊர் நடப்பு ஒண்டும் விளங்கயில்லை."

மனைவி மங்களேஸ்வரியின் மதி நுட்பம் மிக்க மந்திராலோசனை இது.

அவள் கூறுவதும் சரிதான். வாழ்க்கைச் செலவு விறு விறு என்று ஏறிக்கொண்டிருக்கும் இந்தக் கால கட்டத்தில் வெறும் இருபதாயிரம் சம்பளத்தில் எப்படித்தான் குடும்பத்தை நடத்துவது?

"இந்தாருங்கோ! உங்காலை சாமியப்பா வீட்டை இருபத்தஞ்சு கறுத்தக் கொழும்பான் மாம்பழம் வாங்கி வந்தனான். இண்டைக்கு ஞாயிற்றுக்கிழமை எல்லோ! உங்கடை 'சேரும்' வீட்டிலை நிப்பார். இதைக் கொண்டு போய்க் குடுத்து விஷயத்தை வெட்டியாடுங்கோ!"

பெரிய காட்போட் பெட்டியொன்றில் மாம்பழங்களை அடுக்கி, அதை உரப்பையால் சுற்றி அழகான பொதியாக என்முன்னே கொண்டு வந்து வைத்தாள் என் மங்கள நாயகி மங்களேஸ்வரி.

இனி எதுவித சாக்குப்போக்குகளும் சொல்ல முடியாது. உடனடியாகக் காரியத்தில் இறங்கவேண்டியதுதான். சற்றுத் தாமதித்தால் பார்வையாலே சுட்டுப் பொசுக்கி விடுவாள். நெற்றிக் கண் மட்டுமில்லாத குறை அவளுக்கு.

மதிவண்ணன் "சேர்" வீட்டுக்குப் போவதென்றால் கிட்டத்தட்ட ஐந்து கிலோமீற்றர்கள் தூரச் சைக்கிளில் ப்யணம். என்னுடைய இந்தப் பழைய சைக்கிளில் அங்கே போய் வருவதென்பது என்னைப் பொறுத்தவரையில் ஒரு சவாலான விடயம்தான். சைக்கிளா இது! கற்பூரம் கொழுத்திச் சத்தியம் பண்ணினாலும் இதை ஒரு சைக்கிளென்று யாரும் நம்பமாட்டார்கள். சைக்கிளின் முன்புறத்தில், ஆயத்தநிலையில் மரமஞ்சள் குடுவைகளைக் கட்டிக் கொண்டுதான் ஓடவேண்டும். அந்தளவுக்கு அது கறல் ஏறி, உக்கிப்போய்க் கிடக்கிறது. இருந்தும், என்ன செய்ய! துணிவே துணை என எண்ணியபடி சைக்கிளைத் தள்ளி மெல்லத்தொற்றி ஏறிக் கவனத்துடன் ஓடத் தொடங்கினேன்.

* * * *

சைக்கிள் ஒருபுறம் ஓடிக்கொண்டிருக்க எனது மனமும் ஏதேதோ சிந்தனைகளில் ஓடி அலைந்துகொண்டிருந்தது. வறுமை! வறுமை! வறுமை! பிறந்த நாள்முதல் இன்று வரை அந்த வறுமை மட்டும் என்னை விட்டுப் பிரிய மனமில்லாது என்னுடனேயே உறவாடிக் கொண்டிருக்கின்றது. நான் மட்டுமல்ல என்னுடைய பெற்றோரும் ஒரு காலத்தில் குசேலரின் வழ்சாவழிக்கு உரித்தான உறவினர்களாகத்தான் வாழ்ந்தவர்கள்.



> "உத்தியோகம் என்னும் யோகம் கிடைத்தும் என்னுடைய வாழ்க்கையில் மட்டும் ஒருவித யோகமும் கிடைக்கவில் லையே!"

இப்போதெல்லாம் நான் பஞ்சப்பரதேசியாகவே வாழ்கின்றேனே! உத்தியோகம் என்னும் யோகம் கிடைத்தும் என்னுடைய வாழ்க்கையில் மட்டும் ஒருவித யோகமும் கிடைக்கவில்லையே! யோசனைகளும், சிந்தனைகளும் நலாதிக்கும் பரந்து விரிந்து கொண்டிருந்த நேரம் பாரத்து, நல்லகாலமாகஒரு மாதிரி மதிவண்ணன் சேரின்ரை வீட்டுக்குக் கிட்டவாக வந்து சேர்ந்திட்டன். 'இனியென்ன! அந்தக் கிராம சபைக் கிணத்தடியைக் கழிஞ்சால், வாற சந்தியாலை வலது பக்கம் திரும்பி, வைரவ கோயிலடிக்குப் போனால் சரி. மதிவண்ணன் சேரின்ரை வீடு வந்திரும்!'

மனதில் ஒருவித திருப்தி! அது சரி! மதிவண்ணன் சேறும் அஞ்சாறு பிள்ளை குட்டிக்காரன். இதைக் கொண்டு போன உடனை அந்தப் பெடியள் ஆசைப்பட்டு, அடிபட்டு சந்தோஷமாய்த் தின்னப்போகுதுகள். மதிவண்ணன் சேரும் மெத்தச் சந்தோஷப்படப் போறார். அந்த நேரம்பாத்து வாழைப்பழத்திலை ஊசியேத்துற மாதிரி விஷயத்தைக் கக்க வேண்டியதுதான். மாம்பழம் எண்டால் எல்லோருக்கும் ஆசைதானே! ஆனானப்பட்ட முருகப் பெருமானே இந்த மாம்பழத்துக்காகத் தகப்பனோடையும் தமையன் காரனோடையும் பிரச்சினைப்பட்டவராமெல்லே! கடவுள் மாரே மாம்பழம் தின்னுறதுக்கு அங்கலாய்ச்சு அடிபட்டிருக்கினை எண்டால் சாதாரண மனிசனான எங்கடை மதிவண்ணன் சேரின்ரை மனம் என்ன பாடுபடப்போகுதோ!'

* * * *

மனத்தில் உற்சாக வெள்ளம் கரைபுரண்டோடியது. ஆனால் சைக்கிள் மட்டும் உருண்டோட மறுத்து நின்றது. என்னவாயிருக்கலாம்! அடக்கடவுளே! என்னுடைய யோசனையால், வேட்டித் தலைப்பு சைக்கிள் செயினுக்குள் அகப்பட்டுச் சுற்றோ சுற்றென்று சுற்றிப் பாதி செயினுக்குள், மீதி மூன்று முழம் மட்டும் என் மேனியில் இருக்கும் நிலை ஏற்பட்டுவிட்டதே. என்ன செய்வதென்று புரியவில்லை. துகிலுரியப்பட்ட திரௌபதியின் நிலையில் நடுத்தெருவில் நான் நின்று அல்லாடுவதைப் பார்க்க வெட்கம் பிடுங்கித்தின்றது. சரி போனது போகட்டும். வேட்டிச் சிக்கலை எப்படியாவது எடுத்துவிடலாம் என்றால் அது இப்போதைக்கு நடக்கக்கூடிய காரியமாகத் தெரியவில்லை. இப்படி அரை நிர்வாணத்தில் இனியும் நிற்க முடியவில்லை. பலம்கொண்ட மட்டும் பற்களால் கடித்து வேட்டியைக் கிழித்துவிட்டேன். இப்போது மூன்று முழவேட்டி எனது மானத்தைக் காப்பாற்றியது. அதுபோதும். செயின் சிக்கலை இப்போது எடுக்க முயற்சித்தால் தாமதமாகிவிடும். மதிவண்ணன் சேரைச் சந்திக்கவும் முடியாது. என்னுடைய முயற்சிகள் நாசமாகிவிடும். சைக்கிளை ஒரு கடையருகில் நிறுத்திவிட்டு மாம்பழப்பெட்டியைத் தலையில் வைத்தபடி நடக்கத்தொடங்கினேன். அதுசரி சைக்கிளைப் பூட்ட வில்லை. வேண்டாம். அது இப்போது பூட்டப்பட்டதுபோலவே காணப்படுகின்றது. எந்தத் திருடனாலும் அதில் சிக்குண்டிருக்கும் வேட்டியை வெளியிலெடுத்துக் கொண்டுபோகவே முடியாது. மாம்பழப்பெட்டியின் சுமை தலையில் சற்றுக் கஷ்டமாகத்தானிருந்தது. கஷ்டத்தைப் பார்த்தால் காரியம் கைகூடுமா?

* * * *

பொடி நடையாக ஒருமதிரியாக மதிவண்ணன் சேர் வீட்டுக்கு வந்தாயிற்று.

"வாடாப்பா! முருகேசு! என்ன இந்தப் பக்கம்? என்ன விஷேசம்! தலையிலை சுமையோடை!"

என்னைப் பார்த்துச் சொல்லியபடி இரண்டு பெரிய காட்போட் பெட்டிநிறையக் கறுத்தக்கொழும்பான் மாம்பழங்களுடன் வீட்டிலிருந்து வெளியே வந்தார் மதிவண்ணன் சேர். வெளியில் ஆட்டோவும் தயார்! "அதையேன்ராப்பா பேசுவான்! இந்த வருஷம் எங்கடை மாமரங்களெல்லாம் வேண்டாம் எண்டுற அளவுக்குக் காய்ச்சுத் தள்ளியிருக்குது. அதுதான், என்ன விலை எண்டாலும் பரவாயில்லை இதைக்கொண்டுபோய்ச் சந்தையிலை வித்துத் துலைச்சுப்போட்டு வருவம் எண்டு வெளிக்கிடுறன். நீ கொஞ்சம் நிண்டு தண்ணியைக் குடிச்சுப்போட்டு போகயுக்கை நீயும் அஞ்சாறு மாம்பழத்தைக் கொண்டு போவன். அதுசரி! ஏதேன் அலுவலாய் வந்தனியோ?"

"இல்லை சேர்! சும்மா இதாலை வந்தாப்போலை உங்களையும் பாத்துக்கொண்டு போகலாம் எண்டு வந்தனான்" மனச்சாட்சிக்கு விரோதமாகப் பொய் சொன்னேன். அவர் ஒரு வழியால் ஆட்டோவில் புறப்பட, நான் மறுவழியில் நடைபவனியை ஆரம்பித்தேன். தலையில் மாம்பழப்பை வேறு! அச்சு அச லாக ஒரு கரகாட்டக்காரன் போலவே காட்சி தந்தேன்.

"கடவுளே என்ரை மனிசி கடனாய் வாங்கித்தந்த மாம்பழம்! இப்ப இதைக் கொண்டுபோய்ச் சந்தையிலை வித்துப்போட்டு அவையின்ரை காசையெண்டாலும் மரியாதையாய்க் குடுத்திட வேணும்."

நினைத்தபடி நடந்தேன்.

* * * *

சுமை கழுத்தை அழுத்தியது. அந்தச் சலூன் கடையருகில் அதை இறக்கி வைத்துவிட்டுச் சற்று இளைப்பாறலாம் என்றால்..!

அந்த நேரம் பார்த்து அந்தப் 'பொதுப் பிரச்சினை'யும் கூடவே வந்தது. வீதியில் ரக்ரர் ஒன்றும் ஏதோ பாரமேற்றிய நிலையில் வந்து கொண்டிருந்தது.

அது வந்தால் வரட்டும். சற்று ஒதுக்குப் புறம் சென்று அந்த ஒழுங்கைக்குள் பிரச்சி னையைத் தீர்த்து விட்டுவரலாம். முடிவெடுத்துப் பிரச்சினையை முடித்தும் விட்டேன்.

திரும்பி வந்தால், எனது மாம்பழப் பையைக் காணவில்லை. அதிர்ந்துபோய்க் கதறி அழுத என்னுடைய குரலைக் கேட்டு கடைக்காரன் ஓடிவந்தார்!

"என்னப்பா! அது உம்மடை பையா! அதைக் குப்பைப்பை எண்டு நினைச்சு நகரசபைக் காறர் ஏத்திக்கொண்டு போறாங்கள்."

சலூன்கார அண்ணர் சாதாரணமாகச் சொன்னார். எனக்கோ தலை சுற்றியது. தூரவாகப் போய்விட்ட ரக்ரருக்குள் எனது சைக்கிள் கிடப்பதும் தெரிந்தது. கடவுளே! மாம்பழம் எண்டாலே ஒரு பிரச்சினை யானது தானோ? உந்தக் கண்டறியாத மாம்பழப் பிரச்சினையாலை முருகன் பழனி மலை ஏறினார். இப்ப நான் மங்களத்தைச் சாமாளிக்கிறதுக்கு எந்த மலையில்போய் ஏறுவேன்! கதிரமலையிலா? திருகோணமலையிலா?

# 'மிஷன்: இம்பொசைபிள் –வ்பால்அவுட்'

உலகின் எந்த நடிகரும் இதுவரை முயலாத புதியதொரு சாகசத்தைத் தனது அடுத்த படத்துக்காகச் சாதித்திருக்கிறார் டாம் க்ரூஸ். அவருடைய இரசிகர்களால் இணையவெளியில் அதிகம் சிலாகிக்கப்படும் இந்தச் சாகசக் காட்சி, ஜூலை 27 அன்று வெளியாகவிருக்கும் 'மிஷன்: இம்பொசைபிள் வ்பால் அவுட்' திரைப்படத்தில் இடம்பெறுகிறது என்று முந்தைய வாரங்களில் குறிப்பிட்டு, இந்தப் புதிய படத்தின் வருகை பற்றி முந்திக்கொண்டு தகவல் தந்திருந்தோம். இப்போது இந்தப் படம் திரைக்கு வந்திருக்கிறது. அதுபற்றிய சிறிய பார்வை இது...

அதிரடியும் துப்பறிதலுமாக 90களின் தொடக்கத்தில் பிரபலமான ஒரு தொலைக் காட்சித் தொடரைத் தழுவி, 'மிஷன் இம்பொசைபிள்' திரைப்படம் 1996ஆம் ஆண்டில் வெளியானது. இதில் நாயகன் டாம் க்ரூஸ் நிகழ்த்துகிற விறு விறுப்புக்கு இரசிகர்களின் ஏகோபித்த வரவேற்புக் கிடைத்தது. வசூலும் குவிந்தது. ஆகவே, தன்னளவில் நிறைவாகவும் அடுத்தடுத்துப் படமாக்கும் எதிர்பார்ப்புடனுமாக, 'மிஷன் இம்பொசைபிள்' தொடர் வரிசைகள் உதயமாகின. இந்த வரிசையின் ஐந்தாவது படமான 'மிஷன் இம்பொசைபிள் றோக் நேஷன்' 2015ஆம் ஆண்டில் வெளியானது. அதன் ஆறாவது வெளியீடே 'மிஷன்: இம்பொசைபிள் வ்பால் அவுட்'.

**கதை**

கடந்த பாகத்தில் நாயகன் ஈதன் ஹன்ட்டால் கைது செய்யப்பட்டு சிறையில் இருக்கும் சாலமன் லேன் என்பவரின் 'சிண்டிகேட்' என்னும் இயக்கம் தற்போது 'அபோஸ்ற்லெஸ்' என்ற பெயரில் தீவிரவாத இயக்கமாக மாறிச் செயல்பட்டு வருகிறது. லண்டனில் இருக்கும் ஈதன் ஹன்ட்டுக்கு ஒருநாள் இரகசியத் தகவல் ஒன்று கிடைக்கிறது. அதில் பெரும் அழிவுகளை ஏற்படுத்தக் கூடிய 3புளூட்டோனிய உலோகங்களைப் பற்றியும், அதை வாங்குபவர்கள், விற்பவர்கள் பற்றிய தகவல்கள் அடங்கியிருக்கின்றன.

அதில் குறிப்பிடப்பட்டிருக்கும் தகவல்களின் படி தனது சகாக்களான பென்ஜி, லூதர் ஆகியோருடன் ஜேர்மனி -பெர்லின் செல்லும் ஹன்ட், அங்கு நடக்கும் சண்டையில் புளூட்டோனிய உலோகங்களை 'அபோஸ்ற்லெஸ்' தீவிரவாதிகளிடம் பறிகொடுத்து விடுகிறார். பின்னர் அந்த இயக்கத்தோடு தொடர்புடைய அணு ஆயுத நிபுணர் ஒருவரைப் பிடித்து அவரிடம் அந்த இயக்கத்தின் அடுத்தகட்டத் திட்டத்தை அறிகிறார் ஈதன் ஹன்ட்.

அந்தத் தீவிரவாதிகளிடமிருந்து 3புளூட்டோனிய உலோகங்களையும் வாங்கவிருக்கும் ஜோன் லார்க் என்பவரைப் பிடிக்க ஈதன் ஹன்ட் குழு பாரீஸ் நகருக்குப் புறப்படுகிறது. ஏற்கெனவே ஒரு முறை இதைப் பறிகொடுத்துவிட்டதால் அவர்களைக் கண்காணிக்க 'சி.ஐ.ஏ' முகவரான ஆகஸ்ட் வாக்கரும் அவர்களோடு செல்கிறார். பிறகு அங்கு நடக்கும் சண்டையில் லார்க் கொல்லப்பட, ஆயுத வியாபாரிகளிடம் ஈதன் ஹன்ட் தன்னை லார்க் என்று அறிமுகம் செய்து கொள்கிறார்.

புளூட்டோனியத்தைக் கொடுக்க வேண்டுமானால் கடந்த பாகத்தில் கைது செய்யப்பட்ட சாலமன் லேனை பொலிஸிடமிருந்து விடுவிக்க வேண்டும் என்று ஈதன் ஹன்ட்டுக்குநிபந்தனைவிடுக்கப்படுகிறது. சாலமன் லேன் விடுவிக்கப்பட்டாரா? 3புளூட்டோனிய உலோகங்களும் ஈதன் ஹன்ட்டால் மீட்கப்பட்டனவா? ஜோன் லார்க் யார்? என்ற கேள்விகளுக்கு விறுவிறுப்பான சண்டைக் காட்சிகளோடு பதில் சொல்கிறது படம்.




**பாத்திரங்கள்**

இந்த ஆறாவது படத்திலும் நாயகன் ஈதன் ஹன்ட்டாக அதே டாம் க்ரூஸ். அவருக்கு வயதே அதிகரிக்காதுபோலும். சண்டை, உணர்ச்சிக் காட்சிகளில் வழக்கம்போல கலக்குகிறார். 55 வயதில் இரசிகர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்ய, இந்தப் படத்தில் டாம் க்ரூஸ் ஏகமாய் உழைத்திருக்கிறார். சைமன் பெக், ரெபக்கா பெர்குசன், மைக்கல் மோனஹன், சீன் ஹாரிஸ் என வழக்கமான நட்சத்திரப் பரிவாரங்களும் விறு விறுப்பாகக் கலக்குகின்றனர். வில்லனாகக் ஹென்றி கெவில் (சுப்பர் மேன்). படம் தொடங்கி இறுதி வரை இரசிகர்கள் ஒருவித பரபரப்புக்குள்ளாகவே வைத்திருப்பதாக அமைக்கப்பட்டிருக்கிறது திரைக்கதை. இருக்கை நுனிக்கு கொண்டுவரும் சாகசக் காட்சிகள். ('மிஷன் இம்பொஸைபிள்' வரிசையில் அதிக சாகசக் காட்சிகளைக் கொண்ட படம் இதுவே) படத்தின் ஆரம்பத்தில் நடக்கும் அந்தக் குளியலறைச் சண்டைக் காட்சி சிலிர்க்க வைக்கிறது.

படத்தின் குறை என்று பார்த்தால் முந்தைய பாகங்கள்போல் புத்திசாலித்தனமாக ஏமாற்றித் திருடும் காட்சிகள் இதில் இல்லை. அனைத்துமே நேரடிச் சண்டைக் காட்சிகள்தான். அதையும் பார்வையாளர்கள் இரசிக்கும்படி அமைத்திருக்கிறார் இயக்குநர் கிறிஸ்தோபர் மெக்கியூரி. இதுவரை வெளிவந்த 'மிஷன் இம்பொசைபிள்' வரிசைப்படங்களின் சாயலிலேயே இருந்தாலும், அடுத்த பாகங்களாக வந்தாலும் சொதப்பாமல் பார்த்துக்கொள்கிறது இந்தப் படம்.

# 'கிறிஸ்ரோபர் றொபின்'



பன்னாட்டு நட்பு தினம் ஆண்டுதோறும் ஓகஸ்ட் மாத்திதன் முதல் ஞாயிறு அன்று கடைப்பிடிக்கப்படுகிறது. இதன் பொருட்டு உலகின் நட்புத் தூதராக ஐ.நாவால் அறிவிக்கப்பட்ட சிறப்புக்குரியது 'வின்னி த பூச்' என்ற பொம்மைக் கரடி. இந்த நட்புக் கரடியைக் கதாபாத்திரமாகக் கொண்ட 'கிறிஸ்ரோபர் றொபின்' திரைப்படம் இவ்வருட நட்புத் தினத்தை முன்னிட்டு கடந்த 3ஆம் திகதி அன்று வெளியாகியிருக்கிறது.

ஆங்கிலேயக் கதாசிரியரான ஏ.ஏ.மில்ன் தனது மகன் கிறிஸ்ரோபர் றொபின் விளையாடும் பொம்மைக் கரடிக்கு 'வின்னி த பூ' எனப் பெயரிட்டுப் படைத்த குழந்தை களுக்கான கதைகள் பல தலைமுறைகளாகக் குழந்தைகள் உலகில் உலா வருபவை. மில்ன் கற்பனையில் உருவான நூறு ஏக்கர் தோட்டத்தில் சிறுவன் கிறிஸ்தோபரின் சகாக்களான கரடி, குட்டிப்புலி, கழுதை, பன்றி, கங்காரு உள்ளிட்ட பொம்மைகளின் சாகசங்களை மையமாக வைத்துப் பல திரைப்படங்கள் வெளிவந்துள்ளன. அந்த வரிசையில் 'கிறி ஸ்தோபர் றொபின்' திரைப்படம் இவ்வருட நட்புதினத்தைச் சிறப்பிக்கும் முகமாகத் திரைக்கு வந்திருக்கிறது.

**கதை**

இந்தத் திரைப்படத்தில் சிறுவன் கிறிஸ்தோபர் பெரியவனாகி ஒரு சிறுமிக்குத் தந்தையாகவும் வளர்ந்திருக்கிறான். ஆனபோதும் அவ்வப்போது தனது குழந்தைப் பருவத்துப் பொம்மை நண்பர்களை நினைத்து ஏங்குகிறான். ஒரு கட்டத்தில் புற உலகின் கசப்புகளால் களைப்படையும் கிறிஸ்தோபர், தனது பழைய நண்பர்களைத் தேடிச் செல்கிறான். இந்த வளர்ந்த குழந்தையை, பொம்மைக் கதாபாத்திரங்கள் சந்திப்பதும், அவர்களுக்கு இடையிலான நெகிழ்ச்சியும், வழக்கமான சாகசத் தெறிப்புகளுமாகப் புதிய திரைப்படத்தின் கதை செல்கிறது.

**பெரியவர்களும் குறி...**

குழந்தைகளையும், உள்ளுக்குள் குழந்தைத் தன்மையை உயிர்ப்புடன் வைத்திருக்கும் பெரியவர்களையும் இரசிக்க வைக்கும் குறிக்கோளுடன் உருவான 'லைவ் ஆக் ஷனும் அனிமேஷனும்' கலந்து கட்டிய இந்த நகைச்சுவைத் திரைப்படம் வந்திருக்கிறது. கிறிஸ்தோபராக 'இவான் மெக்கிரிகர்' நடிப்பும், பொம்மைக் கரடிக்கு 'ஜிம்மி கம்மிங்ஸ்' பின்னணிக் குரலும் சிறப்பாகப் பொருந்திப்போகின்றன. திரைப்படத்தை இயக்கியிருக்கிறார் மார்க் போர்ஸ்டர்.

> உலகின் நட்புத் தூதராக ஐ.நாவால் அறிவிக்கப்பட்ட சிறப்புக்குரியது 'வின்னி த பூச்' என்ற பொம்மைக் கரடி. இந்த நட்புக் கரடியை கதாபாத்திரமாகக் கொண்ட 'கிறிஸ்ரோபர் றொபின்' திரைப்படம் இவ்வருட நட்புத் தினத்தை முன்னிட்டு கடந்த 3ஆம் திகதி அன்று வெளியாகியிருக்கிறது.

தொகுப்பு
செ.மகேஷ்

# ஆசிரிய வாண்மைக்கு உரமூட்டிய விளக்குகள் 20

**1993ஆம் ஆண்டில் கல்விக் கழகத்தால் ஆரம்பிக்கப்பட்டு, வெளியிட்டு வைக்கப்பட்ட விளக்கு சஞ்சிகைகள் குறித்த மீள் பார்வை.**

பாடக்குறிப்பை எழுதி, அலகுகளை முடித்து, பாடப்பதிவுகளைச் செய்வதுடன் ஆசிரியரின் பணி முடிவடைவதில்லை. தம்மை முழுமையாக அர்ப்பணிக்கும் ஆசிரியர்களாலேயே நல்ல மாணவர்களை உருவாக்கி, எதிர்கால சந்ததியினரை உயரச் செய்ய முடியும் என்கிறார் அன்று ஆசிரியராகப் பணிபுரிந்தவரும் இன்று யாழ்ப்பாணக் கல்வியியற் கல்லூரியின் மூத்த விரிவுரையாள ராகவும் கல்லூரியின் பிரதித் தலைவராகவும் விளங்கும் திரு பா. தனபாலன். அன்று அவர் எழுதி விளக்கு சஞ்சிகையில் வெளிவந்த 'அர்ப்பணிப்பு' எனும் கட்டுரையை இங்கு வாசகர்களின் கவனத்துக்குத் தருகிறோம்.

## அர்ப்பணிப்பு

### ஆளுமையுடைய ஆசிரியர்

நாட்டின் வளங்களுக்கு ஏற்ப மாணவர்களை ஆளுமையுடையவர்களாக ஆக்குவது கல்வியின் நோக்கங்களுள் ஒன்று. சமுதாயத் தேவைகளை முழுமைசெய்யாத கல்வி நாட்டுக்குப் பொருத்தமற்றது. கல்வியின் நோக்கங்களை நிறைவேற்றுவதில் ஆசிரியரின் பணி பெரும் பங்கை வகிக்கின்றது.

வரையறுக்கப்பட்டுள்ள வளங்களைக் கொண்டு எத்தகைய கல்வி எந்த முறையில் வழங்கப்பட வேண்டும் என்பதை அதிகாரிகளும், திட்டமிடுவோரும் தீர்மா னித்தாலும் அவற்றை நடைமுறைப்படுத்தும் பொரிய பொறுப்பு ஆசிரியர்களிடமே உண்டு. ஆசிரியர்களின் அர்ப்பணிப்பிலேயே அவற்றின் வெற்றி முழுமையாகத் தங்கியுள்ளது. பாடத்திட்டப்படி குறிப்பு கள் எழுதி, அலகுகளை முடித்து, பதிவுகளைச் செய்வதுடன் ஆசிரியரின் 'வேலை' முடிவடையலாம். தமது ஆற்றல் முழுவதையும் ஒன்று திரட்டிக் கல்வியின் இலக்குகளை நோக்கித் தமது மாணவர்களைத் தன்னுடன் அழைத்துச் செல்லும் ஆசிரியரின் சேவையே சமூகம் எதிர்பார்க்கும் நற்பயன்களை இலகுவில் விளைவிக்கும் ஆற்றலுடையது.

கற்பித்தலின் ஊடாக மாணவர்களின் உள்ளத்தை ஊக்கப்படுத்தி அது முழு வளர்ச்சி பெற ஆசிரியர் உதவ வேண்டும். ஆசிரியரின் உள்ளம் பக்குவமடைந்து கல்வியை முழுமையர்கக் கற்பிக்கும் சேவை மனப்பான்மை இதற்கு அவசியம். இத்தகைய ஆசிரியர்கள் மாணவர்களின் அறிவை வளர்ப்பதுடன் அவர்களின் மன எழுச்சியைப் பண்படுத்துவதிலும் மனித நேயமுடைய, சமுதாயப் பற்றுடைய நன்முயற்சிகளில் அவர்களை ஈடுபடுத்துவதிலும் வெற்றியடைவர்.

### தூண்டல் – துலங்கல்

உடல் , உள இயக்கத்தை ஊக்குவித்து மேலும் சுறுசுறுப்படையச் செய்தல் 'தூண்டல்' எனப்படும். தூண்டலின் நேரடி விளைவாக நடைபெறுவது 'துலங்கல்' எனப்படும். மாணவர்களின் எண்ணங்களை, திறமைகளை ஆசிரியர் தூண்ட வேண்டும். ஆசிரியரின் தூண்டல்க ளால் மாணவர்கள் துலங்கும்போது அவர்களது நடத்தைக் கோலங்களில் மாற்றம் ஏற்படுகின்றது.

மாணவரிடத்தில் ஏற்படும் மாற்றம் புற உலக நிகழ்ச்சிகளுடனோ தனது மனத்திலிருந்து எழும் நிலைகளுடனோ பொருத்தப்பாட்டைப் பெற உதவுவதால் பல இணைந்த செயற்பாடுகளில் அவர்கள் ஈடுபடுவர். சமூக வாழ்க்கையில் எழக்கூடிய அல்லது பொதுவாக எழக்கூடிய பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைக் காணவும் தம்முடன் வாழ்வோரது இயல்புகளை அறியவும் தமது இயல்புகளைத் தாமே அறியவும் அவர்கள் முனைவர்.

ஆசிரியர் கற்பிக்கும் சூழலில் காணப்படும் வளங்கள் மட்டுப்படுத்தப்பட்டவையாக இருந்தாலும் அதனால் சோர்வடையாது பாடசாலையிற் கிடைக்கும் ஒவ்வொரு வளத்திலிருந்தும் அதி உச்சப் பயன்பாட்டைப் பெற முயலும் ஆசிரியர்களே நல்லாசிரியர்களாவர். கற்பித்தல் கருவிகள், விளையாட்டரங்குகள் போன்றவற்றை முழுமையாகப் பயன்படுத்தி அவர்களே மாணவர்களை முன்னேற்றுவர்.



மாணவரிடத்தில் ஆசிரியர் எதிர்பார்க்கும் துலங்கல் வெளிப்படாமைக்குக் காரணம், அவர் முன்வைத்த தூண்டல் உத்திகளின் பொருத்தப்பாடின்மையே என்பதை அறிந்து கொள்வதற்கு மனஉந்துதல் வேண்டும். தொடர்கின்ற கற்றல் கற்பித்தல் நுணுக்கங்களில் மாற்றங்களை ஏற்படுத்தப் பொருத்தமான கற்பித்தல் உத்திகளைப் புகுத்த லும் வேண்டும். மாணவன் கற்கிறான் என்பதை ஆசிரியரின் கற்பித்தலே இனங்காட்டும் என்பதை ஒவ்வொரு ஆசிரியரும் உணர்தல் வேண்டும்.

பாடசாலையில் அளிக்கப்படும் கல்வியின் தரமும் அந்தக் கல்வியால் மாணவர்கள் அடையும் பயனும் அந்தப் பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர்களின் சேவையைப் பொறுத்தே அமைகின்றன. அர்ப்பணிப்பு நிறைந்த ஆசிரியர்களாலேயே, சிந்தையில் தெளிவும் , உள்ளத்தின் உறுதியும் கடமையுணர்வும் மிக்க சமுதாய நேயமுடைய மானுடர்களாகத் தமது மாணவர்களை உருவாக்க முடியும்.

### சொல்லும் செயலும்

திரு. பா. தனபாலன் இன்றிருக்கும் உயர்ந்த நிலைக்கான உந்துதல், அவர் ஆசிரியராக இருந்து பெற்ற அனுபவத்தின் உயர்ச்சி என்பதையும், நல்லாசிரியன் தனது நடத்தைகள்ால் பலரது பாராட்டுக்களுக்கும், பதவி உயர்வுகளுக்கும் உட்படுவது நிச்சயம் என்பதையும் அன்று அவர் எழுதிய இந்தக் கட்டுரை சிறப்பாக வெளிப்படுத்தி நிற்கின்றது. சொல்லுதலும் செயலாற்றுதலும் ஒன்றுடன் ஒன்று இணைந்து பயணிக்கும் போதுதான் மானிடத்தின் மகிமை வெளிப்படுகிறது. ஆசிரியத்துவத்தின் ஒளி பிரகாசிக்கிறது.

விளக்கு சஞ்சிகை தரமான கட்டுரைகளை வெளியிட்டதுடன் அவற்றை எழுதிய கல்வியியலாளர்களின் சொல்லுக்கும் செயலுக்குமான ஒற்றுமையையும் அவதானித்தே அவர்தம் ஆக்கங்களை வெளியிட்டமையை இங்கே நோக்கலாம்.

கல்வியும் ஒழுக்கமும், கற்றதன்படி ஒழுகும் உந்துதலும் அவசியம் என்பதை ஆசிரியர்களாகிய ஒவ்வொருவரும் உணர்ந்து செயலாற்றுதல் வேண்டும். ஆசிரியம் என்பது ஊதியம்பெற உருவாக்கப்பட்ட ஒரு தொழில் அல்ல, இது மனித நேய மகத்துவம் மிக்கதொரு கற்றல் கற்பித்தல் சேவையாகும். ■



## எமது உலகம்

பறவைகளின் சிறகுகள் ஒடிந்தன
பகலிலும் இருள் சூழ்கிறது
பகைவர் எம்மை வருத்துகின்றனர்
பண்பில்லா உலகம் அழுகிறது

மனிதம் என்றும் வாழ வேண்டும்
மகத்தான உறவுகள் வெல்ல வேண்டும்
மண்ணின் பெருமையை மக்கள் உணர வேண்டும்
மலர்ச்சி பெற்றுச் சிறக்க வேண்டும்

புதிய வாழ்வு பிறக்க வேண்டும்
புனிதம் என்றும் போற்றப்பட வேண்டும்
புத்த பெருமான் காட்டிய அன்பு ஒளிர வேண்டும்
புதுயுகம் பிறந்து வெல்ல வேண்டும்.

கவிதைகள்
சிவரம்யா

## இயற்கை அன்னை

பசுமை நிறைந்த புல்வெளிகள்
பட்சிகளின் இனிய குரல்
பகலவன் தரும் ஒளி
பகலிலே ஆயிரம் காட்சிகள்

தென்றல் காற்று வீசட்டும்
தென்னை மரங்கள் உயரட்டும்
சலசலவெனப் பாயும் ஆறுகள்
வெண்மையான முகில்கள்
இயற்கையை நாம்
போற்றுவோம்
இறைவனை நாம்
வணங்குவோம்





கட்டுரை

முருகேசு சச்சிதானந்தம்

# யாழ்ப்பாணக் கோட்டைக்குள் இராணுவம்

"கோட்டைக்குள் இராணுவம் குடிகொள்வதாக இருந்தால், எங்களின் பிணங்களின் மேல்தான் அது சாத்தியப்படும்" இது, கோட்டைக்குள் இருந்து இராணுவம் வெளியேற்றப்படவேண்டும் என்று நடாத்திய ஆர்ப்பாட்டத்தின்போது கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கட்சியைச்சேர்ந்த சட்டத்தரணி சுகாஸ், ஊடகங்களுக்குக் கூறியது.

"இராணுவம் எப்போதும் கோட்டைக்குள் இருக்கும்" இது, இராணுவத் தளபதி மகேஸ் சேனநாயக்க கோட்டையைச் சுற்றிப் பார்த்தபின் கோட்டை வாசலில் வைத்து ஊடகங்களுக்கு அறிவித்தது.

இதில் இராணுவத் தளபதியின் உறுதிப்பாடு எப்போதோ நடந்துவிட்டது அல்லது நடைமுறையில் உள்ளது. சுகாஸ் குறிப்பிட்டதற்கு ஏற்ப முழுக் குடாநாட்டு மக்களையும் இணைத்துக் கோட்டையை முற்றுகையிடும் நிலை கனவிலும் நடக்கப்போவதில்லை. அந்த அளவுக்கு மக்கள் ஏமாறப்போவதில்லை. மக்களைப் பொறுத்தவரை முப்பது வருடகாலம் வரையில் போர் ஏற்படுத்திய இடர்களே போதும் என்றாகிவிட்டன. இதைப்போன்ற பலவிடயங்களிலே அரசியல்வாதிகளின் போக்கும் மக்களின் போக்கும் வெவ்வேறாகவே இருக்கின்றன.

**உள்ளூரவர்களின் உழைப்பே கோட்டைகள்**

கி.பி15ஆம் நூற்றாண்டளிவிலே ஐரோப்பாவினுடைய நாடுகாண் பயணங்கள் ஆரம்பமாயின. வாசனைத் திரவியங்களை அள்ளிச் செல்வதும் ஏனைய வளங்களைச் சூறையாடுவதும் கிறிஸ்தவ மதத்தைப் பரப்புவதும் அவர்களின் கடல் பயணங்களின் நோக்கமாக இருந்தது. இதில் கடற்கரை நாடுகளான போர்த்துக்கல், ஒல்லாந்து, ஸ்பெய்ன் ஆகியனவே முதலில் இறங்கின. கடலோடிகளான 'வாஸ் கொட காமா'(போர்த்துக்கல்), 'கொலம்பஸ்'(இத்தாலியில் பிறந்து ஸ்பெய்னில் வாழ்ந்தவர்) ஆகியோர் இதில் முக்கியமானவர்கள்.

இந்த நாடுகாண் பயணங்களின் முன்னோடிகள் சோழர்களே. கிபி 10ஆம்-நூற்றாண்டிலேயே கடல் ஆமையின் நகர்வுகளையும், நுட்பங்களையும் பருவ காலங்களையும் அவதானித்துப் பாய்க் கப்பல்களை உருவாக்கிக் கடலில் செல்லும் ஞானம் பெற்றிருந்தவர்கள் சோழர்கள். இதனால்தான் தென்கிழக்கு ஆசிய நாடுகள் வரை படையெடுத்துத் தமது இராச்சிய நீட்சியை நிலை நிறுத்திக் கொண்டார்கள். கி.பி ஆயிரத்து 505இல் இலங்கையில் வந்திறங்கிய இரண்டாவது பிற நாட்டவர்களான போர்த்துக்கேயர் (முதலில் சோழர்), கடற்கரை ஓரங்களில் வந்திறங்கி நிலைகொண்ட போது, குறைந்த தொகையினரான தமது பாதுகாப்பைக் கருத்தில்கொண்டு கோட்டைகளை அமைத்தார்கள். துப்பாக்கிகள், பீரங்கிகள், வாள் போன்றவற்றைப் பயன்படுத்தி உள்ளூர் குறுநில மன்னர்களையும், தலைவர்களையும் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தனர்.

அப்போது இங்கிருந்த சுதேச மக்களான சிங்களவரும், தமிழருமே இந்தக் கோட்டைகளைக் கட்டி முடித்தார்கள் என்பதையும் கவனத்தில் எடுக்கவேண்டும். கோட்டை என்பது நமது மூதாதையர்களின் கடின உழைப்பின் வெளிப்பாடே.

**இலங்கைக் கோட்டைகள்**

எங்கள் நிலத்தில் கிடைத்த கற்கள் (பெரும்பாலானவை கோவில்களை இடித்து எடுக்கப்பட்டவை), எமது மக்களின் உழைப்பு, போர்த்துக்கேயரின் நெறிப்படுத்தல் என்பனவே இந்தக் கோட்டைகளின் முதலீடு. அரிப்புக்கோட்டை, மட்டக்களப்பு, நெடுந்தீவு, கொழும்பு, திருகோணமலை, ஊர்காவற்றுறைக் கடற்கோட்டை, ஊர்கவற்றுறைத் தீவுக் கோட்டை, காலி, யாழ்ப்பாணம், மன்னார், கற்பிட்டி, மாத்தறை, நீர்கொழும்பு, பூநகரி ஆகியன கடற்கரைக் கோட்டைகளாக அமைக்கப்பட்டன.

மல்வானை மற்றும் ஹன்வெல்ல கோட்டைகள் களனி ஆற்றங்கரையை அண்மித்து உள்ளூரில் அமைக்கப்பட்டவை. ஹந்துமுல்ல (பதுளை) மெனிக்கடவாற(கேகாலை) றுவான்வெல்ல(கேகாலை - றுவான்வெல்ல பொலிஸ் நிலையம் இங்கு இயங்குகிறது) இரத்தினபுரிக்கோட்டை என்பன இல்கையின் உட்பாகங்களில் கட்டப்பட்டவை. இவை கல்லால் கட்டப்பட்டதால் அழிவடையாது, சிதைவடைந்து மாத்திரம் இருக்கின்றபோதிலும் பருத்தித்துறை, ஆனையிறவு மற்றும் இலங்கையின் பல பாகங்களிலும் காணப்பட்ட போர்த்துக்கேயரால் அமைக்கப்பட்ட சில கோட்டைகள் அழிவுற்றுவிட்டன.

**கோட்டைகளும் கொடி பிடிப்பும்**

போர்த்துக்கேயரால் அமைக்கப்பட்ட கோட்டைகளுக்கு இரண்டு முதன்மை நோக்கங்கள் இருந்தன. உள்ளூர் மக்களிடமிருந்து பாதுகாப்பைத் தேடுவது. ஏனைய கடல் மார்க்கப் படையெடுப்புக்களில் இருந்து தம்மைக் காப்பாற்றுவது. என்பவையே அவை. ஆனால், போர்த்துக்கேயரை வீழ்த்த வந்த ஒல்லாந்தர் உள்ளூர்வாசிகளுடன் இரகசியத் தொடர்பு வைத்துப் போர்த்துக்கேயரை வீழ்த்தினர்.

அதுபோலவே பின்வந்த பிரித்தானியரும் ஒல்லாந்தரை வீழ்த்தினர். பிரித்தானியர் 1815இல் கண்டி மன்னன் சிறி விக்கிரம ராஜசிங்கனைச் சிறைப்பிடித்ததும் முழு இலங்கையையும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

போர்த்துக்கேயர் உள்ளூர்வாசிகளுக்குத் தமது மொழியைக் கற்பித்து அவர்களை முகவர்களாக வைத்தே நிர்வாகம் நடத்தினர். முதலிகள், மணியகாரர், உடையார் ஆகிய ஒரு பிரிவினர் சுதேசிகள் மத்தியில் அரச சேவையாளர்களாக மாறினர். அவர்கள் எப்போதும் வெளிநாட்டவர்களுக்கு விசுவாசமாக இருந்தமையால், அதிகளவு சொத்துக்களை வெளிநாட்டவர்களிடமிருந்து பரிசாகப் பெற்றுக் கொண்டனர். இது ஒல்லாந்தர் காலத்திலும் பிரித்தானியர் காலத்திலும் தொடர்ந்தது. போர்த்துக்கேயர் காலத்தில் வெளிநாட்டவர்களுக்கு விசுவாசமாக இருந்த அதே குடும்பத்தவர்களே ஒல்லாந்தர், பிரித்தானியர் பின்வந்த அரச விசுவாசிகளாகவும் இருந்தனர். இந்தக் குடும்பங்களே சிங்கள ஆட்சியாளர்களுடன் இணைந்து செயற்பட்டன. இந்தப் பிரிவினர் யார் ஆட்சிக்கு வந்தாலும் ஆட்சியாளர்களுக்கு விசுவாசமானவர்களாகவே இருப்பர்.

கோட்டை என்பது பொதுவாக ஓர் அடக்குமுறையின் சின்னமாக வர்ணிக்கப்பட்டாலும் தமிழரின் ஒரு சிறு பிரிவினருக்கு(விசுவாசிகளுக்கு) அதிகம் மதிப்பையும், செல்வாக்கையும், அதிகாரத்தையும் பொருளையும் ஈட்டிக்கொடுத்த சொர்க்கத்தின் அடையாளமாகவும் உள்ளது. அந்தப் பிரிவினர் திரைகடல் ஓடித் திரவியம் தேடவந்தவர்களிடம் உள்நாட்டில் இருந்தவாறே திரவியம் தேடியவர்கள்.

**கோட்டைகளின் அமைப்பு முறை**

அநேகமாக எல்லாக் கோட்டைகளைச் சுற்றியும் அகழிகள் வெட்டப்பட்டு அதற்குள் கொடிய முதலைகள் வளர்க்கப்பட்டிருக்கும். உளவாளிகள் அல்லது வேவு பார்ப்பவர்கள் என யாரும் அகழிக்குள் இறங்கினால், தப்பிவிட முடியாத ஏற்பாடே அது. அதைவிட அகழியின் அகலத்துக்கு மரத்தையோ, கயிற்றையோ போட்டுக் கடந்துவிட முடியாது. அது புதையுண்டு போகும். அதேவேளை கொத்தளங்களில் எப்போதும் காவல் கடமையில் சிப்பாய்கள் இருப்பார்கள்.

அநேகமாகக் கோட்டை வாசல்களும் மிகப் பழைய கோவில்களின் வாசல்களும் உயரமாக, மேற்புறம் வளைந்ததாக அமைக்கப்பட்டிருக்கும். காரணம், யானையில் உள்ளே செல்வோர் சிறிய வாசல்களாக இருந்தால். அடித்து வீழ்த்தப்படுவர் என்ற காரணத்தால்தான். கோட்டைக்குள் யானை வேகமாக உட்புகும்போது வாசல் சிறியதாக இருந்ததால் பலர் அடிபட்டுக் கீழே விழுந்து இறந்திருக்கிறார்கள்.

கோட்டையின் வெளி அமைப்பு கற்களால் சாய்வாக அமைக்கப் பட்டிருக்கும். மழை பெய்து பாசி பிடித்தபின் யாரும் இலகுவாக அந்தச் சுவர்களில் ஏறிவிட முடியாது. இரண்டு புறங்களிலும் கற்சுவர்களைக் கொண்ட இந்த அகன்ற கட்டுமாணம், இடையில் மண் நிரப்பப்பட்டு அந்த மண் யானைகளால் மிதிக்கப்பட்டு உரம் ஏற்றப்பட்டது. வானில் இருந்து கோட்டைக்குள் இருப்பவற்றை அவதானித்துவிட முடியாத பதுங்கு கட்டமைப்பும் கோட்டைக்குள் உண்டு.

**இலங்கைக் கோட்டைகள் இராணுவத்திடமே**

இலங்கையிலுள் கோட்டைகளில் ஊர்காவ்ற்றுறை, மன்னார், கற்பிட்டி, நீர்கொழும்பு, காலி, மாத்தறை, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகியவற்றில் ஏற்னவே இராணுவத்தினர் உள்ளனர். யாழ்ப்பாணக் கோட்டைக்குள் மாத்திரம் இராணுவம் இருக்கக்கூடாது என்பதே தற்போது தமிழ் அரசியல் வாதிகள் சிலரது வாத்மாகும். ஆனால், அரசியல் தலைவர்கள் யாழ்ப்பாணக் கோட்டை பற்றி இதற்கு முதலில் கவனமெடுத்ததாகத் தெரியவில்லை.

குறைந்தபட்சம் வடக்கு மாகாணசபை அமைக்கப்பட்ட பின்பாவது கோட்டைக்கு உள்ளேயும் வெளியேயும் சிறிய சுற்றுலாக் கொட்டகைகளையும், விற்பனை மையங்களையும் சுற்றுலாத்துறைசார் அலுவலகங்களையும் அமைத்திருக்க முடியும். அதன் மூலம் சாதாரண மக்கள் பலரின் வாழ்வாதாரம் சிறக்க வழி ஏற்பட்டிருக்கும்.

இந்த முயற்சிகள் எதுவும் எடுக்கப்படவில்லை. குறைந்த பட்சம் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் தமிழரின் பாரம்பரிய, பனம் பொருள்களைக் கொண்டு மேற்கொள்ளப்படும் சிற்பங்கள், கைவினைப் பொருள்கள், உணவுப் பொருள்கள் போன்றவற்றுக்கு நல்ல சந்தை வாய்ப்பைப் பெற்றிருக்க முடியும். தற்போது இருப்பதற்கு மேலதிகமாக அழகாகவும் ரம்மியமான சூழலாகவும் கோட்டைச் சூழலை மாற்றியிருக்க முடியும். இவை எதுவுமே தமிழ்த் தலைவர்களால் மேற்கொள்ளப்படவில்லை. நாகவிகாரைப் பிக்குவின் தகனத்துக்குப் பிறகு, பிந்தியாவது இவர்களுக்கு ஞானம் பிறந்திருக்கலாம். அதுவும் இல்லை.

அவ்வேளையில்தான் கோட்டை தொல்லியல் திணைக்களத்துக்குச் சொந்தமானதாக எப்போதோ மாற்றப்பட்ட செய்தியைக்கூட யாழ்ப்பாண மாநகர சபையும், மாகாணசபையும் அறிந்திருந்தனவோ தெரியாது. அதுவும் அற்புதம்தான்.

**அரசியல் ஆர்ப்பாட்டங்கள்**

தமிழ்த் தலைமைகளின் செயற்பாட்டால், தமிழர் பல விடயங்களில் பின்தள்ளப்பட்டு வ்ருகின்றனர். தலைவர்கள் மக்கள் மீது அக்கறை கொண்டு அவர்களின் சுபீட்சத்துக்காகச் சிந்திக்கவேண்டும். இராணுவ நகர்வைக் கண்டுவிட்டு அதன் பின்னர் மேற்கொள்ளப்படும் ஆர்ப்பாட்டங்கள் வெறும் அரசியல் தேவைகளுக்காக மேற்கொள்ளப்படுபவையே.

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆகியோரால் அமைக்கப்பட்ட கோட்டைகளில் இதுவரை நல்ல நிலையிலுள்ள கோட்டை காலிக் கோட்டை. ஒரு கோட்டைக்குள் எவ்வாறான விடயங்களை உருவாக்க முடியும் என்பதை அங்கு சென்று பார்வையிட முடியும். கோட்டைச் சூழலையும் அங்குள்ள மக்களின் வாழ்க்கையையும் மையாமாக வைத்து 'பிறசன்ன விதானகே' என்கிற சிங்களத் திரைப்பட இயக்குநரால் தயாரிக்கப்பட்ட 'பவுறு வழலு' என்ற திரைப்படத்தில் இதை இன்னமும் புரிந்து கொள்ள முடியும்.

கோட்டை என்பது எங்கள் மண்ணின் கற்களையும் மண்ணையும் கொண்டு மக்களால் கட்டப்பட்ட ஒரு நினைவுச் சின்னம் என்பதை முதலில் மனங்கொள்ள வேண்டும். அவ்வாறில்லாது ஒவ்வொரு விடயத்துக்கும் அரசியல் செய்வதில் பயனில்லை. மக்களின் தேவை பற்றிய கரிசனையுடன் கதைப்பதே இன்றைய தேவையாகும்.

அறிவியல்

சிறிஸ்கந்தராஜா

# இயற்பியல் கதைகள் இரண்டு



## 1.பூமி ஏன் இன்னும் சூரியனோடு மோதவில்லை...?

காற்றின் காரணமாக மரத்திலிருந்து உதிரும் பழுத்த இலைகள்போல் வாழ்க்கையை முழுமையாகப் புரிந்து கொண்டவனின் மனதிலிருந்து ஆசைகள் தானாகவே விழுந்துவிடுகின்றன. அதற்காக அவன் எந்தவொரு பிரத்தியேகப் பிரயத்தனமும் செய்யத்தேவையில்லை என்கிறார் தத்துவஞானி ஓஷோ.

இதே சாயல் கொண்ட ஒரு கவிதையையும் இங்கு பகிரலாம்.

*காற்றின் அளாவலில்*
*அலறி வானில் ஏறும்*
*ஒரு பறவையின்*
*விடுதலை*
*கைவிடப்பட்ட இலைகளின்*
*பிரியாவிடை*

இது கவிஞன் கண்டது.
இன்னோர் இரவும் பகலும் சந்திக்கும் வேளையில், அப்பிள் மரத்தடியில் இளைப்பாறிக்கொண்டிருந்த நியூட்டனின் கண் முன் ஓர் அப்பிள், மரத்திலிருந்து கீழே விழுகின்றது. அப்பொழுது அவர் மனதில் "ஏன்டா இந்த அப்பிள் கீழ் நோக்கி விழுது? ஏன் மேல் நோக்கி எழவில்லை?" என்ற கேள்வி எழுகின்றது. இது ஒரு விஞ்ஞானி கண்டது. ஆனால் என் கண் முன் கூடத்தான் மரத்திலிருந்து இலை, பழம், அணில், மனிதர்கள் ஏன் மரம்கூடச் சில சமயங்களில் விழுகின்றது, ஆனால் எனக்குக் கவிதையும் வரவில்லை கேள்வியும் எழவில்லை. மாறாக நியூட்னைக் கண்டால்




நிச்சயமாக "வேலையைப் பார்த்துக்கொண்டு போவியா" என்று அறிவுரை செய்திருப்பேன். ஆனால், அன்று அவர் கேட்ட கேள்வி பிரபஞ்சத்தின் பல முடிச்சுக்களை அவிழ்த்தது. முக்கியமாகச் சூரியனையும் பூமியையும் முடிந்து வைத்திருக்கும் அந்த மாயமுடிச்சு எது? என்ற கேள்விக்கு விடை கிடைத்தது.

### புவியீர்ப்பு

புவியீர்ப்பு சடப்பொருள்களின் காதல். மனிதரின் மனதில் இன்னமும் காமமாக ஒட்டிக்கொண்டிருக்கும் முதல் பிறப்பின் கடைசி ஆசை. இரண்டு திணிவுகளுக்கு இடையே இனம்புரியாத ஓர் ஈர்ப்பு விசை அனுதினமும் இயங்கிக் கொண்டிருக்கிறது. இது பொரிய திணிவு கொண்ட கிரகங்களுக்கிடையில் மட்டும் அல்ல, நீங்கள் படித்துக் கொண்டிருக்கும் இந்தப் பத்திரிகையின் காகிதம் கூட உங்களை ஈர்க்கின்றது. நியூட்டனின் மூன்றாம் விதிப்படி அனைத்துத் தாக்கங்களுக்கும் சமமானதும் எதிரானதுமான மறுதாக்கம் உண்டு. எனவே நீங்களும், (உங்கள் உடலின் திணிவு) அந்தக் காகிதத்தை ஈர்க்கின்றீர்கள். ஏன் ஒரு கொசு கூட உங்களை ஈர்க்கும். ஆனால், சிறிய பொருள்களின் திணிவால் உருவாகும் ஈர்ப்பு விசையின் வலிமை மிக நலியது. அதனால் இவற்றை நாம் உணர முடியாது. பூமி போன்ற ஒரு பொரிய திணிவு எம்மைப் பிடித்து இழுக்கும்போது அதை உணர்கிறோம்.
இந்தப் பூமியைப்போல் மூன்று இலட்சத்து முப்பத்தி மூவாயிராம் மடங்கு திணிவு கொண்ட சூரியன் பூமியைப் பிடித்து இழுக்கின்றது. நீங்கள் ஒரு பொருளைப் பிடித்து இழுத்தால் அது உங்களுடன் வந்து மோத வேண்டும் தானே? பின்னர் இவ்வளவு நூற்றாண்டுகளாகச் சூரியனோடு பூமி ஏன் இன்னும் போய் மோதவில்லை?

### எண்ணிகளும் காவிகளும்

விசை என்பது ஒரு பொருளின் வேகத்தில் மாற்றத்தை விளைவிக்க வல்லது. இங்கு மிகமுக்கியமான விடயம் வேகம், கதி அல்ல. வேகத் துக்கும் கதிக்கும் என்ன வித்தியாசம்?
வேகம் என்பது கதி மட்டும் அல்ல. கதியோடு அந்தப் பொருள் அசையும் திசையையும் சேர்த்த கணியம். இயற்பியல் கணியங்கள் இரண்டு வகைப் படும்: எண்ணிகள் மற்றும் காவிகள். திணிவு, வெப்பநிலை, கதி ஆகியன றவை எண்ணிகள். விசை, வேகம் ஆகியன காவிகள். சீனியின் திணிவு 1கிலோக் கிராம் என்கிறோம். அதற்குத் திசை என்று ஒன்றும் இல்லை. ஆனால் ஒரு பொருளை நீங்கள் தள்ளும்போது, அந்த விசை தள்ளும் திசை வழி இருக்கின்றது.
நீங்கள் கயிற்றில் ஒரு பொருளைக் கட்டி மாறாக் கதியில் வட்டமாகச் சுழற்றும் பொழுது அந்தக் கயிற்றில் ஓர் இழுவை விசை இருப்பதை உணர முடியும். ஒரு முனையில் இந்த விசை உங்கள் கைகள் மீதும், மறுமுனையில் இந்த விசை அந்தப் பொருளின் மீதும் தொழிற்படுகிறது. விசை தொழிற்பட்டால் வேகம் மாறியே ஆக வேண்டும். கவனிக்கவும் வேகம், கதி அல்ல. இதே பொருளை நீங்கள் கயிற்றில் கட்டி வழுவழுப்பான தரையில் வைத்து இழுக்கும் பொழுது, ஓய்வில் இருந்த அந்தப் பொருள் உங்களை நோக்கி வருகின்றது. அது உங்களை நோக்கி வரும் கதியும் கூடிக்கொண்டு செல்கின்றது. இங்கு நீங்கள் செலுத்திய விசையால் அந்தப் பொருளின் கதி மாறுகின்றது, ஆனால் தொடர்ந்தும் அது ஒரே திசையில்தான் அசைகின்றது. உங்களை நோக்கிய திசையில். விசையால் வேகம் மாறவேண்டும். வேகம் என்பது கதி மற்றும் திசை. கதி மாறினாலும் வேகம் மாறியதாகவே அர்த்தம்.

### பதில்

நீங்கள் மாறாக் கதியில் சுழற்றும் பொழுது கதி மாறவில்லை. ஆனால், பொருள் அசையும் திசை மாறுகின்றது. உங்கள் கண்களுக்கு முன் அந்தப் பொருள் வரும் பொழுது நீங்கள் கயிற்றை வெட்டினால் அந்தப் பொருள் உங்களின் வலப்புறம் செல்லும் (வலஞ்சுழியாகச் சுற்றியிருந்தால்).
இதே உங்கள் இடது தோளுக்கு நேராக அது வரும் பொழுது நீங்கள் கயிற்றை வெட்டினால், அந்தப் பொருள் பின்புறம் செல்லும். இவ்வாறே நீங்கள் கயிற்றை ஒவ்வொரு இடத்தில் வெட்டும் பொழுதும் அது ஒவ்வொரு திசையில் செல்லும், ஏனென்றால் ஒவ்வொரு கணமும் அது தன் திசையை மாற்றிக் கொண்டுள் ளது.
எனவே மாறாக் கதி உடனான வட்ட இயக்கத்தில் நீங்கள் கயிற்றின் வழி அந்தப் பொருள் மீது செலுத்திய விசை கதியை மாற்றவில்லை, ஆனால் அசைவின் திசையை மாற்றி வேகத்தை மாற்றுகின்றது. எனவே இங்கும் விசையால் வேகம் மாறவேண்டும் என்ற நியூட்டனின் நிபந்தனை திருப்தி செய்யப்படுகிறது.
இங்கு நீங்கள் கயிற்றின் வழியே விசையைச் செலுத்தினீர்கள். ஆனால், சூரியன் ஈர்ப்பு விசையை எதுவும் அற்ற வெறும் வெளி வழியே பூமி மீது செலுத்துகிறது. புவி பொருள்களை ஈர்ப்பதை அவதானித்ததன் மூலம் கண்டு பிடிக்கப்பட்டமையால் இது புவியீர்ப்பு விசை என்று அழைக்கப்படுகின்றது. ஆனால் சூரியனும் இந்த ஈர்ப்பு விசையைப் பூமி மீது செலுத்தும். எனவே தொலைவில் இருந்தே சூரிய னும் பூமியும் கைகுலுக்கிக் கொள்கின்றன. இந்த விசை பூமியின் கதியை மாற்றுவதற்குப் பயன்படவில்லை, அவ்வாறு பயன்பட்டி ருந்தால் என்றோ பூமி சூரியனுடன் மோதியிருக்கும். மாறாகப் பூமியின் திசையை மாற்றிப் பூமியைச் சூரியனைச் சுற்றிக் கிட்டத் தட்ட வட்டத்தில் இயங்க வைக்கின்றது. பூமியில் கதி வருடத்தின் வெவ்வேறு நேரங்களில் சற்று மாறினாலும், அந்த மாற்றம் பெரிதல்ல.




## 2. வளைவுகளில் திரும்பும்போது வாகனத்தின் கதியை ஏன் குறைக்க வேண்டும்?

ஒரு பொருளை வட்டத்தில் இயங்க வைக்கும் போது அந்த வட்டத்தின் மையம் நோக்கி அந்த பொருளின் மீது செயற்படும் விசை மையநாட்ட விசை எனப்படும். கயிற்றைப் பொறுத்தவரையில் இழுப்பு விசை மையநாட்ட விசையாகத் தொழிற்படுகிறது. பூமியின் இயக்கத்தைப் பொறுத்தவரையில் பூமி மீது சூரியன் செலுத்தும் புவியீர்ப்பு விசை மையநாட்ட விசையாகத் தொழிற்படுகிறது. எனவே மையநாட்ட விசை என்பது ஒரு தனியான, புதிய விசை அல்ல. ஏற்கனவே இருக்கும் ஒரு விசை வட்ட இயக்கம் என்று வரும் பொழுது அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்கின்றது. அது எந்த மையநாட்ட விசையானலும் அந்த வட்ட இயக்கத்தின் ஆரை (மையத்திலிருந்து அந்தப் பொருள் எவ்வளவு தூரத்தில் இயங்குகின்றது) மற்றும் அந்தப் பொருளின் கதியில் தங்கியிருக்கும். கூடிய கதியோடு வட்டத்தில் இயங்க வேண்டும் என்றால் கூடிய மையநாட்ட விசை தேவை. அப்படி இல்லாமல் அதே விசையோடு கூடிய கதி வேண்டும் என்றால் ஆரை பெரிதாகவேண்டும், அதாவது ஒரு பெரிய வட்டம் தேவை.
இதனால் தான் நீங்கள் சந்திகளில் திரும்பும் பொழுது வாகனத்தின் கதியைக் குறைக்கவேண்டும். திரும்பும் பொழுது நீங்கள் ஒரு வட்ட இயக்கத்தை மேற்கொள்கின்றீர்கள். ஏனென்றால் திரும்புதல் என்பது வட்டத்தின் ஒரு பாகம் வழி அசைவது போன்றது. வீதி தரும் உராய்வு விசை இங்கு மையநாட்ட விசையாகத் தொழிற்படுகின்றது.
அதற்கு ஓர் அதிகபட்ச பெறுமதி உண்டு. அந்தப் பெறுமதிக்கு ஒத்த கதியைத் தாண்டி நீங்கள் சென்றால், வட்டத்தின் ஆரை பெருப்பிக்கப்படும், அதாவது நீங்கள் வீதியைத் தாண்டியும் இழுத்துச் செல்லப்படுவீர்கள்.





# பசி தீர்த்த பள்ளிக் கதை

நினைவுகள்

ரஞ்சித் தேவராஜா

அது 1988ஆம் ஆண்டு. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் தரம் 6 'டீ' பிரிவில் இணைந்த முதல் நாள். நூலகத்துக்குப் பொறுப்பாக இருந்த நடராஜா என்பவரே எங்கள் வகுப்பாசிரியராகத் தற்காலிக பணியில் இருந்தார். அவரே விஞ்ஞான ஆசிரியரும் கூட. கன்ரீனுக்கு நாங்கள் எந்த வழியாகச் செல்ல வேண்டும் என்பதை எங்கள் எல்லோருக்கும் அழகாகக் காண்பித்தார்.

நடா அண்ணையின் கன்ரீன் தற்போது ஞானவைரவர் ஆலயம் அமைந்துள்ள பகுதியில்தான் அன்று இயங்கிக்கொண்டிருந்தது. இதை நடாத்துவது யார்? இங்கே என்னென்ன கிடைக்கும்? என்ன விலை? என்று எதுவுமே தெரியாத அப்பாவிச் சிறுவனாக நான், அவ்விடத்தை அடைந்தபோது, மணி 11:35க்கும் 11:40க்கும் இடையில் இருந்திருக்கும். கூட்டத்தைப் பார்த்ததும் பயந்தே விட்டேன். இந்தக் கூட்டத்துக்குள் நான் எப்படி? எப்போது? எதை வாங்கிச் சாப்பிடுவது? என்றே புரியவில்லை. ஆனால், அங்குள்ள தின்பண்டங்களையும் அவற்றின் விலைகளையும் அந்தச் சத்தம் சந்தடிகளினூடு நன்கு அறிய முடிந்தது.

உளுந்து வடை-50சதம், கடலை வடை -50சதம், வாய்ப்பன் -50சதம், போண்டா 50சதம், சூசியம்- 50சதம், றோல்- 75 சதம், கிழங்கு றொட்டி- 75சதம், பிளேன் ரீ -50சதம், பால் ரீ -75சதம்.

அந்தக் கூட்டத்துக்குள் நுழைய முடியாது தவித்தபோது, அங்கே ஓர் உயர்தர வகுப்பு அண்ணன் வந்தார். அவர் பெயர் முராத். முஸ்லிம் மாணவன். அப்போது யாழ்ப்பாணத்துக்குக் கோட்டக்கல்வி அதிகாரியாக இருந்த எம்.எம்.மன்சூரின் ஒரே மகன்.

★★★★★

அதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் யாழ். நகர் மீதான இந்திய அமைதிப் படையினரின் வெறியாட்டத்தின்போது, இடம்பெயர்ந்து சரசாலை என்ற கிராமத்தில் ஒரு வீட்டில் ஒதுங்கிய தருணத்தில் இவர்களின் குடும்பமும் பத்து நாள்கள் வரை எங்களுடன் தங்கியிருந்தது. அந்த அறிமுகத்தால்தான் முராத் என்னிடம் வந்து, "இந்தாடா பிடி" என்று கையில் ஒரு வடையையும், றோலையும் தந்து விட்டுச் சென்றான். அவை மிகச் சுவையாக இருந்தன. இது நடந்து இன்றுடன் 30 ஆண்டுகளும் ஆறு மாதங்களும் கடந்து விட்டன.

★★★★★

ஆண்டுகள் உருண்டோட, ஞானவைரவர் ஆலயமும் அவ்விடத்தில் தோன்றிவிட, நடா அண்ணையின் கன்ரீன், அதிபரின் அலுவலகத்துக்கு எதிரே இருந்த கட்டடத்தின் (மாணவர் விடுதி) ஒரு பகுதிக்கு மாறி விட்டிருந்தது. இருபுறமும் வாசல்கள் இருந்தமை உணவுகளை வாங்குவதற்குச் சற்றே இலகுவாக இருந்தது. கரையிலிருந்த ஜன்னல் கம்பிகளினூடும் வாங்கலாம். அல்லது கன்ரீனின் பின்பக்கம் இருந்த கதவு வழியாகவும் வாங்கலாம். திறந்திருந்த கதவுக்குக் குறுக்கே ஒரு மரச் சட்டம், வயிறு மட்டத்தில் போடப்பட்டிருக்கும். அதில் நின்றும் வாங்கலாம். அந்தக் கூட்டத்தில் நுழைந்து மரச் சட்டம் வரை சென்று விட்டால், பணத்தை நடா அண்ணையிடம் நீட்டி விடலாம். ஆனால், பண்டம் கைக்கு எட்டுவதற்கிடையில், அந்த மரச் சட்டத்தோடு சேர்த்து மாணவர் கூட்டம் ஓர் அமுக்கு அமுக்கியே விடும். வயிறு பிதுங்க, அதைத் தொடர்ந்து கண்களும் பிதுங்கி, குடல் எல்லாம் வெளியில் வந்து விடும்போல இருக்கும். இந்தக் கலவரத்துக்குள் நடா அண்ணையிடம் "ஒரு றோல்... ஒரு பால் ரீ" என்று சொல்லிப் பணத்தைக் கொடுத்துவிட்டு நிற்பேன். குறைந்தது இருநூறு கைகளாவது அவரை நோக்கி நீண்ட படி இருக்கும். அந்த இருநூறு கைகளில், எந்தக் கையில் இருந்து பணத்தைப் பெற்றுக்கொண்டாரோ, அதே கையில் உணவுப் பண்டத்தைச் சரியாகத் திணிப்பதில் நடா அண்ணை கெட்டிக்காரர். அப்படி வாங்கிய றோலையும், ரீயையும் கையில் கொண்டு அந்தக் கூட்டத்தை விட்டு வெளியே வருவதற்கு இன்னோர் ஈழப்போர் தான் புரிய வேண்டும். அப்படி வெளியே வந்து பார்க்கையில், கையில் கால்வாசி றோல் தான் மிஞ்சி இருக்கும். ரீ அத்தனையும் கொட்டித் தீர்ந்து அடியில் கொஞ்சம் 'மண்டித் தண்ணி' எஞ்சி இருக்கும். கொஞ்சக் கெட்ட வார்த்தைகளால் மனதுக்குள் எல்லோரையும் திட்டித் தீர்த்து விட்டுத் திரும்பிய கணத்தில் மதிய இடைவேளை முடிந்து அருமை அண்ணை மணியை அடிப்பது கேட்கும்.

★★★★★

பொதுவாக, நடா அண்ணை வடை, றோல் கொண்டு வரும் நேரம் காலை 10:30 அளவில் தான். அதுவும் நாங்கள் 11ஆம் வகுப்பில் படித்தபோது, முகர்ந்தே பிடித்து விடுவோம். அதிபர் அறைக்குப் பக்கத்தில், கல்லூரி வீதியோரம் அமைந்த வகுப்பு ஒன்றிலேயே படித்ததால், அவரது வரவு வடை வாசனையுடன் தெரிய வரும். பிரம்புக் கூடை ஒன்றைச் சைக்கிள் பின் கரியரில் கட்டி அது நிறைய வடை, றோல் என்பவற்றை எடுத்து வருவார். அந்த வாசனைக்குப் பிறகு படிப்பு எங்கே ஏறுவது? சமய பாட அம்பிகைபாகன் ஆசிரியர் கற்பிப்பது திரிகோண கணிதமா? என்று சந்தேகம் வந்துவிடும் அளவுக்கு சிந்தனைகள் சிதறி விடும்.

அனேகமாக வகுப்பில் உள்ளவர்களுக்குக் கன்ரீன் ஸ்பொன்சர் குகன் ஒருவன் தான். அந்தர அவசரத்துக்கு நடா அண்ணையிடம் கடன் கேட்கவும் தயங்க மாட்டான். சிலவேளைகளில் "இல்லைத் தரமாட்டேன்" என்று நடா அண்ணை சொன்னாலும், அடுத்த நொடியே கையில் எல்லாவற்றையும் கொடுத்தும் விடுவார். நல்ல மனுஷன். மடித்துக் கட்டிய சாரத்துடனும், பெனியனுடனும் கன்ரீனில் மிகவும் பரபரப்புடன் வேலை செய்வார். பள்ளிக்கு வரும்போதும், திரும்பும்போதும் வெள்ளை வெட்டி, சட்டையுடன் பொலிவாய் இருப்பார்.

ஆயிரம் ஆயிரம் மாணவர்ளுக்குப் பசி போக்கியவர். இந்துக் கல்லூரியில் எழுத்தறிவித்தவன் இறைவன் என்றால், எங்கள் பசியைத் தணித்து வைத்த இவரை என்ன என்பது?

★★★★

ந்டா அண்ணை பால் தேநீர் தயாரிக்கின்ற பக்குவம் ஒரு திணுசாகவே இருக்கும். நிறையவே அடிகள் விழுந்து, நெளிந்த ஓர் அலுமினியக் கோப்பை அது. பானையில் கொதித்துக்கொண்டிருக்கும் கொதிநீரை அந்தக் கோப்பையால் அள்ளிக்கொள்வார். அதனுள் தேயிலை நிறைந்த வடியொன்றை அமிழ்த்தி எடுப்பார். அந்தத் தேயிலை வடி கூட அவரது தயாரிப்பாய்த் தான் இருக்க வேண்டும்.

கவிழ்ந்த கூம்புபோன்ற துணியால் தயாரிக்கப்பட்ட தேயிலை வடி அது. அமிழ்த்தி எடுத்த தேயிலை வடியின் அடிப்பாகத்தை இரண்டு விரல்களால் அழுத்திவிடும் போது கடும் நிறத்தில் தேநீர் வடிவதைக் காணலாம்.

தேநீர் கோப்பையில் கொஞ்சம் சீனியைக் கலந்த பின், இன்னொரு கோப்பையில் பால் கொஞ்சம் எடுத்து, இதையும் அதையும் சேர்த்து, உயர்த்தியும்



நடா அண்ணை

தாழ்த்தியும் ஊத்தி, ஆத்த ஆரம்பிப்பார். வலது கை யானது தலைக்கு மேல் இரண்டு அடிகள் வரை உயரும். ஆனால் இடது கையை அவ்வளவு தூரம் உயர்த்த மாட்டார். இடது கைக் கோப்பையை சடாரெனச் சரித்துக் கொள்வார். இப்படி மூன்று தடவைகள் செய்வார். ஒரு துளி தேநீர் சிந்தாமல் இந்தச் சாகசம் நிகழும். அவ்வளவு தான். பால் தேநீர் ஆயத்தம்.

பணத்தைக் கொடுத்துவிட்டு, நடா அண்ணையின் இந்த அழகிய தேநீர் தயாரிப்பைக் கண் வெட்டாமல் பார்த்தபடி நிற்பது, எனக்கு அத்தனை மகிழ்வைத் தரும். அவரது உற்சாகமும், கைகளில் இருந்த அவரது வேகமும் அத்தனை வியப்பைத் தரும்.

★★★★★

எங்களுடைய கல்லூரிக் காலமானது பொன்னம்பலம், குகதாசன், பஞ்சலிங்கம் என்ற மூன்று அடுத்தடுத்த அதிபர்களின் பதவிக் காலங்களில் அமைந்திருந்தது.

1991ஆம் ஆண்டில் அப்போது புதிய அதிபராகப் பதவியேற்றுக் கொண்ட கௌரவ பஞ்சலிங்கம் அதிபரால், கடும் சட்டம் ஒன்று அப்போது நிறைவேற்றப்பட்டது. அதாவது, இடைவேளைகள் தவிர்ந்த எந்தவொரு பொழுதுகளிலும் கன்ரீனுக்கு வரும் மாணவர்களுக்கு நடா அண்ணை எதுவும் வழங்கக் கூடாது. இந்தச் சட்டம் முழுப் பாடசாலையையுமே பாதித்திருந்தாலும் அப்போதைய தரம்9 'சி' பிரிவு மாணவர்களை மட்டும் எந்த வகையிலும் பாதித்திருக்கவில்லை. அதில் நானும் ஒருவன்.

காரணம், எங்கள் வகுப்பிலிருந்த முப்பத்தெட்டு மாணவர்களுக்கும் படிப்புக்கு மேலால் 'நடிப்பு' மேலதிக தகைமையாக இருந்தது. நடா அண்ணைக்கு முன்னால் பசியால் மயங்குவதுபோலவும், தலைவலியால் துவழ்வதுபோலவும் பல நாடகங்களை அரங்கேற்றி, சிற்றுண்டிகள் மற்றும் தேநீரை எவ்வேளையிலும் பெற்றுக்கொள்வோம். சிலவேளை நடா அண்ணை "பாடத்தைக் கடத்துறதுக்கு ஓடியாறாங்கள்" என்று திட்டியும் விடுவார்.

ஆனாலும், நடா அண்ணையின் கன்ரீன் வாசலில் நாங்கள் நிற்கும்போது, அதிபர் அறையை நோக்கி ஒரு கண் இருந்துகொண்டே இருக்கும். காரணம், அதிபர் கையில் நாங்கள் அகப்பட்டால் 'கதை கந்தல் ஆகிவிடும்'. அகப்பட்ட இடத்தில் வைத்தே பூசை தான். ஆனால், கடடட அமைப்புக் கூட அங்கே எங்களுக்கு அனுகூலமாய் அமைந்திருந்தது. அதாவது,

சிற்றுண்டி வாங்கும் கன்ரீன் வாசல், அதன் பின்னால் உள்ள ஜன்னல், அதற்கும் பின்னால் இருந்த அதிபர் அலுவலகம் இவை மூன்றும் ஒரே நேர் கோட்டில் இருந்தமை ஆனது, அதிபர் வருகிறாரா என அவ்வப்போது அவதானிப்பதற்கு மிகவும் சௌகரியமாக இருந்தது.

ஒருமுறை முகுந்தன் தனக்கு வாங்கிய றோலை முதுகுக்குப் பின்னால் பிடித்தபடி 'ரீ' க்குக் காத்திருந்த வேளையில், பின்புறமாய் நாய்க்குட்டி போல பதுங்கிப் பதுங்கிச் சென்ற ஜெயகாந்த் குனிந்திருந்து அந்த றோல் முழுவதையும் கடித்துத் தின்றதையும், அதைத் தொடர்ந்து இருவரும் கட்டிப் புரண்டு அடிபட்டதையும் மறக்கவே முடியாது.

★★★★★

எங்களுடைய இந்துக் கல்லூரி வரலாற்றில் எமக்குக் கல்வி போதித்த ஆசிரியர்கள் எவ்வளவு முக்கியமோ, அதிபர் எவ்வளவு முக்கியமோ, படித்த புத்தகங்கள் எத்தனை முக்கியமோ அவை எல்லாவற்றையும் தாண்டி அதீத முக்கியத்துவம் கொடுக்க முடிந்தவரும், இன்று வரை பாடசாலை நினைவுகளுடன் ஒட்டி இருப்பவரும் என்று சொன்னால், அது நடா அண்ணை தவிர்ந்த வேறொருவரும் கிடையாது. அந்த நல்ல உள்ளம் இன்று உயிரோடு இல்லை. இருந்தும் அவரது நினைவுகள் மட்டும் சிரஞ்சீவியாக உயிரோடு இருந்து கொண்டுதான் இருக்கின்றன.

சீருடை அணிந்தவாறு பாடசாலையில் நிற்பதாகக் கற்பனை உருவாகும் தருணங்களில் எல்லாம் கூடவே நடா அண்ணையும் அவரது கன்ரீனும் சேர்ந்தே தான் கற்பனையில் வருகிறது. இதுதான் அவரது நிரந்தர நினைவுகளுக்கான ஆதாரமும் கூட.



பி.சலோமி,
தரம் - 5பி,
யா/கல்வியங்காடு இந்து தமிழ்க் கலவன் பாடசாலை.



ப.யதிவர்ணன்,
தரம் - 7 டி,
யாழ். இந்துக் கல்லூரி.

# வாசியுங்கள்



பிள்ளைகளே!
வாசிப்பு ஒவ்வொருவரையும் முழுமை யாக்கு கிறது. எனவே வாசிப்போம். சைக்கிள்களில் சவாரி செய்வதுபோல மெதுவாகத் தொடங்கிப் படிப்படியாக, வேகமாகப் பயணிப்போம். சந்த டியில்லாத இடத்தில் அமர்ந்து மௌனமாக வாசியுங்கள். கருத்தூன்றி வாசித்துக் கிரகியுங்கள். வேகமாக வாசிப்பவன் விரைவா கவே கற்றுக்கொள்கிறான். வாசிக்கும் புத்தகங் களில் உள்ளவற்றை மீண்டும் நினைவு படுத் திக்கொள்ளுங்கள். உங்கள் நண்பர்களுக்கு அதிலுள்ளவைகள் பற்றிச் சொல்லித் தெளிவு பெறுங்கள். வாசிப்பவனே கல்வியைப் பெற்று உயருகிறான். எனவே நாம் வாசிப்போம். பயன்பெறுவோம். நல்லவைகளைப் பற்றிச் சிந்திக்கவும் செயலாற்றவும் வாசிப்பே அவசி யமானதாகும்.

# பசிக்கும் போது சாப்பிடு

பணக்காரர் ஒருவர் ஓர் இரவு விருந்துக்காகப் பல ரைத் தமது வீட்டுக்கு அழைத்திருந்தார். அங்கே வகை வகை யான, சுவையான உண வுப்பண்டங்கள் நீண்ட மேசையில், பாத்திரங்க ளில் இட்டுப் பரவி வைக் கப்பட்டிருந்தன. நேரமோ போய்க் கொண்டிருந்தது.



ஆனால் விருந்துக்கு அழைத்த பணக்காரரோ எவரையும் விருந்து மேசைக்கு அழைத்துச் செல்லாமல் யாரோ ஒரு வரின் வருகைக்காகக் காத்துக் கொண்டிருந் தார். அவர் எதிர்பார்த்துக்கொண்டிருந்த விருந்தி னரோ வரத் தாமதமாகியதால் அங்கே வந்த விருந்தினர்கள் பலருக்கும் பசியைத் தாங்க முடியவில்லை. அவர்களில் பலரும் பணக்காரரைக் கூட் டிச் செல்லாமல் எப்படி உணவு அருந்தும் மேசைக் குச் செல்வதென்று புரியா மல் தடுமாறினர்.

அப்பொழுது அவர்களுள் எவருடைய அழைப்பை யும் எதிர்பார்க்காமல் விருந்து மேசையில் உட் கார்ந்து உணவைத் தாமா கவே எடுத்து உண்ணத் தொடங்கினார் ஒருவர். இதை அவதானித்த பணக்காரருக்குக் கடுங்கோபம் வந்தது. அவர் கோபத்தோடு, ''பன்றிக்கும் மனிதனுக்கும் வேறுபாடு என்ன?" என்று அங்கிருந்தவர்களைப் பார்த்து கேட்டார். சாப்பிட்டுக் கொண்டிருந்த விருந்தினரோ மிகவும் அமைதியாக உண வைச் சுவைத்தபடி "மனிதன் பசிக்கும்போது சாப்பிடுவான் பன்றி கிடைக் கும்போது தான் சாப்பிடும்." என்று பதில் கூறினார். பணக்காரர் மௌனமானார்.



# புஷூமியின் மதிநுட்பம்

ஆகாஷ் என்ற சிறுவன் தனது செல்லப்பிராணி யாக புஷூமி என்ற பூனையை வளர்த்து வந்தான். புஷூமிமற்றைய பூனைகளைவிட வித்தியாசமானது. அது எலிகளைப் பிடித்துத் தின்பதை வெறுத்தது. தனது செல்லப்பிராணியின் இத்தகைய நற்கு ணத்தை ஆகாஷ் தனது நண்பர்களுக்குக் கூறி மகிழ்வான். இதனால் அவனின் வீட்டில் எலிகளின் அட்டகாசம் அதிகரித்தது. ஆகாஷின் ஆடைகளை யும், அவன்விரும்பிஉண்ணும்சிற்றுண்டிகளையும் அந்த எலிகள் நாஷம் செய்வது புஷூமிக்கு எரிச்சலூட் டியது.

ஒரு நாள், ஓர் எலி ஆகாஷின் ஆடைகளைப் பற்க ளால் வெட்டிக்கொண்டிருந்ததைக் கண்ட புஷூமி வழமைக்கு மாறாக அந்த எலியைப் பாய்ந்து பிடித் துக் கொன்றது. மறுநாள் புஷூமி வீட்டின் கூரைமேல் நடந்து வருவதையும் காணாது ஓர் எலிக்குஞ்சு கண்ணீர் வடிய அழுது கொண் டிருந்தது. அதன் அருகில் சென்ற புஷூமி "ஏன் அழுகி றாய்?" என அதனிடம் பரிவு டன் வினவியது. எலிக்குஞ்சும் அழுதவாறே "நீ நேற்று என் அம்மாவைக் கொன்று விட் டாய் நானும் என் சகோதரர்க ளும் அம்மாவை நினைத்து அழுது கொண்டிருக்கிறோம்" என்று கூறிக் கண்களைத் துடைத்தது. இததைக் கேட்ட புஷூமியின் முகத்தில் கவலை படர்ந்தது. உடனே அது எலிக் குஞ்சிடம் எலிகள் செய்யும் திருட்டு வேலைகள் பற்றிக் கூறி யது. அதற்கு எலிக்குஞ்சோ "எங்களுக்குத் திருட்டு மூலமாகத்தான் உணவு கிடைக்கிறது. எங்களைக் கண்டால் நீ மட்டுமல்ல மனிதர்கள்கூட எலிப்பொறி வைத்து எம்மையெல்லாம் கொன்று விடுகிறார்களே" என்றது. புஷூமி எலிக்குஞ்சு கூறியதைக் கேட்டு ஆமோதித்து விட்டு "அப்படியாயின் நான் கூறுவதற்கு நீங்கள் ஒத்துழைத்தால் இனிமேல் ஒருவரை ஒருவர் கொன்று உறவுகளை இழந்து தவிக்க வேண்டி ஏற் படாது" எனக் கூறியது.

எலிக்குஞ்சும் ஆவலுடன் புஷூமியின் திட்டத்தைக் கேட்டது. "எனக்கு எனது எஜமானான ஆகாஷ் தின மும் தரும் பாலிலும் பல்சுவை உணவுகளிலும் உங்களுக்கும் பங்கிட்டுத் தருகிறேன். நீங்கள் சாப்பி டுங்கள்" எனக் கூறியது.

அப்போதுதான் எலியும் தங்களின் திருட்டுத்தனத்தை எண்ணி வெட்கப்பட்டது. பூனையும் எலிக்குஞ்சின் கவலையைத் தேற்றி, "இதை உனது சகோதரர்க ளுக்கும் சென்று கூறு" எனக் கூறியது. தூரத்திலிருந்து அனைத்தையும் செவிமடுத்துக் கொண்டிருந்த எலிக் குஞ்சின் சகோதரர்களும் கவலையை மறந்து கை கொட்டிச் சிரித்தன.



சிறுவர்களே! எம்மிடம் இருப்பவற்றை இல்லாதவர் களுக்கு பகிர்ந்தளிப்பதாலும் அவர்களைத் தீய செயல் களில் ஈடுபட விடாமல் தடுக்கலாம்?

# மரங்கள் வாழ்க! மாநிலம் வாழ்க!



மரஞ்செடி கொடியால் மண்ணில் வாழ்வு
மனிதர்கள் இதனை உணர்வது அறிவு
அறஞ்செயல நல்ல மரம் செடி வளர்ப்பு
அனைவரும் இதனை உணர்வது சிறப்பு

உடுத்தும் ஆடை தருவது எதுவோ?
உண்ணும் உணவுகள் தருவது எதுவோ?
படுக்கும் பாய்கள் தருவது எதுவோ?
பலவகை மரங்கள் செடிகொடிகள் அன்றோ?

அரிசியும் பருப்பும் கொடுப்பது எதுவோ?
அறுசுவை உண்டி அளிப்பது எதுவோ?
தரணியில் வாழ நற்றுணை எதுவோ?
தருக்களும் செடிகளும் கொடிகளும் அன்றோ!

மாங்காய், தேங்காய் கொடுப்பது எதுவோ?
மதுரக்கனிகள் கொடுப்பது எதுவோ?
நீங்காது நம்மைக் காப்பது எதுவோ?
நிழல் தரு மரங்கள் செடி, கொடி அன்றோ?

வாழ்க மரங்கள் செடிகொடி வாழ்க!
வானம் பொழிந்து மாநிலம் வாழ்க!
தாழ்வில்லாத தருமம் வாழ்க!
தானமும் தவமும் தழைத்து வாழ்க!

மே.ஈகைநிலா,
தரம் - 06
யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை.

# கதாநாயகி தெரிவில் நிறம் முக்கியமல்ல திறமையே அவசியம்

-பாரதிராஜா



பாரதிராஜா இயக்கி நடித்துள்ள படம் 'ஓம்'. இதில் கதாநாயகியாக நட்சத்திரா என்னும்புதுமுகத்தைநடிக்கவைத்துள்ளார். இதுகுறித்து இயக்குநர்பாரதிராஜா அளித்துள்ள செவ்வியில் "நான் அதிகமாக புதுமுகங்களை வைத்து படம் இயக்கவே விரும்புவேன். பிரபலமான நடிகர்கள் படத்தில் இருந்தால் ரசிகர்களுக்கு இவர் இதை செய்வார் என்னும் எண்ணம் இருக்கும். ஆனால் புதுமுகங்கள்என்றால்கதையில்மட்டும்கவனம்இருக்கும். இந்தப்படத்தில்கூட பிரபல நடிகைகள் நடிக்க ஆர்வமாக இருந்தார்கள். ஆனால் கதைக்காக நட்சத்திராவை பிடிவாதமாக இருந்து தேர்வு செய்தேன். தமிழ் சினிமாவில் தமிழ் பேசும் கதாநாயகிகள் குறைந்து விட்டார்கள். காரணம் தமிழ் பெண்கள் இன்னமும் சினிமாவில் நடிக்க வரத் தயங்குகிறார்கள். இதற்கான காரணம் என்ன என்றே தெரியவில்லை. ஒருவேளை இயக்குனர்கள் நிறத்துக்காக பிறமொழி நடிகை களை கொண்டுவர ஆர்வம் காட்டுகிறார்களாஎன்றும்சந்தேகமாகஇருக்கிறது. என் கதாநாயகிகள் திறமையாகத் தான் இருக்க வேண்டும்" என்றார்.



## பொன்மொழி



### பிலைஸ் பாஸ்கல்

- நீதி மற்றும் அதிகாரம் ஆகிய இரண்டும் ஒன்றிணைந்தே கிடைக்க வேண்டும்.
- வலிமை இல்லாத நீதி அதிகாரமற்றது; நீதி இல்லாத வலிமை கொடுமையானது.
- கற்பனையே ஒவ்வொன்றையும் தீர்மானிக்கின்றது.

  வலிமை இல்லாத சட்டம், செயல்திறன் அற்றது.
- 'கடவுள்' காரணங்களால் உணரப்படுவது இல்லை, இதயத்தாலேயே உணரப்படுகிறது.
- மனிதனுடைய உயர்வு அவனுடைய சிந்தனையின் ஆற்றலைப் பொறுத்தது.
- நண்பர் தனது முதுகுக்கு பின்னால் என்ன கூறுவார் என்பதை பரஸ்பரம் அறிந்து வைத்திருக்கும் நட்பு தொடர்ந்து வாழும்.
- நாம் ஒருபோதும் மனிதர்களை நேசிப்பதில்லை, ஆனால் அவர்களது பண்புகளை நேசிக்கிறோம்.
- அன்பான வார்த்தைகளுக்கான செலவு அதிகம் இல்லை, ஆனாலும் அவை சாதிப்பது அதிகம்.
- இரண்டு வகையான மனிதர்கள் மட்டுமே உள்ளனர்: தங்களை பாவிகளாக நினைக்கக்கூடிய நீதிமான்கள் மற்றும் தங்களை நீதிமான்களாக நினைக்கக்கூடிய பாவிகள்.



## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** நண்பருக்கு இயன்ற அளவில் உதவிபுரிவீர்கள். தொழில், வியாபாரம் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். தாராள பணவரவில் சேமிப்பு கூடும்.

**இடபம்:** எவருக்கும் தகுதி மீறிய வாக்குறுதி தராதீர்கள். தொழில் வியாபாரத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். சேமிப்பு பணம் செலவுக்கு பயன்படும்.

**மிதுனம்:** திறமையை வளர்த்துக் கொள்வீர்கள். செயல்களில் பெறுகின்ற நன்மை அதிகரிக்கும். தொழில், வியாபாரம் செழிக்க புதிய வாய்ப்பு கிடைக்கும்.

**கடகம்:** அனுகூல சூழ்நிலை அமையும். தொழில், வியாபாரத்தில் கூடுதல் மூலதனம் செய்வீர்கள். உற்பத்தி விற்பனை அதிகரிக்கும்.

**சிங்கம்:** உங்களின் கஷ்ட சூழ்நிலையை பிறரிடம் சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலத்தை பாதுகாக்க வேண்டும். பணவரவு கிடைக்கும்.

**கன்னி:** செயல்களில் மேம்போக்கான தன்மை இருக்கும். முக்கியப் பணிகளில் கூடுதல் பங்களிப்பு அவசியம். தொழில், வியாபாரத்தில் நடைமுறை செலவு அதிகரிக்கும்.

**துலாம்:** வாழ்வில் முன்னேற்றம் பெற வியத்தகு அளவில் பணிபுரிவீர்கள். தொழில், வியாபாரத்தில் புதிய சாதனை இலக்கு பூர்த்தியாகும்.

**விருச்சிகம்:** உங்கள் பேச்சில் உறுதி இருக்கும். மற்றவர் விமர்சனத்தை பொருட்படுத்த மாட்டீர்கள். தொழில், வியாபாரத்தில் தாராள வளர்ச்சி இருக்கும். ஆதாயம் அதிகரிக்கும்.

**தனுசு:** மனதில் இனம் புரியாத கவலை உருவாகலாம். நண்பர்களின் உதவி கிடைக்கும். தொழில் வளர்ச்சி பெற அதிகம் பணிபுரிவீர்கள்.

**மகரம்:** குடும்ப உறுப்பினர் ஆதரவாக நடந்து கொள்வர். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சி படிப்படியாக ஏற்படும். மிதமான பணவரவு கிடைக்கும்.

**கும்பம்:** சிந்தனையில் புதுமை நிறைந்திருக்கும். எவரிடமும் அளவுடன் பேசி நன்மை பெறுவீர்கள். தொழில், வியாபாரம் சார்ந்த இடையூறு விலகும்.

**மீனம்:** நேர்மையை பின்பற்றி நன்மை காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். உறவினர் வகையில் பணம் செலவு செய்ய நேரிடலாம்.

## சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 9 | | | 2 |
| | | | | | | | 1 | 4 |
| 1 | 3 | | | 5 | | | | 7 |
| | | 5 | 6 | | | | | |
| | 6 | | 2 | 9 | 7 | | 4 | |
| | | | | | 3 | 6 | | |
| 9 | | | | 7 | | | 8 | 1 |
| 4 | 8 | | | | | | | |
| 2 | | | 9 | | | | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 5 | 3 | 8 | 6 | 2 | 7 | 9 | 4 |
| 2 | 8 | 4 | 9 | 7 | 5 | 6 | 3 | 1 |
| 9 | 7 | 6 | 1 | 3 | 4 | 8 | 2 | 5 |
| 7 | 6 | 8 | 5 | 9 | 3 | 1 | 4 | 2 |
| 3 | 4 | 9 | 2 | 1 | 6 | 5 | 7 | 8 |
| 5 | 2 | 1 | 7 | 4 | 8 | 9 | 6 | 3 |
| 6 | 1 | 2 | 3 | 5 | 7 | 4 | 8 | 9 |
| 4 | 3 | 5 | 6 | 8 | 9 | 2 | 1 | 7 |
| 8 | 9 | 7 | 4 | 2 | 1 | 3 | 5 | 6 |

நேற்றைய விடை






எனக்கு இனி வாத்தியார் வேலையே வேண்டாம்பா ஆளை விடு..

ஒரே ஜோக்குக்கு எம்மால் 100 தடவை சிரிக்க முடியாது...



பிறகு ஏன் ஒரே பிரச்சினைக்குத் தொடர்ந்து அழனும்... வாழ்க்கை ரொம்ப சின்னது... என்ஜாய் பண்ணுங்க...

## காலம் மாறிப் போச்சு....



அன்று



இன்று

வரும்போது என்ன கொண்டு வந்தாய் இங்கே இழப்பதற்கு..?"

"நிறைய பணம் கொண்டு வந்தேன் டாக்டர்..!"



ஒரு சிந்தனை எம்மை நெருப்பை விட அதிக் சூடாக்கி விடுகிறது.



# பெண்களின் கூந்தலை வளர்க்கும் வெந்தயம்




வெந்தயத்தை ஊற வைத்து அரைத்து தலைக்கு தடவி வைத்திருந்து குளிப்பதால் நல்ல பயன் கிடைக்கும். முடி கொட்டுதல், பொடுகு, தலை வழுக்கை, முடி மெல்லியதாக ஆகுதல் ஆகியவற்றுக்கு வெந்தயத்தை தாராளமாக உணவில் சேர்த்து கொள்ளலாம்.

வெந்தயம் ஒரு கைப்பிடி அளவு எடுத்து அதனோடு 4 கோப்பை நீர் ஊற்றி அடுப்பிலிட்டு 15 நிமிடங்கள் காய்ச்சி எடுத்து ஆற வைத்து வடிகட்டி வைத்துக் கொண்டு தினம் 2 தடைவைகள் முகத்தைக் கழுவுவதற்கு உபயோகித்தால் முகத்துக்கு நல்ல வனப்பைத் தருவதோடு, சுருக்கங்களை நீக்கி நல்ல மென்மையான பொன் நிறத்தையும் கொடுக்கும்.

வெந்தயத்தோடு தேன் சேர்த்து முகப்பருக்களின் மீது பூசி வைத்திருந்து இளஞ்சூடான நீரில் கழுவி வர முகப்பருக்கள் குணமாகும். வெந்தயத்தை தண்ணீரில் ஊற வைத்து அரைத்து எடுத்துக் கொண்டு தலையில் தேய்த்து குளித்துவர முடி கொட்டுவது நின்று முடி நன்கு வளர தொடங்கும். வெந்தயத்தை இரவு முழுவதும் நீர்விட்டு ஊற வைத்து காலையில் மைய அரைத்து வைத்துக் கொண்டு அதனோடு சிறிது தயிர் சேர்த்து நன்கு கலந்து தலை முடிக்கும், தலையின் மேற்புறத்தும் தடவி நன்றாக மசாஜ் செய்து வைத்திருந்து 20 நிமிடங்களுக்கு பிறகு தலைக்கு குளித்தால் பொடுகுகள் போகும். வெந்தயத்திற்கு இளநரையையும் போக்கக்கூடிய மருத்துவக் குணம் உண்டு. கைப்பிடி அளவு வெந்தயத்தை 300மி.லி. தேக்காங் எண்ணெய்யில் இட்டு கொதிக்க வைத்து எடுத்து வடிகட்டி இளஞ்சூட்டோடு தலைக்குத் தேய்த்து நன்கு மசாஜ் செய்துவர இளநரையைத் தடுத்து நிறுத்தும். எண்ணெய் இரவு முழுவதும் தலையில் ஊறும்படி வைத்திருந்து காலை குளிக்க வேண்டும்.

# வெண்மையான பற்களைப் பெற வழிமுறைகள்



அகத்தின் அழகு முகத்தில் தெரிய, முகத்தின் அழகோ வெண்மையான பளிச்சிடும் பற்களில் தான் தெரியும். ஆனால், இவ்வாறான பளிச்சிடும் பற்களை பாதுகாத்துப் பராமரிப்பது எல்லோரும் நினைப்பது போல பெரிய விடயம் கிடையாது. வெண்மையான பளிச்சிடும் பற்களை பராமரிப்பது நீங்கள் நினைப்பதை விட மிகவும் இலகுவான செயல்.

உங்களுடைய பற்களுக்கு போதுமான அளவு கவனிப்பைக் கொடுப்பதன் மூலம் நல்ல ஆரோக்கியமான பற்களைப் பெறுவதுடன், அவற்றை வெண்மையாகவும், மின்னும் வகையிலும் பராமரித்திட முடியும். இதோ அவ்வாறு பற்களைப் பராமரிக்க செய்யக்கூடாதவை மற்றும் செய்ய வேண்டியவைகள் கொடுக்கப்பட்டுள்ளன.

**சமையல் சோடா**

சமையல் சோடா பயன்படுத்துவதை முடிந்த வரையிலும் தவிர்க்கவும். சமையல் சோடா பல்வேறு விடயங்களில் நல்ல பயன்களைத் தந்தாலும், பற்களில் உள்ள எனாமலை அது நீக்கி, மஞ்சள் கறைகள் படிய வழிவகை செய்து விடுகின்றது. எனவே தான் சமையல் சோடாவைத் தவிர்க்க வேண்டும்.

**கறுப்பு நிற உணவுப் பொருள்கள்**

கருமையான வண்ணங்களைக் கொண்டிருக்கும் பழங்கள் மற்றும் உணவுகளைத் தவிர்த்தல். சோயா சோஸ், மரினாரா சோஸ் போன்ற உணவுகளில் அதிகமான மற்றும் கருமையான வண்ணங்கள் உள்ளதால், அவை உங்களுடைய பற்களில் கறைகளை ஏற்படுத்தி விடுகின்றன.

**குளிர் பானங்கள்**

சந்தைகளில் விற்கும் சக்தியூட்டும் பானங்களை குடிப்பதை அறவே தவிர்க்கவும். விளம்பரப்படுத்தப்படுவதைப் போல, அவையொன்றும் நல்ல விளைவுகளை உங்களுக்கு தரப்போவதில்லை, குறிப்பாக பற்களுக்கு. இந்த பானங்களில் கலந்துள்ள அமிலங்களின் சுரண்டும் தன்மை, பற்களின் வெண்மையைச் சுரண்டி விடுகின்றன.

**பற்தூரிகையை மாற்றவும்**

உங்களுடைய பற்தூரிகையை அவ்வப்போது மாற்றவும். ஒரு மாதத்திற்கு ஒருமுறை பற்தூரிகையை மாற்றுவது நல் செயலாகும். அல்லது உங்களுடைய பற்தூரிகை தேய்ந்து விட்டதாகத் தோன்றும் போது புதிதாக ஒன்றை வாங்க மறந்து விட வேண்டாம். அதுவும் நல்ல தரமான பற்தூரிகையை வாங்கவும்.

**சுத்தமான நாக்கு**

உங்களுடைய நாக்கை சுத்தமாக வைத்திருக்கவும். நாக்கை சுத்தம் செய்வதன் மூலம் புத்துணர்வு மிக்க சுவாசம் கிடைப்பதோடு மட்டுமல்லாமல், பற்களின் இயற்கையான வண்ணத்தைப் பாழ்படுத்தும் பக்ரீரியாக்களையும் சுத்தம் செய்து விடலாம்.

**பழங்களைச் சாப்பிடவும்**

பற்களின் வெண்மை நிறத்தை தேக்கி நிறுத்தும் பொருட்டாக பழங்களைச் சாப்பிட்டு வரலாம். பழங்களை சாப்பிடுவதன் மூலமாக பற்களைச் சுத்தம் செய்வதுடன், அவற்றை ஆரோக்கியமாகவும் வைத்திருக்கலாம்.



# இது புதுசு

ஆண்களுக்கான சேட் வகைகள் சில சந்தைக்கு அறிமுகமாகியுள்ளன. இவை இரண்டாயிரத்து 300 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | சுன்னாகம் | மருதனார்மடம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|
| கத்தரி | 120 | 90 | 100 | 100 |
| முள்ளங்கி | 80 | 80 | 120 | 120 |
| மரவள்ளி | 40 | 40 | 40 | 40 |
| பயிற்றை | 120 | 80 | 40 | 100 |
| பாகல் | 280 | 160 | 180 | 240 |
| க.கிழங்கு | 100 | 100 | 220 | 120 |
| பெ.வெங்காயம் | 100 | 105 | 140 | 110 |
| சி.வெங்காயம் | 120 | 120 | 140 | 140 |
| பூசணி | 40 | 80 | 100 | 60 |
| தக்காளி | 180 | 160 | 100 | 160 |
| வாழைக்காய் | 70 | 80 | 80 | 80 |
| கீரை | 20 | 20 | 10 | 20 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 40 | 40 |
| ப.மிளகாய் | 400 | 400 | 300 | 500 |
| புடோல் | 110 | 70 | 100 | 100 |
| கோவா | 150 | 180 | 180 | 160 |
| வெண்டி | 100 | 50 | 100 | 100 |
| போஞ்சி | 300 | 250 | 260 | 280 |
| லீக்ஸ் | 240 | 150 | 140 | 180 |
| தேங்காய் | 70 | 50 | 60 | 70 |
| உ.கிழங்கு | 100 | 100 | 100 | 100 |
| தேசிக்காய் | 80 | 50 | 40 | 50 |
| வல்லாரை | 20 | 40 | 15 | 20 |
| கறிமிளகாய் | 280 | 200 | 300 | 300 |
| கரட் | 280 | 300 | 320 | 180 |
| முருங்கைக்காய் | 200 | 120 | 60 | 180 |

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்



| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 1000 | 1000 | 1200 | 1000 |
| நண்டு | 600 | 500 | 700 | 600 |
| கணவாய் | 800 | 900 | 1000 | 1000 |
| பாரை | 700 | 900 | 800 | 1100 |
| சுறா | 900 | 900 | 1200 | 1200 |
| சீலா | 500 | 500 | 700 | 400 |
| விளை | 600 | 500 | 700 | 700 |
| முரல் | 400 | 400 | 600 | 500 |
| கும்பிளா | 400 | 350 | 500 | 300 |
| கிளாக்கன் | 800 | 400 | 600 | 600 |
| ஒரா | 400 | 500 | 600 | 500 |
| திரளி | 250 | 300 | 300 | 250 |
| நகரை | 250 | 300 | 500 | 250 |
| சூடை | 180 | 150 | 300 | 150 |
| ஒட்டி | 300 | 300 | 400 | 400 |
| திருக்கை | 350 | 300 | 500 | 400 |
| மதனம் | 250 | 300 | 300 | 300 |
| கொய் | 200 | 100 | 100 | 100 |
| பாலை | 250 | 300 | 700 | 300 |
| வாளை | 200 | 300 | 500 | 200 |

# பாரினில் பல்வகை

கவிதை

முருகு



பாரினில் உள்ளன
பல்வகை யான 'பம்'!
பாட்டினில் அறிந்ததைச்
சொல்வதென் நுட்பம்!

இறையருள் வேண்டிக்
காட்டுவோம் தூபம்!
கறையிருள் நீங்கிடவே
ஏற்றுவோம் தீபம்!

எல்லாரும் ஏற்பது
வாழ்வினில் இன்பம்!
எல்லாரும் வெறுப்பது
வாழ்வினில் துன்பம்!

வீதியின் ஓரத்தில்
நிற்கும் மின்கம்பம்!
ஆழியின் அலைகளில்
மிதந்திடும் தெப்பம்!

கோவிலின் உள்ளே
நிற்பது கொடித்தம்பம்!

கோவிலில் குருக்கள்
வைப்பது கும்பம்!

சோம்பலால் கூடுமே
உடலின் பருப்பம்!
சோகத்தில் கூடுமே
மனதினில் தாபம்!

கபம் நிறைந்தால்
சுபம் குறையும்!
கபம் குறைந்தால்
சுபம் நிறையும்!

பலவித உறவுகள்
கலந்ததே குடும்பம்!
பலவித மலர்கள்
இணைந்ததே கதம்பம்!

மண்ணுக்கும் மங்கைக்கும்
எழில் தரும் புஷ்பம்!
கண்ணாடி காட்டுமே
உருவத்தின் பிம்பம்!

அழுக்கை அகற்றிட
உதவிடும் துடைப்பம்!

அழுக்கு நிறைந்த
வாழ்விடம் குப்பம்!

செங்கதிர் வீச்சு
உயர்ந்தால் வெப்பம்!
செங்கதிர் வீச்சு
குறைந்தால் தட்பம்!

அதிக விலையால்
கிடைப்பது இலாபம்!
அதிக இலாபத்தால்
கிடைப்பது பாவம்!

முனிவரின் விழிகளில்
தெறித்தது கோபம்!

முனிவரின் மொழிகளில்
வெடித்தது சாபம்!

ஊண் மிகுந்தால்
வந்திடும் ஏப்பம்!
வீணர்கள் மிரட்டிப்
பெறுவது கப்பம்!

காற்று அடித்திட
உதவிடும் ஓர்'பம்'!
நீர் இறைத்திட
உதவிடும் ஓர் 'பம்'!

ஆடலும் பாடலும்
நிகழிடம் மண்டபம்!
அர்ச்சுனன் கரங்களில்
நிமிர்ந்தது காண்டீபம்!

வாழும் மனங்களில்
பலவகை விருப்பம்!
நீளும் தெருக்களில்
பலவகைத் 'திருப்பம்'!

இவ்வண்ணம் பல 'பம்'
உள்ளன உலகினில்!!
எவ்வண்ணம் கூறுவேன்
அனைத்தையும் கவிதையில்?

## சொற்சிலம்பம் போட்டி இல: 534

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | | ■ | 5 |
| 6 | | ■ | 7 | | ■ | 8 | |
| | ■ | 9 | | | 10 | | ■ |
| 11 | 12 | | | ■ | | ■ | 13 |
| 14 | | | ■ | 15 | | | |
| ■ | | ■ | 16 | | | ■ | |
| 17 | | | | | ■ | 18 | |
| 19 | | ■ | 20 | | | | |

அனுப்புபவர் பெயர்:........................................
முழுமையான தபால் விலாசம்: ..............................
..........................................................
கையொப்பம்:.................................................

### இடமிருந்து வலம்

1. மேன்மையான தன்மை
6. வணங்கு
7. மீனவர் கடற்கரையோரத்தில் அமைப்பது
8. அரைவாசி
9. தீ பற்றி எரிவதை இப்படிச் சொல்வர்
11. இது இல்லாத மனிதன் உயர்ந்தவன்
14. ரகம்
15. புகழுடம்பு எய்திய பெருமைக்குரியவன்
16. புத்திரன்
17. சொந்தக்காரன்
18. ஒன்றை மற்றொன்றுடன் சேர்
19. மற்றவர் முகத்தில் தாக்கும் போது ஏற்படும் ஓசை
20. இல்லறம் துறந்து போவது இதற்கு

### மேலிருந்து கீழ்

1. தேன் போன்ற கவிதைகளைத் தருபவன்
2. வேகம்
3. ஓட்டை
4. அழகு
5. சந்திரன்
8. தூய வெள்ளை நிறத்துக்கு உதாரணமாகக் கூறப்படுவது
9. தோற்றத்தை வெளிப்படுத்துவது
10. ஜலதோஷம்
12. படபடப்பு உறுதல்
13. சுயநலத்தன்மை
15. விசாலமான
16. இது ஒரு குரங்கு
17. (கண்ணீர்) சொரி
18. பசுவிலிருந்து பாலை எடு என்ற ஏவல்

வாசகர்கள் மத்தியில், குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம் 532 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**
(1) இதிகாசம் (5)அவா (7)யன்னல் (8)பகல் (9)கல்யாணம் (11) புரம் (13)சம்பாதி (15)தவி (16)பானை (17)வரி (18) கட (19)அம்பு (20)அலம்பல் (22)குருவி (23) திலகம்

**மேலிருந்து கீழ்**
(1) இயம்புதல் (2)தின் (3)கானகம் (4)சல்லி (5)அகம்பாவம் (6) வால் (8) பணம் (10)யாசனை (12)ரவி (14)திரிபுரம் (16)பாடம் (18)கல்வி (19)அல்ல (20)அரு (21)பதி

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே
ரூபா 300/=, ரூபா 250/=,
ரூபா 200=, ரூபா 150/=
ரூபா 100/=
பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 532 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
திருமதி பு.கஜேந்திரன்,
பிரதேச வைத்தியசாலை,
காரைநகர்.

**2 ஆம் பரிசு**
பா.பிரியரூபினி,
இல.226/73, அம்மன் நகர்
தோணிக்கல், வவுனியா.

**3 ஆம் பரிசு**
என்.பாலகுமார்,
இல.65/9, அம்பலவாணர் வீதி,
யாழ்ப்பாணம்.

**4 ஆம் பரிசு**
இராஜமுத்து மஞ்சுளா,
பிரதேச வைத்தியசாலை,
அச்சுவேலி.

**5 ஆம் பரிசு**
மயில்வாகனம் சிவராசா,
கரப்புக்குத்தி,
கனகராயன்குளம்.

**பாராட்டுப் பெறுவோர்**

து.அபிராமி,
575/5, கொழும்புத்துறை கிழக்கு,
யாழ்ப்பாணம்.

ஸ்ரீ.மயூலக்ஷன்,
பழங்கிணற்றடிப் பிள்ளையார்,
கலாசாலை வீதி, திருநெல்வேலி.

றொ.வெறோமி,
யா/பாஷையூர்,
சென்அன்ரனீஸ் றோ.க.,
மகளிர் வித்தியாலயம்.

**சொற்சிலம்பம் போட்டி இல.534**
பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், (15.08.2018 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாக, தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இல.534 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 19.08.2018 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

போட்டிகளில் வெற்றியீட்டியவர்களாக அறிவிக்கப்பட்டு, இதுவரை தமக்கான பரிசுக் காசோலைகள் கிடைக்கப்பெறாதவர்கள் வார நாள்களில் உதயன் அலுவலக நிதிப் பிரிவில், போட்டிக் கூப்பன்களில் தாம் குறிப்பிட்ட தமது பெயர், வதிவிட விவரங்களை உறுதிப்படுத்தி தமக்கான கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ள இயலும். போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**சொற்சிலம்பம் போட்டி 532 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**

# இந்த வாரம்

**05.08.2018 முதல் 11.08.2018 வரை**

*உங்களுக்கு எப்படி?*

## மேடம்

புதன், குரு, சுக்கிரன், சந்திரன் அளப்பரிய நன்மை வழங்குவர். மனதில் உருவான குழப்பம் நண்பரின் ஆலோசனையால் விலகும். சமூக சேவைப்பணிக்காக பாராட்டு கிடைக்கும். புதிய வாய்ப்புக்களை பயன்படுத்தி பணவரவை அதிகரிப்பீர்கள். பிள்ளைகள் படிப்புடன் ஆன்மிக நம்பிக்கையிலும் மேம்படுவர். இஷ்ட தெய்வ வழிபாடு நன்மை தரும். விவகாரங்களில் சுமுக தீர்வு கிடைக்கும். மனைவி குடும்ப ஒற்றுமை நிலைத்திருக்க பணி செய்வார். தொழிலில் உற்பத்தி, விற்பனை செழித்து பணசேமிப்பு கூடும். பணியாளர்கள் அக்கறையுடன் பணிபுரிந்து சலுகை பெறுவர். பெண்கள் வீட்டு உபயோகப் பொருட்கள் வாங்குவர். மாணவர்கள் ஆர்வமுடன் படித்து முன்னேறுவர்.

## இடபம்

சூரியன், ராகு, சுக்கிரன், சந்திரனால் நன்மை உண்டாகும். அக்கம் பக்கத்தவர் அன்பு பாராட்டுவர். மனமும் செயலும் உற்சாகம் பெறும். வாகனப்பயன்பாடு திருப்திகரமாக இருக்கும். பிள்ளைகள் பெற்றோரின் வழிகாட்டுதல்களின் பயன் உணர்ந்து ஏற்றுக்கொள்வர். ஆரோக்கியம் சீராக இருக்கும். மனைவி உங்களின் நல்ல குணத்தை பாராட்டுவார். உறவினர்களின் வருகையால் வீட்டில் சந்தோஷம் நிறைந்திருக்கும். தொழிலில் இருக்கும் இடையூறுகளை சரி செய்வதால் உற்பத்தி, விற்பனை சீராகும். பணியாளர்கள் நிர்வாகத்தின் சட்டதிட்டம் பின்பற்ற வேண்டும். பெண்களுக்கு தாய் வீட்டாரின் உதவி கிடைக்கும். மாணவர்கள் படிப்பில் அதிக கவனம் கொள்வர்.

## மிதுனம்

சுக்கிரன், குரு, சந்திரனால் தாராள நற்பலன் கிடைக்கும். மனதில் இருந்த குழப்பம் விலகும். அன்றாடப் பணிகள் எளிதில் நிறைவேறும். உங்களை புகழ்ந்து பேசுபவர்களிடம் கவனமாக இருங்கள். பிள்ளைகளின் தகுதி, திறமைக்கேற்ப செயல்பட உதவுங்கள். பூர்வீகச் சொத்தால் பணவரவு கூடும். உடல் ஆரோக்கியத்திற்கு சிகிச்சை தேவைப்படலாம். மனைவியின் அன்பு குடும்ப ஒற்றுமையை பாதுகாக்கும். தொழில், வியாபாரத்தில் அதிக மூலதனத்தில் வளர்ச்சிப்பணி செய்வீர்கள். பணியாளர்கள் குடும்ப தேவைகளுக்காக அதிக வேலை வாயப்பை ஏற்றுக்கொள்வர். பெண்கள் சிக்கனமாக பணம் செலவு செய்வர்.

## கடகம்

சுக்கிரன், சந்திரன், சனீஸ்வரர் வியத்தகு நற்பலன் தருவர். பணிகளின் முக்கியத்துவம் உணர்ந்து செயல்படுவீர்கள். தாய்வழி உறவினர்கள் உதவுவர். பிள்ளைகளின் மனதில் ஞானம் நிறந்த சிந்தனை தோன்றும். சிரமங்கள் அணுகாத சுமுக வாழ்வு அமைந்திடும். மனைவி விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். உறவினர் வீட்டு சுபநிகழ்ச்சியில் கலந்து கொள்வீர்கள். தொழில், வியா பாரத்தில் அளவான பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தின் சட்டதிட்டம் தவறாமல் பின்பற்ற வேண்டும். பெண்கள் பிள்ளைகளின் நலன் சிறக்க பணிபுரிவர். மாணவர்கள் படிப்பு தவிர பிற விவாதம் பேச வேண்டாம். வெளியூர் பயணம் நல்லபலன் தரும்.

## சிங்கம்

சுக்கிரன், செவ்வாய், கேது சுபபலன் தருவர். சமூக நிகழ்வுகளை உணர்ந்து செயல்பட வேண்டும். தாமதமான பணிகள் [illegible] முயற்சியால் நிறைவேறும். தாய்வழி சார்ந்த உறவினர் உதவுவர். பிள்ளைகளின் கவனக் குறைவை இனிய அணுகுமுறையால் சரி செய்யவும். சத்தான உணவுகளை உண்டு மகிழ்வீர்கள். மனைவியின் பொறுப்பான செயல் குடும்பத்திற்கு பெருமை சேர்க்கும். தொழில், வியாபாரத்தில் இடையூறு விலகி வளர்ச்சி அதிகரிக்கும். பணியாளர்கள் பணியிடச்சூழல் உணர்ந்து செயல்படுவர். பெண்கள் குடும்ப சிரமங்களுக்கு எளிதில் தீர்வு காண்பர். மாணவர்கள் படிப்புடன் கலைகளும் பயில்வர்.

## கன்னி

பெரும்பான்மை கிரகங்களால் வியத்தகு அளவில் நற்பலன் கிடைக்கும். சிறு பணியும் நேர்த்தியாக அமையும். உறவினர் வருகை மகிழ்ச்சியை தரும். பிள்ளைகள் உங்கள் பேச்சை வேதமென மதித்து பின்பற்றுவர். குடும்பத்தேவை தாராள பணச்செலவில் பூர்த்தியாகும். எதிர்ப்பாளரால் இருந்த தொல்லை விலகும். மனைவி ஒற்றுமையுடன் குடும்பநலன் பேணுவார். தொழிலில் உற்பத்தி, விற்பனை வாடிக்கையாளர் ஆதரவில் அதிகரிக்கும். பணியாளர்கள் ஒருமுகத்தன்மையுடன் பணிபுரிவர். பெண்கள் கணவரின் அன்பை பெற்று சந்தோஷ வாழ்வு நடத்துவர். மாணவர்கள் படிப்பில் சிறந்து நண்பர்க்கும் உதவுவர். விரும்பியபடி வாகனம் வாங்க யோகம் உண்டு.

## துலாம்

சூரியன், புதன், சுக்கிரன், சனீஸ்வரர் ராஜயோகபலன் தருவர். எண்ணமும் செயலும் புத்துணர்வு பெறும். புதிய வாகனம் வாங்கும் வசதி வாய்ப்பு கிடைக்கும். பிள்ளைகளின் செயல்கள் சிறப்பாக அடைந்திட உதவுவீர்கள். உடல் ஆரோக்கியத்தில் கூடுதல் கவனம் வேண்டும். மனைவி உங்களின் நல்லகுணம் மற்றும் செயலை பாராட்டுவார். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். அலைச்சல் பயணங்களை தவிர்க்கவும். தொழில், வியாபாரத்தில் கூடுதல் உழைப்பால் லாபம் கூடும். பணியாளர்கள் புதிய தொழில் நுட்பம் கற்றுக் கொள்வர். பெண்கள் குடும்ப தேவைக்கு தாராள அளவில் பணம் செலவு செய்வர். மாணவர்

## விருச்சிகம்

செவ்வாய், கேது, சந்திரன் சிறப்பான பலன்களைத் தருவர். எவரிடமும் நிதானித்து பேசுவீர்கள். செல்வ வளம் அதிகரிக்கும். வீடு, வாகனத்தில் தகுந்த பாதுகாப்பு வேண்டும். பிள்ளைகள் நல்ல குணங்களுடன் செயல்புரிந்து பெற்றோரின் அன்பை பெறுவர். குடும்பத்தில் ஒற்றுமையும், மகிழ்ச்சியும் நிறைந்திருக்கும். பணக்கடனில் ஒரு பகுதியை செலுத்துவீர்கள். மனைவி வழிசார்ந்த உறவினர்களின் உதவி கிடைக்கும். தொழிலில் அளவான உற்பத்தி, விற்பனை இருக்கும். பணியாளர்களுக்கு நற்பெயரும் சலுகையும் கிடைக்கும். பெண்கள் விரும்பிய பொருட்கள் வாங்குவர். மாணவர்கள் படிப்பில் முழு அளவில் கவனம் செலுத்துவர்.

## தனுசு

புதன், குரு, சுக்கிரன், சந்திரன் வியத்தகு நற்பலன் வழங்குவர். எதிர்பார்ப்பு திட்டமிட்டபடி நிறைவேறும். சமூகத்தில் உங்களின் நன்மதிப்பு பெருகும். தம்பி, தங்கையின் பாசம் நெகிழ்ச்சி தரும். பிள்ளைகள் படிப்பு செயல்திறனில் மேம்படுவர். பூர்வ சொத்து பராமரிப்பில் தகுந்த கவனம் வேண்டும். வழக்கு விவகாரம் சுமுக தீர்வு பெறும். மனைவி குடும்பநலனில் சிறப்பாக கவனம் கொள்வார். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி பணி செய்வீர்கள். பணியாளர்கள் பணியிடச்சூழல் உணர்ந்து பணிபுரிவர். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்குவர். மாணவர்கள் படிப்பில் சிறந்து பரிசு பாராட்டு பெறுவர்.

## மகரம்

சுக்கிரன், சந்திரன் நற்பலன்கள் தருவர். மனதில் நம்பிக்கையை பாதுகாக்க வேண்டும். நண்பரின் உதவி ஓரளவு கிடைக்கும். வாகனத்தில் பராமரிப்பு செய்வதால் பயணம் எளிதாகும். பிள்ளைகள் புதிய விஷயங்களை அறிவதில் ஆர்வம் கொள்வர். உடல்நலத்திற்கு ஒவ்வாத உணவுகளை உண்ண வேண்டாம். மனைவியின் கருத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பீர்கள். குடும்ப ஒற்றுமை நிலைத்திருக்கும். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரித்து பணசேமிப்பு கூடும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும். பெண்கள் தாய்வீட்டு உதவியை கேட்டுப் பெறுவர். மாணவர்கள் அதிக பயிற்சியால் படிப்பில் முன்னேறலாம்.

## மீனம்

செவ்வாய், கேது, சந்திரன் நற்பலன் வழங்குவர். சமூக நிகழ்வுகளால் இனிய அனுபவம் கிடைக்கும். கவனமுடன் எதிர்காலத் திட்டங்களை நிறைவேற்றுவீர்கள். உடன் பிறந்தவர் சொந்த பணிகளில் ஈடுபடுவர். வாகனப் பராமரிப்பு பயணத்தை எளிதாக்கும். பிள்ளைகள் கடமையுணர்வுடன் நடந்து பெற்றோர்க்கு பெருமையை தேடித் தருவர். எதிர்ப்பாளர்களிடம் விலகுவதால் சிரமம் தவிர்க்கலாம். மனைவியின் உடல்நலத்திற்கு மருத்து சிகிச்சை தேவைப்படலாம். தொழில், வியாபாரம் செழிக்க கடின உழைப்பு உதவும். பணியாளர்கள் நிர்வாகத்தின் சட்டதிட்டம் தவறாமல் பின்பற்றவும். பெண்கள் பிறருக்காக பணப்பொறுப்பு ஏற்க கூடாது. மாணவர்கள் அதிக பயிற்சியால் படிப்பில் முன்னேறலாம்.

## கும்பம்

பெரும்பான்மை கிரகங்களால் அளப்பரிய நற்பலன் கிடைக்கும். எதிர்கால வாழ்வு சிறப்பாக அமைந்திட புதிய வாய்ப்புகள் வந்து சேரும். பிள்ளைகள் நல்ல விதமாக நடந்து கொள்வர். பூர்வீகச் சொத்தில் வளர்ச்சியும், பணவரவும் அதிகரிக்கும். உடல் ஆரோக்கியம் பலம் பெறும். சத்தான உணவு விரும்பி சாப்பிடுவீர்கள். மனைவியின் செயல்களில் வருகிற குறையை அக்கறையுடன் சரி செய்வீர்கள். தொழில், வியாபாரம் வளர்ச்சிபெற மாற்றுத்திட்டங்கள் நல்லபயன் தரும். பணியாளர்கள் பணி இலக்கை கால அவகாசத்தில் நிறை வேற்றுவர். பெண்கள் பிள்ளைகள் நலனில் அக்கறை கொள்வர். மாணவர்கள் புதியவர்களிடம் நிதானித்து பழக வேண்டும்.



# மோகினி

## பயமூட்டாத பேய்

சென்னையில் கேக் கடை நடத்துகிறார் த்ரிஷா. தோழியின் காதலுக்காகத் திடீரென சென்னையில் இருந்து அவர் லண்டனுக்குச் செல்ல நேரிடுகிறது. விடாப்பிடியாக வீட்டில் சம்மதம் பெற்று, யோகிபாபு, 'லொள்ளு சபா' சுவாமிநாதன் ஆகியோருடன் லண்டன் புறப்படுகிறார். அங்கு மூவரும் தங்கியிருக்கும் வீட்டில் ஒரு அமானுஷ்ய சக்தி இருப்பது தெரியவருகிறது. ஒரு கட்டத்தில் அந்தச் சக்தி, த்ரிஷாவின் உடலுக்குள் நுழைகிறது. அவரைப்போலவே உருவம் கொண்ட அந்த அமானுஷ்ய சக்தியின் பின்னணி என்ன? அது ஏன் த்ரிஷாவின் உடலுக்குள் நுழைய வேண்டும்? அதைத் த்ரிஷா எப்படி எதிர்கொள்கிறார்? இதுதான் 'மோகினி'யின் திகில் ஆட்டம்(?).

**விறு விறுப்பை இழக்கிறது பயமூட்டத் தயங்குகிறது**

பாழடைந்த பங்களா, இருள், மலைப் பாங்கான பின்னணி என வழக்கமான திகில் படங்களில் இருந்து விலகி, பரபரப்பான சென்னையில் ஒரு கேக் தயாரிப்புக் கடை, அடுத்தடுத்து லண்டன், அங்கே விரியும் அழகு எனக் கொஞ்சம் வித்தியாசமான பேய் படத்தைத் தர முயன்றுள்ளார் இயக்குநர் மாதேஷ். இடங்கள் மாறினாலும், வழக்கமான அதே திகில் திரைக் கதையே. இதனால், ஆரம்பம் முதலே படம் விறுவிறுப்பை இழக்கிறது. பயமூட்டவும் தயங்குகிறது.

**பாத்திர வார்ப்புகள்**

திறமையான சமையல் கலைஞர் என்பதில் தொடங்கி, லண்டனில் தனக்குள் அமானுஷ்ய சக்தி நுழைந்து செய்யும் திகில் சம்பவம் வரை மிரட்டியிருக்கிறார் த்ரிஷா. ஆனால், அந்த நடிப்புக்குப் பக்கபலமாக அவரைச் சுற்றி வலம் வரும் யோகிபாபு, சுவாமிநாதன், கணேஷ், மதுமிதா ஆகிய துணைக் கதாபாத்திரங்களின் பங்களிப்பும், நகைச்சுவையும் இல்லை.
வைஷ்ணவி, மோகினி எனத் த்ரிஷாவின் இரண்டு கதாபாத்திரங்களின் பின்னணியும், அதன் செயல்பாடுகளைப் பிரித்து உணர்த்துவதும் தெளிவாகக் கையாளப்பட்டுள்ளது. படம் முழுதும் த்ரிஷாவுடன் பயணித்தாலும், யோகிபாபுவின் நகைச்சுவைகள் அவ்வளவாக ஒட்ட வில்லை. நாயகிக்கு ஒரு ஜோடி வேண்டும் என்பதற்காகவே த்ரிஷாவுக்குக் காதலராகக் ஹிந்தி நடிகர் ஜக்கி பக்னானி. மற்றபடி, அவருக்கு வேலை எதுவும் இல்லை. வில்லன் முகேஷ் திவாரியின் நடிப்பு மற்றைய பல படங்களை நினைவுபடுத்துகிறது.

**பாராட்டும் பலவீனமும்**

லண்டனின் தேம்ஸ் நதியில் தொலைக்கும் ஆபரணத்தைத்(செய்ன்) தேடும்போது வெண் சங்கு கிடைப்பது, த்ரிஷாவின் ஒரு துளிக் குருதி நதியில் கலந்து அனுமாஷ்ய சக்தியாக உருமாறுவது உள்ளிட்ட சில இடங்கள் சுவாரசியம். அதேபோல, சிறுவர்களை அடைத்து வைத்து விற்பனை செய்யும் இடத்தைக் கண்டுபிடிக்கும் த்ரிஷாவின் சாதுரியமும், அதற்காக முன்னெடுக்கும் யோசனையும் சிறப்பு. வீட்டுக்குள் பேய் இருப்பதாக அலறுபவர்கள் த்ரிஷாவைத் தேடுவதே இல்லை ஏன்? மோகினி வீட்டுக்குள் நுழைய முடியாதபடி தாயத்து வேலி போட்ட பிறகு, வீட்டுக்குள் இருப்பவர்களை அந்தச் சக்தி தாக்குவது எப்படி? மோகினிபோலவே வைஷ்ணவி இருந்தும், வில்லன்களுக்குச் சந்தேகம் வராதது ஏன்? எதிரிகளால் தாக்கப்பட்டு நதிக்குள் வீசப்படும் மோகினி, மற்றொரு சந்தர்ப்பத்தில் நதிக்குள் இறங்க முடியாதது ஏன்? இப்படி ஏகப்பட்ட ஓட்டைகள். பேய்ப் படத்துக்கு இவை தேவைதான். அதற்காக இப்படியா?

**குறிப்பிட்டுச் சொல்லக்கூடியவை...**

படத்தின் பெரிய ஆறுதல் லண்டனைப் பசுமையாகக் காட்டியிருக்கின்ற காட்டியிருக்கும் ஆர்.ஜி.குரு தேவ்வின் ஒளிப்பதிவு. 'வெளிநாடுகளில் படம் எடுக்கிறேன்' என்று ஓரிரு காட்சிகளை எடுத்துவிட்டு, மிச்சத்துக்குச் சென்னையில் 'செட்' போடாமல், பெரும் பகுதியை லண்டனிலேயே காட்சிப்படுத்தியது, கண்ணுக்குக் குளுமை. த்ரிஷா, இனிமை ததும்பும் நடிப்பு. ஆக்சன், கோபம், சோகம், மகிழ்ச்சி என எல்லா இடங்களிலும் ஸ்கோர் செய்கிறார்.
நரபலி, பாலியல் துன்புறுத்தல் உள்ளிட்ட விடயங்களில் சிறுவர்கள் பாதிப்புக்கு உள்ளாவதைச் சமூக அக்கறையோடு, பேய்க் கதைப் பின்னணியில் தொட முயற்சித்தது பாராட்டுக்குரியது. புதுமையாக யோசித்திருந்தால், பழைய 'ஜெகன்மோகினி' அளவுவுக்காவது இந்த மோகினியும் ஜொலித்திருப்பாள்! ■

> நரபலி, பாலியல் துன்புறுத்தல் உள்ளிட்ட விடயங்களில் சிறுவர்கள் பாதிப்புக்கு உள்ளாவதைச் சமூக அக்கறையோடு, பேய்க் கதைப் பின்னணியில் தொட முயற்சித்தது பாராட்டுக்குரியது.



# ஜெயலலிதாவாக த்ரிஷா



மறைந்த முன்னாள் தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் பாத்திரத்துக்குத் த்ரிஷா பொருந்திப் போவரா என்பது வேறு விடயம். ஆனால், ஜெயலலிதாவின் வாழ்க்கையைப் படமாக எடுத்தால், அதில் நடிக்கத் தயார் என்று அவர் தெரிவித்தி ருக்கிறார்.
'பிரின்ஸ் பிக்சர்ஸ்' நிறுவனம் பெரும் பொருட்செலவில் தயாரித்து வெளியிட்ட "மோகினி"யை அடுத்து, இது தொடர்பான செய்தியாளர் சந்திப்பில் த்ரிஷா கலந்துகொண்டார். அப்போது 'ஜெயலலிதாவின் வாழ்க்கையைப் படமாக எடுத்தால் நடிப்பீர்களா?" என்ற கேள்வியைச் செய்தியாளர்கள் எழுப்பினர்.
அதற்குப் பதிலளித்த த்ரிஷா, "சென்னையில் ஜெயலலிதா படித்த பள்ளியில் தான் நானும் படித்தேன். என்னுடைய 10ஆவது வயதில், என் பள்ளி விழாவுக்கு அவர் வந்திருந்தார். அவரைப் பார்த்ததிலிருந்தே, அவர் மீது பாசம், மரியாதை.
அவர் கையால் வாங்கிய சினிமா விருது ஒளிப்படத்தைத்தான் இப்போதும் என் கீச்சகத்தின் முகப்புப் படமாக வைத்திருக்கிறேன். ஜெயலலிதா வாழ்க்கை வரலாறைச் சினிமாவாக எடுத்தால், அவரது கதாபாத்திரத்தில் நடிக்க நான் தயார். அவரது இழப்பு ஈடு செய்ய முடியாதது. ஆனால், எனக்கு அரசியல் ஆர்வமெல்லாம் கிடையாது. நடிகையாகவே சந்தோஷமாக இருக்கிறேன்" என்று தெரிவித்திருக்கிறார்.
தெலுங்கில் 'மகா நடி' என்றும், தமிழில் 'நடிகையர் திலகம்' என்றும் தலைப்பிடப்பட்டு, நடிகை சாவித்திரியின் வாழ்க்கையைச் சித்திரிப்பதாகக் கடந்த மாதங்களில் வெளியாகிய திரைப்படத்தில் சாவித்திரியின் பாத்திரத்தை ஏற்று நடிகை கீர்த்தி சுரேஷ் நடித்திருந்தார். வெகுவான பாராட்டுக்களையும் பெற்றிருந்தார். நடிகை த்ரிஷாவின் நிலைப்பாடும் தற்போது அதுபோன்ற ஒன்றாகவே இருக்கிறது. நடிகைகளின் வாழ்க்கை வரலாற்றைச் சித்திரிக்கின்ற திரைப்படங்களில் நடிப்பதற்கு இந்நாள் நடிகைகள் ஈடுபாடு காட்டிவருவதை இது காட்டுகிறது. ■



தொகுப்பு
அனார்கலி

# தென்கிழக்கு திசையில் இருந்து

## பேராட்டக்களம்







கல்முனை மாநகரசபை இந்தவாரத்தின் புதன், வியாழன் ஆகிய இரு தினங்களிலும் பெரும் பேராட்டகளமாக மாறியது. மாநகரசபை செயற்பாடுகள் அனைத்தும் முற்றாக ஸ்தம்பிதமடைந்தது. மாநகர சபையில் நிரந்தர நியமனமின்றி 102 சிற்றூழியர்கள் அமைய, சமயா சமய அடிப்படையில் ஊழியர்களாகக் கடந்த ஆறு வருடங்களுக்கும் மேலாக அர்ப்பணிப்புடன் கடமையாற்றி வரும் நிலையில், கிழக்கு மாகாண ஆளுநர் வெளியாள்கள் பத்துப்பேரை நிரந்தர அடிப்படையில் சிற்றூழியர்களாக நியமனம் செய்துள்ளார். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே ஊழியர்கள் பெரும் களேபரத்திலும் போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

குறித்த 102 சிற்றூழியர்கள் உட்பட சக சிற்றூழியர்களும் கடமையைப் புறக்கணித்து வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். மாநகரசபை முன்பாக கொட்டில் அமைத்து போராட்டத்தில் ஈடுபட்டதொழிலாளர்களின்வேலை நிறுத்தப் போராட்டம் காரணமாக திண்மக் கழிவுகள்அகற்றப்படவில்லை. மாநகரமே நாற்றமெடுக்கும் நிலை ஏற்பட்டது. மாநகர மேயர், உறுப்பினர்கள் மேற்கொண்ட பகீரதமுயற்சியால் வேலை நிறுத்தப் போராட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

***தொழிலாளர் வர்க்கத்தின் சக்தியே சக்திதான்!***

## விசேட அமர்வு







கல்முனை மாநகர சபையின் விசேட அமர்வு ஒன்று கடந்த வியாழக்கிழமை மாலை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தலைமையில் நடைபெற்றது.

மாநகரசபை சிற்றூழியர்கள் முன்னெடுத்தவேலை நிறுத்தப் போராட்டம் தொடர்பாக ஆராய்ந்து முடிவெடுக்கவே இந்த விசேட அமர்வுஇடம்பெற்றது.

இந்த அமர்வில் உரையாற்றியசபையின் பெண் உறுப்பினர்கள் உட்பட சகல உறுப்பினர்களும் போராட்டத்தில் ஈடுபட்ட ஊழியர்களுக்குச் சார்பாகவே கருத்துரைத்தனர்.

மாகாண ஆளுநரினால் புதிதாக நியமனம் வழங்கப்பட்டுள்ள பத்து சிற்றூழியர்களையும் சபையில்கடமைப் பொறுப்பேற்க அனுமதிப்பதில்லையெனவும், இந்த நியமனங்களை இரத்துச் செய்யுமாறு ஆளுநரைக் கோரும் அதே வேளை, அமைய சமயா சமய அடிப்படையில் பல வருடங்களாகப் பணியாற்றிவரும் சிற்றூழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க ஆவண செய்யுமாறு ஆளுநரைக் கோருவதெனவும் இந்த விசேட அமர்வில் ஏகமனதாக தீர்மானம் நிறை வேற்றப்பட்டது.

***கிழக்கின் இன்றைய நிர்வாக நிலை இதுதானோ!***

## பொம்மலாட்டம்



"கல்முனை மாநகரசபை அமர்வுகளில் மேற்கொள்ளப்படும் தீர்மா னங்கள் தொடர்பில் உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவேண்டும். மேயர்சொன்னதைச் செய்ய வேண்டும். சபை அமர்வுகள் வெறும் பொம்மலாட்டமாக அமையக்கூடாது" என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உறுப்பினர் சீ.எம்.முபீத் கொதிப்புடன் கூறியுள்ளார்.

கல்முனை மாநகர சபையின் மாதாந்த அமர்வில் உடரையாற்றிய போதே இதனை அவர் சுட்டிக்காட்டியுள்ளார். நீங்கள் (மேயர்) எங்களுடனேயே இருக்க வேண்டும். நாங்கள் உங்களுடன் இருப்போம் எனவும் அவர் மேயரை நோக்கிக் கூறினார்.

***யாமறியோம் பராபரமே!***

## என் பணி தொடரும்



வட கிழக்கில் பிரபல தொழிற்சங்கமாகத் திகழும் அகில இலங்கை அரச பொது ஊழியர்சங்கத் தலைவர்எஸ்.லோகநாதன், கடந்த ஜூலை மாதம் அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

32வருடகால அரச சேவையிலிருந்து ஓய்வுபெற்றுள்ள லோகநாதன் தொடர்ந்தும் முழுநேரப் பணியாகத் தமது தொழிற்சங்கப் பணியை முன்னெடுக்கப் போவதாகச் சூளுரைத்துள்ளார்.

அவர் கடமையாற்றிய கல்முனை தமிழ்பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் கே. லவநாதன் தலைமையில் பிரிவுபசார நிகழ்வு ஒன்றும் நடத்தப்பட்டது.

***தொடரட்டும் உன் பணி!***

## கபிலநிற தத்திகள்

அம்பாறை மாவட்டத்தில் சிறுபோக நெல் அறுவடை ஆரம்பமாகியுள்ள நிலையில், நெல் விளைச்சலைப் பாதிக்கும் கபிலநிறத்தத்திகளின் தாக்கம் குறித்து விழிப்புடன் இருக்குமாறு விவசாயிகள் எச்சரிக்கப்பட்டுள்ளனர். முற்றி விளைந்து அறுவடைக்குத் தயாராகும் நிலையிலுள்ள நெற்பயிர்களைத் தாக்கும் இந்தக் கபில நிறத் தத்திகள் குறுகிய காலத்துள் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி நெல் விளைச்சலைநாசம் செய்வதாகக் கண்டறியப்பட்டுள்ளது. விவசாயிகளைப் பெரும் கலக்கத்துக்குள்ளாகியுள்ள இந்தத் தாக்கம் தொடர்பில் அவதானித்தால் உடன் பிரதேச விவசாயப் போதனாசிரியரைத் தொடர்புகொள்ளுமாறும் கோரப்பட்டுள்ளது.

## இலகுபடுத்துக

கல்முனைப் பிராந்தியத்திலுள்ள அரச திணைக்கள அலுவலங்களில் மாற்றுத் திறனாளிகளான வலுவிழந்தோர் இலகுவாகச் சென்று தமது கருமங்களை முடிப்பதற்கு ஏதுவாக கட்டடத் தோற்றப்பாடுகள் மாற்றப்படவேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனைப் பிராந்திய இணைப்பாளர் ஏ.எல்.இஸ்ஸடீன் இந்த அறிவுறுத்தலை வழங்கியிருப்பதுடன், ஒருமாத காலத்தில் இந்த மாற்றம் நிகழ்ந்துள்ளமை தொடர்பில் கண்காணிப்பை மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிவித்தார்.

ஏசியா பின்பிக் போராம், எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் தாய்லாந்தில் நடத்தவிருக்கும் பயிற்சிப் பட்டறையொன்றில் வலுவிழந்தோர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக தாம் அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்கவுள்ளதாகவும் இணைப்பாளர் இஸ்ஸடீன் தெரிவித்தார்.





## வலுவிழந்தோர்

இலங்கை சமாதானப் பேரவையின் அம்பாறை மாவட்ட மாற்றுத் திறனாளிகள் (வலுவிழந்தோர்) உப குழு சமாதான நல்லிணக்க நிகழ்வு ஒன்றை சிறப்புற நடத்தியது.

மாற்றுத் திறனாளிகளுக்கும் சமூகத்தில் சம பங்கு உண்டு என்பதை வலியுறுத்தி, அவர்களது திறமைகளை வெளிப்படுத்தும் வகையில் மேற்படி நிகழ்வு இடம்பெற்றது.

அக்கரைப்பற்று 'சொண்ட்' நிறுவனம் ஏற்பாடு செய்தஇந்த நிகழ்வு கல்முனை கிறிஸ்தாஇல்ல மண்டபத்தில் நடைபெற்றது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனைப் பிராந்திய இணைப்பாளர் ஏ.எல்.இஸ்ஸடீன் வலுவிழந்தோர் உரிமை தொடர்பில் சிறப்புரையாற்றினார்.

விளையாட்டு

பிரகாஸ்

# பயிற்சியில் ரொனால்டோ

ஊதிய ஒப்பந்தப் பிரச்சினை காரணமாக ரியல் மட்ரிட் கழகத்தில் இருந்து பிரிந்து யுவென்டாஸ்'க்காக ஒப்பந்தமாகியுள்ள ரொனால்டோ அந்த அணிக்காகப் பயிற்சியில் ஈடுபடும் ஒளிப்படங்கள் வெளியாகியுள்ளன. அவ்வாறான ஒளிப்படங்களைத் தமது சமூக வலைத்தளங்களில்பகிர்ந்து,யுவென்டாஸ்கழகம்தான்இந்தத்தடவை ஐரோப்பியன் சம்பியன்ஸ் கிண்ணத்தைக் கைப்பற்றப் போகிறது என்றவாறாகக் கொண்டாடி வருகின்றனர் யுவென்டாஸ் கழகத்தின் இரசிகர்கள்.





# 'கிங்' கோக்லி

இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் இந்திய அணியின் தலைவர் கோக்லியின் சதம் மிகவும் அற்புதமாக அமைந்தது. அதுவும் இறுதி வீரரைக் களத்தில் வைத்திருந்து இணைப்பாட்டமாக அரைச்சதம் கடந்தமை என்பது அபாரம். இதையடுத்து இங்கிலாந்து ஊடகங்கள் கோக்லியின் இன்னிங்ஸை தாறுமாறாகப் புகழ்ந்துள்ளன.

கிரிக்கெட்.கொம்.ஏயு இணையத்தளம் வெளியிட்டுள்ளசெய்தியில்,"இந்தியாதிருப்பி அடிக்கும் என்பதை 'கிங்' கோக்லி நிரூபித்து விட்டார்" என்று குறிப்பிட்டுள்ளது.

'திகார்டியன்'நாளேடுவெளியிட்டுள்ளசெய்தியில், "விராட் கோக்லி தனிமனித ஹீரோவாகக் களத்தில் நின்று மிகச்சிறந்த இன்னிங்ஸை அளித்துள்ளார். என்ன மாதிரியான மிகச்சிறந்த கிரிக்கெட்டை விளையாடியுள்ளார்" எனப் புகழ்ந்துள்ளது.

இங்கிலாந்தில் இருந்து வெளிவரும் புகழ்பெற்ற 'டெய்லிமெயில்' நாளேடு வெளியிட்ட செய்தியில், "டெஸ்ட் கிரிக்கெட்டின் மிகச் சிறப்பான வெளிப்பாடு. இந்தியா, இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான ஹெவி வெயிட் சம்பியன் போட்டியில் இந்தியா சிறப்பான பஞ்ச் கொடுத்துள்ளது. விராட் கோக்லி, ஒற்றைநபராகஇருந்துதனதுஇன்னிங்ஸை வெளிப்படுத்தியுள்ளார். இது அவருக்கான ஆட்டம்" எனத் தெரிவித்துள்ளது.

டெலிகிராப் நாளேடு வெளியிட்ட செய்தியில், "சாம் கரன் இந்தியாவின் முன்னிலை வீரர்களை கண்ணீர்விட வைத்தார். ஆனால், மாஸ்டராக மாறிய விராட் கோக்லி, சதம் அடித்து அணியைக் காத்துள்ளார்" என்று புகழ்ந்துள்ளது.

ஸ்டெப் இணையதளம் வெளியிட்ட செய்தியில், 'எட்ஜ்பாஸ்டன் மைதானத்தில் மிகச்சிறந்த சதம் அடித்து இந்திய அணியைக் காத்துள்ளார் விராட் கோக்லி'' என்று புகழ்ந்துள்ளது.

இவைமட்டுமல்ல, கடந்த 2014ஆம்ஆண்டு இந்திய அணி இங்கிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டபோது கோக்லியின் தனிப்பட்ட பெறுபேறுகள் சிறந்த முறையில் அமையவில்லை.

இதனால் அவர் மீது கடும் விமர்சனம் முன்வைக்கப்பட்டது. கோக்லி இங்கிலாந்தில் எந்தவொரு சதத்தையும் பதிவுசெய்யாமலும் இருந்தார். அனைத்துக்குமாகச் சேர்த்து தற்போது பதில் வழங்கியுள்ளார் கோக்லி.

# சொந்தத் தொடரில் சம்பியன்

பன்னாட்டு அந்தஸ்து பெற்ற பகிரங்கத் தொடர்களில் ஒன்றான அமெரிக்கன் தொடர் இன்னும்சில தினங்களில் ஆரம்பமாகவுள்ள நிலையில் இந்தத் தொடரில் கிண்ணம் வெல்லும்நம்பிக்கையைவெளிப்படுத்தினார்



அண்மையில் முடிவடைந்த விம்பிள்டன் ரென்னிஸ் தொடரில் இறுதியாட்டம் வரை முன்னேறியிருந்த சேரீனாகிண்ணத்தைத்தவறவிட்டிருந்தார். இதையடுத்தே அடுத்த நடக்கவுள்ள அமெரிக்கத் தொடர் தொடர்பில் கருத்துப் பகிர்ந்துள்ளார் அவர்.

சேரீனாவில்லியம்ஸ்ஓர்அமெரிக்க வீராங்கனை.இதனால்அவர்சொந்தத் தொடரில் சாதிப்பாரா என்பது தொடர்பில் பெரும் எதிர்பார்ப்பு நிலவுகிறது.

# சொந்த மண்ணில் சுருண்டுவிடலாமா?




"சொந்த மண் என்ற எண்ணம் கொஞ்சமாவதுஉள்ளதா?"என்றுதான் இலங்கை அணியை நோக்கிக் கேள்வி எழுப்புகின்றனர் அதன் இரசிகர்கள். தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஒரு நாள்தொடரில்இலங்கைஅணி வெளிப்படுத்துகிற மோசமான பெறுபேறுகள்தான் இவ்வாறான விமர்சனங்கள் அந்த அணிக்கு எதிராக எழுவதற்குக் காரணமாக அமைந்துள்ளன.

தென்னாபிரிக்காவுக்குஎதிரான டெஸ்ட் தொடரை முழுமையாகக் கைப்பற்றிய இலங்கை அணி ஒருநாள் தொடரில் சுற்றிச்சுற்றி அடிவாங்குகிறது. நான்கு பக்கமும் தோல்வியால் சூழப்பட்ட நிலை யில்தான் மட்டுப்படுத்தப்பட்ட ஆட்டங்களில் இலங்கையின் பெறுபேறு அமைந்துள்ளது.

தரங்க,சந்திமல்,பெரேரா,மத்தியூஸ்என்று தலைமைத்துவங்களைத் தாராளமாக மாற்றிப் பார்த்தாயிற்றுஎந்த முன்னேற்றமும் இல்லை. அணிக்குள் இருக்கும் அரசியல் தலையீடுகள், இனப் பாகுபாடான அணித் தெரிவுகள், அழுத்தத்துடன் செயற்படும் தெரிவுக்குழு என்பன இருக்கையில் வெற்றி என்பது சாத்தியமற்றதுதானே.

# மெஸ்ஸிக்கு பதில் சம்போலி!

ரஷ்யாவில்நடைபெற்றகால்பந்தாட்ட உலகக்கிண்ணத் தொடரில் ஆர்ஜென்ரீன அணியின் மோசமான அடைவுக்கும்,தோல்விக்கும்பொறுப்பேற்று மெஸ்ஸி பதவி விலகுவார் என்று எதிர்பார்த்தால் அவருக்குப் பதில்சம்போலிவிலகியுள்ளார்.

தொடர் ஆரம்பமாகும் முன்னர் கருத்துத் தெரிவித்த மெஸ்ஸி, "இந்த உலகக்கிண்ணத் தொடர் எனது எதிர்காலத்தைத் தீர்மானிக்கும்" என்று தெரிவித்திருந்தார். ஆனால் ஆர்ஜென்ரீன அணியோ மிகமிக மோசமாகத் தோல்வியடைந்தது. இதனால் மெஸ்ஸிஓய்வைஅறிவிப்பாராஎன்று கால்பந்து உலகமே காத்திருக்கையில் தலைமைப் பயிற்சியாளர் சம்போலி பதவி விலகினார்.



கட்டுரை

சந்திரசேகர ஆசாத்

# ஆட்சி மாற்றங்களில் அந்நியக் கரங்கள்...



சீனாவின் தேசிய இராணுவ தினத்தை முன்னிட்டு அண்மையில் கொழும்பு சந்திரிகா விடுதியில் ஒரு விருந்துபசாரம் நிகழ்த்தப்பட்டது. இதில் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச, முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் ஆகியோர் இலங்கைக்கான சீனத் தூதுவர், அதிகாரிகளுடன் ஒரு நீண்ட கலந்துரையாடலில் ஈடுபட்டதாகத் தகவல்கள் வெளிவந்துள்ளன. வெளிநாடுகள் தங்கள் தேசிய தினங்களின்போது விருந்துகள் வழங்குவதும் அதற்கு உள்ளூர் அரசியல்வாதிகள் அழைக்கப்படுவதும் வழமையான விடயங்கள்தான். ஆனால் அடுத்த அரசதலைவர் தேர்தல் தொடர்பான விடயங்கள் சூடு பிடித்துள்ள நிலையில் எதிர் எதிரான அரசியல் நிலைப்பாட்டிலுள்ள முக்கிய புள்ளிகளின் நீண்ட உரையாடல் என்பதால் இது மிகவும் முக்கியத்துவம் பெறுகிறது.

**புதிய அரசமைப்புப் பற்றிய பேச்சு**

கூட்டமைப்பின் தலைவர், இரா. சம்பந்தன், இந்த விருந்துபசார உரையாடலின்போது, மகிந்த தரப்பிடம் புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கு ஆதரவு கோரியதாகவும், அதை அவர்கள் சாதகமான முறையில் பரீசிலிப்பதாகக் கூறியதாகவும் தெரிவித்திருந்தார். அதற்கு அடுத்த நாளே மகிந்த தரப்பால் வழிநடத்தப்படும் ஒன்றிணைந்த எதிர்க்கட்சிகளின் கூட்டணியினர், புதிய அரசமைப்பு உருவாக்கப்படுவதைத் தடுப்பதற்கான சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்காக, ஜீ.எல்.பீரிஸ் தலைமையில் ஒரு குழுவும் கட்சிகள் மத்தியில் பரப்புரை செய்யவென ஒரு குழுவுமாக இரண்டு குழுக்களை அமைக்கப்போவதாகத் தெரிவித்துள்ளனர். எனவே அவர்களின் பேச்சுக்களில் புதிய அரசமைப்புப் பற்றிய கரிசணை முக்கிய இடம் வகிக்கவில்லை என்பது தெளிவாகிறது.

**மகிந்தவின் ஆட்சியே சீனாவின் நோக்கம்**

மீண்டும் மகிந்த குழுவினரே இலங்கையின் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும் என்பதில் கூடிய அக்கறையைச் செலுத்தி வருகிறது சீனா. கடந்த 2015ஆம் ஆண்டு அரச தலைவர் தேர்தலின்போது மகிந்த ராஜபக்சவை வெற்றிபெற வைப்பதற்காக அவருக்குச் 7.6மில்லியன் அமெரிக்க டொலர்களைச் சீனா வழங்கியமையை அமெரிக்காவின் 'நியூயோர்க் ரைம்ஸ்' பத்திரிகை அம்பலப்படுத்தியிருந்தது. இது தொடர்பாக பிரேரணை கொண்டு வரப்பட்டதும், மகிந்த ராஜபக்ச அதில் கலந்து கொள்ளாமல் சிங்கப்பூர் போய்விட்டிருந்தார். எப்படியிருப்பினும் மகிந்த தரப்பால் இது தொடர்பாக இதுவரை உத்தியோக பூர்வமான மறுப்பு எதுவும் முன் வைக்கப்படவில்லை. அதேவேளையில் கடந்த அரச தலைவர் தேர்தலிலும் அதன் பின்பு இடம்பெற்ற நாடாளுமன்றப் பொதுத் தேர்தலிலும் மகிந்த தரப்பைத் தோற்கடித்து, மைத்திரி-ரணில் கூட்டை வெற்றிபெற வைப்பதற்கு இந்தியா-அமெரிக்கா முதலிய நாடுகள் முழுமூச்சுடன் செயற்பட்டமையை மறந்துவிட முடியாது. அடிப்படையில் 2018ஆம் ஆண்டு இடம்பெற்ற அரச தலைவர் தேர்தலும் அதை அடுத்து இடம்பெற்ற நாடாளுமன்றப் பொதுத் தேர்தலும் சீனாவுக்கும் மேற்குலக ஐக்கியக் கூட்டுக்கும் இடையே இடம்பெற்ற பலப்பரீட்சை என்பதில் சந்தேகமில்லை.

> “
> மீண்டும் மகிந்த குழுவினரே இலங்கையின் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும் என்பதில் கூடிய அக்கறையைச் செலுத்தி வருகிறது சீனா. கடந்த 2015ஆம் ஆண்டு அரச தலைவர் தேர்தலின்போது மகிந்த ராஜபக்சவை வெற்றிபெற வைப்பதற்காக அவருக்குச் 7.6மில்லியன் அமெரிக்க டொலர்களைச் சீனா வழங்கியமையை அமெரிக்காவின் நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகை அம்பலப்படுத்தியிருந்தது.

**ஆட்சியில் வெளிநாடுகள் அக்கறை!**

ஒரு நாட்டில் அடுத்து அதிகாரத்துக்கு வருவது யார்? என்பது தொடர்பாக வெளிநாடுகள் அக்கறை காட்டுகின்றன என்றால் அதற்குக் காரணமில்லாமல் இருக்க முடியாது. அதாவது தமது நலன்களை அந்த நாட்டில் பேணத்தக்க ஓர் ஆட்சியாளரை உருவாக்குவதற்கான முயற்சிகளில் அவர்கள் முன்னின்று உழைக்கிறார்கள். அவையே மகிந்தவின் பின்னால் சீனாவும் ரணிலின் பின்னால் இந்தியா - அமெரிக்கா ஆகிய நாடுகளும் நிற்பதற்கான காரணங்களாகும். எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா இலங்கையின் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிய 1956ஆம் ஆண்டு காலம்தொட்டு இன்றுவரை இலங்கையின் அட்சி அதிகாரத்தை அமைப்பதிலும், கவிழ்ப்பதிலும் வெளிநாடுகள் பல்வேறு வழிகளில் தலையீடு செய்து வந்துள்ளன. அதாவது இலங்கையின் அரசியல் அதிகார பீடம் தொடர்ந்து பன்னாட்டு வல்லமைமிக்க சக்திகளின் போட்டிக்களமாகவே விளங்கி வந்துள்ளது.



**பன்னாடுகளின் கையில் உள்ளூர் அரசியல்**

1948ஆம் ஆண்டில் இலங்கை சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து 1965ஆம் ஆண்டுவரை எவ்வித பிரச்சினையும் இருக்கவில்லை. ஏனெனில் அதுவரை டி.எஸ்.சேனநாயக்கா தலைமையிலான ஏகாதிபத்தியம் சார்ந்து ஐக்கி தேசியக் கட்சியே ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திருந்தது. ஆனால் 1956ஆம் ஆண்டு இடம்பெற்ற தேசிய எழுச்சியின் காரணமாக எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்க ஆட்சிக்கு வந்தார். அவர் அதிகாரத்துக்கு வந்ததும் ஏகாதிபத்திய அதிகாரத்தை ஒவ்வொன்றாக உடைக்க ஆரம்பித்தார்.

திருகோணமலையில் அமைக்கப்பட்டிருந்த பிரித்தானியக் கடற்படைத்தளத்தையும், கட்டுநாயக்காவில் அமைந்திருந்த பிரித்தானிய வான்படைத்தளத்தையும் நாட்டைவிட்டு வெளியேற்றினார். அமெரிக்க எண்ணெய் விநியோக நிறுவனங்கள் சிலவற்றைத் தேசியமயமாக்கினார். பிரித்தானிய நிறுவனத்தால் நடத்தப்பட்ட கொழும்புத்துறை முகாம் தேசிய மயமாக்கப்பட்டது. ஆனால், தேசிய நலன் சார்ந்த நடவடிக்கைகளில் ஈடுபட்ட பண்டாரநாயக்கவின் ஆட்சி வெகு விரைவிலேயே கவிழ்க்கப்பட்டது. இனக்கலவரங்கள் முதற்கொண்டு பல குழப்பங்கள் ஏற்படுத்தப்பட்டன. பிரித்தானியக் கடற்படையைத் திருகோணமலையை விட்டு வெளியேற வேண்டாம் எனத் தமிழ் அரசுக் கட்சி பிரித்தானிய மகாராணிக்குத் தகவல் அனுப்பியது. ஆரசியல் ரீதியாகப் பண்டாரநாயக்காவை வீழ்த்த முடியாத நிலையில் அவர் 1959ஆம் ஆண்டு ஒரு புத்த பிக்குவால் சுட்டுக்கொல்லப்பட்டார். களனி விகாரையிலேயே அவரைக் கொல்லுவதற்கான திட்டம் தீட்டப்பட்டது. இந்தக் கொலையின் பின்னால் அமெரிக்க மத்திய புலனாய்வுப் பிரிவினர் நின்று செயற்பட்டதாகவும் கருத்துக்கள் பரவியிருந்தன.

**ஆட்சிக் கவிழ்ப்புக்களும் நிலைகொள்ளுதலும்**

1960ஆம் ஆண்டில் ஆட்சிக்கு வந்த சிறிமாவோ பண்டாரநாயக்கா தேயிலை, இறப்பர் தோட்டங்களைத் தேசியமயமாக்கினார். வெளிநாட்டுப் பொருள்களின் இறக்குமதிகளுக்குக் கட்டுப்பாடு விதித்ததன் மூலம் உள்நாட்டு உற்பத்திகளுக்கு ஊக்கமளித்தார். விவசாய உற்பத்திக்கு வழங்கிய சலுகைகள் காரணமாக நாடு உணவு உற்பத்தியில் தன்னிறைவு காண்பதில் வேகமாக முன்னேறியது. இந்த நிலையில்தான் 1964ஆம் ஆண்டில் மேற்குலகின் சதி மூலம் அவருடைய ஆட்சியும் கவிழ்க்கப்பட்டது.

1977ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனா இலங்கையை முழுமையாகவே மேற்குலக ஏகாதிபத்திய சார்பு நாடாக மாற்ற முயன்றார். இதை விரும்பாத இந்தியா, தமிழ் போராளிக் குழுக்களுக்கு ஆயுதங்களையும், பயிற்சிகளையும் வழங்கி அவர்களைப் பலப்படுத்தியது. 'ஒப்பிரேசன் லிபறேசனால்' அடைந்த தோல்வி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவை இந்தியாவிடம் சரணடைய வைத்தது. தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதாகச் சொல்லப்பட்டு இலங்கை-இந்திய ஒப்பந்தம் உடன்பாட்டுக்கு வந்தது. இன்று வரை இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவில்லை. ஆனால், அமெரிக்கா இலங்கையில் வலுப்படுவது தவிர்க்கப்பட்டது.

**கூட்டமைப்புக்கு வலைவீச்சு**

ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் தங்கள் செல்வாக்கைப் பன்னாடுகள் இலங்கையில் நிலைநாட்டுவதற்காக ஆட்சி மாற்றங்களில் தலையீடு செய்து வருகின்றன. இனி வரப்போகின்ற தேர்தலை நோக்கியும் அதே போட்டிகள் ஆரம்பமாகியிருப்பதையே மேற்கூறிய சந்திப்பு வெளிப்படுத்துகிறது.

இனி வருகிற அரச தலைவர் தேர்தல்களில் சிறுபான்மை மக்களின் வாக்குகள் காத்திரமான பங்கை வகிக்கும் என்பதால் தமிழ்த் தலைமைகளுக்கு, குறிப்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வலைவீசும் முயற்சியில் ஒன்றாகவே இது பார்க்கப்படுகிறது. இன்றைய காலகட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குப் பொரிய பொறுப்பு உண்டு. “வழமைபோல ஏதாவது ஒரு தரப்புக்கு ஆதரவு வழங்கிவிட்டுச் சிங்களத் தலைமைகள் எம்மை ஏமாற்றிவிட்டன என ஒப்பாரி வைக்கும் அரசியலையே தொடர்ந்தும் செய்யப் போகிறார்களா? அல்லது பயனுள்ள மாற்று வழிகளைத் தெரிவு செய்யப் போகிறார்களா?” என்பதுதான் அவர்களை நோக்கித் தமிழ்மக்கள் முன்வைக்கின்ற தற்போதைய கேள்வி.

## யானைத்...

செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் கிளிநொச்சி மற்றும் கனகராயன்குளத்தைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சிறப்பு அதிரடிப் படையினருக்கு நேற்றுமுன்தினம் இரவு கிடைத்த தகவலை அடுத்து இந்தக் கைது நடந்துள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் கனகராயன்குளம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகள் நடைபெறுகின்றன. (ꯁ-110)

## வாள்வெட்டுக்...

என்றும், அவர்களிடமிருந்து 3 வாள்கள், இரண்டு உந்துருளிகளைக் கைப்பற்றியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். இவர்கள் அனைவரும் தென்மராட்சியின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்றும், கைது செய்யப்பட்டவர்களில் 4 பேர் கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைக்கு (ஏ.எல்) தோற்றவுள்ளவர்கள் என்றும் மானிப்பாய் பொலிஸார் குறிப்பிட்டார்கள்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த இரண்டு வாரங்களாக வாள்வெட்டுச் சம்பவங்கள், வீடுகள் மீதான தாக்குதல்கள், கொள்ளைச் சம்பவங்கள் அதிகரித்திருந்தன. தென்மராட்சிப் பிரதேசத்திலும் இந்தத் தாக்குதல்கள் நடைபெற்றிருந்தன. தென்மராட்சியின் கெற்பேலிப் பகுதியில் கடந்த வியாழக்கிழமை மகிழூர்ந்தில் சென்று வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது. அவர்கள் தப்பிச் செல்லும்போது மகிழூர்ந்து பழுதடைந்தது. பொலிஸார் அதன் சாரதியைக் கைது செய்திருந்தனர்.

இந்த நிலையில் மானிப்பாய் பொலிஸார் சாவகச்சேரிக்கு நேற்றுச் சிவில் உடையில் வந்தார்கள். வாள்வெட்டுக் குழுக்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் மூன்று பேரைக் கைது செய்தார்கள். அவர்களின் அலைபேசியிலிருந்து மேலும் சிலருக்கு கைது செய்யப்பட்டவர்கள் ஊடாக அழைப்பு எடுக்கப்பட்டது.

விபத்தில் காயமடைந்து சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாக அலைபேசி அழைப்பு ஊடாக, கைதானவர்களின் நண்பர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளவர்களைப் பார்ப்பதற்கு நண்பர்கள் வந்துள்ளார்கள். சிவில் உடையில் அங்கு மறைந்திருந்த பொலிஸார், அவர்களைக் கைது செய்தார்கள். அவர்களும் வாள்வெட்டுக் கும்பலுடன் தொடர்புடையவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தார்கள்.

கைது செய்யப்பட்டவர்களை சாவகச்சேரி வைத்தியசாலையின் பாதுகாப்பு அலுவலர் அறையில் தங்க வைத்திருந்த பொலிஸார், மானிப்பாய் பொலிஸ் வாகனம் வந்ததும் அதில் அவர்களை ஏற்றிச் சென்றார்கள்.

கைது செய்யப்பட்டவர்கள் சாவகச்சேரி, சரசாலை, மறவன்புலோ பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்று முதல் கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (5,9,26,106)

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்:3065 திகதி:2018.08.04 சனிக்கிழமை
பச்சை
வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து: 14 18 24 74 X
போனஸ் இலக்கம்: 72
அடுத்த திங்கட்கிழமை ஜக்பொட்: 35,739,095/-
Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 332
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2018.08.04
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 56,798,440/-
வெற்றி இலக்கங்கள்: 10 19 28 47 U
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 166
சீட்டிழுப்பு திகதி 04.08.2018 சிவப்பு
ஆங்கில எழுத்து: P
வெற்றி இலக்கங்கள்: 32 34 70
விதி எண்: 03
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ.10, 000, 000/=
ஸ்வர்ண திலின

| | |
|---|---|
| பொலநறுவை | 7142119 |
| யாழ்ப்பாணம். | 1832225 |
| கம்பஹா | 4408219 |
| பதுளை | 5403903 |
| இரத்தினபுரி | 9016718 |

2018.08.09 ம் திகதி வியாழக் கிழமை நீல நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர்.த சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 011 333 546-47 துரித அழைப்பு: 0114 824 824 www.dlb.lk

வேலைவாய்ப்பு
A/L சித்திபெற்ற உங்களுக்குப் பிரபலம் வாய்ந்த வங்கியின் ஊடாக வேலை செய்ய ஓர் அரியவாய்ப்பு
வெற்றிடங்கள்
» Business Development Officer
» Executive
» Assistant Manager



நீங்கள் A/L சித்தி பெற்று 28 வயதுக்கும் குறைந்தவராயின் இன்றே அழைக்கவும். வெற்றிடங்கள் வரையறுக்கப்பட்டது.
FROM US
▸ Training Period - 15000/= - 25000/=
▸ After Training - 55000/= - ++++
▸ EPF / ETF
(CS/18077)(11,17)
Contact No:- 077 356 6835

## மரண அறிவித்தல்

## சிமியோன் ஜேக்கப் புஸ்பராசா



யாழ்ப்பாணம், கொய்யாத் தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் இல. 89, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் வவுனியா, பட்டாணிச்சூரைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட ஜேக்கப் புஸ்பராசா நேற்று (04.08.2018) சனிக்கிழமை வவுனியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிமியோன் - அன்னம்மா தம்பதிகளின் கனிஷ்ட மகனும் காலஞ்சென்றவர்களான ஜோண் பிலிப் யோசேப் (றோஸ் ஆட்ஸ் ஸ்ரூடியோ), எலிசபெத் தம்பதிகளின் சிரேஷ்ட மருமகனும் காலஞ்சென்ற றெஜினா ஜெயசீலியின் பாசமிகு கணவரும் பிலிப் துரைராசாவின் அன்புச் சகோதரனும் யூடித், காலஞ்சென்ற எடின் யூட் ஆகியோரின் பிரியமான தந்தையாரும் கலேந்திரராஜா (ரமேஷ் - அஞ்சல் அலுவலகம், வவுனியா) வின் அன்பு மாமனாரும் டிலோஷன் (மாணவன் - உ/தரம், வவு/ விபுலானந்தா வித்தியாலயம்) இன் பிரியமான பாட்டனும் காலஞ்சென்ற புவனேஸ்வரி மற்றும் ஜெயராணி, ஜெயவதி (மற்றில்டா), காலஞ்சென்ற சுதந்திரநாயகி (தேவி) மற்றும் பேணாட், ஜெயராஜா, ஜெயசோதி, அருட்சகோதரி லூசியா (திருச்சிலுவைக் கன்னியர் சபை), ஜெயக்குமார், ஜெயமலர், தாசன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் வவுனியா, பட்டாணிச்சூர் இல்லத்திலிருந்து இன்று (05.08.2018) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.00 மணிக்கு எடுத்துவரப்பட்டு பி.ப. 5.00 மணியளவில் யாழ்ப்பாணம், பிரதான வீதி இல்லத்தில் வைக்கப்பட்டு நாளை (06.08.2018) திங்கட்கிழமை பி.ப. 2.00 மணிக்கு யாழ். ஆசனக்கோவிலில் நடைபெறும் இறுதித் திருப்பலியின் பின்னர் புனித. கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**75, பட்டாணிச்சூர், வவுனியா. 077 330 1419,**
**89, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.**
**077 933 7572, 021 222 9532**

**தகவல்:**
**சி.கலேந்திரராஜா (மருமகன்)**
**மற்றில்டா ஜெயவதி யோசப்**

(CS 18357/15/18)

## மரண அறிவித்தல்கள்

## திருமதி கண்மணி செல்லத்துரை

(ஓய்வுநிலை குடும்பநல உத்தியோகத்தர்)

குலானை கரவெட்டி மத்தி, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கண்மணி செல்லத்துரை 03.08.2018 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை பத்தினி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இளையதம்பி வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் பாசமிகு மருமகளும், செல்லத்துரையின் பாசமிகு மனைவியும், கமலேஸ்வரன் (லண்டன்), சிவனேஸ்வரன், சிவனேஸ்வரி (சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, கரவெட்டி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.08.2018) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வேரோண்டை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**குலானை,**
**கரவெட்டி மத்தி, கரவெட்டி.**

**தகவல்**
**குடும்பத்தினர்.**

(AC/542)(11,17)

## இராசையா சிவராசசிங்கம்

(சீவம்)



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 26.05.1943 | 03.08.2018 |

உரும்பிராய் தெற்கு, வேம்பன் லேனை (ஒஸ்கா லேன்) பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா சிவராசசிங்கம் (சீவம்) கடந்த (03.08.2018) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் இராசையா சிவபாக்கியம் (நல்லபிள்ளை) தம்பதியரின் மூத்தமகனும் செல்லத்துரை இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் சந்திரபவானியின் அன்புக்கணவரும் மேகலா (லண்டன்), கமல்ராஜ், மோகன்ராஜ், காலஞ்சென்றவர்களான ஜெயராஜ், சிவகலா மற்றும் ஜெயகலா ஆகியோரின் அன்புத்தந்தையும் பரமசிவம், மனோகரி, தாட்ஷாயினி, ராஜரூபன் ஆகியோரின் அன்புமாமனும் காலஞ்சென்ற சிவபாலசிங்கம் மற்றும் குபேந்திர சிங்கம், செல்வராணி, ரவீந்திரசிங்கம், தயாபரசிங்கம், காலஞ்சென்ற ஜெயகுலசிங்கம் மற்றும் ராஜகுலசிங்கம், நிரோஜினி ஆகியோரின் அன்புச்சகோதரரும் கிஷான், துர்ஷிகா, மீனுகா, மதூஷனா, மதூரி, தக்ஷயன், தசாங்கனி, ஜனோஷன், நிரூபன், விதுர்ஷிகா, சபர்னிகா, லக்ஷானிகா ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.08.2018) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மதியம் வேம்பன் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் :**
**குடும்பத்தினர்.**

## ஆண்டிறுதிக்குள் தேர்தல் நடத்துவது சாத்தியமற்றது

*மகிந்த தேசப்பிரிய கூறுகிறார்*

மாகாண சபைத் தேர்தலை எந்த முறையில் நடத்துவது என்று இதுவரை தீர்மானிக்கவில்லை. பழைய முறையில் நடத்துவதாக இருந்தாலும் இந்த ஆண்டுக்குள் நடத்த முடியாது. இவ்வாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

தேர்தலைப் பழைய முறையில் நடத்துவது என்றாலும் புதிய சட்டத் திருத்தத்தை மேற்கொள்ள வேண்டிய தேவை உள்ளது. புதிய தேர்தல் முறைமை தொடர்பான சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர், நடைமுறையில் இருந்த பழைய தேர்தல் முறை தொடர்பான 1988 ஆம் ஆண்டு 2ஆம் பிரிவு நீக்கப்பட்டுள் ளது.

மாகாண சபைத் தேர்தலை பழைய முறையில் நடத்துவது என்றாலும் சிக்கல் நிலையே காணப்படுகின்றது. புதிய முறையில் நடத்தப்பட வேண்டுமானால் நாடாளுமன்றுக்கு சமர்பிக்கப்பட்டுள்ள எல்லை நிர்ணய அறிக்கை நிறைவேற்றப்பட வேண்டும் - என்றார். (ற)

## சிவத் தலங்களையும் புனித தலங்களாக்குக

*அமைச்சர் மனோ கடிதம்*

கொழும்பு, ஒக. 5

**திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், நகுலேஸ்வரம் ஆகிய தலங்களை இந்துக்களின் புனித தலங்களாக அறிவிக்கவேண்டும். அதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை மறுவாழ்வு, மீள்குடியேற்ற, இந்து மத விவகார அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் அமைச்சரவையில் சமர்ப்பிக்க வேண்டும் என்று கோரியுள்ளார் தேசிய ஒருமைப்பாடு, நல்லிணக்க, அரச கரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன்.**

இந்த விடயம் தொடர்பில் அமைச்சர் டி.எம். சுவாமிநாதனுக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே இவ்வாறு கோரியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, கடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் சுமார் 400 ஆண்டுக்கால வரலாறு கொண்ட மன்னார் புனித மரியாள் மடு தேவாலய பிரதேசத்தை புனித பிரதேசமாக அறிவிக்கக்கோரும் அமைச்சரவை பத்திரத்தை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன சமர்பித்திருந்தார். இதுவே இந்த நாட்டில் அறிவிப்புச் செய்யப்பட்டுள்ள முதலாவது கத்தோலிக்க புனித தலமாகும். இது நல்ல நடவடிக்கையாகும். அதை நாம் அனைவரும் மிகவும் மகிழ்ச்சியுடன் ஏகமனதாக ஏற்றுக்கொண்டுள்ளோம்.

அதைப் போன்று திருஞானசம்பந்தரால் பாடப்பட்டு, இந்த நாட்டில் தென்கைலாயம் என்று கொண்டாடப்படும் கிழக்கு கரையில் அமைய பெற்ற திருக்கோணேஸ்வரம், மேற்கு கரையில் அமையப்பெற்ற திருக்கேதீஸ்வரம் ஆகிய தலங்களையும், வட கோடியில் அமைந்துள்ள நகுலேஸ்வரம் தலத்தையும், புனித தலங்களாக பிரகடனம் செய்ய வேண்டும் என்று நாட்டில் வாழும் இந்துக்கள் என்னிடம் கோரியுள்ளனர்.

இந்து மத விவகாரம் உங்களை சார்ந்த அமைச்சு விவகாரம் என்பதால் அதை உங்கள் கவனத்துக்கு அதிகாரபூர்வமாக கொண்டு வருகிறேன் என்றுள்ளது. (ற)

## ஆசிரியருக்குப் பிணை

யாழ்ப்பாணம், ஒக. 5

வலி.வடக்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பிரபல பாடசாலையின் ஆசிரியர் ஒருவர், பாடசாலை மாணவிகளுக்கு கடந்த 6 மாத காலமாக தொந்தரவு கொடுத்தார் என்ற குற்றச்சாட்டில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். கடந்த மாதம் 25ஆம் திகதி அவரை மல்லாகம் நீதிமன்று பிணையில் விடுவித்தது.

ஆசிரியர் மாணவிகளுக்கு தொந்தரவு கொடுத்தமை தொடர்பில், கொழும்பிலுள்ள தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு பெற்றோர்கள் சிலர் முறைப்பாடு செய்தனர். அதற்கு அமைவாக தெல்லிப்பழைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தார்கள். பாதிக்கப்பட்டதாகக் கூறப்பட்ட மாணவிகள் 8 பேரிடம் வாக்குமூலங்களைப் பதிவு செய்த பொலிஸார் கடந்த மே மாதம் 23ஆம் திகதி ஆசிரியரைக் கைது செய்திருந்தார்கள்.

விசாரணையின் பின்னர் அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். கடந்த மாதம் 25ஆம் திகதி வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது ஆசிரியர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி, ஆசிரியர் மீதான குற்றச்சாட்டு போட்டித்தன்மையால் உருவாக்கப்பட்டது என்று மன்றில் குறிப்பிட்டிருந்தார். இந்த நிலையில் ஆசிரியரைப் பிணையில் செல்ல நீதிவான் அனுமதி வழங்கினார். (5,114)

## பொலிஸ் அதிகாரங்களை மாகாணத்துக்கு வழங்குக

*விக்கிரமபாகு வலியுறுத்து*

வடக்கின் நிலமைகளைக் கட்டுப்படுத்த மாகாண சபைகளுக்குப் பொலிஸ் அதிகாரங்களை வழங்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார் நவசமசமாஜ கட்சியின் பொதுச் செயலர் விக்ரமபாகு கருணாரட்ன.

கொழும்பில் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, வடக்கின் சட்டம் ஒழுங்கு பிரச்சினை தற்போது கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு போய்விட்டது. போர்க் காலத்தில் ஷெல் வீச்சுக்குப் பயந்து மக்கள் இடம்பெயர்ந்துசென்றனர். தற்போதுவன்முறையாளர்களுக்கு பயந்து இடம்பெயர வேண்டிய நிலைக்கு வடக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்த நிலை மாற வேண்டுமாயின் மாகாண சபைகளுக்குப் பொலிஸ் அதிகாரங்களை வழங்க வேண்டும். மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரங்களை வழங்க வேண்டும் என்று முதலமைச்சர்களும் கேட்கின்றனர். மாகாணங்களுக்குப் பொலிஸ் அதிகாரங்களை வழங்கினால் சட்டம் ஒழுங்கை நிலை நாட்ட முடியும் என்றார்.

மாகாணங்களுக்குப் பொலிஸ் அதிகாரம் வழங்கினால் இரண்டு வாரங்களில் வன்முறையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதாக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற-5)

## கார்த்திகை உற்சவம்

யாழ்ப்பாணம், ஓக. 5

நீர்வேலி கந்தசுவாமி கோவிலின் ஆடி கார்த்திகை உற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெறும்.

இன்றைய தினம் பிற்பகல் 3 மணிக்கு சிறப்பு பூசைகள் இடம்பெற்று மாவிளக்கு ஏற்றுதல் மற்றும் முருகப்பெருமான் வீதிவலம் வருதல் என்பனவும் இடம்பெறும். (5,17)

## கூட்டுறவுத் துறைக்குள் அரசியல் வீழ்ச்சிக்கு அதுவும் காரணம்

*மாவட்டச் செயலர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஓக. 5

கூட்டுறவுத்துறைக்குள் அரசியல் நுழைந்தமையும் கூட்டுறவுத்துறை வீழ்ச்சியடைவதற்கு முக்கிய காரணம். இவ்வாறு யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

பண்டத்தரிப்பு பரிஷ் பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் மூத்த கூட்டுறவாளர் சு.கந்தையாவின் சிலை திறப்பு, நினைவு மலர் வெளியீடு, தரம் 5 புலமை பரிசில் பரீட்சையில் கடந்த ஆண்டு சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசு வழங்கல் மற்றும் அரிசி ஆலைக்கான உபகரணங்கள் கையளிப்பு என்பன நேற்றையதினம் சங்கத்தின் மின்தறி மண்டபத்தில் தலைவர் க.கந்தசாமி தலைமையில் இடம்பெற்றது

நிகழ்வில் முதன்மை விருந்தினராக கலந்து கொண்ட யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் கந்தையாவின் உருவச் சிலையினை திரைநீக்கம் செய்து வைத்தார். அரிசி ஆலைக்கான உபகரணங்களையும் கையளித்து வைத்தார். கந்தையா



நினைவு மலரினையும் வெளியிட்டு வைத்தார். அந்த மலரில் அவரது கூட்டுறவுசார் சேவைகள் சமூக சேவைகள் என்பன குறிப்பிடப்பட்டிருந்தது.

இங்கு உரையாற்றிய மாவட்டச் செயலர், கூடியளவு தொழில்வாய்ப்புக்கள் மற்றும் தொழித்துறை சார் அபிவிருத்தி வேலைகள் தற்போது முக்கியமாக இடம்பெற்று வருகிறது. எமது கைகளில்தான் கூட்டுறவு துறைகளில் வளர்ச்சி தங்கியுள்ளது. இன்றைய காலத்தில் ஆலயங்கள் சமூகங்களுக்கு உதவி செய்வதை மறந்து தமக்குள்ளான பிணக்குகளையும் சண்டைகளிலுமே முக்கியமாக ஈடுபட்டு வருகிறது. இந்தச் சங்கங்களும் அவ்வாறு செயற்பாடாமல் சேவை நோக்கத்தோடும் சமூக அக்கறையுடனும் செயற்பட வேண்டும் - என்றார்.

நிகழ்வின் இறுதியில் புலமைப் பரிசில் பரீட்சையில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசில்களை முதன்மை விருந்தினரும், ஏனைய விருந்தினர்களும் வழங்கி வைத்தார்கள். (5,114)

*கொக்குவில் முதியவர் கொலை:*

## கடூழியச் சிறைத் தண்டனை 7 ஆண்டுகளாகக் குறைப்பு

யாழ்ப்பாணம், ஓக. 5

உயிரிழப்பை ஏற்படுத்திய குற்றத்துக்காக யாழ்ப்பாணம் மேல் நீதிமன்று விதித்த 12 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனையை 7 ஆண்டுகளாகக் குறைத்தது கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம்.

யாழ்ப்பாணம் கொக்குவில் பகுதியை சேர்ந்த பிலிப்புபிள்ளை ஜெபநாயகம் (வயது61) என்பவரை ஈருருளிக்கு காற்றடிக்கும் உபகரணத்தால் (பம்மால்) தாக்கிக் கொலை செய்தார் என்ற குற்றத்துக்காக அதே இடத்தினைச் சேர்ந்த 62 வயதுடைய இராமநாதன் கைலாசபிள்ளை என்பவர் கைது செய்யப்பட்டார். விசாரணைகளின் பின்னர் கொலையல்லாத உயிரிழப்பை ஏற்படுத்திய குற்றத்துக்காக யாழ்ப்பாணம் மேல் நீதிமன்று 12 வருட கடூழியச் சிறைத் தண்டனையும், 25ஆயிரம் ரூபா தண்டமும் விதித்தது. தண்டப் பணத்தைச் செலுத்தத் தவறும் பட்சத்தில் ஒரு ஆண்டு சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டிருந்தது.

இந்தத் தீர்ப்பை ஆட்சேபித்து எதிரித் தரப்பால் மேன்முறையீடு செய்யப்பட்டது. இந்த வழக்கு கொழும்பு நீதிமன்றில் நீதியரசர்கள் எஸ்.துரைராசா, கிரான் குணரத்ன ஆகியோர் முன்னிலையில் நேற்றுமுன்தினம் விளக்கத்துக்கு வந்தது.

எதிரிதரப்பில் சட்டத்தரணி ந.சிறீக்காந்தா தலைமையில் சட்டத்தரணிகளான எஸ். பஞ்சாட்சரம், சர்மினி விக்னேஸ்வரன் ஆகியோர் முன்னிலையாகினர். வழக்கின் எதிர் வாதியாகிய சட்டமா அதிபர் சார்பில் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் பி.குமாரரட்ணம் முன்னிலையானார்.

எதிரி சார்பில் முன்னிலையான சட்டத்தரணி சிறீக்காந்தா, எதிரியின் சிறைக்காலத்தை மட்டுப்படுத்துமாறு கூறியதோடு சம்பவங்கள், சூழ்நிலைகள் ஆராயும்போது வழங்கப்பட்ட தண்டனை மிகக் கடுமையானது என்று வாதிட்டார்.

எதிரி இறந்தமை துரதிஷ்டவசமான சம்பவம் எனவும் இறந்தவர் எதிரியின் நெருங்கிய உறவினர் எனவும் குறிப்பிட்டதோடு இறந்தவர் வீட்டில் திடீரென இடம்பெற்ற வாக்குவாதம் கைகலப்பாக மாறியமையால் இறப்பு விளைவிக்கப்பட்டது என்று தெரிவித்தார்.

அந்த வீட்டில் குடியிருந்த பல்கலைக்கழக மாணவர்கள் பாவித்த காற்றடிக்கும் உபகரணம் வீட்டு முற்றத்தில் வைக்கப்பட்டிருந்தது. அதை எடுத்து இறந்தவரைத் தாக்கி எதிரி தலையில் காயத்தை ஏற்படுத்தியிருந்தார். ஒருமுறை தான் தாக்கி காயத்தை ஏற்படுத்தியிருந்தார்.

இறந்தவர் அந்தச் சந்தர்ப்பத்தில் கள்ளு அருந்தியிருந்தார். எதிரிக்கு எதிராக முன்னர் எந்தவொரு வழக்குகளும் பதிவு செய்யப்படவில்லை. அவர் 5 பிள்ளைகளின் தந்தை. அவரின் 4 பெண்பிள்ளைகளுக்கு இதுவரை திருமணம் ஆகவில்லை. எதிரியின் வயது, கடந்தகாலம், குடும்ப பொறுப்பு என்பவற்றையும், சூழ்நிலை ஆகியவற்றையும் ஆராயும்போது துரதிஷ்டவசமான சம்பவம் ஒன்று இறப்பில் முடிந்துள்ளது என்று மன்றுரைத்தார்.

சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான சொலிசிட்டர் ஜெனரல் பி.குமாரரட்ணம் சம்பவம் நடந்த சூழலை மறுக்கவில்லை. எனினும் இறந்தவரை எதிரி தாக்கிய போது 'தொலைந்து போ' என கூறியவாறு தாக்கியுள்ளார். அவரது நோக்கம் அவரது வார்த்தைகளில் வெளிப்படுகின்றது என்று சுட்டிக் காட்டினார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் வார்த்தை பிரயோகங்களை பெரிதாக எடுத்துக்கொள்ள முடியாது என்று நீதியரசர்கள் தெரிவித்தனர்.

இரு தரப்பு வாதங்களின் பின்னர் தீர்ப்பளித்த நீதியரசர்கள் எதிரிக்கு விதிக்கப்பட்ட 12 ஆண்டுகள் கடூழிய சிறைத் தண்டனையைக் குறைத்து, எதிரி தொ[illegible] விளக்கமறியலில் இருப்பதனை கருத்தில் கொண்டு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கிய திகதியில் இருந்து 7 வருடங்கள் கடூழியச் சிறைத்தண்டனை நடைமுறைப்படுத்தபடும் என்று தீர்ப்பளித்தனர். (ற-26,114)

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை



# விடுவிக்கப்பட்ட பலாலி கிராமமும் விசுவாச மீள்குடியேற்ற முயற்சியும்

யாழ். மறைமாவட்டமானது மூன்று தசாப்த கொடிய போரின் பின்னர் வலி வடக்கு பிரதேசத்தில் விசுவாச மீள்குடியேற்ற நல்வாழ்வுக்கான முயற்சிகளில் வேகமாக ஈடுபட்டு வருகிறது.

கடந்த வாரங்களில், வலி வடக்கு பிரதேசத்தில் உள்ள வசாவிளான் வடமூலை உத்தரிய மாதா ஆலயம் மற்றும் ஊறணி புனித அந்தோனியார் ஆலயம் பற்றி நோக்கினோம். இந்த வாரம் பலாலி கிராமம் பற்றி நோக்குவோம். இந்த ஆக்கத்துக்கான தகவல்களை மாங்குளம் பங்குத்தந்தையும் பலாலி மண்ணின் குருமைந்தனுமான எ.சே.கி. மரியதாஸ் அடிகளார் வழங்கினார்.

**1990ஆம் ஆண்டு இடப்பெயர்வு**

பலாலி மண்ணின் இடப்பெயர்வு 15 ஆனி 1990ஆம் ஆண்டு இடம்பெற்றது. பலாலி மண்ணில் இருந்து இடம் பெயர்ந்த மக்கள் தொண்டமனாறு, வல்வெட்டித்துறை, சக்கோட்டை, பொலிகண்டி, பருத்தித்தித்துறை, மணற்காடு, குடத்தனை, புதுக்குடியிருப்பு, இரணைப்பாலை, முல்லைத்தீவு, சுன்னாகம், மானிப்பாய், யாழ்ப்பாணம் போன்ற பல இடங்களில் குடியேறி போர்க்கால கொடூர அனுபவங்களைப் பெற்று வாழ்ந்து திரும்பியுள்ளனர்.

அந்தக் காலத்தில் பலாலி கிராமத்தில் புனித ஆரோக்கியமாதா ஆலயம் புனித செபஸ்ரியார் ஆலயம் ஆகிய இரு ஆலயங்கள் இருந்தன. இடப்பெயர்வின் பின்னர் இங்கு மூன்று ஆலயங்கள் கட்டப்பட்டுள்ளன. கடந்த வாரம் போர்க்காலம் தந்த அனுபவம் வழி மக்கள் பல அனுபவங்களைப் பெற்றனர். அதில் பலரும் குறிப்பிடும் ஒரு விடயம் இந்த போர்க்கால அனுபவத்தின் போது இறைவன் மீதான நம்பிக்கையை மக்கள் அதிகரித்துள்ளனர் என்பதாகும். இதற்கு இது தக்க சான்றாகும் எனக் கருதலாம்.

> “1990ஆம் ஆண்டு பலாலி கிராமத்தில் புனித ஆரோக்கிய மாதா ஆலயம் புனித செபஸ்ரியார் ஆலயம் ஆகிய இரு ஆலயங்கள் மட்டுமே இருந்தன. இடப்பெயர்வின் பின்னர் இங்கு அன்னை வேளாங்கன்னி ஆலயம் மடுமாதா ஆலயம் அன்ரனிபுரம் புனித வனத்தந்தோனியார் தற்காலிக ஆலயம் ஆகிய மூன்று ஆலயங்கள் கட்டப்பட்டுள்ளன.

**போரும் போர்க்கால அனுபவங்களும்**

30 ஆண்டுகாலப் போர் அதனோடு இணைந்த இழப்புக்கள் இடம் பெயர்வுகள் இறப்புக்கள் வழி தமிழ் மக்கள் பெற்ற போர்க்கால அனுபவங்கள் தனித்துவமானவை. தனியாகவும் குடும்ப மாகவும் சமூகமாகவும் பிரதேசங்களாகவும் அவர்கள் பெற்ற அனுபவங்கள் மறக்கப்பட முடியாதவை. போரோடும் போர்க்கால அனுபவங்களோடும் இழப்புக்களும் இடம் பெயர்வுகளும் இறப்புக்களும் பின்னிப்பிணைந்தவை. தவிர்க்கப்பட முடியாதவை. தமிழ் மக்களின் போர்க்கால அனுபவத்தில் பலாலி மயிலிட்டி வயாவிளான் பகுதியில் 1990ஆம் ஆண்டு தொடங்கிய இடம்பெயர்வு 2009ஆம் ஆண்டுவரை தொடர்ந்து முள்ளிவாய்க்கால் வரை சென்று முடிவாகியுள்ளது. ஒன்றுபட்டு இருந்தால் தான் உண்டு வாழ்வு. எல்லா மக்களோடும் அவர்கள் யாராக இருந்தாலும் இணைந்து இருப்பதும் வாழ்வதுமே பாதுகாப்பான வாழ்வு என்று சிந்திக்க அழைக்கப்பட்டனர். வெறுப்பு கோபம் பிடிக்காதவர் என்ற எண்ணங்கள் பறந்து உறவுகள் திரும்ப இணைந்து கொண்டன. யார் என்று பார்க்கமலே பல புதிய உறவுகள் ஏற்பட்டன. பல பாடங்களைச் சொல்லித்தந்தன. இவ்வாறு தொடர்ந்து செயற்பட முடியாது என்றாலும் மனித வாழ்வின் அடிப்படை யதார்த்தத்தை பாடமாக சொல்லித்தந்தது. இந்த போர்க்கால அனுபவங்கள் மனித வாழ்வின் இயலாத் தன்மையை வெளிப்படுத்தியுள்ளன. போர்க்கால அனுபவங்கள் மனித வாழ்வின் தனித்து இயங்க முடியாத இயலாத் தன்மையை வெளிப்படுத்தி இணைந்து இருப்பதும் உறவில் இருப்பதும் தேவையானது என்பதை தெளிவாக்கியது. இந்த அனுபவம் மதபேதமின்றி அனைத்து தமிழ் மக்களுக்கும் பொதுவானது என்றே எடுக்கப்படவேண்டும்.



**மூன்று ஆலயங்கள் கட்டப்பட்டுள்ளன**

மீள்குடியேற்றம் செய்யப்படாத காலப்பகுதியில் 2010ஆம் ஆண்டு மே மாதம் 15ஆம் திகதி சிறப்பு அனுமதி பெற்று ஆரோக்கியமாதா திருநாள் கொண்டாடினார்கள். 1990க்குப் பின் பலாலி கிராமத்திலிருந்து 07 குருக்கள் திருநிலைப்படுத்தப்பட்டனர். அதில் இருவர் செபஸ்ரியார் ஆலயத்தை சேர்ந்தவர்கள். நான்கு பேர் மயிலிட்டி காணிக்கை மாதா ஆலயத்தைச் சேர்ந்தவர்கள். ஒருவர் ஆரோக்கிய மாதா ஆலயத்தை சேர்ந்தவர்.

1990க்குப் பின் பலாலி கிராமத்திலிருந்து திருநிலைப்படுத்தப்பட்ட ஏழு குருக்களும் அருட்தந்தையர்கள் எப்.லொசிங்டன், ம.ரெக்ஸ் சவுந்தரா, எ.சே.கி மரியதாஸ், செ.ஜீவரட்ணம், சி.அலின், ஏ.ஸ்கரன்ராஜ், அல்வின் கிருபாகரன் ஆகியோராவர்.

1990ஆம் ஆண்டு பலாலி கிராமத்தில் புனித ஆரோக்கியமாதா ஆலயம் புனித செபஸ்ரியார் ஆலயம் ஆகிய இரு ஆலயங்கள் மட்டுமே இருந்தன. இடப்பெயர்வின் பின்னர் இங்கு அன்னை வேளாங்கன்னி ஆலயம் மடுமாதா ஆலயம் அன்ரனிபுரம் புனித வனத்தந்தோனியார் தற்காலிக ஆலயம் ஆகிய மூன்று ஆலயங்கள் கட்டப்பட்டுள்ளன.

போர்க்காலம் தந்த அனுபவம் வழி மக்கள் பல அனுபவங்களைப் பெற்றனர். அதில் பலரும் குறிப்பிடும் ஒரு விடயம் இந்த போர்க்கால அனுபவத்தின் போது இறைவன் மீதான நம்பிக்கையை மக்கள் அதிகரித்துள்ளனர் என்பதாகும். இதற்கு இது தக்க சான்றாகும் எனக் கருதலாம்.

2017ஆம் ஆண்டு ஜனவரி மாதம் புனிதசெபஸ்ரியார் ஆலய மக்கள் தங்களது பாதுகாவலரின் திருநாளை ஆரோக்கிய அன்னை ஆலயத்தில் கொண்டாடினார்கள். கடந்த மார்ச் மாதம் ரீ.இ.தேவராஜன் அடிகளார் ஊரணி பங்கினை பொறுப்பெடுத்ததன் பின்னர் கடந்த ஏப்ரல் மாதம் 15ஆம் திகதி பலாலி மண்ணின் 10ஆவது மைந்தனும் ஆரோக்கியமாதா ஆலயத்தின் முதற்குருமணியுமான அல்வின் கிருபாகரன் அடிகளாரின் முதல் நன்றித் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

**நம்பிக்கை**

கடந்த மாதம் 15ஆம் திகதி தூய செபஸ்ரியார் திருவிழா ஆரோக்கியமாதா ஆலயத்தில் கொண்டாடப்பட்டது. கடந்த மாதம் 20ஆம் திகதி றோமன் கத்தோலிக்க அ.த.க பாடசாலை கட்டடத்திற்கான அடிக்கல் பாடசாலை முன்பிருந்த இடத்தில் நாட்டப்பட்டது. மயிலிட்டி காணிக்கை மாதா ஆலயம் மற்றும் செபஸ்ரியார் ஆலயம் விரைவில் விடு விக்கப்படும் எனும் நம்பிக்கையில் மக்கள் காத்திருக்கிறார்கள். விடுவிக்கப்பட்டுள்ள பகுதியில் உள்ள ஆலயங்களில் 500க்கும் மேற்பட்ட கத்தோலிக்க குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர். விடுவிக்கப்பட்ட பின்னர் முதலாவது திருநாளை அடுத்த மாதம் 8ஆம் திகதி கொண்டாட ஆயத்தங்கள் நடைபெறுகின்றன.

**புனித செபஸ்ரியார் வாழ்க்கை வரலாறு**

புனித செபஸ்ரியார் என்பவர் ஆதி கிறிஸ்தவ புனிதரும் மறைசாட்சியும் ஆவார். இவர் உரோமைப் பேரரசன் தியோக்கிளேசியன் கிறிஸ்தவர்களுக்கு எதிராகத் துவங்கிய கொடுமைகளில் இறந்தார். இவர் பெரும்பான்மையாக மரத்திலோ, தூணிலோ கட்டப்பட்டவாறு, அம்புகளால் குத்தப்பட்டு சித்தரிக்கப்படாலும், இவர் அவ்வாறு இறக்கவில்லை. அவ்வாறான ஒரு தடவை அவர் கலாபனைக்கு உட்பட்டபோது உரோம் நகரின் ஐரீன் என்பவர் காப்பாற்றிக் குணப்படுத்தினார். இதன் பின்பு தியோக்கிளேசியனின் செயல்களை இவர் சாடியதால், அரசனின் ஆணைப்படி இவரை தடியால் அடித்துக் கொலை செய்தனர். இவரின் மறைசாட்சியம் முதன் முதலில் நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த அம்புரோசு என்னும் மிலன் நகர ஆயரின் திருப்பாடல் 118இன் மறை உரைகளில் (எண் 22) காணக்கிடைக்கின்றது. இதன் படி செபஸ்தியாரின் பக்தி மிலன் நகரின் 4ஆம் நூற்றாண்டிலேயே இருந்துள்ளது தெரிகின்றது. கத்தோலிக்க திருச்சபையில் இவரின் விழா நாள் ஜனவரி 20ஆம் திகதி ஆகும்




மன்னார் மறை மாவட்டத்தின் பேராலயம் புனித செபஸ்தியார் பெயரிலேயே அமைந்துள்ளமை இங்கு குறிப்பிடப்பட வேண்டிய விடயமாகும். மன்னார் பிரதேசத்தின் மையப்பகுதியில் கத்தோலிக் மக்களின் இதயமாக தற்போதிருக்கும் அழகிய புனித செபஸ்ரியார் ஆலயமானது கடந்த 65 வருடங்களாக (1953 - 2018) மன்னார் மண்ணிண் வேத விசுவாசத்தை பாதுகாத்து வளர்த்த பெருமையோடும் மன்னார் மறைமாவட்டம் 1981இல் பிரிக்கப்பட்ட பின்னர் அதன் பேராலயமாக விளங்கிய பெருமையோடும் வானளாவ உயர்ந்து நிற்கிறது.

## வேலையாள் தேவை

வெல்டிங்,
அலுமியம் பிற்றிங்
வேலை தெரிந்த
வேலையாள் தேவை.

**தொடர்பு - 0716 173 173**


# ரஷ்யக் கடற்படைதினம் கோலாகலமாகக் கொண்டாட்டம்

ரஷ்யாவின் கடற்படை தினம் கடந்த 30ஆம் திகதி திங்கட்கிழமை கோலாகலமாகக் கொண்டாடப்பட்டுள்ளது. ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவில் ரஷ்யக் கடற்படையில் இடம்பிடித்துள்ள போர்க் கப்பல்களின் அணிவகுப்பு பெரும் எடுப்பில் இடம்பெற்றது. ரஷ்ய அதிபர் புடினும் இந்த அணிவகுப்பில் கலந்துகொண்டார். அது தொடர்பான ஒளிப்படங்களை பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் வெளியிட்டது. (ம)












## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 14 . 02 . 1944



இறப்பு 06 . 07 . 2018

### திருமதி ஞானகுமாரி சிவனேசன்

**(இளைப்பாறிய சங்கீத ஆசிரிய ஆலோசகர், முன்னாள் இசை ஆசிரியர்)**

மறப்போமா எங்கள் ஆசானை! இன்முகம் காட்டி நேசமுடனும்
பாசமுடனும் பழகியதை எம்மால் மறக்கமுடியுமா ?
உங்கள் ஓங்கிய இசைக்குரல் எம் காதுகளில் ஒலிக்கின்றன
எமக்கெல்லாம் நல்வழிகாட்டிய தீபமே !
இசைத்துறையில் பல பட்டங்களைப் பெற்று எமது சமூகத்திற்கு ஓர்
வழிகாட்டியாக இருந்து எமக்கெல்லாம் அறிவூட்டிய அன்னையே!
உங்களிற்கு எமது கண்ணீர்த்துளிகளை காணிக்கையாக்குகின்றோம்.
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அனைத்து உள்ளங்களிற்கும்
அவரது குடும்பத்திற்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திப்போமாக.
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி

**கலையாத நினைவுகளுடன் : மயூரனின் நண்பர்களும், மாணவர்களும்**



## மரண அறிவித்தல்

### கந்தையா செல்வராசா



மண்ணில் 17.05.1937

விண்ணில் 04.08.2018

கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும். டச்சுறோட், கோப்பாய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா செல்வராசா நேற்று (04.08.2018) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா நல்லம்மா தம்பதியரின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்ற வைத்திலிங்கம் தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் இராசலட்சுமியின் (ஆசக்கா) அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம், ஆச்சியம்மா மற்றும் சரஸ்வதி ஆகியோரின் அன்புச்சகோதரரும் காலஞ்சென்ற சொர்ணம்மா, அன்னரத்தினம் காலஞ்சென்றவர்களான தவமணி, தெய்வேந்திரன் மற்றும் புவனேஸ்வரி, பாலசுப்பிரமணியம், பேரின்பநாயகம் (இராசன்) ஆகியோரின் அன்புமைத்துனரும் சுரேந்திரன் (லண்டன்), மோகனதாஸ் (கனடா), முரளிதரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத்தந்தையும் உதயா (லண்டன்), தயாநிதி (ரூபி.கனடா), தனுஜா(சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் கிஷோர், டினேஸ், தனுஷா, நிதுஷன், விஷ்ணு, அபிராமி, ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.08.2018) திங்கட்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செக்கடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**டச்சு றோட், கோப்பாய் தெற்கு, கோப்பாய்.**

**தகவல் :மனைவி, பிள்ளைகள்**
**077 924 0312**


### நாடாளுமன்ற...

தத்தால் அதிகரிக்க கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இணக்கம் காணப்பட்டிருந்தது. அதன்படி, அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்களின் அடிப்படைச் சம்பளம் ஒரு இலட்சத்து 40 ஆயிரம் ரூபாவாகவும் பிரதி அமைச்சர்களின் அடிப்படைச் சம்பளம் ஒரு இலட்சத்து 35 ஆயிரம் ரூபாவாகவும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் அடிப்படைச் சம்பளம் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ரூபாவாகவும் அதிகரிக்கத் திட்டமிடப்பட்டிருந்தது.

இவ்வாறானதொரு நிலையிலேயே சம்பள அதிகரிப்புக்கு அரச தலைவர் மைத்திரிபால எதிர்ப்பு வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் அரச தலைவர் ஊடகப் பிரிவு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கட்சித் தலைவர்களின் உடன்பாட்டுடனேயே அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது என்று பத்திரிகைகளில் செய்தி வெளியிடப்பட்டிருந்தபோதும் அவ்வாறான எந்தவொரு முன்மொழிவும் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்றும், அத்தகைய தீர்மானத்திற்கு தான் ஒரு போதும் இடமளிக்கப்போவதில்லை என்றும் மைத்திரிபால தெரிவித்தார்.

கடந்த மூன்று ஆண்டு காலப்பகுதியில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை அதிகரிப்பதற்கு அவ்வப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட மைத்திரி, அரச தலைவர் என்ற வகையில் தனது சம்பளத்தை அதிகரிப்பதற்கு முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகளை தான் உறுதியாக நிராகரித்துவிட்டதாக குறிப்பிட்டார். வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு உள்ளிட்ட பல்வேறு பொருளாதாரப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு முயற்சித்து வருகின்ற இந்தச் சந்தர்ப்பத்தில், அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சம்பள அதிகரிப்பு பொருத்தமானதல்ல, என்றும் மைத்திரி தெரிவித்துள்ளார்- என்றுள்ளது. (5)

### சட்டவிரோதமாக...

பட்டனர். அவர்களைப் பிரதேச மீனவர்கள் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தார்கள். பொலிஸார் அவர்களுக்கு உணவளித்து, அறிவுரை கூறி விடுவித்துள்ளார்கள். இவ்வாறு உள்ளூர் மீனவர்கள் குற்றஞ்சாட்டினர்.

முல்லைத்தீவுக் கடலில் வெளிச்சம் பாய்ச்சி மீன்பிடித்தனர் என்று தெரிவித்து பெரும்பான்மையின மீனவர்கள் மூவர் பிரதேச மீனவர்களால் பிடிக்கப்பட்டனர். அவர்கள் 3 பேரும் திருகோணமலையைச் சேர்ந்தவர்கள். அவர்களின் மீன்பிடி உபகரணங்களும் கைப்பற்றப்பட்டன.

மூவரையும் முல்லைத்தீவுப் பொலிஸாரிடம் ஒப்படைப்பதற்காகப் பிரதேச மீனவர்கள் கொண்டு சென்றுள்ளனர். அவர்களை ஏற்றுக்கொள்ளாத பொலிஸார் உங்களை யார் பிடிக்கக் கூறியது? யார் அதிகாரம் கொடுத்தது என்று அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டனர் என்று கூறப்படுகின்றது.

3 மீனவர்களுக்கு உணவளித்ததுடன், அவர்கள் பிடித்த மீன்கள் பழுதடையாது இருப்பதற்கு ஐஸ் கட்டிகள் கொடுத்து அனுப்பி வைத்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை, முல்லைத்தீவு மாவட்டத்தில் நடைபெறும் சட்டவிரோதமீன்பிடிகளைத் தடுக்கக் கோரி முல்லைத்தீவு மாவட்ட நீரியல்வளத் திணைக்களத்தின் முன்பாகத் தொடர் போராட்டம் நடத்தப்படுகின்றது. இது தொடர்பாக எதிர்வரும் 8ஆம் திகதி கலந்துரையாடல் ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (ற-8)


## K.S.K. சர்வதேச திருமண சேவை

(நம்பிக்கை-உச்ச இரகசியம்-தகவல் பாதுகாப்பு-விரைவான சேவை)

உலகெங்கும் பரந்து வாழும் எம் உறவுகளின் திருமணம் சார் தேவைகளை பூர்த்தி செய்ய நாம் அர்ப்பணிப்புடன் இச் சேவையை வழங்க தயாராக உள்ளோம். நீங்கள் பொருத்தமான மணமகன் மற்றும் மணமகளை தேடிக்கொண்டிருக்கின்றீர்களா? உடனடியாக எம்மைத் தொடர்பு கொள்ளுங்கள். உங்கள் தேவையை நாம் நிறைவு செய்வோம்.

* திருமணத் தரகர்களும் தொடர்பு கொள்ளலாம் *

தாங்கள் தேடும் அல்லது தங்களிடம் உள்ள மணமக்கள் தொடர்பான முழுமையான விபரத்தை பின்வரும் முகவரிக்கு தபால் / மின்னஞ்சல் ஊடாக அனுப்பி வைக்கவும்.

**K.S.K. Marketing (Pvt) Ltd,**
**G.P.S. Road,**
**Kalviyankadu,**
**Jaffna.**

மின்னஞ்சல் : **kskmarket@gmail.com**
மேலதிக தொடர்புகளுக்கு : **0768446358**

# கோயிலுக்குப் பின்னால் சடலம் புதைக்கத் தடை

யாழ்ப்பாணம், ஓக. 5

சண்டிலிப்பாய்சீரணிநாகபூசணிஅம்பாள் ஆலயத்துக்குப் பின்பாக, முன்னாள் ஆதீன கர்த்தாவின் சடலத்தைப் புதைப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சி தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

ஆதீன கர்த்தாவாக இருந்த தம்பையா பரஞ்சோதி கடந்த வியாழக்கிழமை உயிரிழந்தார். அவரது சடலத்தை ஆலயத்துக்குப் பின்பாக புதைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

குடிமனைகள் அந்தப் பகுதியில் உள்ளது. ஆலயப் பூசகரின் வீடும் அருகில் உள்ளது. இவ்வாறான இடத்தில் சடலத்தைப் புதைப்பது பொருத்தமற்றதாக இருக்கும் என்று ஊர்மக்கள் வலி.தென்மேற்குப் பிரதேச சபைக்கு முறைப்பாடு தெரிவித்துள்ளார்கள்.

மானிப்பாய் பொலிஸாருக்கு பிரதேச சபையினால் தகவல் வழங்கப்பட்டது. பொலிஸார் நேற்று நேரில் சென்று விசாரணைகளை நடத்தினார்கள். ஆலயத்துக்குப் பின்பாக சடலத்தைப் புதைப்பதற்கு தடை விதிக்கப்பட்டது. பொலிஸார் நீதிமன்றுக்கு விடயத்தைப் பாரப்படுத்தியுள்ளார்கள். இன்று காலை இது தொடர்பில் விசாரணை இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (5)

### யாழ்ப்பாணத்தில்...

பட்டு வருகின்றார். மலையகத்துக்கு அண்மையில் சென்ற கோத்தபாய, தன்னை தமிழ் மக்களுக்கு நெருக்கமானவராகக் காட்டும் வகையிலான உடையலங்காரத்துடன் நின்றிருந்தார். இதன் பின்னர் தமிழ்ப் பத்திரிகைகளின் ஆசிரியர்களை மாத்திரம் சந்தித்துப் பத்திரிகையாளர் சந்திப்பையும் நடத்தியிருந்தார்.

இவ்வாறானதொரு நிலையிலேயே வடக்கு மாகாணத்துக்கான அவரது பயணமும் இடம்பெறவுள்ளது.

முன்னாள் பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்ச தலைமையில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலில் வடக்குப் பயணம் பற்றி ஆராயப்பட்டுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர்களான நாமல் ராஜபக்ச, கெஹெலிய ரம்புக்வெல, பந்துல குணவர்தன மற்றும் கனக ஹேரத் உள்ளிட்ட வியத்கம அமைப்பின் முக்கிய செயற்பாட்டாளர்கள் கலந்துகொண்டார்கள்.

வடக்கு உள்ளிட்ட நாட்டில் வாழும் அனைத்துச் சிறுபான்மை மக்களின் ஆதரவுகளைப் பெற்றுக்கொள்வதற்குப் பரந்தளவிலான திட்டமொன்றை வகுப்பது குறித்து இதன்போது பேசப்பட்டுள்ளது. மாகாண சபைத் தேர்தலுக்கு பின்னர் வரவிருக்கும் அரச தலைவர் தேர்தலில் வெற்றிபெற வேண்டுமாயின் சிறுபான்மையின மக்களின் ஆதரவு முக்கியமானதாகும். இதற்கு முதலில் சிறுபான்மை இனச் சமூகத்தின் புத்திஜீவிகளை இணைத்துச் செயற்பட வேண்டும் என்று இந்தச் சந்திப்பில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (5,61)

### எதிர்க்கட்சித்...

கிழமை நாடாளுமன்ற அமர்வில், சபாநாயகர் கருஜயசூரியா பதில் வழங்குவார் என்று தெரியவருகின்றது.

நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி 106 ஆசனங்களையும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 95 ஆசனங்களையும் பெற்றுக் கொண்டன. இரு கட்சிகளும் இணைந்து கூட்டு அரசு அமைத்துக்கொண்டன. சிறிலங்கா சுதந்திரக் கட்சியூடாகத் தெரிவு செய்யப்பட்ட 52 உறுப்பினர்கள் அரசிலிருந்து விலகி கூட்டு எதிரணியாகச் செயற்படுவதற்குத் தீர்மானித்தனர்.

தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உத்தியோகபூர்வ எதிர்க்கட்சியாக ஏற்றுக் கொள்ளப்பட்டதுடன் எதிர்க்கட்சித் தலைவராக இரா.சம்பந்தன் நியமிக்கப்பட்டார். மகிந்த அணியில் ஐம்பதுக்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் அங்கம் வகிப்பதனால் தமது அணியை உத்தியோகபூர்வ எதிர்க்கட்சியாக ஏற்றுக்கொள்ளுமாறும் எதிர்க்கட்சித் தலைமை தமக்கு வழங்குமாறு தொடர்ந்து கோரிக்கைகளை முன்வைத்து வந்தனர்.

தலைமை அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்துடன், சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து மேலும் 16 பேர் விலகி மகிந்த அணியான கூட்டு எதிர்க்கட்சியுடன் இணைந்தார்கள்.

இவ்வாறான நிலமையில் எதிர்க்கட்சித் தலைமைப் பதவியை அந்த அணி மீண்டும் கோரியுள்ளது. இது தொடர்பான தீர்மானத்தை சபாநாயகர் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை நாடாளுமன்ற அமர்வில் அறிவிக்கவுள்ளார். (5,31)

### பரீட்சை...

சாத்திகள் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர். இவர்களில் 87 ஆயிரத்து 556 தமிழ் மொழி மூல பரீட்சாத்திகளும், 2 இலட்சத்து 67 ஆயிரத்து 765 சிங்கள மூலமான பரீட்சாத்திகளும் உள்ளடங்குகின்றார்கள். பரீட்சைக்காக நாடு முழுவதும் 3 ஆயிரத்து 50 பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்கு 2 இலட்சத்து 44 ஆயிரத்து 146 பாடசாலை மூலமான பரீட்சாத்திகளும், 77 ஆயிரத்து 323 தனிப்பட்ட பரீட்சாத்திகளும் தோற்றவுள்ளனர். உயர்தரப் பரீட்சைகளை நடத்துவதற்காக 2 ஆயிரத்து 268 பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பரீட்சை நிலையங்களில் இடம்பெறும் மோசடிகளைக் கட்டுப்படுத்துவதற்கென சிறப்புக் கண்காணிப்பு குழு நியமிக்கப்பட்டுள்ளது. பரீட்சை நிலையங்களில் கையடக்கத் தொலைபேசி மற்றும் கணிப்பான் உள்ளிட்ட இலத்திரனியங்கள் சாதனங்களை எடுத்துச் செல்லத் தடைவிதிக்கப்பட்டுள்ளதோடு, பரீட்சை ஒழுங்குகளை மீறுபவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பரீட்சைகள் ஆணையாளர் தெரிவித்தார். (5,31)

### பகல்...

றது. கணவர் இல்லாதபோது தமிழ்ப் பெண்கள் தாலியைக் கழற்றுவார்கள். இப்போது கணவர்கள் இருக்கும்போது தாலியைக் கழற்ற வேண்டிய நிலை உள்ளது. பாதுகாப்புக்காகப் பெண்கள் தாலியைக் கழற்றி வைத்து விட்டுச் செல்வதை நான் அவதானித்துள்ளேன். இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

போதைப் பொருள்கள் தென்னிலங்கையில் இருந்தே வடக்குக்கு வருகின்றன. இளையோர்கள் இது தொடர்பில் விழிப்பாக இருக்க வேண்டும். போதைப் பொருள் பாவனை காரணமாகவே வடக்கில் வாள்வெட்டுக்கள் நடக்கின்றன. இளைஞர்களுக்குப் போதைப் பொருள்களை வழங்குவதில் அரசியல்வாதிகளும் ஈடுபட்டுள்ளனர். அவர்களின் வாகனங்களில் போதைப் பொருள்கள் கடத்தப்படுகின்றன.

போரை முடிவுக்குக் கொண்டு வந்தோம் என்று கூறும் முன்னைய அரசு இனப் படுகொலையைச் செய்தது. இளையோருக்குப் பொருத்தமான விடயங்களைக் கையளிக்கவில்லை. வேலை வாய்ப்புக்களும் ஏற்படுத்தப்படவில்லை. தேவையற்ற வீதிகளையும், தொடருந்துப் பாதைகளையும் அமைத்தது. இப்போது தொடருந்தை முழுமையாகப் பயன்படுத்துவது படையினரே. எமது மக்கள் அல்ல.

தற்போதுள்ள அரசை நாமே கொண்டு வந்தோம். இந்த அரசின் ஊடாகப் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இளைஞர்கள் வாள்வெட்டுக் கலாசாரம், போதைப் பாவனையில் இருந்து விலகி நல்லவர்களாக வாழ வேண்டும் - என்றார். (ஞ-56)

### டி.ஓ....

டுள்ளது. தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சால் பட்டதாரிகளுக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் நியமனம் வழங்கப்படவுள்ளது. யாழ்ப்பாணத்திலிருந்து அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக நியமிக்கப்படும் 334 பட்டதாரிகளில் பிக்கு ஒருவரும் தெரிவாகி உள்ளார்.

அந்தப் பட்டியலில் மாத்தறையிலிருந்து 193பேரும், களுத்துறையிலிருந்து 281பேரும், அம்பாந்தோட்டையிலிருந்து 130பேரும், கேகாலையிலிருந்து 163பேரும், யாழ்ப்பாணத்திலிருந்து 334பேரும், மட்டக்களப்பிலிருந்து 380பேரும், கொழும்பிலிருந்து 171பேரும், இரத்தினபுரியிலிருந்து 236பேரும், மொனராகலையிலிருந்து 68பேரும், மாத்தளையிலிருந்து 79பேரும், கம்பகாவிலிருந்து 331பேரும், கண்டியிலிருந்து 224பேரும், காலியிலிருந்து 237பேரும், வவுனியாவிலிருந்து 80பேரும், குருணாகலவிலிருந்து 311பேரும், நுவரெலியாவிலிருந்து 52பேரும், பதுளையிலிருந்து 139பேரும், அனுராதபுரத்திலிருந்து 107பேரும், புத்தளத்திலிருந்து 77பேரும், திருகோணமலையிலிருந்து 64பேரும், கிளிநொச்சியிலிருந்து 71பேரும், முல்லைத்தீவிலிருந்து 73பேரும், மன்னாரிலிருந்து 126பேரும், அம்பாறையிலிருந்து 101பேரும், பொலனறுவையிலிருந்து 23 பேரும் நியமனம் பெற்றுள்ளதாக தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சின் இணையத்தளத்தில் நேற்றுமுன்தினம் இரவு வெளியாகியது.

இருப்பினும் சிறிது நேரத்தில் அந்தப் பட்டியல் இணையத்தளத்திலிருந்து நீக்கப்பட்டுள்ளது. இதனால் பட்டதாரிகள் மத்தியில் குழப்பம் ஏற்பட்டுள்ளது. அந்தப் பட்டியல் நீக்கப்பட்டமைக்கான காரணம், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சினால் இதுவரையில் வெளியிடப்படவில்லை. (ஞ-5,21)

### இலங்கைக்கு..

யபட்டுள்ளனர் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சாதாரண விசைப் படகில் இலங்கையிலிருந்து சென்ற இருவர் இராமேஸ்வரத்தில் கஞ்சாவைப் படகில் ஏற்றிப் புறப்படவிருந்த சமயம் அந்த நாட்டு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்டவர்கள் இருவரும் பயணித்த படகு புத்தளம், சிலாபத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது. கைது செய்யப்பட்ட இருவரும் தற்போது இந்தியாவில் தடுத்து வைக்கப்பட்டு, அந்த நாட்டு அதிகாரிகளால் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர். (ஞ-105)

### ஐ.நாவில்...

தக கட்சியின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

மூத்த ஊடகவியலாளர் இரா.துரைரத்தினம் எழுதிய 'செய்திகளின் மறுபக்கம்' நூல் வெளியீட்டு விழா கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் முதன்மை மண்டபத்தில் நேற்று மாலை நடைபெற்றது.

இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் அனந்த் பாலகிட்ணர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் முதன்மை அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

2017ஆம் ஆண்டு இலங்கைக்கு நாங்கள் கால அவகாசம் வழங்கியதாகப் பலரும் ஒப்பாரி வைத்தார்கள். கால அவகாசம் என்ற சொல்லே தவறானது.

2015ஆம் ஆண்டு இலங்கையும் இணை அனுசரணை வழங்கி தீர்மானம் நிறைவேற்றியது. அதில் பல முக்கிய விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானம் ஒரு நாட்டைக் கட்டுப்படுத்தாது. பன்னாட்டுச் சமூகத்தில் தமது நாட்டின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சத்தில் ஒவ்வொரு நாடுகளும் தீர்மானத்தில் உள்ளவற்றை செய்ய முற்படு வார்கள். அப்படியான ஒரு பொறிமுறையையே நாங்கள் இலங்கை விடயத்திலும் கையாண்டோம்.

2017ஆம் ஆண்டு மார்ச் மாதத்துடன் இலங்கை மீதான பன்னாட்டுக் கண்காணிப்பு முடிவுற்றது. தீர்மானத்தில் சொல்லப்பட்ட விடயங்களை இலங்கை அரசு நிறைவேற்றுவதற்கு, அதன் மீது பன்னாட்டு அழுத்தம் பிரயோகிக்கப்படவேண்டும். அழுத்தத்தைப் பிரயோகிப்பதற்கு பன்னாட்டுக் கண்காணிப்பு இலங்கை மீது இருக்கவேண்டும். 2017ஆம் ஆண்டு மார்ச் மாதம் இலங்கை மீதான பன்னாட்டுக் கண்காணிப்பு இரண்டு ஆண்டுகளுக்கு நீடிக்கப்பட்டது.

2015ஆம் ஆண்டு இலங்கையும் இணைஅனுசரணை வழங்கி நிறைவேற்றிய தீர்மானத்தில் சொல்லப்பட்ட விடயங்கள் உடனே செய்து முடிக்கப்பட முடியாதவை. அவற்றில் சிலவற்றை நிறைவேற்றுவதற்கு பத்து ஆண்டுகள் வரையிலும் செல்லலாம்.

அந்தத் தீர்மானத்தில் உள்ள மிக முக்கியமான விடயங்களையாவது இலங்கையை நிறைவேற்றச் செய்வதற்கு பன்னாட்டு அழுத்தம் அவசியம். பன்னாட்டு அழுத்தம் பிரயோகிக்கப்படுவதற்கு இலங்கை மீது பன்னாட்டு கண்காணிப்பு இருக்கவேண்டும்.

2019ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் இலங்கை மீதான பன்னாட்டு மேற்பார்வையை நீடிப்பதற்கு மற்றொரு தீர்மானம் அவசியம். அந்தத் தீர்மானம் சில வேளைகளில் நிறைவேற்ற முடியாமல் போகலாம். ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அமெரிக்கா இல்லை. அமெரிக்காவுக்கு வாக்களிக்கும் தகுதி இல்லை. இலங்கை அரசையும் இணங்கச் செய்து கொண்டுவருமளவுக்கு சாத்தியம் இருக்குமோ தெரியவில்லை. ஐ.நா. செயலர் மற்றும் ஐ.நா. பொதுச் சபையின் ஊடாக அழுத்தம் கொடுத்து பன்னாட்டு மேற்பார்வையை நீடிப்பதற்கான தீர்மானத்தை நிறைவேற்றவேண்டியுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் சபை வேண்டாம், பன்னாட்டு மேற்பார்வை வேண்டாம் என்று சொல்பவர்கள், மாற்று வழி என்ன் என்பதைச் சொல்வதில்லை. எல்லாம் வேண்டாம் வேண்டாம் என்று சொன்னால், என்ன செய்யப்போகின்றோம். இருப்பதையும் விட்டு அடுத்து என்ன செய்யப்போகின்றோம் என்று கேள்வி எழுப்பினார். (5)

### சிறந்த...

கோவிக்கக் கூடாது. இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் கிளிநொச்சி வளாகத்தின் பொறியியல் பீடக் கட்டடம் மற்றும் மாணவர்கள், ஊழியர்கள் விடுதிகள் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவால் நேற்றுத் திறக்கப்பட்டன. இந்தக் கட்டடங்கள் 2 ஆயிரத்து 100 மில்லியன் ரூபா நிதிச் செலவில் அமைக்கப்பட்டுள்ளன.

நிகழ்வில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, உயர்கல்வி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச, நாடாளுமன்ற உறுப்பினர்களான விஜயகலா மகேஸ்வரன், த.சித்தார்த்தன், வடக்கு மாகாண அவைத் தலைவர், வடக்கு மாகாண விவசாய அமைச்சர், வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள், பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர, கிளிநொச்சி மற்றும் வடக்கு மாகாண பொலிஸ் அதிகாரிகள், பல்கலைக் கழக விரிவுரையாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இங்கு உரையாற்றிய தலைமை அமைச்சர் ரணில், போர் காரணமாக கடந்த காலத்தில் இங்கு அபிவிருத்திகளை முன்னெடுக்க முடியவில்லை. தெற்கில் அபிவிருத்திகளைச் செய்தோம். போர் முடிந்த பின்னர் இங்கு அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்கின்றோம்.

கிளிநொச்சியிலுள்ள பாடசாலைகளை மிகச் சிறந்த பாடசாலைகளாக மாற்றவேண்டும். இந்தப் பல்கலைக்கழகங்களில் விரிவுரையாற்றுபவர்கள் அப்போதுதான் இங்கு தங்கியிருப்பார்கள். அவர்கள் தமது பிள்ளைகளை இந்தப் பாடசாலைகளில் சேர்த்துக் கொள்வார்கள் - என்றார். (ஞ-5,6,35)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஓக. 5

**ஜொலிஸ்ரார் கழகத்தினது துடுப்பாட்டம்**

ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்தும் துடுப்பாட்டத் தொடரின் ஆட்டங்கள் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் திருநெல்வேலி கிரிக்கெட் கழக அணியை எதிர்த்து சிறி காமாட்சி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. பிற்பகல் ஒரு மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஜொலி ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ. விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

**யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டம்**

யாழ்ப்பாண மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான ஏ பிரிவு அணிகளுக்கு இடையிலான கூடைப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெறவுள்ளது. சென்றலைட்ஸ் அணியை எதிர்த்து ஜொலிஸ்ரார் அணி இறுதியாட்டத்தில் மோதவுள்ளது. பழைய பூங்கா கூடைப்ப ந்தாட்டத் திடலில் இந்த ஆட்டம் இடம் பெறவுள்ளது.

**வடக்கு - கிழக்கு கால்பந்துத் தொடர்**

வடக்கு-கிழக்கு பிறிமியர் லீக் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கிளிநொச்சி உதயதாரகை விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 ம்ணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மட்டுநகர் சுப்பர் கிங்ஸ் அணியை எதிர்த்து தமிழ் யுனைற்ரெட் அணி மோதவுள்ளது. (ம-23)

## ஆதிசக்தி அசத்தல்!

யாழ்ப்பாணம், ஓக. 5

கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் ஆதிசக்தி விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.

உதயதாரகை விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று முன்தினம் மாலை 4.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் ஆதிசக்தி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கரணவாய் மத்திய விளையாட்டுக் கழக அணி மோதியது. 4:2 என்ற கோல் கணக்கில் ஆதிசக்தி விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது. (ம-23)



# இந்து இளைஞர் மகுடம் சூடியது

யாழ்ப்பாணம், ஓக. 5

புத்தூர் கிராம சபையின் முன்னாள் உபதலைவரும் சமூக சேவையாளருமன அமரர் சி.அரியகுட்டியின் நூற்றாண்டு ஞாபகார்த்தமாக நடத்தப்பட்ட கரப்பந்தாட்டத் தொடரில் பி பிரிவில் கிண்ணம் வென்றது சண்டிலிப்பாய் இந்து இளைஞர் அணி.

புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்த இறுதியாட்டம் இடம் பெற்றது. சண்டிலிப்பாய் இந்து இளைஞர் அணியை எதிர்த்து கெருடாவில் அண்ணா அணி மோதியது. முதலாவது செற்றை 25:14 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியது கெருடாவில் அண்ணா அணி. எனினும் அடுத்த மூன்று செற்களிலும் ஆதிக்கம் செலுத்திய சண்டிலிப்பாய் இந்து இளைஞர் அணி அந்த செற்களை முறையே 25:23, 25:08, 26:24 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 3:1 என்ற செற் கணக்கில் கிண்ணம் வென்றது. ஆட்ட நாயகனாக சண்டிலிப்பாய் இந்து இளைஞர் அணியைப் பிரதிநிதித்துவம் செய்த ஹரிதாஸ் தெரிவு செய்யப்பட்டார். (ம-23-422)

## சண் ஸ்ரார் இலகு வெற்றி

யாழ்ப்பாணம், ஓக. 5

கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 7 வீரர்கள் பங்கு பற்றும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் புங்குடுதீவு சண் ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.

உதயதாரகை விளையாட்டுக் கழகமைதானத்தில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் புங்குடுதீவு சண் ஸ்ரார் விளை யாட்டுக்கழக அணியை எதிர்த்து சென். பீற்றர்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. 6:0 என்ற கோல் கணக்கில் புங்குடுதீவு சண் ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது. (ம-23)

## நவஜீவன்ஸ் அபார ஆட்டம்

கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்று முன்திம் இடம்பெற்ற ஆட்டத்தில் நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.

உதயதாரகை விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று முன்தினம் 4 மணிக்கு இந்த ஆட்டம்இடம்பெற்றது. நவஜீவன்ஸ் அணியை எதிர்த்து யங் லயன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. 5:2 என்ற கோல் கணக்கில் நவஜீவன்ஸ் அணி வெற்றிபெற்றது. (ம-23)

## சிறப்புத் தேவையுடையவர்களுக்கான விளையாட்டுக்கள்



வடக்கு – கிழக்கு மாகாணங்களில் உள்ள சிறப்புத் தேவையுடையவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் அண்மைக்காலமாக நடைபெற்று வருகின்றன. மட்டக்களப்பு வெபர் மைதானம், வவுனியா நகரசபை மைதானம் ஆகிய மைதானங்களில் இந்தப் போட்டிகள் ஏற்கனவே நடைபெற்றிருந்த நிலையில் யாழ்ப்பா ணம் துரையப்பா விளையாட்டு மைதா னத்தில் நேற்று இந்தப் போட்டிகள் ஆரம்பமாகின. இன்றும் அவை நடைபெறுகின்றன. (ம–23)

# இங்கிலாந்து வென்றது!

இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டத்தில் 31 ஓட்டங்களால் வெற்றிபெற்று ஐந்து ஆட்டங்களைக் கொண்ட தொடரில் 1:0 என்ற அடிப்படையில் முன்னிலையில் உள்ளது இங்கிலாந்து அணி.

பெர்மிங்ஹாமில் கடந்த முதலாம் திகதி இந்த ஆட்டம் ஆரம்பமானது. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 287 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக அணித் தலைவர் ரூட் 80 ஓட்டங்களையும், பரிஸ்ரௌவ் 70 ஓட்டங்களையும், ஜெனிங்ஸ் 42 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் அஸ்வின் 4 இலக்குகளையும், சமி 3 இலக்குகளையும், உமேஸ் யாதவ், இசாந் சர்மா இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.



பதிலுக்குக் களமிறங்கிய இந்திய அணி கோக்லியின் அபாரமான சதத்தின் உதவியுடன் 274 ஓட்டங்களைக் குவித்தது. கோக்லி 149 ஓட்டங்களையும், தவான் 26 ஓட்டங்களையும், பாண்டியா 22 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் கரன் 4 இலக்குகளையும், அன்டர்சன், ரசிட், ஸ்ரோக்ஸ் மூவரும் தலா இரு இலக்குகளையும் கைப்பற்றினர்.

13 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இங்கிலாந்து 180 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக கரன் 63 ஓட்டங்களையும், பரிஸ்ரௌவ் 28 ஓட்டங்களையும், மலன் 20 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் இசாந் சர்மா 5 இலக்குகளையும், அஸ்வின் 3 இலக்குகளையும், யாதவ் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

இந்தியாவுக்கு இலக்காக 194 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டன. அந்த அணியின் முன்வரிசை வீரர்கள் பெரிதான தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. முரளி விஜய் 6, தவான் 13, ராகுல் 13 என்று அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். நேற்றுமுன்தின மூன்றாம் நாள் முடிவில் இந்திய அணி 5 இலக்குகளை இழந்து 110 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

கோக்லி 43 ஓட்டங்களுடனும், டினேஸ் கார்த்திக் 18 ஓட்டங்களுடனும் நான்காம் நாளுக்காக நேற்றுக் களமிறங்கினர். இந்திய அணியின் வெற்றிக்கு 84 ஓட்டங்களும், இங்கிலாந்தின் வெற்றிக்கு 5 இலக்குகளும் தேவை என்ற நிலையில் ஆரம்பமானது நான்காம் நாள். மேலதிகமாக இரண்டு ஓட்டங்களை மட்டுமே பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார் டினேஸ் கார்த்திக். பாண்டியா, கோக்லி இருவரும் சிறிதுநேரம் நிலைத்தனர். இவர்கள் களத்தில் நின்றபோது இங்கிலாந்து 'கப்சிப்'. அரைச்சதம் கடந்தார் அணித் தலைவர் கோக்லி. 51 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஸ்ரோக்ஸின் அவர் எல்.பி.டபிள்யு. ஆனார். அதே பந்துப்பரிமாற்றத்தில் சமி ஓட்டமெதையும் பெறாத நிலையில் ஆட்டமிழந்தார். இந்தப் பந்துப்பரிமாற்றம்தான் ஆட்டத்தில் திருப்பு முனையை ஏற்படுத்தியது. 31 ஓட்டங்களுடன் பாண்டியா ஆட்டமிழக்க 162 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது இந்திய அணி. 31 ஓட்டங்களால் வென்றது இங்கிலாந்து. (ம)



## கைகுலுக்கிய கிம் – ட்ரம்ப்

இங்கிலாந்து இந்திய அணிகளுக்கு இடையில் பெர்மிங்ஹாமில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் போன்று வேடமிட்டு வந்த நபர்கள் சந்தித்துக் கைகுலுக்கியமை பரபரப்பை ஏற்படுத்தியது.



ஆட்டத்தின் மூன்றாம் நாளான நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. கிம் - ட்ரம்ப் இருவரையும் போன்று வேடமிட்டு வந்த நபர்கள் பவிலியனுக்கு வந்ததும் ரசிகர்கள் கரவொலி எழுப்பித் தமது வரவேற்பைத் தெரிவித்தனர். (ம)

## மானிப்பாய் இந்துவின் வீரர்கள் ஜோன் காப்பெற்றுக்குத் தெரிவு

யாழ்ப்பாணம், ஓக. 5

தேசிய மட்டத்தில் நடைபெறும் ஜோன் காப்பெற் தொடருக்குத் தகுதி பெற்றனர் மானிப்பாய் இந்துக் கல்லூரி வீரர்களான எஸ்.சுஜிகரன், எஸ்.ஆகாஸ், றொனல்ட் ஜோய்.

கொழும்பில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள இந்தத் தொடருக்கான தகுதி காண் போட்டி பொலனறுவை றோயல் கல்லூரியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதில் எஸ்.சுஜிகரன் 15 வயது பிரிவின் கீழ் ஆண்களுக்கான 800 மீற்றர் ஓட்டத்தில் 2:22:0 நிமிடங்களில் ஓடிமுடித்து வர்ணச் சான்றிதழைப் பெற்றார்.

15 வயதுப்பிரிவு ஆண்களுக்கான உயரம்பாய்தல் போட்டியில் எஸ்.ஆகாஸ் மற்றும் றொனால்ட் ஜோய் ஆகிய இருவரும் 1.49 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து ஜோன் காப்பெற் போட்டிக்குத் தகுதி பெற்றனர்.

கே.பவித்திரன் 15 வயதுப்பிரிவு ஆண்களுக்கான குண்டு எறிதல் போட்டியில் 7.90 மீற்றர் தூரத்துக்கு எறிந்தும் ஈட்டி எறிதல் போட்டியில் 28.90 மீற்றர் தூரத்துக்கு எறிந்தும் தேசியமட்ட போட்டிக்குத் தகுதி பெற்றனர். (ம-23)



## மன்னார் எப்.சி. வெற்றி

யாழ்ப்பாணம், ஓக. 5

வடக்கு கிழக்கு பிறிமியர் லீக் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் மன்னார் எவ்.சி. அணி வெற்றிபெற்றது.

கிளிநொச்சி உதய தாரகை விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் றிங்கோ ரைட்ரென்ஸ் அணியை எதிர்த்து மன்னார் எப்.சி. அணி மோதியது. ஆட்ட நேர முடிவில் 5:2 என்ற கோல் கணக்கில் மன்னார் எவ்.சி. அணி வெற்றிபெற்றது. (ம-23)

## இலங்கை தென்னாபிரிக்கா 3ஆவது ஆட்டம் கண்டியில் இன்று

இலங்கை - தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடரின் மூன்றாவது ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது.

தொடரில் ஐந்து ஆட்டங்கள். முதலிரு ஆட்டங்களிலும் தென்னாபிரிக்கா வெற்றிபெற்றது. இதனால் இன்றும் தென்னாபிரிக்கா வெற்றிபெற்றால் கிண்ணம் தென்னாபிரிக்காவிடம் சென்றுவிடும். எனவே வெற்றிபெற வேண்டும் என்ற இக்கட்டான நிலையில் இன்று களமிறங்குகிறது இலங்கை அணி. (ம)



## கோக்லியின் இழப்பைக் கொண்டாடிய இங்கிலாந்து

இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தின் நான்காம் நாளான நேற்று கோக்லி ஆட்டமிழந்ததும் அதை எக்கச்சக்கமாக கொண்டாடி மகிழ்ந்தது இங்கிலாந்து. அணித் தலைவர் ரூட், அண்டர்சன், ஸ்ரோக்ஸ், பரிஸ்ரௌவ் என்று அனைவரும் 'ஆர்ப்பரித்து' ஆடி மகிழந்தனர்.

இந்திய அணிக்கு 194 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. முதலாவது இன்னிங்ஸில் தனியொருவனாக இங்கிலாந்துக்குக் கலக்கத்தை ஏற்படுத்தியதைப் போன்று இரண்டாவது இன்னிங்ஸிலும் கோக்லி உதறலை ஏற்படுத்தினார். ஒரு முனையால் இலக்குகள் சரிந்தாலும் மறுமுனையில் கோக்லி நின்றதால் இங்கிலாந்தின் வெற்றியென்பது தொங்கிக்கொண்டே இருந்தது. வெற்றிக்கு 53 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் கோக்லி 51 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அவர் ஆட்டமிழந்ததை அடுத்து ஒட்டுமொத்த இங்கிலாந்தும் மகிழ்ச்சியில் ஆடிப்பாடியது. கோக்லி மீது இங்கிலாந்துக்கு இருந்த அச்சம்தான் அவர்களின் வழக்கத்துக்கு மாறான அதீத கொண்டாட்டத்துக்குக்காரணம் என்கின்றனர் கிரிக்கெட் விமர்சகர்கள்.

இந்த ஆட்டத்தில் மட்டும் கோக்லி ஒட்டுமொத்தமாக 200 ஓட்டங்களைக் குவித்தார். முதலாவது இன்னிங்ஸில் 149 ஓட்டங்கள், இரண்டாவது இன்னிங்ஸில் 51 ஓட்டங்கள் என்றவாறாக அமைகிறது அவரின் பெறுபேறு. (ம)

## உடனடி வேலை வாய்ப்பு

1. சுப்பர் மார்க்கட் (லேபர் ஆண், பெண்) SR 65,000 + OT
2. எயாப்போட் (லேபர் ஆண், பெண்) SR 65,000 + OT
3. ஹொஸ்பிட்டல் (லேபர் ஆண், பெண்) SR 65,000 + OT

உணவு, தங்குமிட வசதி உண்டு.

Phone No :- 076 2373527, 076 249 8674
E-mail :- Jaffnanallur001@gmail.com

(CS/18764)(10)

## காணி விற்பனைக்கு

அரியாலை, திருமகள் வீதியில்
3 பரப்புக் காணி
(வீடு, கடைக்கட்டடம் உட்பட)
விற்பனைக்குண்டு.

**077 518 7526, 077 156 3474**

## வேலை வாய்ப்பு

சேவை நிறுவனம் ஒன்றுக்கு வேலையாள்கள் தேவை.

1. Billing staff (பெண்)
   - ✓A/L சித்தி
   - ✓ஆங்கில அறிவு விரும்பத்தக்கது
   - ✓யாழ். மாநகர எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
2. Packing Boy (ஆண்)
   - ✓கொழும்பில் பணியாற்றுவதற்கான தகுதியினை கொண்டிருக்க வேண்டும்.
   - ✓வயது எல்லை:18-30
   - ✓உணவு மற்றும் தங்குமிட வசதி வழங்கப்படும்.

தொடர்பு:- **077 027 7365 / 077 427 5311**

(IN/7438)(10)

## வீடு விற்பனைக்கு

இடம் : நவரத்னராஜா வீதி, கோண்டாவில், யாழ்ப்பாணம்.

*Bedroom - 06, Balcony - 01, Bathroom - 02*



தொடர்புகளுக்கு -
077 806 0850, 0041787 658 822 (Whatsapp)

## காணி விற்பனைக்கு

கச்சாய் வீதி, கொடிகாமம் (திருநாவுக்கரசு பாடசாலைக்கு அருகில் கொடிகாமம் பஸ் நிலையத்திலிருந்து 1km தூரத்தில்) 10 பரப்புத் தென்னந்தோட்டக்காணி விற்பனைக்குண்டு

தொடர்பு - 077 248 7841, 077 985 9875

## விற்பனைக்கு

இயங்கும் நிலையில் உள்ள சுண்ணாம்புக் கற்கள் உடைக்கும் இயந்திரம் அனைத்து உபகரணங்களுடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:-
**077 314 4756**

(IN/33570)(16)

## வேலைக்கு ஆள்கள் தேவை

- ▼ கணக்காளர்
- ▼ கணக்காய்வாளர்

} முன்னனுபவம், கணினி அறிவு விரும்பத்தக்கது

- ▼ வெளிக்கள உத்தியோகத்தர்
- ▼ விற்பனை முகாமையாளர்

மேற்குறிப்பிட்டுள்ள பதவிகளுக்கு கிளிநொச்சியில் இயங்கும் பிரபல நிறுவனத்துக்கு வேலைக்கு ஆள்கள் தேவை. கிளிநொச்சியில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். தகுதியுள்ளவர்கள் விண்ணப்பிக்கவும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். (ஆண்கள் மட்டும்)

(CS/14277) (11.17) **077 772 2305**

## விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு

UK- 550 /-Kg
கனடா-900 /-Kg
ஜேர்மனி-700 /-Kg
நெதர்லாந்து-700 /-Kg
(நிபந்தனைகளுக்குட்பட்டது)

- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை

0768226240

V2 TRAVELS

## பௌதீகவியல்

பொறியியல் பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பத்திலிருந்து

By : T.K. Kajen B.Sc

T.P: 077 6531 177

* Muththadumada Lane, Kondavil West.
* The Science Corner Clock Tower Lane, Jaffna.

## மரண அறிவித்தல்

### திசைவீரசிங்கம் சண்முகலிங்கம் *(ஓய்வுபெற்ற படவரைஞர்)*



துன்மலை, இளவாலையைப் பிறப்பிடமாகவும் இல.52, மணல் தறை வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திசைவீரசிங்கம் சண்முகலிங்கம் நேற்று (04.08.2018) சனிக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற திசைவீரசிங்கம் - சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மகனும் வேதநாயகியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற மயில்வாகனம் சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும் ரூபசிங்கம், காலஞ்சென்ற செல்வரத்தினம், இரத்தின தேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சந்திர மோகன், சுஜாத்தா மற்றும் ரதிமோகன் ஆகியோரின் அன்புத் தந்தையும் லோகினியின் அன்பு மாமனும் தேவநாதன், தேவநாயகி, கலாநாயகி, பிறையனிநாதன் மற்றும் காலஞ்சென்றவர்களான நேமிநாதன், லோகநாயகி, குருபரநாதன், வரதராஜன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதியஞ்சலி இன்று (05.08.2018) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு : 077 644 9666 (CS 18789/15/17)

தகவல்: குடும்பத்தினர்.

## வடமாகாண G.C.E.(O/L) க.பொ.த.(சா/த) மாணவர்களுக்காக கொழும்பு அருள் கல்வி வட்டத்தினரால் நடத்தப்படும் முற்றிலுமான இலவசக் கருத்தரங்கு

### நேரசூசிகை

| திகதி | இடம் | நேரம் |
|---|---|---|
| 09.08.2018 – வியாழன் | ஊர்காவற்றுறை பிரதேச செயலகம் | காலை 8.30 - பி.ப. 3.00 |
| 10.08.2018 – வெள்ளி | வட்டுக்கோட்டை தொழில்நுட்பக் கல்லூரி | காலை 8.30 - பி.ப. 3.00 |
| 11.08.2018 – சனி | யாழ்.வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம் **(பெண்களுக்கு மட்டும்)** | காலை 6.30 - பி.ப. 3.30 |
| 12.08.2018 – ஞாயிறு | யாழ்.வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம் **(ஆண்களுக்கு மட்டும்)** | காலை 6.30 - பி.ப. 3.30 |
| 13.08.2018 – திங்கள் | யாழ்.வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம் **(இருபாலாரும்)** | காலை 6.30 - பி.ப. 3.00 |
| 14.08.2018 – செவ்வாய் | கிளிநொச்சி கூட்டுறவு மண்டபம் (மத்திய பஸ் நிலையம் அருகில்) | காலை 8.00 - பி.ப. 3.00 |
| 15.08.2018 – புதன் | கற்சிலைமடு அரசினர் கலவன் பாடசாலை (அ.த.க) | காலை 8.00 - பி.ப. 3.00 |
| 16.08.2018 – வியாழன் | வவுனியா நகரசபை மண்டபம் | காலை 8:00 - பி.ப. 3.00 |
| 17.08.2018 – வெள்ளி | மன்னார் நகர சபை மண்டபம் | காலை 8.00 - பி.ப. 3.00 |

| பாடம் | ஆசிரியர்கள் |
|---|---|
| கணிதம் | 1. வே.தேவசேனாதிபதி **L.L.B.** சட்டத்தரணி<br>2. K. வசந்தன் **( Trained Teacher Colombo)**<br>3. S.மணிமாறன் **( Trained Teacher Colombo)**<br>4. M.லிங்கேஸ்வரன் **BSc, PGDE Teacher St.John's College Jaffna)** |
| விஞ்ஞானம் | 1. வே.சுந்தரேஸ்வரன் - **Rtd.D.G.M,** தேசிய லொத்தர் சபை<br>2. V. பிரேம்குமார் - **P.H.I** யாழ்ப்பாணம்.<br>3. M. மகேந்திரன் - சிரேஷ்ட ஆசிரியர் |
| தமிழ், வரலாறு | 1. S. நடராஜா **B.A (Hons)**<br>2.K. திவாகர் **B.A (Hons)** |

- ▶▶ நூல்கள் முற்றிலும் இலவசமாக வழங்கப்படும்
- ▶▶ அனைத்துப் பாடமும் அடங்கிய Tutes முற்றிலும் இலவசமாக வழங்கப்படும்
- ▶▶ கடந்த கால வினாவிடைக் கொத்து இலவசமாக வழங்கப்படும்.

குறிப்பு:- அனைத்து மாணவர்களும் (இருபாலாரும்) கண்டிப்பாக பாடசாலை சீருடையில் வருகை தர வேண்டும்

அனைவரும் கலந்துகொண்டு பயன் பெறவும்

**இலவசக் கருத்தரங்கின் முழு அனுசரணையாளர்**

**சட்டத்தரணி வே.தேவசேனாதிபதி LLB தொ.இல. 077 113 3400, 011 232 7524**

பே.இளமுருகன் BSc - 077 907 3593 ஆ.முருகானந்தன் - 071 856 1252

கே.சக்கிகான் AD - 077 842 9649 எஸ்.ஐங்கான் - 077 715 7779

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.08.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.